மகாமகோபாத்யாய டாக்டர்
... வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு,

விவேகபாநு.

வால்யூம் 5. { 1906ஞு { புஸ்தகம் 8, 9, 10, 11.
ஆகஸ்டு, செப்டெம்பர், அக்டோபர்மீ நவம்பர்.

வந்தேமாதரம்.

"வந்தேமாதரம்" என்னும் மந்திரமானது சில காலமாக நம் இந்தியாவில் பல இடங்களிலும் முழங்கி வருகின்றதை நாம் அறிவோம். அறிந்துமென்ன? இம் மகா மந்திரத்தின் பொருள் யாது? இம்மந்திரம் கோஷிக்க வேண்டிய காரணம் என்ன? இதனால் நாம் அடையும் பயன் எது? என்பன முதலிய உண்மைகளை யாராய்ந்துகொண்டு இம் மந்திரத்தைச் சிந்திப்பவர் மிகச் சிலரே யாவர். பொருளையும் பயனையும் உணராது காக்கை போற் கதறுவது வெற்றொலியே யன்றி வீண்காலப் போக்குமாக முடியும். ஆதலின் நம் அருமைச் சுதேசிகள் யாவரும் இம் மகா மந்திரத்தின் பொருள் முதலியவற்றை நன்குதெரிந்து பயனடையவேண்டியே ஒருசிறிது கூறுவாம்.

வந்தேமாதரம் என்பதற்கு தாயைவணங்குகிறேன் என்பதுபொருளாகும். இவ் வணக்கத்தையேற்கும் தாய்யாரெனில் முப்பது கோடிமக்களைப்பெற்று வளர்த்து அம்மக்களின் சரீர போஷணைக்கு வேண்டும் பலவகை யுணவுப்பொருள்களையும், மற்றும் சிறப்புக்குவேண்டிய நவரத்தினங்களையும், பொன் வெள்ளி முதலிய பலவகைலோகங்களையும் ஆடையாபரணாதி பலவற்றையும், அறிவுவிர்த்திக்கு வேண்டிய பலவகையான அரியபெரியசாஸ்திரங்களையும் தன்னிடத்து அடக்கிவைத்திருந்து காலந்தோறும் தன் அருமைமக்களுக்கு உதவிக்காத்து வரு

கின்ற பெருமைமிகுந்த நம் சுதேச மாதவேயாம். இத்தகைய அருமைத்தாயை வணங்குதற்குக்காரணம் ஒன்றியறிதலே விளக்குவதாகும். அதனாலடையும் பயன் இவ்வளவென்று சொல்ல யாராலுமாகாது. நம்சுதேசவாசிகள் யாவரும் இந்த ஒருதாய் வயிற்றுப்பிள்ளைகளாகவே நாம் எல்லாரும் சகோதரர்களாகிறோம். இங்ஙனம் நாம் எல்லாரும் ஒருதாய் வயிற்றுப்பிள்ளைகள். சகோதரர்கள். என்றவுணர்ச்சியானது நம்மில் ஒவ்வொருவர் மனத்திலும் உண்மையாக உதிக்குமென்றால் நமக்கு எதுதான் அரிது! நம்மைவெல்பவர்கள் யாவர்? இந்த உலகத்தில் எந்தத் தேசத்தாராவது நமக்கு ஒப்பாக முன்வருவாரும் உண்டோ? அந்தோ! இந்த ஒற்றுமையை இழந்துவிட்டதால் அல்லவா நம்முடைய சகல போக போக்கியங்களையும் பிறர் கைக்கொள்ளக் கொடுத்துப் பரிதபிக்கின்றோம். நம்தேசத்திலில்லாத பொருள் யாது? அந்நியதேசத்திலிருந்து வந்தாலன்றிக் கிடையாதென்று சொல்ல ஒரு பொருளையும் காணோமே. அமெரிக்கா இங்கிலாந்து முதலிய பிறதேசங்கட்கெல்லாம் பலவகையுணவுப் பொருள்களைக் கொடுத்து ஆதரிப்பது நம் தேசமல்லவா? பலவகையான அறிவைக் கொடுத்தது நம் தேசமல்லவா? செல்வத்தைக் கொடுத்தது நம் தேசமல்லவா? நாகரீகத்தைக் கொடுத்தது நம் தேசமல்லவா? நம் தேசத்தைக் கைக்கொள்வதற்கு முன் ஆங்கிலேயர் எந்த நிலைமையிலிருந்தார்கள் என்பதைக் கேட்டால் நமக்குத் தெரியும். இஃதென்ன எத்தனை ஆங்கில கனவான்கள் நம் தேசத்தைப் புகழ்ந்தும் சகல அறிவையும், சகல செல்வத்தையும், சகல சுகத்தையும், சகல நாகரீகத்தையும் நம்மிடமிருந்தே தாங்கள் பெற்றுக்கொண்டிருப்பதாகவும் ஓதுகின்றார்கள். ஜப்பான் தேசம் எவ்வளவு சிறிது? எவ்வளவு குறைந்த ஜனத்தொகை யுடையது? 20 வருஷங்கட்கு முன் அது இருந்த நிலைமையென்ன? அதன் பெயரையும் கூடப் பலர் அறியாரே! அத் தேசம் இப்போது அடைந்த பெருமையைப் பார்த்தீர்களா! இப்போது ஜப்பான் என்ற பெயரைக் கேட்டால் எத்தேசத்தாரும் அப்பா என்று மூக்கின்மேல் விரல் வைத்து ஆச்சரியப்படுகின்றாரே. இதன் காரணமென்ன? ஜப்பானியருகளுக்குள் உண்டான ஒற்றுமை தானே. "எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்" என்ற பழ

மொழி நாமறியாததன்றே. இவ்வாறு ஆசியாகண்ட வாசியாகிய நமர்ஞ்ச் சகோதரமான ஜப்பானியர் அடைந்த பெருமையை நாம் அடையவேண்டினால் அசாத்தியமன்றே. நாம் எல்லாரும் ஒற்றுமைக் குணத்தைக் கொள்ளுவோமானால் ஜப்பானியர் அடைந்த பெருமையைப் பார்க்கிலும் மிக்க பெருமையடையலாமன்றோ. சாதி யொற்றுமை, மத வொற்றுமை, முதலியன ஒவ்வொரு கூட்டத்தாரையே ஒற்றுமைப்படுத்துவதாகும். நாம்மேலேகாட்டிய சுதேசசகோதரவொற்றுமை 30 கோடிஜனங்களை ஒற்றுமைப்படுத்தும். இதனால் ஜாதி மதம் முதலிய எவற்றினும் சிறந்தது இந்தச்சகோதரவொற்றுமையேதான் இப்படிப்பட்ட அருமையான ஒற்றுமையென்கிற தெய்வத்தையடைவிக்கக்கூடிய மந்திரந்தான் மேலேகாட்டிய வந்தேமாதரம் என்பது.

இம்மந்திரம் பல வருஷங்கட்கு முன் வடதேசத்தில் வசித்த ஒரு பங்காள பண்டிதரால் ஏற்படுத்தப்பெற்றது. அக்காலத்து அவர்கள் இம்மந்திரத்தால் எத்தனையோ நன்மையடைந்தார்கள். பின்னர் சில காலத்துக்கு முன் பங்காளத்தை யிரண்டாகப் பிரித்தபொழுது அங்குள்ள நம் சகோதரருள் கல்வியும் அறிவும் செல்வமும் வலிமையுமுடைய சில சகோதரர்களால் இம்மந்திரம் முழங்கத் தலைப்பட்டது. பங்காளப் பிரிவினைசெய்த புல்லர்துரையைப்பற்றிப் பல பத்திராதிபரும் இராசங்கத்தாரும் வெறுப்புக்கொண்டனர். இதுபிசகு. நாம் உண்மையாகவே புல்லரிடத்து விசுவாசிக்கின்றோம். ஏனெனில் அவருடைய தீச்செயலால் தான் நாம் இந்த மந்திரத்தை முழங்கவும் பல நன்மைகளை யடையவும் இடமுண்டாயிற்று. இதற்காக நாம் அவரை மிகவும் புகழ்ந்தாலும் தகும். புல்லர் நமக்கு விரோதமாகச் செய்தும் அது நமக்கு நன்மையாகவே முடிந்தது என்றால் இதைப்பார்க்கிலும் வேறு விசேஷம் உண்டோ? இம்மந்திரம் முழங்கத்தொடங்கி ஒருவருஷத்துக்குள் நாம் அடைந்த நன்மைகள் பலவே. அநேக இடங்களில் அநேக யந்திரங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. நம்நாட்டார் பலர் ஜப்பான் சென்று கைத்தொழிற் கல்விகற்கின்றனர். ஒவ்வொரு இந்தியரும் சுதேசியத்தால் வரும் சுதேசப் பொருள்

களையே வாங்கி யுபயோகிக்க வேண்டுமென்ற நோக்கம் அநேகமாகப் பரவி நடைபெறுகின்றது. நம் தேசத்து விளைபொருளைக்கொண்டு நம் தேசத்தில் செய்யப்பெற்ற பொருள்களை நாம் வாங்கி யுபயோகிப்பது நம் கடமைதானே. இப்படிச் செய்வது நம் தேசமுழுவதும் பரவுமானால் சகலபொருள்களும் நம் தேசத்தில் பெறலாமே. இதனால் கைத்தொழில் வியவசாயம் வர்த்தகம் ஆகிய எல்லாம் நாளுக்குநாள் அபிவிர்த்தியாகுமே. எத்தனையோ ஏழைஜனங்கள் பிழைக்க வழியேற்படுமே. ஒவ்வொரு வருஷத்திலும் நாம் வாங்கும் அந்நிய நாட்டுப் பொருள்களுக்காக நம்மிடமிருந்து அந்நியரடையும் பொருளைக் கணக்கிட்டுப்பார்த்தால் வயிறு எரிகின்றதே! ஐயையோ! ஆறுகோடி ஜனங்கள் பிழைக்க வழியின்றிக் கஞ்சியும் கிடையாமல் வருந்தியும் ஒன்றரைக்கோடி ஜனங்கள் இறந்தும் தவிக்கின்ற இக்காலத்தில் அந்நிய நாட்டுக்கு நமது பொருள் போகாமல் தடுத்து நம் நாட்டிலேயே யிருக்கும்படி செய்வது நம்மில் ஒவ்வொருவரும் தனது கடமை யென்றும் தன்னால் தான் இக்காரியம் நிறைவேறுமென்றும் எண்ணவேண்டும். இப்படியெண்ணி நடந்தால் அதி விரைவில் நம் தேசம் செழிக்கும். ஒரு ரதத்தைப் பலபேர் இழுத்துச் செல்கின்றார். அவரிலொவ்வொருவரும் நாம்தானா இழுக்கிறோம் என்று வடத்தைப்பிடித்துச் சும்மாநின்றால் ரதம் அசையமாட்டாது. ஒவ்வொருவரும் நான்தான் இழுக்கிறேன் என்றுநினைத்து இழுத்தால் வெகு சீக்கிரத்தில் ஓடிவரும். ஆனதால் நாம் சுதேசியப்பொருள்களை வாங்கி யுபயோகிக்க உறுதிகொள்ளவேண்டும். இவ்வுறுதியை நமக்குக்கொடுப்பதும் வந்தேமாதர மந்திரமேதான். இம்மந்திரத்தின் உண்மைப்பொருளை மேலேகூறினும். இம்மொழிகளைத் தமிழாக்கிப் பொருள்கொண்டாலும் இச்சமயத்துக்கு ஏற்றதாகவே யிருக்கும். அதாவது வந்தேம் ஆதரம் எனப்பிரித்து ஆதரம் வந்தேம் என மாற்றி ஆதரம் - அன்பினிடத்து, வந்தேம் - வந்துசேர்ந்தேம். எனக்கொள்ளல்தான். நாம் எல்லாரும் சகோதரராக நினைக்கும் அன்பு என்கிற ஒரு இடத்தை வந்தடைந்தேம். என்பது கருத்து.

இந்த அன்புடைமையை எல்லாரும் கைக்கொள்ளக்கருதி தூத்துக்குடி வக்கீல் ஸ்ரீமாந் வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள் இம்மதுரைமாநகரில் வந்து பிரசங்கமாரிபொழிகின்றார்கள். இவர்களது முயற்சித்திறமும் ஊக்கமும் அன்பும் நம்மவர் மனத்தைக் கவர்கின்றன. ஒருநாள் மதுரை கீழமாசிவீதியில் நாடார்கள் பேட்டையில் வர்த்தகர்கள் பலர் கூடிய சபையில் ஷை பிள்ளையவர்கள் பிரசங்கித்தார்கள். அப்பொழுது அக்கிராசனம் வகித்திருந்தவர்களும் மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவானும் ஆகிய ஸ்ரீமாந் சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள் தாம் பேசிய விஷயங்களை ஒரு வியாசமாக எழுதியும் உபகரித்தார்கள். இவ்வியாசமானது நம்மவர் பலரும் வாசித்தறிய வேண்டிய பல அரிய விஷயங்களைக் கொண்டுள்ளமையால் இங்குத்தருகின்றோம்.—இது விற்க.

தூத்துக்குடியில் சுதேசிய ஸ்டீம் நாவிக்கேஷன் கம்பெனியொன்று ஸ்தாபிக்கப்பெற்று நன்கு நடைபெறுகின்றது. இக்கம்பெனியானது 5 லட்சம் ரூபா மூலதனத்தைக்கொண்டு வருஷம் 1-க்கு 10 லட்சம் ரூபா லாபம் அடையக்கூடியதாக இருக்கின்றது. இவ்விவரத்தை விளக்கக்கூடிய வரவு செலவு கணக்கும் இப் பத்திரிகையில் விளக்கியிருக்கின்றோம். காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்றபடி இச்சமயம் நம்மவர் எல்லோரும் முன் வந்து சுகமடையும்படி பிரார்த்திக்கின்றோம்.

வந்தே மாதரம். ப-ர்.

வந்தேமாதரம்.

சுதேசிய முயற்சி.

இப்பரதகண்டத்தில் வடக்கே இமயமலையும் தெற்கே கன்னியாகுமரியும் மேற்குங் கிழக்குங் கடலும் எல்லையாகவுடைய பூமியே புண்ணிய பூமி. இதுவே இப்பொழுது இந்தியாவென்று சொல்லப்படுவது; இதில் வாழ்வார்களே அறிவுடையவர்களும் புண்ணியர்களுமாவர். மற்றைய தேசங்களில், மூர்

த்தி தல்ந்தீர்த்தங்களும், அறிவுடையோர்களும்பெரும்பான்மை யில்லாமையால் அவைகள் புண்ணிய பூமியல்ல வென்று பெரியோர்கள் நூல்களிற் கூறியிருக்கின்றார்கள்.

இவ் விந்தியாவில் வாழ்ந்திருக்கின்ற அறிவுடையவர்களான நாமடைதற்பாலனவாகிய பொருள் நான்காம். அவை அறம், பொருள், இன்பம், வீடென்பனவாம்.

அறமாவது:— நூல்களால் விதித்தன செய்தலும் விலக்கியனவொழித்லுமாம்; பொருளாவது:—அரசநீதி துணைக்காரணமாக நமது நன் முயற்சியாற் சம்பாதிக்கப் படுவதாம்; முயற்சி யின்னதென்பது பின்னர்க் கூறப்படும். இன்பமாவது:— ஐம்புலன்களால் ஒருங்கேயாவது தனித்தனியே யாவது அனுபவிக்கப் படுவதாம். வீடாவது:— மனத்திற்கும், வாக்கிற்கு மெட்டா நிலையதாகலால், ஆசாரிய னுபதேசிக்கு ஞான நெறியினின் றடைதற்பாலதாகிய பேரின்ப வீடாம்.

இந் நான்கினையுஞ் சுருக்கி ஒளவையார் "ஈதலறந் தீவினைவிட் டீட்டல் பொரு ளெஞ்ஞான்றுங், காதலிருவர் கருத்தொன்று—யாதரவு, பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும், விட்டதே பேரின்ப வீடு." என்று கூறினார்.

இவைகளிலே இம்மையிலே நாமடைதற் பாலன அறம், பொருள், இன்பமாகிய இம் மூன்றுமேயாம்; இவற்றுள் நடுவுள்ளதாகிய பொருளால் முன்னும் பின்னு முள்ளவையாகிய அறமு மின்பமு மடையலாம். "வடுவிலா வையத்து மன்னிய மூன்றி, னடுவணதெய்த விருதலையு மெய்தும்." என்றும், அறனீனு மின்பமுமீனுந் திறனறிந்து, தீதின்றி வந்த பொருள்." என்றுங் கூறினமையாற் காண்க.

இத் தகைய பொருளின்றி யாவருக்கு மெக் காரியமுங் கைகூடாது. "முனிவரு மன்னரு முன்னுவ பொன் னன்முடியும்" என்றும், "பொன்னி னாகும் பொருபடை யப்படை, தன்னி னாகுந் தரணி தரணியிற், பின்னை யாகும் பெரும்பொரு ளப்பொருள், துன்னுங் காலைத் துன்னாதன வில்லையே" என்றுங் கூறியவாறு காண்க. சிறந்த முனிவரையு மன்னரையுங் கூறினமையால் ஏனையோர்க்கும் மிகைதாக்கும்.

இப்பொருளினைக்கொண்ட இல்லறத்தார் ஐந்து காரியத்திற் செலவிடவேண்டும்; அவை:—"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லானென்றாங்—கைம்புலத்தா றோம்ப றலை." என்பதனாற்காண்க; இவ்வைந்து காரியங்களை இல்லறத்தார் செய்வதனால் அரசனுக்குக் குடிகள் ஆறிலொன்று கடன் செலுத்துகின்றார்கள்.

இனி இவ்வாறாகச் செலவிடும் பொருளினை நாமடைதற்குத் தக்க காரணமாயுள்ளது நமது நன்முயற்சியே யாம். "முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை—யின்மை புகுத்தி விடும்" என்றும், "மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்—றாளுளா டாமரையி னாள்." என்றும், "ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்—தாழா துஞற்று பவர்." என்றும் கூறியிருத்தல் காண்க. "முயற்சியுடையா ரிகழ்ச்சியடையார்" என்ற பழமொழியையும் பார்க்க.

இத்தகைய முயற்சியாலே தாபர சங்கம மாகிய வெல்லா வுயிர்களுஞ்சீவிக்கின்றன என்பது எல்லாருந்தெரிந்தவிஷயமே.

இங்கே கூறியது மற்றைய வுயிர்கட்கெல்லா மொக்கும், மரம், புல் முதலியன முயற்சிசெய்யக் கண்டில மென்பீராயின்? நீரினுக்கு மேனோக்குஞ் சக்தியில்லை யாதலால் அவைகள் அடியிலே யுறைந்த நீரினை மேலே யிழுத்துக்கொள்ளுஞ் சக்தி யுண்மையாற் றழைத்துப் பயன்றருகின்றன, என நூல்களிற் கூறியிருக்கின்றார்கள், நாமுங் கருத்துவகையாலறியத்தக்கதேயாம்.

இங்ஙனமெல்லா வுயிர்களு முயற்சியுடையனவா யிருக்கச் செல்வமுடையோர்களிற் சிலர் ஒரு முயற்சியுமின்றி யுண்டுறங்கிக் காலத்தை அவமாகக் கழிக்கின்றார்கள்; அவர்களை மரமுதலியவற்றோடாயினு மொப்பிட்டுக் கூறமுடியாது; அவரைப் பிணத்தோடொப்பிட்டுக் கூறியிருக்கின்றார்கள்.

"அரிசனம் பூசிமாலை யணிந்துபொன் னுடைசாத்திப்
பரிசனம் பின்புசெல்லப் பாரகர் பரிக்கக்கொட்ட
வரிசின்ன முதத்தொங்கல் வந்திட வுணர்வுமாண்டு
பெரியவர்பேச்சுமின்றிக்கிடத்தலாற்பிணத்தோடொப்பர்."

என்பதனுற் காண்க. இவர்கள் தம்மினுமிக்க செல்வ ரிவ்வாறிருந்து வறியவராயினமையு நோக்கினரில்லை, "நின்றுதின்னக் குன்றுங்கரையும்" "செக்காவுந்த விருந்தாலுஞ் செதுக்கித்தின்னப் போய்விடும்" என்று கூறுகின்ற பழமொழிகளையு நோக்கிலர், இவ்வாறிருக்கின்ற செல்வர்களைச் சிலர் யாதொரு முயற்சியுஞ் செய்கிறதில்லை மகாசாது என்பார்கள் அவ்வாறு கூறுவது காராட்டை வெள்ளாடென்பது போலச் சோம்பேறி, தாமதன் என்பதை மறைத்துக்கூறும் வார்த்தையெனக் கொள்ளல்வேண்டும். இது நிற்க.

இனி மேற்கூறிய பொருளையடைதற்குச் செய்யு முயற்சியாகிய தொழில் பொதுவாய் ஆறுவகையாகப் பெரியோர்கள் நூல்களிற் கூறியிருக்கின்றார்கள். அவை "வரைவொடு தொழிலே வித்தை வாணிகமுழவே சிற்பம்" என்பனவாம். இனி நால்வகை வருணத்தில் ஒவ்வொரு வருணத்தார்க்கும் அறுவகைத் தொழிலுண்டு. அவைகளை யிங்கே யுரைத்தாற் பெருகும்

மேற்கூறிய அறுவகைத் தொழிலிலே வரைவாவது—எழுதுதல் தொழிலாவது பலவிதக் கைத்தொழில். வித்தையாவது கல்வி. வாணிகமாவது வியாபாரம்; வட்டிக்குக் கொடுப்பதன்று. உழவாவது பயிர்ச்செய்தற்குழவு தொழில். சிற்பமாவது சிற்பர்தொழில்; அது "கல்லுலோகம் மண் செங்கல் கண்டசர்க்கரை மெழுகுச் சொல்லிய மரமேதந்தஞ் சுதைவன்னஞ் செஞ்சிற்பர்க்காம்" எனக்கூறியபடி பத்துவகையுறுப்புக்களாற் செய்யப்படும்.

இங்ஙனம் கூறிய தொழில்களால் ஐவகையாகிய மலைபடுதிரவியம், காடுபடுதிரவியம், நாடுபடுதிரவியம், கடல்படுதிரவியமென்னு மிவற்றையடையலாம். இப்பொருளெல்லாம் இந்தியாவிலே யுண்டாகுவதன்றி வேறெந்தத்தேசத்துமில்லை.

ஆதலால் உலகிலுள்ள வெல்லாப் பொருள்களையும், நம் முயற்சியாலே யடையலாமென்பது சித்தமாம்.

இவ்விந்தியாவிலே நம்முன்னோர்கள் பெரு முயற்சியாலே அளவில்லாத பொருளைத்தேடிப் பல தருமங்களையும் உலகிற்கு

வேண்டிய பெருங் காரியங்களையுஞ் செய்து தாங்களுஞ் சுகமடைந்திருந்தார்களென்பது புறநானூறு முதலிய பலநூல்களாலுந் தெரியப் படுகின்றது. இங்ஙன மன்றிக் கோபுரங்கள், ஆலயங்கள், மகா ரதங்கள், விசித்திர மாளிகைகள் ஆகிய இவைகளை யின்னும் பிரத்தியக்ஷத்திற் காணலாம்; ஒரு நெல்லுமிக்குள்ளே மூடிவைத்துக்கொள்ளும்படியாக அரிசியால் விநாயகரையுண்டாக்குஞ் சிற்பரும் இப்போ தெங்களூரிலே யிருக்கிறார்கள்; ஆதலால் இவைகளை யெல்லாம் நாம் கருதி நோக்கும்போது நம்முன்னோர்களைப் பார்க்கிலும் அன்னிய தேசத்தவர்கள் பெரு முயற்சி யுடையவராயும் அறிவிற் பெரியவராயும் இருந்தார்களென்று விளங்கவில்லை.

ஆதலாற் சகல தொழின் முறைகளையும் நம் முன்னோர்கள் கைக்கொண்டபடியே நாமும் மிகுதியாகக் கைக்கொண்டு நடாத்தி வருவோமாயின் நமது தேசத்திலே பஞ்சலட்சண மென்பது இயற்றமிழிலே யன்றி வேறு பஞ்ச லட்சண மென்ப தில்லாமற் போய் விடும்.

ஆதலால் இனி நமது முயற்சியை ஆங்காங்கு விருத்தி செய்யவேண்டுமாயின் அந்நியதேசத்து வஸ்திரங்கள், பாத்திரங்கள், வாகனங்கள் உணவுப் பொருள்கள் முதலியவெல்லாம் வாங்காது நமதுசுதேசியமாகவே கைக்கொள்ளவேண்டும், அவ்வாறு கொள்ளப்புகுவோமாயின் நமது சுதேசத்திலே பலவிதத் தொழில்களும் வரவர விருத்தியாகிச் சகல பொருள்களுஞ் செழித்தோங்கும்; அந்நியதேசத்தவர்களுஞ் "செம்பு நடமாடக்குயவன் குடி போவான்" என்ற பழமொழியின் படி தங்கள் வியாபாரப் பொருள்களையுங் கொண்டோடிப் போவார்களென்பதற் கையமில்லை.

ஆதலால் நமது பிள்ளைகட்கும் போதித்துச் சுதேசிய முயற்சியிலே பழக்கஞ் செய்விக்கவேண்டும், எவ்வளவு பொருள்களைத் தேடிக்கொடுத்தாலும் அவைகள் சீக்கிரத்திலே அழிந்துவிடும், பலவித முயற்சியிலே பழக்கஞ் செய்து வைத்தால் அதுவே அவர்களுக்குக் குறைவில்லாச் செல்வமாகும், பிதா கணக் கெழுதினாற் பிள்ளைகளும் அவ்வாறே யெழுதுவதற்கு முயல்கிறார்கள், ஒருவன் தகரக்கடை வைத்தால் அதைப்பார்

த்து அநேகரும் அதனையே வைக்க முயல்கிறார்கள், இதுவோ பொருள் பெருக்கு முயற்சிக்குக் காரணம், புத்திமான்களுந் தனவான்களும் கூடியோசித்துப் பல்லாயிரஞ்சனங்கள் சீவிக்கும்படியான பெரிய முயற்சிகளை யெடுத்து ஒவ்வொரு நகரந்தோறு நிலை பெறச்செய்வதே பொருள் பெருக்குதற்குக் காரணமாம்.

காகம் எறும்பு முதலியவைகளைப் பாருங்கள் ஓரிடத்திலே மிகுந்த வுணவுப்பொருளைத் தேடிக்கண்டு கொண்டால் காகம் கதறி முயற்சிசெய்து ஏனைய காகங்களையும் வரவழைத்துப்புசிக்கச் செய்கிறது, எறும்பு தங்கிளைகளிருக்கு மிடந்தேடிப் போய் அவைகளுக்குத்தம் பாஷையாற்குறிப்பிட்டு முயல்வித்து அவைகளையழைத்து வந்து புசிப்பித்து மிஞ்சியவற்றை அவைகளுறையுமிடத்திற் கொண்டுபோய்ச் சேமித்து வைக்கச்செய்கிறது; இவைகளிங்ஙன மிருக்குமாகில், ஏன் புத்திமான்களுங் கனதனவான்களுங் கூடியோசித்துப் பலவிதமான முயற்சிகளை ஒவ்வொரு நகரந்தோறும் பரப்பி நம்மவர்களை அதிற்புகச் செய்து பொருளைப் பெருக்கிக்கொடுத்து வாழ்விக்கக் கூடாது.

இனி நாமெல்லாம் சுதேசிய முயற்சியை விருத்திசெய்யுங் காலத்திலே நமதிராசாங்கத்தாருக்கு விசனமுண்டாகுமோவெனச்சிலர் யோசிக்கின்றார்களே யெனில்? ஒருபோதும் விசனமுண்டாகாது; நாமெல்லாஞ் சுதேசமுயற்சியையே மேற்கொண்டு விருத்திசெய்து பொருட்செல்வம் வளர்ப்பெற்றிருந்தால், நமதிராசாங்கத்தாருக்குப்பருத்திதானே வஸ்திரமாகக் காய்த்ததுபோலாகும்; ஆதலாலதைப் பற்றிச் சிறிதும் யோசிக்கவேண்டுவதில்லை தாராளமாகவே சுதேசிய முயற்சியை அபிவிருத்தி செய்யவேண்டும்.

இங்கே இப்பொழுது என்ன முயற்சி குறைவா யிருக்கின்றது எல்லாம் நடைபெற்று வருகின்றவாகத் தோன்றுகின்றவே என்பீராகில்? அக்குறையைத் தெரிந்தமட்டுஞ் சுருக்கமாக எடுத்துக்கூறுவதைத் தயைசெய்து எல்லாருங் கேட்கவேண்டும்.

1901-ம் வருஷ கணக்கின்படி இந்தியாவிற் சற்றேறக்குறைய முப்பதுகோடி ஜனங்களிருக்கின்றார்கள், இவர்களில் இரண்டரைக்கோடி ஜனங்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக விருக்கிறார்கள், நமக்கு மூலாதாரமான படிப்பு இவ்வாறிருக்குமாகில் எவ்வாறாக வெல்லாரும் படித்து அறிவுடையவர்களாகிப் பலவித முயற்சிகள் செய்து பொருளைச் சம்பாதித்துச் சுகமடையப்போகின்றார்கள்; ஆதலால் ஒவ்வொரு நகரந்தோறும் பாடசாலை தாபித்துப் பிள்ளைகளைப் படிப்பிக்கச் செய்யவேண்டுவது ஒவ்வொரு நகரத்துள்ள புத்திமான்களுக்குஞ் செல்வர்களுக்கும் பெருங் கடமையாகவே யிருக்கின்றது; இப்படிச் செய்யாவிடிற் சனங்களுக்கு அறிவுண்டாவதற்கு வேறேதுவில்லை' அறிவுசுருங்கவே பலவித பெருமுயற்சிகள் அபிவிர்த்தியாகமாட்டா. எல்லாவிதமான படிப்பின் பொருட்டாக 1905-ம் வருஷம் நமதிராசாங்கத்தார் இந்தியாவுக்குச் செய்த செலவானது பன்னிரண்டிலட்சத்து எண்பத்தையாயிரம் பவுனுக்குமேலில்லை யென்கிறார்கள்; அவர்களுக்கு இந்தியாவிற் கிடைத்த மொத்த ரெவினியூ வரும்படியோ நாலுகோடியே தொண்ணூற்றேழு லட்சம் பவுனும்; இராசாங்கத்திற்குக் கிடைத்த ரெவினியூ வரும்படிக்கு அவர்கள் சகலவிதமான படிப்பின்பொருட்டுஞ் செய்கிற செலவு காணுமென்பது சொல்லவேண்டுவதில்லையே. அடுத்த சிலோன் என்கிற இலங்கைத்தீவிலே முப்பத்தைந்து லட்சஞ் சனங்கள் வசிக்கின்றார்கள் அவர்கள் படிப்பின்பொருட்டுப் பத்துலட்சம் ரூபா செலவுசெய்யப்படுகின்றதாம். இப்படியே ஒவ்வொரு தேசங்களிலுஞ் செலவு செய்யப்படுகிறதாம். ஆதலால் இந்தியாவின் மூலாதாரப் படிப்பு மிகக் குறைந்ததென்பது விளங்கும்.

நமது தேசத்திற் பலவிதக் கைத்தொழிலு மிகக் குறைந்ததனால், நூற்றறுபத்திரண்டரை லட்சம் பவுன் (விலைபெறு) மதிப்புள்ள பருத்தியும், எண்டத்தெட்டு லட்சம் பவுன் (விலைபெறு) மதிப்புள்ள சணல் நாரும், முப்பத்தெட்டு லட்சத்துத் தொண்ணூறாயிரம் பவுன் விலைபெறு மதிப்புள்ள மாட்டுத்தோலும், தொண்ணூற்றறுபதுலட்சம் பவுன் விலைபெறு மதிப்புள்ள எண்ணெய் விதைகளும் நமது இந்தியாவிலிருந்து

அந்நிய தேசத்துக்குப் போகின்றன; இவைகள் வெளியேறு மல் நமது தேசத்தில் யந்திரங்களைத் தாபித்துத் தொழில் செய் வோரை வேலைபார்க்கச்செய்து பலவித செயற்கைப்பொருள் களை யுண்டாக்குவோமானால் நமது தேசத்தில் கணக்கில்லாத செல்வப்பொருளுண்டா மென்பதற்குச் சந்தேகமில்லை.

இனி அந்நிய தேசத்திலிருந்து நமது தேசத்தில் வந்தி றங்கும் பொருள்கள், எழுபத்தைந்து லட்சம் பவுன் விலைபெ றுமதிப்புள்ள பஞ்சுத் துணிகளும், மூன்று லட்சம் பவுன் விலை பெறு மதிப்புள்ள தோற் பதார்த்தங்களும், இருபத்திரண் டரை லட்சம் பவுன் விலைபெறு மதிப்புள்ள மண்ணெண்ணெயும், நாற்பது லட்சம் பவுன் விலைபெறு மதிப்புள்ள வெள்ளைச் சர்க் கரையும், நாலுலட்சம் பவுன் விலைபெறு மதிப்புள்ள லிவர் பூல் என்னுந் தேசத்து உப்புமாம்; இவைகளன்றி, இன்னுங் காகிதம், சோப்புக் கட்டி, மெழுகுவர்த்தி, தீப்பெட்டி, குடை கள், மருந்துகள் முதலிய பலவித பதார்த்தங்களும் வெளித் தேசங்களிலிருந்து வந்திறங்குகின்றன. இவைகளை யெல்லாம் அந்நிய தேசத்திலிருந்து வந்திறங்காமல் நம்முடைய தேசத் திலே நாமே செய்துகொள்வோமாகில், இவ்வளவு பணமும் நம்முடைய தேசத்திலே விளங்கி வழங்கிச் செழிக்கு மன்றோ? இவைகளையெல்லாம் நமது சுதேசியர்கள் கவனிக்கவேண்டும்.

1902-ம் வருஷத்திற் பலவிதத் தொழிற் படிப்புச் சொல் லிவைக்கும் பள்ளிக்கூடங்கள் எண்பத்துநாலிற்கு மேலில்லை. ஜப்பான் என்னுந் தேசத்திற் ஜனங்களின் தொகை நமது இந் தியாவின் ஜனங்களின் தொகையிலே ஆறிலொன்று கூடவி ல்லை, அப்படிக்கிருந்தும் அங்கே பலவிதத் தொழிற் படிப்புச் சொல்லி வைக்கிற பள்ளிக்கூடங்கள் எண்ணூற் றைம்பத்து நாலு வைத்திருக்கின்றார்களாம்; இவைகளை யெல்லாம் நோக் கும்போது நமது தேசத்திலே முயற்சிக்குறை இவ்வளவெ ன்று சொல்ல முடியாததாயிருக்கின்றது.

இனி நமது சுதேசிய அபிமானிகள் அந்நிய தேசங்களிலே பலவித கைத்தொழிலிலே தேர்ச்சி பெற்றவர்களை வரவழைத் தாயினும் அல்லது நமது தேசத்திலுள்ள புத்திமான்களை அந்

நிய தேசங்களுக் கனுப்பி யாயினும் பலவிதங் கைத்தொழிற் படிப்பை விருத்தி செய்து நமது தேசத்திலே பரவச் செய்யா விட்டால் வறுமையாலே மிகுந்த கேடு சம்பவிக்கு மென்பது தோன்றுகின்றது; இவைகளை யெல்லாம் பகுத்தறியத் தக்க அறிவு நமது தேசத்திலே அநேகருக் குண்டாயிருக்கிற படியால் இனி யெல்லா முயற்சியும் அபிவிருத்தியாகுங் காலமும் வந்துவிட்ட தென்றே தோன்றுகின்றது.

இப்பொழுது தூத்துக்குடியிலே வக்கீல் உத்தியோகம் பெற்றிருக்கும் மகா கனம் தங்கிய நண்பர் சிதம்பரம் பிள்ளை யவர்கள் பல்லோருக்கும பயனுரும்படி சுதேச ஸ்டீம் நாவிகேஷன் கம்பேனி ஏற்படுத்தி அதற்குவேண்டிய பெரு முயற்சியுஞ் செய்து வருகின்றார்கள்; இந்தக் கம்பேனிக்கு ஐந்து லட்ச முதலுக்குக் கிடைக்கக் கூடிய லாபம் பத்து லட்ச ரூபா யென்று விளம்பர மூலமாகத் தெரிவித் திருக்கின்றார்கள். இந்தப் பத்து லட்ச ரூபாவும் அந்நிய தேசத்தவர் கள் கொண்டு போகின்றார்களென்று பரிதாப முற்று நமது சுதேசிகளே அநுபவிக்க வேண்டுமென் றெண்ணிய இதுவன் றோ அறிவுடைமையும், பொது நன்மையுமாம; இவ்வாறே நமது தேசத்தில் ஒவ்வொரு நகரங்களிலும் புத்திமான்களுஞ் செல்வர்களுங் கூடி யோசித்து நமது தேசத்திலுள்ளவர்கள் சுக மடையும்படி மூலாதாரமான கல்விச் சாலைகளையும் பலவித கைத் தொழிற் சாலைகளையுந் தாபித்து முயற்சியை யதிகப் படுத்திப் பலவித செயற்கைப் பொருள்களை யுண்டாக்கிப் பொருட் செல்வத்தை அபிவிர்த்தி செய்ய வேண்டும்.

(இன்னும் வரும்)

இங்ஙனம்,

திருவாவடுதுறை ஆதீன வித்துவானும்,

மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் சைவநூற் பரிசோதகருமாகிய,

சேற்றூர் ரா. சுப்பிரமணியக் கவிராயர்.

வந்தேமாதரம்.

சுதேச ஸ்டீமர் விக்ஞாபனம்.

சுதேசாபிமான சீலர்களே!

நமது சுதேசத் தாயானவள் பூர்வகாலந் தொடங்கி விலையுயர்ந்த நவரத்தினங்களையும் தங்கம் முதலிய லோகங்களையும் சகல விளைபொருள்களையும், கைத்தொழில்களையும் வியாபாரங்களையு முடையவளாய் மற்றத் தேசங்களினும் மேன்மையும் செல்வமும் மிக்க நிறைந்து நீடித்தகாலம் வாழ்ந்திருந்து பின்னர் அந்நியநாட்டார் பிரவேசித்த காரணத்தால் சகல கைத்தொழில்களையும் வியாபாரங்களையு மிழந்து மிக்க வறுமையுற்றுப் பசியால் வருந்தி இறந்தி கஷ்டப்படுவதைக் கண்ணுற்ற சர்வ இரக்ஷகராகிய கடவுளானவர் சென்ற 1905-ம் ௵ ஆகஸ்டு ௴ 7௳ முதல் நம் சுதேசத்தாயின்மீது கருணைகூர்ந்து "சுதேசக்கிளர்ச்சியை" யுண்டாக்கி நாம் நீடித்தநாளாக இழந்திருந்த ஒற்றுமையையும் ஊக்கத்தையும் கைத்தொழில்களையும் வியாபாரங்களையும் நம்மைக் கைக்கொள்ளும்படி செய்து நன்மை புரிந்து வருகின்றதை நாமெல்லோரும் அறிந்திருக்கின்றோம்.

நம் சுதேசம் க்ஷேமத்தையடைந்து முன்னுளின் மேலான நிலைமைக்கு வருவதற்கு சகலதொழில்களிலும் வியாபாரங்களிலும் மிக்க லாபத்தைக் கொடுப்பதான கப்பல்கள் நடாத்தும் தொழிலை நாம் கைக்கொள்வதே முக்கிய சாதனமாகும். தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் கப்பல்கள் நடத்துவதற்கு இரண்டு ஸ்டீமர்களும் இரண்டு ஸ்டீம் லாஞ்சுகளும் போதுமானவை: அவைகளை நாம் சொந்தமாக வாங்கி வேலை நடத்துவதற்கு (ஐந்து லக்ஷ) ரூபாய் மூலதனம் போதுமானது: அவ்வைந்து லக்ஷ ரூபாய் மூலதனத்துடன் கப்பல் நடாத்துந் தொழிலில் சகல செலவும் நீக்கி வருஷம் 1-க்கு 10 லக்ஷ ரூபா லாபங் கிடைக்கத்தக்கதா யிருக்கிறது. இவ்வளவு பெரிய லாபத்தைக் கொடுக்கத்தக்க தொழிலாவது வியாபாரமாவது வேறுகிடையாது. இத்தகைய தொழிலைச் சென்ற பல வருஷங்களாக அந்நிய நாட்டார்கள் கைபற்றிக்கொண்டு அதிற் கிடைக்கும் லாபத்தில் ஒரு சிறிதேனும் நம்மையடையவிடாமற் செய்து நம் தேசத்தையும் முக்கியமாக நம் தென்னுட்டையும் மிக்க வறுமைக்குள்படுத்தி விட்டார்கள்.

சகோதரர்களே!! இரண்டு ஸ்டீமர்களும் இரண்டு லாஞ்சுகளும் வாங்கி வேலை நடத்துவதற்கு வேண்டு மைந்து லக்ஷ ரூபாய் நம்மிடமில்லையா? நமக்கு கப்பல்கள் நடாத்துந் திறமையில்லையா? நம்முன்னோர் கப்பல்கள் நடாத்துவதில் மற்ற நாட்டாருக்குப்பின்னடைந்து நின்றவரா? கப்பல்க

ளில் ஏற்றுமதி, இறக்குமதியாகுஞ் சரக்குகள் நம்முடையவையன்றி வேறுண்டா? கப்பல்களில் பிரயாணமாகும் பிரயாணிகளில் ஏகதேசம் ஒன்று இரண்டு தவிர மற்றவர்கள் நம்மையன்றி வேறுளரா? ஒருவிதத்திலும் குறைவில்லாத நாம் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கு மாத்திரம் அன்று ஆசியா; ஐரோப்பா முதலிய பலகண்டங்களிலுமுள்ள துறைமுகங்களுக்கெல்லாம் கப்பல்கள் நடாத்தும் செல்வமும் திறமையும் பூண்டுள்ளோம்.

நமது சுதேசத்தை அந்நிய நாட்டார் கைப்பற்றிக்கொண்டதற் கேது வாயிருந்ததும் நம் சுதேசத்துப் பொருள்களை யெல்லாம் அந்நிய நாட்டார் கொண்டுபோவதற் கேதுவாயிருந்ததும் நமக்கு மிக்கலாபத்தைத் தரக்கூடிய கைத்தொழிலில் வியாபாரங்களை யெல்லாம் அந்நியநாடுகளுக்குக் கொண்டு போவதற்கேதுவாயிருந்ததும் அந்நிய நாட்டார் நம்தேசத்தின்மீது பிரவேசித்து நாம் நீடித்தநாளாகக் கைக்கொண்டிருந்த கப்பல் தொழில் நம்மிடமிருந்து கைப்பற்றிக்கொண்ட தொன்றே யாதலால் நாம் அதி சீக்கிரமாகவும் அத்தியாவசியமாகவும் கைக்கொள்ளத்தக்கதும் கைக்கொள்ளவேண்டுவதுமான தொழில் கப்பல்கள் நடாத்துவதேயாமென்பது நம்மெல்லோருக்கும் பரிஷ்காரமாகத் தெரிந்ததே.

நமது சுதேசம் மற்ற தேசங்களைப்பார்க்கிலும் மேலான நிலைமைக்கு வருவதற்கு நா[illegible] வுலகின்கண் ளுள்ள துறைமு[illegible]கெல்லாம் நமது சுதேசக்க[illegible]ல்கள் போக்கு வரவாயிருக்கும்படி செ[illegible] அவசியமா யிருக்கின்றது. ஆனாலும் நாம் பல வருஷங்களாக [illegible] தொழில்களையெல்லாம் ஒவ்வொன்றாக மெள்ள மெள்ளக் கைக்கொள்ளவேண்டுமேயன்றி எல்லாவற்றையும் ஒருங்கே ஓரேகாலத்தில் கைக்கொள்ள முடியாது. அதனால் தற்சமயம் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் மற்றும் முக்கியமான துறைமுகங்களுக்கும் கப்பல்கள் நடாத்தி நாம் லாபமடையும் பொருட்டுத் தூத்துக்குடியில் (10,00,000) பத்து லட்சம் ரூபா மூலதனத்துடன் சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பேனி ஸ்தாபிக்கப் பெற்று "மாங்குசீட்டன்" என்னும் ஸ்டீமரை வாடகைக்கமர்த்தி அது நடைபெற்று வருகின்றது சொந்த ஸ்டீமர்கள் சமீபகாலத்தில் வந்துவிடும். இதில் ஏழைகள் முதல் பெரும் பணக்காரர் வரையுள்ள சகல சுதேச சகோதரர்களும் பங்காளிகளாகச் சேர்ந்து லாபம் அடையும் பொருட்டுப் பங்கு 1-க்கு ரூபாய் 25 வீதம் 40000 பங்குகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஒவ்வொரு சுதேசாபிமானியும் இக்கம்பேனியில் பங்காளியாகி லாபத்தையடைந்து நமது சுதேசத்தை மேன்மையான நிலைமைக்குக்கொண்டுவரும்படி பிரார்த்திக்கிறேன்.

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் ஸ்டீமர்கள் நடத்துவதற்கு வேண்டும் மூலதனமும், அதன் வருப்படியும், செலவும், லாபமும்.

1250 நெட்டன்னுக்கு மேல் 1500 நெட்டன் வரையுள்ள ஸ்டீமர் 2க்குக் கிரையம் ரூ	350000
40 நெட்டன்னுக்கு மேல் 69 நெட்டன் வரையுள்ள ஸ்டீம் லாஞ்சு 2க்-குக் கிரையம் ரூ	50000
ஸ்டீமர் வேலையை நடத்துவதற்கு மூலதனம் ரூ ...	100000
ஆக ரூ ...	500000

தூத்துக்குடி வரும்படி.

நாள் 1-க்கு 3-வது வகுப்பு பிரயாணிகள் 400 வீதம் வருஷம் 1-க்குப் பிரயாணிகள் 1,44,000 க்கு நபர் 1-க்கு ரூ $2\frac{1}{2}$-வீதம்	360000
நாள் 1-க்கு 2-வது வகுப்புப் பிரயாணிகள் 10 வீதம் வருஷம் 1-க்கு 3600 பிரயாணிகளுக்கு நபர் 1-க்கு ரூ $7\frac{1}{2}$ வீதம்	27000
நாள் 1-க்கு 1-வது வகுப்புப் பிரயாணிகள் 5 வீதம் வருஷம் 1-க்கு 1800 பிரயாணிகளுக்கு நபர் 1-க்கு ரூ 15 வீதம் ரூ	27000
நாள் 1-க்கு 75 மாடுகள் வீதம் வருஷம் 1-க்கு 27000 மாடுகளுக்கு மாடு 1-க்கு ரூ 2 வீதம் ...	54000
நாள் 1-க்கு 400 ஆடுகள் வீதம் வருஷம் 1-க்கு 1,44,000 ஆடுகளுக்கு ஆடு 1-க்கு அணா 5 வீதம் ... ரூ	45000
நாள் 1க்கு (ரயில்மார்க்கம் வந்து நேரே கொழும்புக்குப் போகிறவைகளையும் சேர்த்து) 6000 மூடைகள் வீதம் வருஷம் 1-க்கு 2160000 மூடைகளுக்குச் சராசரி அணா 4 வீதம் ... ரூ	540000

கொழும்பு வரும்படி.

நாள் 1-க்கு 3-வது வகுப்புப்பிரயாணிகள் 400 வீதம் வருஷம் 1-க்குப் பிரயாணிகள் 144000-க்கு நபர் 1-க்கு ரூ $2\frac{1}{2}$ வீதம் ... ... ரூ	360000
நாள் 1-க்கு 2-வது வகுப்புப் பிரயாணிகள் 10 வீதம் வருஷம் 1-க்கு 3600 பிரயாணிகளுக்கு நபர் 1-க்கு ரூ $7\frac{1}{2}$ வீதம் ரூ	27000
நாள் 1-க்கு 1-வது வகுப்புப் பிரயாணிகள் 5 வீதம் வருஷம் 1-க்கு 1800 பிரயாணிகளுக்கு நபர் 1-க்கு ரூ 15 வீதம் ரூ	27000
நாள் 1-க்கு 200 மூடை வீதம் வருஷம் 1க்கு மூடைகள் 72000க்குச் சராசரி மூடை 1-க்கு அணா 4 வீதம் ரூ	18000
ஆக மொத்தம் இரண்டு துறைமுகங்களிலும் வரும்படி ரூ	14,85,000

செலவு.

காப்டன் இஞ்சினியர் முதலிய பெரிய உத்தியோகஸ்தர்களின் சம்பளம் வருஷம் 1க்கு ...	33600
டெக்கின் 'குறு' வாகிய சிறிய வேலைக்காரரின் சம்பளம் வருஷம் 1-க்கு	15120
இஞ்சின் சம்பந்தமான வேலைக்காரரின் சம்பளம் வருஷம் 1-க்கு	12000
சலூன் (1வது 2வது வகுப்பு பிரயாணிகளின்) வேலைக்காரர்சம்பளம் வருஷம் 1-க்கு ரூ ...	4080
கப்பல் உத்தியோகஸ்தர்களுடைய சாப்பாட்டுச் செலவு வருஷம் 1-க்கு ரூ	13200
கப்பல் சில்லரை வேலைக்காரர்களின் சாபபாட்டுச் செலவு வருஷம் 1-க்கு ரூ	26400
நிலக்கரிச் செலவு வருஷம் 1-க்கு ரூ ...	164000
கப்பல் வேலைக்காரர்களுக்கும் பிரயாணிகளுக்கும் தண்ணீர்ச் செலவு வருஷம் 1-க்கு ரூ	4080
தூத்துக்குடியிலும் கொழும்பிலும் பைலட்டுக்கூலி கஸ்டம் வாடகை தீப வாடகை முதலியன வருஷம் 1-க்கு ரூ ...	48000
சரக்குகள் ஏற்றும் இறக்கும் வேலைக்காரர்களாகிய ஸ்டீவ்டோரின் சம்பளம் வருஷம் 1க்கு ரூ ...	12000
காப்டன் இஞ்சினியர் முதலியவர்களின் ஆபீஸ் செலவு வருஷம் 1-க்கு ரூ	720
ஸ்டீம்லாஞ்சுகளுக்கு நிலக்கரி, தண்ணீர், வேலைக்காரரின் சம்பளம் செலவு வருஷம் 1-க்கு ரூ	12000
தூத்துக்குடி ஸ்டீமர் ஆபீஸ் சிற்பந்திச் சம்பளச் செலவு வருஷம் 1-க்கு ரூ	3600
கொழும்பு ஸ்டீமர் ஆபீஸ் சிற்பந்திச் சம்பளச் செலவு ஷை	6000
இலங்கையிலும் இந்தியாவிலும் பத்திரிகை விளம்பரச் செலவு ஷை	2400
ஸ்டீமர்கள் லாஞ்சுகள் ரிப்பேர்ச் செலவு ஷை ...	24000
ஸ்டீமர்கள் லாஞ்சுகள் இன்ஸ்யூர்ச் செலவு ...	24000
சில்லரைச் செலவு...	79800
ஆக மொத்தம் செலவு ரூ	4,85,000
செலவு நீக்கி லாபம் ரூ	10,00,000

தூத்துக்குடி
4—10—06. } வ. உ. சிதம்பரம்பிள்ளை.

நிதரிசனம்.

[முன் தொடர்ச்சி.]

லோசனனை விட்டுப்பிரிந்த மறுதினமே ரகுநாதர் இன்ன இடத்திலிருக்கிறார் என்று ஒருவருக்கும் தெரியாது பலவாண்டுகள் கழிந்தபின் சாதாரணமனிதனுயில்லாமல், திவ்ய திருவருள்வடிவமாய்ப் பரமபதி பக்திரேஷ்டனாய் இந்தியா முழுவதும் ஸ்ரீமத்ரகுநாதகோசுவாமி யென்று வழக்க மறப்படியும் நாடியாவுக்கு விஜயஞ்செய்தனர்.

ரகுநாதர் துறவடைந்தவுடனே பரிபாகசித்தமுள்ள லோசனனே தன்னுடைய ஆஸ்திமுழுமையும் எளியவர்களுக்கும் வியாதியால் மெலிந்தவர்களுக்கும் தானமாக வழங்க வேண்டுமென்றேதான் தரித்திரநிலையையடைந்து அன்னையே ஆபரணமாகப்பூண்டு அடியார்களேயே உறவினராகக் கொண்டு தன்னுடைய சுபத்தினியோடு காலங்கழித்தனன். இதனால் நிதரிசன பதம் இன்னதென்பது நன்றாய் விளங்குகிறது. நிதரிசனமானது வாயைத்திறந்து ஒன்றையும் சொல்லாமலே போதிக்கின்றதாயினும், மிகவும் திட்டமாகப் போதிக்கின்ற ஆசிரியர்களில் ஒன்றாம். அது மனிதர்கள் கை பழகுவதற்கேற்ற பாடசாலைபோன்றது. சொற்களைப்பார்க்கிலும் நிதரிசனம் அதிக வலியுள்ளது. உபதேசமானது நமக்கு வழியைமாத்திரமே குறித்துக்காட்டும்; வழக்கத்தில் நமக்குப் பயிற்சியாகி நம்மிடத்தில் நன்றாய் நிலைகொண்டு ஸ்திரமான நிதரிசனமோ நம்மை விடாமல் கூடவே நடத்திக்கொண்டுபோம். நல்ல உபதேசம் நமக்குப் பயன்படத்தக்கதேயாயினும், அதனோடு கூடச் சிறந்த நிதரிசனமுமில்லாவிட்டால், அந்த உபதேசத்துக்கு அத்தனையாக வலிமையுண்டாவதில்லை. ஆயின் உனக்கு என் உபதேசமே பிரதானமன்றி நடத்தை பிரதானமல்லவென்றுரைக்கும் உலக வழக்குக்கு என்னகதி என்பீர்களோ? அதோகதிதான். சாதாரணமாய் அது அனுபவத்தில் மாறுபட்டிருக்கிறதென்பதை எவரும் தெரிந்துகொள்ளலாம்.

ஒன்றைச் செவியாற் கேட்டறிவதைப் பார்க்கக் கண்ணால் எளிதிற் கண்டறியும் இயற்கை ஏறத்தாழ மனிதர் எல்லோருக்கும் உண்டு. புஸ்தகத்தில் படித்தாவது, காதினாற் கேட்டாவது இருக்கின்ற விஷயங்களைக் காட்டிலும் நேராகக் கண்ணெதிரில் கண்ட விஷயம் எதுவும் நினைவில் ஆழ்ந்தழுந்தும். இது முக்கியமாய் இளமைப்பருவத்தின் இயற்கை அப்பருவத்தில் கண்ணே அறிவுமலைமேல் மனமேறுவதற்குப் பிரதான மார்க்கமாயிருக்கின்றது. "கண்பார்த்ததைக் கைசெய்யும்" என்னும் முது

மொழிப்படியே சிறுவர் எந்தப் பார்க்கிறார்களோ அவ்வண்ணம் அபுத்திபூர்வமாயே அதைத்தாமும் அனுசரித்துச் செய்கிறார்கள். பச்சிலை தின்னும் பூச்சி புழுக்கள் பசுமேனி யுடையவை யாவதுபோல, பாலகர் தம்மைச் சூழ்ந்திருப்பவர்களைக் காணக் காண, தமக்குத் தெரியாமலே நாளடைவில் தாமும் அவர்களைப் போலாவார்கள். ஆகவே நன்னெறிகளை நடத்தி நிதர்சனமாகக் காட்டுவது, பிறருடைய வாழ்க்கையுடன் எப்போதும் பின்னிப் பிணைந்து, அவர்களுடைய குணங்களை நல்வழியில் திருத்துவதற்காயினும் ஏற்ற சாதனமா யிருப்பதனால், அற்பமாகத் தோன்றும் விஷயங்களிலும் அது முக்கியமானதாம். செய்யத் தகுவதை இன்னதென்று பிறருக்குச் சொல்வது போதாது தானே செய்து நிதர்சனமாகக் காட்டல் வேண்டும். நாம் அனுபவிகளெல்லராய்ச் சும்மாவிருந்து கொண்டு பேசுவதனால் பயன் யாதுமில்லை. நீதி யொழுக்கங்கள், அன்பு, அறிவு முதலியவைகளை ஒருவன் கற்றுக் கொள்வது இலகுவாய் நிதர்சனத்தாலாவது தான். நம்மைச் சூழ்ந்திருப்பவர்களுடைய நடையுடை பாவனைகளுக்கும், ஆசாரங்களுக்கும், உள்ளக் கருத்துகளுக்கும், கோட்பாடுகளுக்கும் ஏற்றபடியே, நாம் அவற்றை யுணராதிருந்தும், நம்முடைய நடையுடை பாவனைகளும் ஆசாரங்களும் உள்ளக் கருத்துகளும் கோட்பாடுகளும் உரு வமைகின்றன. நல்ல விதிகளாலும் உபதேசங்களாலும் நன்மை விளையுமாயினும் நல்ல மாதிரிகளால் அவற்றைப் பார்க்கினும், பன் மடங்கு அதிகமான நன்மை யுண்டாகும் நல்ல உபதேசம் நடை யுடை பாவனைகளிலிருந்தும் கண்ணெதிரே தீய வொழுக்கங்கள் நிதரிசனமாகக் காட்டப் படுமாயின், அதை ஒரு கையாற் கட்டுவதை மற்றொரு கையா லிடித்துக் கொண்டு வருவது போலாம். ஆகவே முக்கியமாய் வாலிபத்தில் சேரிடமறிந்து சேர்வதே பரமார்த்தமாம். காந்தம் இரும்பை ஆக்ருஷிக்கு மாறு வாலிபரை வாலிபரும் மற்றைய வயதின் முதிர்ந்தோரும் ஆக்ருஷித்து, அவர்களுக்குத் தோன்றுவண்ணம் நாளாவர்த்தியில் ஒருவருக்கொருவர் சமானராவார்கள். மன ஒற்றுமையால் எவரும் (விசேஷமாய் வாலிபர்) தம்மைச் சேர்ந்தார் குணம், குற்றம் இரண்டையும் தமக்குத்தெரியாமலே அனுசரிப்பது அல்லது கிரகித்துக்கொள்வது இயற்கை. ஆதலால், வாலிபர் நல்லோருறவை நாடுவதும் தம்மினும் உயர்ந்தோர் நிலையை அவாவுவதுமே உத்தமம். நல்லோர் சேர்க்கை ஒருபோதும் நன்மை விளைவிக்கா திராது. பிரயாணிகள் செல்லுமார்க்கத்தில் உள்ள செடி கொடி புஷ்பங்களின் பரிமளம் அவர்கள் வஸ்திரத்தை விட்டு நீங்காதிருப்பதுபோல் நல்லோருடன் சஹவாசம் செய்து பிரிந்து போனாலும் அம்மனிதரை அவர்கள் நற்பழக்கம் விட்டு நீங்காமல் அதிற் சிறிது கூடவே தொடர்ந்து கொண்டிருக்கும்.

ஒருவன் மற்றவர்களைப்போல் அறிவில் பண்படாதவனும், அற்பசாமர்த்தியமுள்ளவனும், தனஞ்சிறியனுமா யிருப்பினும் அவன் நடத்தை மட்டும் மாற்றுயர்ந்திருக்குமானால் தொழிற்சாலையோ கணக்குச் சாலையோ, வர்த்தகசாலையோ, மந்திராலோசனை சபையோ, எவ்விடத்திலாயினும் அவனுக்குச் செல்வாக்கு அதிகமாகும். அது போலவே கல்வி கேள்விகளின் அறிவு பிரசங்க சாமர்த்தியம் முதலியன ஒருவனுக் கில்லா திருந்தாலும் நல்ல இருதய பரிபாக முள்ள சுத்த சாதுக்களின் நேசமும் அவர்களைப் பின்பற்றும் வாழ்க்கையுமுண்டானால், அவனே முத்தனாவான் ஐயமில்லை. சரித்திர புஸ்தகங்களே நடத்தைக்கு நல்ல நிதரிசனம்.

பு. நா. சொக்கலிங்கம்.

புருஷார்த்தம்.

I. அறம்.

(முன்தொடர்ச்சி.)

கந்துகமதக்கரியை வசமா நடத்தலாம்
கரடி வெம்புலி வாயையும்
கட்டலாம் ஒருசிங்க முதுகின் மேற் கொள்ளலாம்
கட்செவி யெடுத்தாட்டலாம்
வெந்தழலினிரதம் வைத்து ஐந்து லோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத்துலாவலாம்
விண்ணவரை ஏவல் கொளலாம்
சந்ததமும் இளமையோடிருக்கலாம் மற்றொரு
சரீரத்தினும் புகுதலாம்
சலமேல் நடக்கலாம் கனல் மீதிருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறம் அரிது சத்தாகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேஜோ மயானந்தமே.

சென்மிறக்கக் கற்றாலும், சித்தியெல்லாம் பெற்றாலும்
மனம் இறக்கக்கல்லார்க்கு வாயேன் பராபரமே.—ஸ்ரீ தாயுமானவர்

மனத்தை வசப்படுத்தல் மகா கஷ்டமே. அதைப் பித்துப் பிடித்த குரங்கென்னலாம். எப்பொழுதும் ஓய்வில்லாமல் அலைந்து திரிவதே

குரங்குகளுக்கு இயற்கை. அப்படிப்பட்ட குரங்குகளில் ஒரு குரங்குக்குக் கள்ளை வாங்கி ஊற்றிக் குடிக்கும்படி செய்தால், அதின் நிலைமை எவ்விதமிருக்கும்? அதினும் பன்மடங்கு துள்ளிக் குதித்துத் தானே ஓடும். அப்படிப்பட்டதை, கொள்ளித்தேளொன்றும் பலமாய்க் கொட்டியது. மனிதனை சாதாரணத் தேள் கொட்டினாலும் துள்ளிக் குதித்து நாள் முழுதும் அழுது தவிக்கின்றான். குரங்கைக் கேட்பானேன் வேடிக்கை தான். போதாக் குறைக்கு ஒரு பூதப் பிசாசும் வந்து பிடித்தது. அந்தோ அவ் வானரத்தின் அமைதியை யாரால் வர்ணிக்க முடியும். அதுபோலவே மனிதனுடைய மனமும் நிலையில்லாமல் அங்கும் இங்கும் தாவியலைகிறது. அத்துடன் ஆசையென்னும் கள்ளையும் அருந்துகிறது. மேன்மேலும் பந்த பந்தப் விருத்தியாகிக் கொண்டே வந்து ஓய்வின்றிச் சலனமடையும்போது அசூயையாகிய கொள்ளித்தேளும் கொட்டுகிறது. ஆ! ஆ!! அதின் ஸ்திதியை அறையவும் படுமோ? கடைசியாய் அகங்காரமாகிய பிசாசும் பிடிக்கிறது. அப்போது அதின் கூத்தே கூத்து. அம்மனத்தில் எதுதான் படும். எதுதான் நிலைக்கும்? பார்த்தஇடம் எல்லாம் பரபரப்பே. ஒரு காலத்தில் ஒரு தீர்க்கதரிசி இருந்தான். அவனுக்கு "எலிஜா" என்று பெயர் ஊராரெல்லாரும் ஒன்று கூடி தேவ நிபந்தனைக்கு மாறாக அவனைத் தேவ ஊழிய வேதிகையினின்றும் விலக்கிவிட்டார்கள். குருத்துவம் போய் விட்டதினால் அத் தீர்க்கதரிசி ஊரைவிட்டோடினான். அங்குமிங்கும் அலைந்து திரிந்து வனத்தினூடே மலைச்சாரலினருகே சென்று ஒரு குகையிற் புகுந்து ஒளிந்துகொண்டிருந்தான். ஆனால் கடவுள் அவனுக்குப் பிரத்தியக்ஷம் ஆவாரென்று மட்டும் கேள்விப்பட்டபடி நம்பிக்கையுமிருந்தது. மஹா பயங்கரமான பெருங் காற்று அடித்தது. அதினால் மலைகளிலும் காடுகளிலும் உள்ள பெரிது சிறிதாகிய மரங்களெல்லாம் முறிந்தும் வேரோடு பெயர்க்கப்பட்டும் கீழே விழுந்தன. கடவுள் தான் வந்துவிட்டாரென்று "எலிஜா" நினைந்தான். காற்றிலேயா கடவுளிருக்கின்றார்? அவரைக் காணக்கூடவில்லை. அதற்கப்புறம் இடியும் மின்னலும் மேகக் கூட்டங்களு முண்டாகிப் பெருமழை பெய்தது. அவைகளிலும் கடவுள் காணப்படவில்லை. பிறகு பூகம்பம் உண்டானது. பூமி பிளந்தது. மலைகள் வெடித்தன. குன்றுகள் உருண்டன. அவைகளிலிருந்து நெருப்பு குபீர் குபீரென்று வெளியே சிதறி விழவும் நாலா பக்கமும் அக்கினி மயமாய் விளங்கின. அதிலாவது கடவுள் இருக்க மாட்டாராவென்று எலிஜா பார்த்தான். அங்கும் காணவில்லை. கடைசியாய் மகா சுந்தரமாக வானம் பூமி யெல்லாம் விளங்கின சந்தோஷமாகி தோஷங்களின்றி யெங்கும் அமைதியோடிருந்தது. அங்குதான் கடவுள் இருக்கின்றாரென்றும், முன்னும் அப்படியே யிருந்திருப்பாரென்றும், இனிமேலும் அப்படியே யிருப்பாரென்றும் எலிஜாவுக்குத் தோன்றியது.

மேற் கதையிற் கூறிய காற்று இடி மின்னல் மழை பூகம்பம் முதலியன இந்திரிய விஷயங்களைக் குறிப்பிக்கின்றன, அவைகளைப் பின்பற்று மனது நடுக் கடலில் பாறையில் மோதிப் பெருங் காற்றால் அலைப்புண்டு திகைத்து நிற்கும் கப்பலுக்குச் சமானமே. அமைதியா யிருந்த போது மட்டுமே எலிஜா கடவுளைக் கண்டான். அலையில்லாத சாகரம் போலும் அசிலம் சேரா விளக்கைப்போலும் உள்ள மனத்திடையே கடவுள் தோன்றுவர். ஆசாநிகளம் துகளாயின்பின் ஒன்றுமே பேசா அநுபூதி பிறக்கும். இது எல்லாக் காலத்தும் எல்லாத் தேசத்தும் எல்லாச் சமயத்தினருக்கும் எல்லாச் சாதியாருக்கும் ஆண் பெண் முதலிய சகல வகுப்பினருக்கும் பொது. ஆனது பற்றியே சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வம் மனம் இறக்கக் கல்லாரிடத்து விளங்காது எனச் சான்றோர் கூறியுள்ளார். ஆன்மபேத அவஸ்தா பேத வியவகாரங்கள் தேவையில்லை. தனித்து வனத்தில் தபசு செய்து உண்டி சுருக்குதலாதி நோன்பிழைத்து யோகபரனாய் வாழும் சந்நியாசிக்கும் ஒரு சமயம் இது கிட்டுதல் அரிது. ஆனால் அமர்ந்த சந்தைக் கூட்டம் போன்ற ஜன சமூகத்தில் பலவித பேத வியவகாரங்களை வகித்துக்கொண்டும் ஷட் ரசான்னங்களை உடலுக்கு ஊட்டியும் ரம்பா சமான ஸ்திரீ லோலனாய் உல்லாசமாய் இருக்கும் கிருகஸ்தன் ஒரு சமயம் மஹோன்னத ஜீவன் முக்தனாய் வாழலாம். அவனிடத்தொளிரும் ஞான பானுவால் துறவியைச் சூழ்ந்த அஞ்ஞான இருளும் நீங்கும். பாஞ்சால தேசாதிபதி மிகப் பழமையான சுவேத கேதுவுக்கும் அவன் தந்தைக்கும் ஐயமகற்றி எதார்த்தத்தை விளக்கவில்லையா? இன்னும் எத்தனை அரசர், எத்தனை வணிகர், எத்தனை கிருஷிகர், எத்தனை சிறு தொழிலாளிகள், எத்தனை தனிகர், எத்தனை வறியர் அந்த ஞானத்தைப் பெற்றிருந்ததாக வேதாகம புராணேதிகாசங்கள் கோஷிக்கின்றன. ஜனகராஜன் கதையைச் சற்று உற்றுநோக்குவாம்.

ஜனகவிதேகன் ஒருராஜரிஷி அவன்பால் ஞானோபதேசம் பெறும் பொருட்டுப் போகாத புண்ணிய சீலர்கள் மிகச்சிலரே. யாவரேயாயினும் வந்தோரை நல்வரவு கூறி உபசரித்து ஏற்று அவரவர் பக்குவம் நோக்கி மனக்களங்கு அறுத்து ஞானப்பிரகாசம் உண்டாக்கி அனுப்புவது வழக்கம். இராசதானி நகராகிய மிதிலைக்கு வெகுதூரத்திலிருந்து ஒரு பிரம்மசாரிப் பிராமணன் வந்து அரசனை நோக்கி "அரசரே உம்முடைய மனத்தூய்மையைப் பற்றியும் வித்தியா விசேஷத்தைப்பற்றியும் நான் நிரம்பக் கேள்விப்பட்டிருக்கிறேன். தத்துவார்த்த விஷயங்களில் ஏற்படும் சந்தேகங்களை நிவிர்த்திப்பதில் உம்மை நிகர்ப்பார் யாரும் இல்லை. உம்முடைய தோட்டத்தின் மரங்களில் உள்ள கனிகளைப் பறித்து நேரே உண்ணக் கொடுப்பதுபோலப் பரமாத்ம பலத்தையும் உண்ணச் செய்கிறீர். ஆயினும் நீர்வசிப்பதோ வியவகாரங்களுக்கு மத்தியிலேதான் உம்முடைய இராஜ்யத்தில் நீர் கவனிக்கத்தகாத பாகம் ஒருசிறிதுமில்லை. உம்முடைய குடி

களில் பரமஏழைகளுங்கூடப் பகலிலோ இரவிலோ எந்த நேரத்திலாயினும் நேரே உம்முடைய சமுகத்தில் தங்களுடைய குறைகளைத் தெரியப்படுத்திப் பரிகாரம் தேடிக்கொள்கின்றனர். பல புத்திரப்பேறுடையவர் சிநேக விஷயத்திலோ விலைமதிக்கத்தகாத சிறப்புவாய்ந்தவர். சம்பாஷணை விஷயத்திலோ நிகரில்லாத திருஷ்டிக வாக்குச் சம்பிரதாயம் உடையவர், ஜம்புத்தீவு வேந்தர்களுள் உம்மைப்போல அரசுரிமையை வஹித்து ஒழுங்குபெற நடத்தும் மாக்ஷிமையுடையவர் எவரும் இலர். கடன் என்று ஒருகாசளவேனும் எவர்க்கும் கொடுத்தற்கு இல்லாதவரும் நீரே. பொதுநன்மையாக உம்முடைய அதிகார எல்லைக்குள் நீரே நேரில் கவனித்துப் புத்திபூர்வமாக நடத்தாத விஷயம் எதுவும் இல்லை. யுத்தத்திலோ உம்மைப்போன்ற தைர்யவீர சேனாதிபதியாண்டும் காண்டல் அரிது. உம்முடைய ரதகஜ துரகபதாதிகளை ஒழுங்காய்ப் பழக்கி நடத்திவரும் முறைபோல இந்தச் சம்புத்தீவில் எந்த அரசரும் இதற்கு முன் நடத்தவும் இல்லை. இனிமேலும் இயலாது. உம்மோடு எதிர்த்து வில்வளைக்கக்கூடிய சாமர்த்தியசாலியான அரசன் எங்கும் இல்லை யென்பதே திண்ணம். ஒருவாறு எதிர்த்தாலும் அவர்கள் வேற்றுலகவாசிகள்தான். உம்முடைய தர்பார் காலங்களில் நீர் நடாத்திவரும் அதிமேன்மையான ஒழுங்குகளோ ஜகத்பிரசித்தம். புறாமுட்டைபோன்ற வஜ்ரங்கள் இழைத்த கிரீடதாரியாய் உன்னத சிங்காசனத்தில் உதயபானுவைப்போல ஆரோகணித்து விளங்குவதை நான் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கிறேன். ரவிசசிதாரகைப் பிரகாசம்போன்ற விசித்ர உடைகளோடு உம்முடைய உத்தியோகஸ்தர்கள் உம்மைச்சூழ்ந்து ஜொலிக்கின்றனர். இத்தகைய அமளிமத்தியில் மனஏகாக்கிரத்தோடு நீர் எவ்வண்ணம் சமதரிசனம் பண்ணிக்கொண்டிருக்கிறீர்? இத்துடன் உமக்கு இருடி என்ற நாமமும் வழங்குகிறது. உம்மை ஏன் உலக வியவகாரங்கள் சித்தசலனப்படுத்தவில்லை "என்று கேட்டான். அரசன் புன்முறுவலோடு சாந்தமாக விப்பிரனை நோக்கி "ஐயா, உம்முடைய கேள்விகள் எல்லாம் மிகச் சிலாகிக்கத்தக்கனவே. இல்லறமார்க்கமும், துறவறமார்க்கமும் வெவ்வேறுதான். ஆயினும் இரண்டும் ஒத்து நடத்தலும் உண்டு. அதைச் சொல்லாமலே வியவகரித்தல் முற்றிலும் கூடாத காரியமே. அநுபவத்தாலன்றி வேறுவிரகால் அறிதல் பொருந்தாது. நீர் தயவுசெய்விரேல் அதையும் பார்க்கலாம். நான் வேண்டுவது உமக்கு நிதர்சனமாகும் பொருட்டாகவே யன்றி வேறுகருத்தில்லை" என்று மொழிந்தனன். "மஹாராஜாவாயும் இருடியாயும் விளங்கும் நீர் எதைச் செய்வித்தாலும் எனக்குச் சம்மதமே. இப்பூமண்டலத்தில் இதுகாறும் ஜனகமன்னன் தகாத தொழிலைச்செய்தான் அல்லது செய்வித்தான் என்று எவரும் மறந்தும் நினையார்" என்று மறையவன் கூறினான். அரசனுக்கு அப்பிரமசாரி வசனத்தில் அதிக திருப்தியுண்டானது. உடனே அம்மாணியின் சிரம்மழுங்கச் சிறைப்பிக்கப்பட்டது. அரை

யிலே இலேசான துகில் புனைவிக்கப்பட்டது. பாதரசம் நிறைய வார்க்கப்பட்ட வாயகன்ற பாத்திரம் ஒன்று அவன் சிரசின்மீது வைத்து உருவின கத்தியுடன் நாலு வீரர் புடைசூழ்ந்து வரச்சகல ஆடம்பரத்தோடும் நகர்வலம் வருமாறு திட்டஞ் செய்யப்பட்டது. எப்போது ஒரு துளி ரசம் கீழே சிந்துமோ அந்த க்ஷணமே அவன் கழுத்தை வெட்டும்படி அரசன் ஆக்ஞையேற்பட்டது. அடிக்கடி அவன் மனத்தைக் கலக்கும்படியான ஏற்பாடுகளும் நடந்தன. ஊரைச்சுற்றி வரும்போது அவன் மனம் ரசப்பாத்திரமாகவேதான் இருந்தது. காலை முதல் மாலை வரை பெருங்கூட்டம் சூழ்ந்து வர இனிமேல் இல்லை என்னும் படியான விநோத வேடிக்கை மேளதாளம் ஆடல் பாடல்களின் மத்தியில் நடந்து கடைசியாய் ஒரு துளி ரசமும் சிந்தவிடாமல் அரண்மனை வந்து சேர்ந்தனன். ஜபமந்திரத்தில் வீற்றிருந்த அரசன் பார்த்து இறக்கி வைக்கும்படி உத்தரவு செய்தான். வேதியனும் நடந்து வந்த அலுப்புத்தீர உட்கார்ந்தான். அரசன் நடந்த வர்த்தமானம் யாதென வினவினன். மாணியோ "அரசரேறே நான் வீதி வலம் வரும்போது ஒன்றையும் பார்க்கவும் இல்லை ஆனால் என் மனம் மட்டும் ரசபாத்திரத்தில் அடங்கிக்கிடந்தது அதுதான் எனக்குத் தெரியும். எனப் புகன்றனன். "அப்படியா? விசேட வாத்தியங்கள் உமக்காகத்தான் தயார் செய்யப்பட்டன. எங்கே பார்த்தாலும் ஆடல் பாடல்களும் ஹாஸ்யவசனங்களும் முழங்கிக் கொண்டிருந்தனவே. சதுரங்க சேனைகளும் புடைசூழ்ந்து வந்தனவே. நாசிகாரந்திரத்தைத் தொளைக்கும் படியான சுகந்த புஷ்பங்களை ஸ்வர்ண தாம்பாளத்தில் வைத்துக்கொண்டு மதிவதன ரமணிகள் செங் கமல மலர்போலும் கரங்களால் அள்ளி உம்மேல் தூவினரே. ரத்னஹாரங்களை உம்முடைய கழுத்தில் போட்டுச் சரசம் பண்ணினரே. நீர் ஒன்றும் அறியேன் என்கிறீரே. விந்தைதான் ஆனால் ரசபாத்திரத்தில் மட்டும் மனம் இருந்தது என்று சொல்கிறீர். இது போலவே நான் ராஜ்யபாரத்தை வகித்திருப்பது. என்மனம் எப்போதும் பரத்திலே ஒன்றிநிற்கும். வியவகாரங்கள் என்னைப் பந்திக்கிறதில்லை" என்று ஜனகவிதேகன் சாற்றலும் தடையற்ற ஆனந்தத்தோடு சாந்தி, சாந்தி, சாந்தி, என்று கூறிக்கொண்டே பிராமணன் தன்னிருப்பிடம் சென்றனன். இதனால் அவரவர் தர்மம் இன்னதென்பது நன்றாய் விளங்கும். எல்லாம் மனத்தைப்பொறுத்ததேயன்றிச் சரீரத்தைப்பற்றியதன்று. பரசுகானுபவத்தில் மட்டும் இரண்டு அறத்தினர்க்கும் பேதமுண்டு அதுவும் மிகச் சிறிதே. கோற்கண் ஆடு மேய்ப்போன் தூஞ்சல் போலுமே கிருகஸ்தர் சுகம். ஹம்சதூளிகா மெத்தை அல்லது அது போன்ற வேறுபடுக்கைகளில் தூங்கல் போலுமே துறவி சுகம். இரண்டு தூக்கமும் சரியே. மயக்கம் தெளிகிறது தான் பலன். தர்மத்தைச் சரியாய்ப் பேணினால் சச்சிதானந்தசிவத்தை அடைவது சரதம். (இன்னும் வரும்)

பு. நா. சொக்கலிங்கம்.

ஜகத்ஜோதி.

(முன் தொடர்ச்சி)

மோகபத்கானுடைய சேனைகள் சக்கரவர்த்தியினுடைய கூடாரத்தில் ஏராளமாய் நுழையவே "சந்தடிசாக்கில் கந்தப் பொடிகாற்பணம்" என்று சக்கரவர்த்தினியாகிய ஜகத்ஜோதி மெல்ல நழுவித் தப்பித்துத் தன்யானைமீதேறி ஆற்றைக் கடந்து அக்கரைசென்று தன் பர்த்தாவுக்கு நேரிட்ட சங்கடங்களனைத்தையும் சேனைக்குத் தெரிவித்தனள். இச் சம்பவத்தைக் கேட்ட மோகபத்கானுக்கு உண்டான துயரத்துக்கு அளவில்லை. ஜகத்ஜோதி சுயாதீனப்பட்டு நிற்கும்வரை தனக்கு க்ஷேமமில்லை என்பதை அவன் நன்கறிந்தவன். எவ்விதமாகவாவது அவளைத் தன் ஆட்சிக்குள் கொணரவேண்டும் என்று நினைத்தான். பகிரங்கமாகவே சத்துருவென்று ஏற்பட்டு விட்டபடியால் இனித் தொடங்கிய காரியத்தை எவ்விதமாகவாவது முடித்தல் வேண்டுமென்பது அவன் கருத்து.

"எண்ணித்துணிக கருமந்துணிந்தபின் எண்ணுவமென்பதிழுக்கு" அன்றோ தன் புத்தியும் பலமும் அளந்தறிந்தவன். தன் சேனைக்குள் தெய்வம்போல் விளங்கி வந்தவன். ஜகத்ஜோதியின் சாமர்த்தியமும் அவள் சேனைகளை நடத்துகிற விதமும் அவன் நன்கு அறிந்தவன். அமைச்சனுகிய அவள் சகோதரனுடைய சாமர்த்தியத்தையும் அவன் அறிந்தவனே. என்றாலும் சேனைகளிடத்தில் அவர்களுக்குச் செல்வாக்கில்லையென்பதை அவன் அறிவான். அநேகம் பிரபுக்களுக்கு அவர்களிருவரிடமும் வெறுப்பு உண்டென்பதையும் அவன் நன்கு அறிந்தவன்.

மோகபத் சக்கரவர்த்தியுடன் ஆற்றங்கரையிலுள்ள தன் பாளையம் வந்து சேரவே பேர்போன பிரபுக்களில் ஒருவனை குஜேஜட்கான் என்பவன் இராஜ சேனையைச் சேரும்வண்ணம் அங்கு வந்துற்றதைக் கண்ணுற்றான். சக்கரவர்த்தி தங்கியிருந்த இடத்தில் ஒருவருமில்லாமல் சக்கரவர்த்தியும் தன்னந்தனி

யனுக் கலகக்காரனுகிய மொகபத்தின் வசம் சிறையிருப்பதைக் கண்ணுற்ற அப்பிரபுவாகிய சூஜெட் இராஜபுத்திரர்கள் முன்பாக மொகபத்தை இராஜத்துரோகி யென்று நிந்தித்துப் பழிதூறினன். மொகபத்தும் உடனே வெகுண்டு தன் சேனைகளை அவ்வகங்காரிமேல் விழுந்து பாயும்படி யேவவே அவர்களும் கண்ணிமைப்பொழுதில் அவன்மேலும் அவன் பரிவாரத்தார்மேலும் விழுந்து அவர்களைக் கத்திக்கிரையாக்கினர்கள். இச்செய்தி சக்கரவர்த்தியைச் சமயம் வாய்த்தபொழுது மீட்டுக்கொண்டு ஓட நின்ற மற்றப்பிரபுக்களுக்கு அச்சத்தையும் திகிலையும் விளைவித்தபடியால் அவர்கள் ஆற்றுக்குக் குறுக்கே விழுந்து ஓரே ஓட்டம்பிடித்துச் சூஜெட்டி அசாலைக் குறித்து சேனைக்கு இழவோலை வாசித்தார்கள்.

இச்செய்தி எங்கும் ஒரு பெருங்குழப்பத்தை யுண்டாக்கிற்று. சக்கரவர்த்தி சிறையிருப்பு ஜகத்ஜோதிக்கும் மந்திரிக்கும் மிக்க கோபத்தை எழுப்பியது. உயிர்தப்ப ஓட்டம் பிடித்துச் சேனையைச் சேர்ந்த பிரபுக்களை ஜகத்ஜோதி நோக்கி "நீங்களும் ஆண்மக்களா? யஜமானத்துரோகஞ்செய்து உயிர்தப்பி யோடிப்பிழைக்க வந்தீர்களோ! நீங்களோ வீரர்கள். மானத்தைக்காட்டிலும் பிராணன் பெரிதா? உங்களைப் போன்ற வெண்ணெய்வெட்டி வீரர்களிருந்தால் இராஜாங்கம் மூன்னுக்குவந்துவிடும். இப்பிழைப்பு உங்களை யார் பிழைக்கச் சொன்னார்கள். என் கண்முன் நில்லாதீர்கள். உங்களை நோக்க என் கண்களும் கூசுகின்றன." என்று உதாசீனமாய்ப் பேசினள். உடனே ஓர் ஆலோசனை சபைகூட்டிச் சக்கரவர்த்தியை மீட்க வகைதேடினள். காலஹரணம் பண்ணுவதில் பயனில்லை. "காரணம்தப்பினல் மரணம்" என்ற நிலைமையிலிருந்தது சந்தர்ப்பம். தாமதிக்கத் தாமதிக்கச் சத்துருபலவானுகிக் காரிய சித்திபெற ஏதுவாகும். அவனிடமோ சேனைகளெல்லாம் உயிர்க்குயிரா யிருந்தனர். ஆகையால் வைகறையில் ஆற்றைக்கடந்து மொகபத்தைத் தாக்கத் தீர்மானித்தனர். அவன் தன்னுயிர்க்கு அபாயம் நேருமென நடுநடுங்கினன். இவ்வெண்ணத்தைத் தந்திரமாய் ஜிஹாங்கிருக்குத் தெரிவித்தனர். அவ்வெண்ணத்தை நிறைவேற்றுமல் நிறுத்தும் வண்ணம்

அவன் தன் மந்திரிக்குத் தூதனுப்பினான். சிறைமுண்ட அரசன் கட்டளையை மதிக்கத் தான் சிறிதும் கடமைப்பட்டவனல்லன் என்று எண்ணி தன் மனோபீஷ்டத்தை நிறைவேற்றத் தொடங்கினான்.

வைகறைப் பொழுதில் தன் சேனையுடனே மந்திரி திரும்பி வந்தான். பாலத்துக்கு வந்தவுடனே அது எரிக்கப்பட்டிருப்பதைக் கண்ணுற்றுச் சிறிதும் தாமதியாமல் ஆற்றை அதில் றங்கியே கடக்கக் கருதினான். தண்ணீர் மிக்க ஆழமாக இருந்தபடியால் பலர் நட்டாற்றில் அழுந்தி யிறந்தார்கள். நீந்திச் சென்றசேனைகளும் கரைமேலேற முடியாமல் தவித்தனர் கரைமிகவும் உயரமாயிருந்ததுமன்றிச் சத்துருவின் வீரர்களாலும் காக்கப்பட்டிருந்தபடியால் சக்கரவர்த்தியின் சேனைகள் மிகவும் சங்கடப்படவேண்டிவந்தது. பலர் ஏற முயலுகையில் வெட்டுண்டுவீழ்த்தப்பட்டனர். ரஜபுத்திர வீரர்களுடைய புஜவலியை எவரும் எதிர்த்து நிற்கமுடியவில்லை. ஒருவரும் தப்பிப் பிழைக்க முடியவில்லை. கரைபேறுவதற்கு முன்னரே வெட்டி வீழ்த்தபடியால் ஒருவரும் கரையேறிப்பிழைக்க முடியவில்லை. இவவாறு இருந்தாலும் சேனை வெள்ளம் போலிருந்தபடியால் முன்னணியின் கதி இவ்வாறாகவே உடனே பின்னணிவந்து முயன்றதில் அவர்களில் பலர் கால்வைக்க இடம்பெற்றார்கள். ரஜபுத்திரர்களுடைய வீரமோ உலகப்பிரசித்தமானது. ஒன்று சத்துரு தொலையவேண்டும் அல்லது தான் தொலையவேண்டும் இரண்டிலொரு கை பார்ப்பதே அவர்கள் வழக்கம். யுத்தம் நெடுநேரம் நடந்தது. சக்ரவர்த்தி சேனைகளில் பலர் மடிந்தார்கள். மந்திரியும் தன்னாலியன்ற மட்டும் அவர்களை உற்சாகப்படுத்த முயன்றும் அவர்கள் தளர்ச்சி யுற்றார்கள். பலவிதமாய்ச் சங்கடங்கள் அனுபவித்தும் யுத்தத்தை நிறுத்தவில்லை. சேனைப் பெருக்கத்தால் தங்களுக்கே வெற்றி கிடைக்கும் என்று அவர்கள் நம்பிக்கை. ஆகையால் அவர்கள் விடாமல் சண்டை செய்தார்கள்.

இவற்றை எல்லாம் ஆற்றங்கரையினின்றும் கண்ணுற்ற நூர்ஜஹான் பெருந்திகி லடைந்தனள். இருந்தாலும் அவள் மனோதிடத்தைக் கைவிடவில்லை. வில், அம்புகள் சகிதமாய்

தான் யானைமீதேறி உட்கார்ந்ததுமன்றித் தன் மங்கைப்பருவ முள்ள அழகிய பெண்ணையும் தன்னருகில் உட்காருவித்துக் கொண்டு துணிவாய் ஆற்றிலிறங்கினுள். இதனைக் கண்ணுற்ற பல பிரபுக்கள் வெட்கத்தால் தூண்டப்பட்டுத் தாங்களும் ஆற்றிலிறங்க ஆரம்பித்து முன் சென்றனர். ஆற்றின் நடுவிற் சென்றவுடன் சேனைகளுக்குத் தைரியமுண்டாகும் வண்ணம் கைக்குட்டையை வீசி உற்சாகப்படுத்தினுள். தன் கண்முன் அநேகர் செத்துக்கிடப்பதை அறிந்தும் அவள் சிறிதும் மனந் தளராமல் அம்பாரியில் நின்றவண்ணமே சத்துருவின்மேல் அம்பு தொடுக்க ஆரம்பித்தனள். ஒருவர்பின் ஒருவராய் மூன்று மாவுத்தர்கள் மாண்டும் அவள் தன்னிடம் விட்டுப்பெயராமல் அம்புமாரி பொழிந்தனள். அம்புகளெல்லாம் ஆய்விடவே அவள் பின்னும் அம்புகளைக் கொணரும்படி கட்டளையிட்டனள். அவள் ஏறிச்சென்ற யானைக்கு மும்முறை காயப்பட்டது. வருத்தம் தாங்கமுடியாமல் அந்நால்வாயும் மூர்க்க வெறிகொண்டு மூழ்கியெழ ஆரம்பித்தபடியால் அவளுக்கு மிகுந்த அபாயம் நேரிடும்போலிருந்தது. அவ்வாறிருந்தும் அவள் அஞ்சாமனவலியுடனே அம்புமாரி பொழியத் தொடங்கினுள். கடைசியாய் அவள் மகளது புஜத்தில் அம்புதைத்தது. அதனுல் அவளுக்கு மிகவும் ஆவேசம் பிறந்தது. அவள்தன் யானையை கரையைநோக்கி நடத்தி மற்ெரு கட்டு அம்புகளைப் பொழிந்தாள். இம்மாதிரி இவள் அஞ்சா மனவலிமையுடனும் விடாமுயற்சியுடனும் அம்புமாரி பொழியக்கண்ட தன்சகோதரன் சேனைக்கு உற்சாகமுண்டாகி அநேகர் ஊக்கங்கொண்டு கடைசியாய்க் கரையேறினர்கள்.

இப்போழுது சொற்பம் நம்பிக்கைபிறந்தது. ஆனுல்அவர்களுக்கு நிற்கப்போதுமான இடமில்லை. ஜகத்ஜோதி நேரில் நின்றும் ரஜபுத்திரர்களுடைய புஜவலியை மேற்கொள்ள முடியவில்லை. இருந்தாலும் உற்சாகங்கொண்டு வீரத்தன்மையுடன் வெற்றிகொள்ளவகைதேடினர். நூர்ஜஹான் தன் யானையைக் கரைக்குசமீபத்திற் செலுத்தவே ஒருரஜபுத்திர வீரன் தன் கைவாளால் அவ்யானையின் துதிக்கையின் அடிப்பக்கத்தில் ஒரு பெரும்வெட்டு வெட்டினுன், வீறிட்டுக்கொண்டு யானையும் விழுந்

ந்தது. யானைவிழுந்தருணத்தில் ஜகத்ஜோதி ஒரு அம்பை எடுத்துத்தன் சத்துருதலைக்குக் குறிவைக்கவே அவனும் நிலத்தில் புரண்டுவிழுந்தான். யானைவீழ்ப்பட்டுக்கொண்டு விழவே தாயும் பெண்ணுமாக இருவரும் ஆற்றில் விழுந்தனர். நீரோட்டம் வேகமாயிருந்தமையால் அவர் உயிர் அபாயஸ்திதியிலிருந்தது. ஜகத்ஜோதியோ வில்லைப்பல்லாற் கடித்துக்கொண்டு நீந்திப் பிரபுக்களிருந்த பக்கத்தில் சென்றனள். இவர்களே இவள்பின் தொடர்ந்து இறங்கினவர்கள். அவள் மகளைச்சத்துரு குதித்தெடுத்துச்சிறைப்படுத்தினான். ஜகத்ஜோதியோ நீந்தினவண்ணமாகவே சங்கடப்பட்டு ஒரு யானையைச் சமீபித்தனள். அதில் ஒரு பிரபு வீற்றிருந்தபடியால் அவளைக் கைதூக்கிவிட்டான். ஜலத்தில் அவளிருக்குங்கால் ஒரு குண்டு அவள் விலாப்புரத்தில் பட்டது. ஆனால் அது உறிஞ்சுக்கொண்டு போயிற்றேயொழிய அவள் உடலுள் புகவில்லை.

தான் தப்பின அபாயத்தை நினைத்துச் சிறிதும் அஞ்சாதவளாய் ஜகத்ஜோதி சத்துருக்களின்மேல் அம்புமாரி பொழியத் தொடங்கினள். தான் ஒன்றியாயிருந்தே பலபேரை அம்புக்கிரையாக்கினள். மொகலத்தைத் தொலைக்க வேண்டுமென்பதே அவளுக்குக் குறி. அவன் கரையினின்றும் வெகு தொலையிலிருந்தபடியால் அவள் தன் கருத்தை முடிக்கக் கூடவில்லை. ஆபத்து அவளுக்கு நிமிஷத்துக்கு நிமிஷம் சமீபித்துக்கொண்டே இருந்தது. தனக்கு யாது நேரிட்டாலும் நேரிட்டும் என்று துணிந்தே யானையை முன்னோக்கிச்செலுத்தினாள். முன்னரே மூன்றுகட்டு அம்புகள் ஆய்விட்டன. நான்காம் கட்டும் கொண்டுவரப்பட்டது. அவள் ஒரு அம்பால் ஒரு ரணவீரனைத்தாக்கினாள். அவன் அவ்வம்பை உடலினின்றும் பிடுங்கிக்கொண்டு பழிவாங்கத் தீர்மானித்து ஆற்றிற்குதித்தான். ஒரு கையால் தன் வாளைத்தண்ணீருக்குமேல் தூக்கிக்கொண்டு மற்றொருகையால் ஜகத்ஜோதி ஏறியிருந்த யானைக்குச்சமீபத்திற் சென்றான். அவன் வாள்கொண்டு வெட்டவும் கையோங்கினான். அவன் தன் கருத்தை நிறைவேற்றும் முன்னரே மற்றொரு அம்பையெய்து ஜகத்ஜோதி அவன் மார்பைத்துளைத்தாள். அவன் ஆழ்ந்து இறந்தான்.

இதனைக் கண்ணுற்ற பல ராஜபுத்திரர் ஆற்றிற் பாய்ந்து ஜகத்ஜோதியைப் பிடிக்க முயன்றார்கள். புல்வாயைச் சூழும் புலிகள் போல் அவளை அவர்கள் சூழ்ந்து கொண்டார்கள். அவள் சிறிதும் தாமதியாமல் அம்புமாரியாகப் பொழிந்தமையால் பலர் காயப்படுத்தப் பட்டனர். இருந்தாலும் அவர்கள் அவளைப் பிடிக்கும் தருணத்துக்கு வரவே மொகலாயர்களுடைய மகத்துவம் அபாய நிலைமையிலிருந்தது. ஒரு ராஜபுத்திரன் யானையின் பின்னாலேறி தன் எஜமானியைப் பின்தொடர்ந்து வந்த ஒருபிரபுவுடன் மல்யுத்தம் தொடங்கினான். இச்சமயத்தில் அவ் யானைக்குப் பின்புறத்தில் பலமான காயம் பட்டதால் அது முன்னால் திடீரென்று பாய்ந்து அதனைச்சூழ்ந்து கொண்ட ரணவீரர்களைத் தாண்டிக் கொண்டு கரையை முட்டிற்று. உடனே இதனைச் சுவர்க்கம் சேர்த்தனர். அது விழும்பொழுது ஜகத்ஜோதி அம்பாரியினின்றும் குதித்து பக்கத்திற் போர் புரிந்து நின்ற தன் சேனா வீரரைத் தன்னைக் காக்கும்படி கூவினள். அவர்கள் உடனே ராஜ ஆக்ஞையாக அதனை மதித்துக் கீழ்ப்படிந்தார்கள். அவள் உடனே சத்துருக்களாலும் மித்திரர்களாலும் சூழப்பட்டனள். உடனே அவள் ஒரு கத்தியைக் கைப்பிடித்து வீரமே தங்கள் குலவிருதாகக் கொண்ட ராஜ புத்திரர்களும் அதிசயிக்கும் வண்ணம் யுத்தம் புரியத் தொடங்கினாள். தோளில் அவளுக்கு ஒரு பலமான வெட்டுப்படவே அவளை அது பின்னும் உற்சாகப் படுத்திற்று. அவளை வெட்டினவனும் அவளிடமிருந்து ஒரு பலமான வெட்டையடைந்தான். அவள் அவன் மண்டையைப் பார்த்து ஒரு பலமான வெட்டு வெட்டவே அவன் செத்தவர்களோடு செத்தவனாக உருட்டப்பட்டான்.

யுத்தம் மிகவும் மும்முரமாய் நடந்தது. ஆனால் அவளுடைய சேனைகளோ தளர்ச்சியுற்றது. விடா முயற்சியுடனும் மன உறுதியுடனும் போர் புரிந்து கொண்டேயிருந்தாள். அவளைச் சுற்றிச் சொற்ப சேனைகளே யுத்தம் புரிந்தன. அது மகா பயங்கரமான சந்தர்ப்பம். இரண்டு ராஜபுத்திர வீரர்கள் அவளைப் பிடிக்க முன்னோக்கி வந்தனர். அவள் சிறிதும் தாமதிப்பதிற் பயனில்லையென்று கண்டு கரையோரத்துக்கு

ஓடி அவர்களை உங்களால் என்ன செய்ய முடியு மென்று சொல்வது போலப் பார்த்து உடனே ஆற்றிற் குதித்தனள். இரு வீரரும் அவளைச் சிறையாகப் பிடிக்கக் கருதி அவளைப் பின்றொடர்ந்து சென்றார்கள். அவள் தன் காயத்தைச் சிறிதும் லட்சியம் பண்ணாமலும் சிறிதும் மனந் தளராமலும் நீரோட்டத்தை எதிர்த்து நின்றாள். அவள் என்ன செய்தும் ஆறு வேகமாய் அடித்துக் கொண்டு போயிற்று. வீரர்களுக்குச் சுமை அதிகமாயிருந்தபடியால் ஜகத்ஜோதி அவர்களை விட்டு நெடுந்தூரம் தாண்டிப் போய்விட்டாள். ஆற்றைக் கடக்காமல் அக்கரையிலிருந்த அவள் சேனை வீரர்கள் இதனை மிக்க ஆவலோடு பார்த்து நின்றார்கள். தண்ணீருக்கு மேலே அவள் எழும்பி வெகு முயற்சிகளுக்குப் பிறகுக் கடைசியாய் கரை வந்து சேர்ந்தனள். அவளைத் துரத்திக் கொண்டு வந்தவர்கள் அவளைச் சமீபித்து விட்டார்கள். தன்னை அவர்கள் சிறை பிடிக்காம லிருக்கும் வண்ணம் அவள் அவர்களை எதிர்க்க ஆரம்பித்தனள்.

அவ்வீரர்களில் ஒருவன் முன்னரே கரைசேர்ந்தனன். கரையோ செங்குத்தாயிருந்தது. அதன் அக்கரையோரத்தில் காலெடுத்துவைக்கவே அது தவறிற்று. அவன் விழுகிறசமயத்தில் அங்கு நீட்டிக்கொண்டிருந்த ஒருசெடியின் வேரைப்பற்றிக்கொண்டான். இதுதான் நல்லசமயம் என்று நூர்ஜஹான் தன் உடைவாளை உருவி அவன்காலைவைத்து ஏற எத்தனிக்கையில் பொட்டைப்பார்த்துத் தன் முழுபலத்துடன் ஒரு வெட்டு வெட்டினாள். அவன் தேகமெல்லாம் கவசமிட்டுக்கொண்டிருந்தபடியால் முகத்தில்தான் அவள் அவனைத்தாக்கும்படி வாய்த்தது. அவ்வெட்டு அவனுக்கு அநர்த்தமாயிற்று. அவன் குருதிகொப்புளிக்க மல்லாந்து ஆற்றில் விழுந்தான். இச்சந்தர்ப்பத்தில் சற்றுதூரம் சென்ற மற்றொருவீரன் கரையேறிவிட்டான். ஜகத்ஜோதியின் வீரத்தைக்கண்டு மெய்ச்சி மிக்கவணக்கத்துடன் அவள்பாற்சென்று மாதரசி நீயோ என்வசப்பட்டிருக்கிறாய் உன்வீரத்தன்மையை மெய்ச்சி உன்னைச்சிறைசெய்யவெனக்கு மனமில்லை. நான்க்ஷேமமாய் என்சேனையோடு போய்ச்சேர எனக்கு வாக்களித்தால் உன்னைச் சிறைசெய்யேன்.

அவ்வாறு வாக்களிக்காவிடில் உன்னையும் சேர்த்துக்கொண்டு ஆற்றிற் குதிப்பேன். இருவரும் மாள வேண்டியதுதான்" என்றான்.

"வீர! நீ சொல்வது எனக்கு உடன்பாடே. நீ யாதொரு இடையூறுமின்றி உன் நண்பர்களிடம் போய்ச் சேரலாம். உன் கம்பீர குணத்தை நான் மெய்ச்சி மதித்தேன். உனக்கு என்ன வெகுமதி வேண்டும்" என்றாள் ஜகத்ஜோதி.

"ரஜ புத்திரன் சத்துருவினிட மிருந்து யாதொரு வெகுமதியையும் பெற விரும்பான். உன்னிடம் வெகுமதி பெற யான் யாதோர் செயலும் செய்யவில்லையே. மொகலாயச் சக்கரவர்த்தனி யென்று உன்னை நான் விட்டுவிடவில்லை. ஒரு பெண்மணி காட்டிய வீரம் என்னை விடும்படி செய்தது. பெண்கள் இத்தன்மையான வீரங் காட்டுவது அரிதினும் அரிது. ஆகையால் இவ் வீரச் செயலுக்கு வெகுமதிக் குரியவள் நீயே. நீசனிடத்தும் இவ் வீரச் செய்கை காட்டியிருக்கும் பட்சத்தில் இம் மாதிரியே நடந்திருப்பேன் என்பதை அறியாய்" என்றான் இவ் வீரன்.

ஜகத்ஜோதி அவன் கம்பீர குணத்தை மெய்ச்சி அவனுடன் தன் சேனை போய்ச் சேர்ந்தாள். எல்லோரும் அவர்களை ஆனந்த பரவசத்துடன் எதிர்கொண் டழைத்தார்கள். அவளுடன் கூடவந்த வீரனை வேறொரு துறைக்குக் கொண்டு போய்விட்டு ஆற்றைக் கடந்து க்ஷேமமாய்ச் செல்லும்படி ஏற்பாடு செய்தனள். அவனும் தன் நாட்டோரிடம் சென்று நடந்த விர்த்தாந்தத்தை மொகபத்கானிடம் தெரியப்படுத்தினான். ரஜ புத்திரர்களின் கம்பீர குணத்துக்கு எதுதான் ஈடாகும். இது சிவாஜியின் கம்பீர குணத்துக்குச் சிறிதும் குறைந்ததாகாது.

ஜகத்ஜோதியின் கம்பீரகுணமும் இச்சமயம் நன்கு விளங்கிற்று. அவன்சொன்ன சொல்லைக் காப்பற்றினது எத்துணை கம்பீரம்! ரஜபுத்திரவீரன் இம்மெல்லியலிடத்தில் காட்டிய கம்பீரகுணத்தினும் ஜகத்ஜோதி காட்டிய கம்பீர குணம் மிக மேம்

பட்டது. பெண்ணென்றால் பேயுமிரங்கு மானபடியால் ரஜ புத்திரன் நடந்துகொண்டது வியப்பன்று. ரஜ புத்திரர்கள் பிறப்பாலேயே ஸ்திரீகளிடத்தில் மிக்க கம்பீரமாயும் மரியாதையாயும் நடப்பதும் இயல்பு. இயற்கைக்குணத்தையேவெளிக்குக் காட்டினது அத்துணை வியப்பன்று. ஜகத்ஜோதி இச் சமயம் காட்டியதே கம்பீர குணமெனத் தகும். தங்கள் சக்கரவர்த்தினிக்ஷேமமாய் வந்துசேர்ந்தாளென்று கண்டவுடனே இரண்டுபிரபுக்களும் தங்கள்பரிவாரத்துடன் ஆற்றைக் கடந்து அக்கரையில் போர்புரியும் சேனையுடன் போய்ச்சேர்ந்தார்கள் இச்சமயம் அச்சேனை சிதறுண்டுபோகிற நிலைமையில் இருந்தது. வாடும்பயிருக்கு இரங்கிமழைத்துளிவிழுந்தாற்போலிருந்தது இவர்கள்துவரவு. புதிதான ஊக்கத்துடன் அவர்கள் போர்புரிந்தனர். ரஜ புத்திரர்கள் தோல்வி யடைவார்கள்போல் தோற்றிற்று. அவர்கள் சக்கரவர்த்தி யிருக்கும் கூடாரத்தை நோக்கிச் சென்றார்கள். அம்பு மாரிகள் பொழிந்து கூடாரத்தைத் தொளைத்தார்கள். குண்டுகளும் பாய ஆரம்பித்தன. சக்கரவர்த்தி அபாய ஸ்திதியைக் கண்டு ஒரு தளகர்த்தன் அவருக்கு ஒரு கேடயம் கொடுத்தான்.

(இன்னும் வரும்).

எஸ். சாமிநாதையர்.

இந்தியா.

இந்தியாதேசத்துக்கு ஆரியவர்த்தமென்றும் இந்துக்களுக்கு ஆரியர்களென்றும் அவர்களால் வழங்கப்படும் ப்ராஷைக்கு ஆரியமென்றும் சொல்லப்படும்.

இந்துதேசமானது பூர்வகாலத்திலேயே கல்வி, அறிவு, ஒழுக்கம், மதம், கிருஷி, வாணிபம், கைத்தொழில், வீரம் முதலியவைகளில் மிக மேம்பாடெய்தி யிருந்தது. ஜீவகாருண்யம், சாந்தம் முதலியன இவ் விந்துதேசத்திலேயே தொன்றுதொட்டு பிறந்து வளர்ந்து வருகின்றன. மற்ற எந்த தேசத்திலும் இங்கிருப்பதுபோல் அன்பும், அறமும் இருந்ததுமில்லை, இருக்கவுமில்லை, இருக்கப்போகிறதுமில்லை யென்பது திண்ணம்.

இந்துதேசமானது நூதனமாகக் கற்றுக்கொள்ள வேண்டியது ஒன்றும் இல்லவே யில்லை. இயற்கையாகவே சகல வளங்களும் அருட்குணங்களும் அமைந்தேயிருந்தன. எச்சமயத்தார்க்கும் இடங்கொடுத்துத் தழுவி அன்புபாராட்டிவருவதும் இந்துதேசமே. புருஷராயினும் ஸ்திரீகளாயினும் அவரவர் கோட்பாட்டின்படி தனித்தனி தெய்வ வழிபாடுபற்றி வந்தாலும் கருத்து ஒன்றேயாய் சாந்தமே பிரதானமாகக்கொண்டு அன்போடு அளவளாவி இருந்த தேசமும் இந்துதேசமே. எல்லா நாகரீகங்களுக்கும் பிறப்பிடம் இந்துதேசமே. க்ஷேத்திரமிதி (Geometry) சாஸ்திர பிரதம கர்த்தாவென்று ஜகத்பிரசித்தமாய் விளங்கிய பித்தாகோரஸ் என்பவர் பிறப்பதற்கு 200வருஷங்களுக்கு முன்னமேயே அது இவ்விந்துதேசத்தில் செழித்தோங்கி வளர்ந்திருந்தது. அரபியர்கள் கண்டுபிடித்ததாகச் சொல்லப்படுகிற தசாம்ஸக்குறிப்பு (Decimal notation) நெடுங்காலத்துக்கு முன்னரே இந்துதேசத்தில் வழங்கிவந்தது. எகிப்துநாட்டில் வழங்கிவந்ததற்கு பன்னெடுங்காலத்துக்கு முன்னரே பீஜகணிதம் (Algebra) திரிகோணமிதி (Trignometry) ஆகிய சாஸ்திரங்களை இந்துக்கள் அப்பியசித்து வந்தார்கள். கிறிஸ்து பிறப்பதற்கு 2000 வருஷத்திற்கு முந்தி முதல் 500 வருஷம் வரை யுக்தா யுக்த வைத்திய சாஸ்திரம், மூலக்கிரகண சாஸ்திரம், டார்வினீயம் (Evolution and Darwinism) அணுப்பரிமாண வாதம் (Atomic theory) ஆத்மிகசாஸ்திரம் (Psychology) முதலியன இவ்விந்துதேசத்திலேயே பிறந்திருக்கின்றன. இந்துக்கள் எந்த ஜாதியாரையாவது, எந்தச் சமயத்தாரையாவது வெறுத்துத்தள்ளுவதே இல்லை. எந்த நூலையும் அங்கீகரித்து சித்தாந்த பட்சத்துக்குச் சோபானபட்சமென்று இந்துக்கள் தழுவி வந்திருக்கிறார்கள். இதற்கு உதாரணமாக இந்துக்களைப் பாவிகளென்று கூறும் விவிலிய மார்க்க பாதிரிகளை எடுத்துக்கொள்ளலாம். இந்தியாதேசத்தைப்போல வேறெந்த தேசமும் வேற்றரசர்களால் படையெடுக்கப்பட்டுத் துன்புற்றதேசம் ஒன்றுமில்லை. ஆதியில் கிரேக்கர்களாலும், அப்பால் சிதியர்களாலும், பிறகு மங்கோலியர்களாலும், பின்னர் மகமதியர்களாலும், கடைசியாகக் கிறிஸ்தவர்களாலும் படையெடுக்கப்பட்டு வந்திருப்பது உலகறிந்த விஷயமே. இது நிற்க.

இந்தியாவில் சகல சாஸ்திரங்களும் சம்ஸ்கிருத பாஷையிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. அப்பாஷை இந்துக்கள் எல்லாராலும் சர்வ சாதாரணமாய்ப் பேசப்பட்டு வந்தது. இலக்கண இலக்கியங்கள் கலைஞான சாஸ்திரங்கள் இப்பாஷையைப்போல் மற்றெப்பாஷையிலுமில்லை. அற்பமான தொழிலாயினும் சரி, மகத்தான தொழிலாயினும் சரி, எந்தத் தொழிலாயினும் ஒவ்வொரு தொழிலுக்கும் தனித்தனி சாஸ்திரங்கள் பல இருடிகளால் உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் காட்டும்படி எழுதப்பட்டிருந்தன. சுமார் 150 வருஷங்களுக்கு முன்னர் இவைகளைப்பற்றி பச்சிமதேசத்தாருக்கு விசேஷமாய்த் தெரியாது. ஒரு நூற்றாண்டுக்கு முன் சர். உவில்

லியம்ஜோன்ஸ் என்பவரும், இன்னும் சில ஐரோப்பியரும் இந்துதேசத்துக்கு வந்து சமஸ்கிருதபாஷையைக்கற்று, அதிலுள்ள சில சாஸ்திரங்களை வாசித்தறிந்து அவைகளை யுண்டாக்கி எழுதினவர்களாகிய பழையகாலத்து ஆரியர்கள் மகாபுத்தி, யுக்தி படிப்பு, ஞானம் முதலியவைகளில் நிகரில்லாதவர்கள் என்று தாங்கள் தெரிந்தவண்ணம் மற்ற ஐரோப்பியர்களுக்குஞ் சொல்லி, அவர்களைப் பிரமிக்கும்படி செய்தனர். இப்பூமியில் கிரேக்கர், ரோமர் என்ற ஜாதியார்களுடைய காலங்களுக்கு முன் வேறொரு தேசத்தாரும் சீர்திருத்தமும் நாகரீகமும் மாக்ஷிமையும் உடையவர்களாய் இருந்திருப்பார்களென்று நம்பவேயில்லை. கிறிஸ்துவேதப் புஸ்தகத்தில் இவ்வுலகமும், அதிலுள்ள யாவும், சூரிய சந்திர நக்ஷத்திரங்களும் 6000 வருஷங்களுக்கு முன்பாகத்தான் கடவுளால் உண்டாக்கப்பட்டன வென்று சொல்லியிருக்கிறது. அதை பச்சிமதேசத்தார் மெய்யென்று நம்பியிருக்கின்றனர். சில நாளைக்கு முன்னமேதான் அவர்களில் சிலருக்கு இந்த எண்ணத்தடிப்பு மாறியிருக்கலாம். இந்துமதக்கொள்கைகளை ஆரியர்கள் யூதர்களிடத்திலிருந்து பெற்றுக்கொண்டதாகவும் ஹீப்ருபாஷையிலிருந்து சமஸ்கிருதபாஷையானது உற்பத்தியானதென்றும் சிலர் சொல்கிறார்கள். அது முற்றிலும் பொருந்தாத வார்த்தை எத்தனையோ 1000 வருஷங்களுக்கு முந்தியே இந்தியாவில் அநேக இருஷிகள் பிரபல சாஸ்திரங்கள் பாடியிருக்கிறார்கள். மிகப் பழமையான ஆரியவர்த்தத்திலிருந்து மேலத்தேசத்தார் சாஸ்திரங்களையும் தொழில் முறைகளையும் நாகரீகத்தையும் பெற்றிருப்பார்களே தவிர இந்துக்கள் அவர்களிடமிருந்து பெற்றிருப்பார்கள் என்று போலிக்கிறிஸ்தவர்கள் புகல்வது எவ்வாற்றானும் தகாத சங்கதி. ஆரியர் ஐரோப்பியர்களுடைய முன்னோர்களென்றும் ஐரோப்பியருடைய நாகரீகமும், கல்வி சாஸ்திரங்களும், ஆரியர்களிடத்திலிருந்தே உற்பத்தியானதென்றும் சொற்பகாலத்துக்குமுன் மகாமேதாவியான "மாக்ஸ்முலர்" முதலிய ஐரோப்பிய சமஸ்கிருத வித்வான்கள் சொல்ல வெள்ளைக்காரருக்குத் தெரியவந்தது. பைபில் எழுதப்படுவதற்கும், யூதர்கள் ஒருஜாதியாராய்ச்சேர்ந்ததற்கும், பாபிலோன் இராஜ்ஜியம் உண்டானதற்கும், கி. மு. ஏறக்குறைய 6000 வருஷங்களுக்கு முன் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிற எகிப்துதேசத்து "பிரமிட்ஸ்" (கூர்நுனிக்கோபுரங்கள்) கட்டப்படுவதற்கும் அதிக காலத்துக்கு முன் இந்துக்கள் மகா சீர்திருத்தமுடையவர்களாயிருந்தார்கள். 8000 வருஷங்களுக்கு முன் இந்தியாவிலிருந்து கொஞ்சம் ஜனங்கள் புறப்பட்டு எகிப்துநாட்டில் குடியேறி ஆரியவித்தைகளை அங்கே பரவச்செய்தார்கள். எகிப்துதேசச் சரித்திரக்காரரும் புராதன கலைஞருமாகிய "பிரக்ஸ்பே" என்பவரின் அபிபிராயமும் இதுவே. "பரிசுத்தநாடு" என்று எகிப்துபாஷையில் அர்த்தமாகும். "பண்ட்" என்ற ஒரு அறியாத தேசத்திலிருந்து எகிப்துதேசத்துக்கு ஜனங்கள் வந்ததாக எகிப்துதேசச் சரித்திரக்காரர்கள் தங்கள் சரித்திரங்களில் எழுதியிருக்கிறார்கள். "பண்ட்" என்ற தேசமானது இந்தியாவே தவிர வேறொன்று

யில்லை. "டொப்பாக்கி" என்ற இடத்திலிருக்கும் "குவீன்ஸ் ஹௌஷடாய்" என்னும் கோவிலின் மதில்களில் எழுதப்பட்டிருக்கிற சித்திர ரூபபாஷை வரைதல்களை வாசித்துப் பொருட்படுத்திப் பார்த்தால் அதின் உண்மை நன்றாய் விளங்குமென்று சரித்திரக்காரர் கூறுகிறார்கள். அக்காலங்களில் ஆரியர்களுக்குள் பெரிய தத்துவசாஸ்திரிகளும், வியாகர்ணிகளும், வைத்தியர்களும், சங்கீதவித்வான்களும், நகாசுவேலைக்காரரும், மகாகவிகளும், மதிமந்திரி சிரேஷ்டரும், பின்வாங்காப் படைவீரரும், சிற்பாசாரிகளும், பலவித கைத்தொழிலாளரும் வர்த்தகர்களும் மலிந்திருந்தார்கள். இந்துக்களை ஏளனம்பண்ணும் கிறிஸ்தவ பாதிரிகளில் ஒருவராகியும் சிராம்பூரில் வசித்தவருமான "ரெவரெண்டு உவில்லியம் வார்டு" என்பவர் இத்தேசத்துக் கல்வி, சாஸ்திரம், புராண முதலியவைகளைப்பற்றிச் சொல்கிறதாவது:—

இந்துக்களுடைய இலக்கணநூல்கள் ஏராளமாயிருக்கின்றன அவைகளையுண்டுபண்ணினவர்கள் அவைகளினிமித்தம் மிகமேன்மையடைகிறார்கள் உண்மையாகவே இந்நூலில் இந்துக்கள் முற்காலத்துச்சாதியார்களையும் தற்காலத்துச்சாதியார்களையும் முற்றிலும் வென்றுவிட்டார்கள். சமஸ்கிருத அகராதிகள்தங்களை எழுதின இந்துவித்துவான்களுக்கு மகோன்னதகீர்த்தியையுண்டு பண்ணுகின்றன. இவைகளைப்பார்க்கையில், அக்காலங்களில் சமஸ்கிருதபாஷையானது இத்தேசத்தில் எவ்வளவு அதிகமாய் விருத்தியாக்கப்பட்டு வந்ததென்று காட்டுகின்றன, இந்துஞானிகள் யுத்தசாஸ்திரத்தைக்கூட ஆராயாமல்விடவில்லை. இந்துமன்னர்கள், சேனைகளைத்தாங்களே யுத்தகளங்களுக்கு நடத்தி அங்கே அணிவகுத்துப் போர்புரிந்தார்கள் என்பதும், அவர்கள்போர்வித்தையில் பழக்குவிக்கப் பட்டுவந்ததினால் யுத்தத்தொழிலுக்கு யோக்கியர்களாக்கப் பட்டார்களென்பதும், அவர்களில் அநேகர் அதிகவீரத்தினாலும் யுத்ததந்திரங்களினாலும் மகாக்கியாதி அடைந்திருந்தார்கள் என்பதும் நிச்சயம். சிந்துதேசத்துச் சாஸ்திரிகள் ஆழ்ந்த கல்வியுடையவர்களாய் உலகிலுள்ளோர் யாவராலும் புகழ்ந்து பூசிக்கப்பட்டார்கள் என்பதும், அவர்களில் சிலர் ஆயிரத்துக்கு அதிகமான சிஷர்களை உடையவராயிருந்தார்கள் என்பதும், சமுசயமன்னியில் உண்மையே. நியாயமாய் நிதானிக்கும் யாவரும் பூர்வகாலத்து இந்துக்கள் மகா விசாலமான படிப்பை யுடையவர்கள் என்று புகழாமலிரார். அவர்கள் எழுதிய பற்பலவகையான சங்கதிகளைப் பார்த்தால் அவர்களுக்குள் ஒவ்வொரு சாஸ்திரமும் வித்தையும் நன்றாகப் பயிற்சி செய்யப்பட்டனவென்று காண்கிறது. இச்சங்கதிகளைக் குறித்து அவர்கள் எழுதியமாதிரியும் நடந்துகாட்டியிருக்கிற நிதரிசனமும் அவர்கள் பூர்வகாலத்துச் சாதியார் எவரிலும் மிகச் சிறப்புடையவர்களாய் இருந்தார்கள் என்று வெளியிடுகிறது. இந்துக்களுடைய தத்துவ சாஸ்திரங்களையும், தர்மசாஸ்திரங்களையும் ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு படிக்கிறானோ

அவ்வளவுக்கவ்வளவு அவன் அந்தக்கிரந்தங்களை எழுதிய வித்வான்கள் நுட்பமான புத்தியையும் அரிதான அறிவையும் உடையவர்களாய் இருந்திருக்க வேண்டுமென்று நம்பும்படி செய்யப்படுகின்றனன்.”

பச்சிமதேசத்தார் தாங்கள் கண்டுபிடித்திருக்கிற தந்தித்தபால் நீராவியந்திரங்கள் கைத்தொழில்கள் முதலியவைகளைப் போல இந்துக்கள் யாதொன்றுங் கண்டுபிடிக்கவில்லை யென்று கருவித்திருக்கின்றனர். அவர்கள் நம்முடைய “சூரியசித்தாந்தம்” என்னும் நூலைவாசித்துப்பார்த்தால் நீராவியின்லக்ஷணங்கள் ஆரியர்களுக்குத்தெரிந்த அவ்வளவு தங்களுக்குந் தெரியாதென்று நினைத்து அகங்காரம் அடங்கிக்கிடப்பார். இந்துக்களுக்கும் மஹாமேன்மையான மின்தபால் ஒன்று உண்டு. அதினால் அவர்கள் எவ்வளவுதூரத்திலிருந்தாலும் ஒருவருக்கொருவர் சுலபமாய்ப்பேசிக்கொள்ளக்கூடும். அந்தமின்தபாலுக்கு தற்காலத்திய ஐரோப்பியருடையதுக்கிருக்கிறதுபோலத் தந்திகளாவது, தூண்களாவது ரசாயனப்பானைகளாவது தேவையில்லை. இந்தவித்தை இன்றைக்குங்கூட இந்துக்களில் சிலருக்குத்தெரியும். கசாபிசாவென்று கொஞ்சம் இங்கிலீஷ்படித்த அரைப்படிப்புமந்தமதிகளும் நவீனநாகரீகச் செருக்குமிகுந்த மந்தமதிகளும் வெட்கமில்லாமல் நம்முன்னோர்களைத் தூஷித்துப்பரிகசிக்கின்றனர்.

மேலும் ஆரியர்கள் வேறொருவித்தையை அறிந்திருந்தார்கள். அதைப்பற்றி நாளிதுவரை வெள்ளைக்காரர் வெகுவாய் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறார்களே யொழியச் சித்திபெற்றதாக இல்லை. இந்துக்கள்முற்காலத்தில் ஆகாயத்தில் பிரயாணஞ் செய்தார்கள். ரதம் நடத்தினார்கள். இம்மட்டோ ஆகாயத்தில் சண்டைகளும் செய்தார்கள். ஆரியர்கள் அதைப்பற்றிய சகலசாஸ்திரங்களையும் சாதனங்களையும் ஆகாயத்திலிருக்கும் காற்றடுக்குகளையும், ஓட்டங்களையும் அங்கங்கேயிருக்கும் சீதோஷ்ண நிலைமைகள் ஈரம் நெருக்கம் முதலியவைகளையும், வெவ்வேறு வாயுவின் விசிஷ்ட குருத்துவத்தையும் பூரணமாய்த் தெரிந்திருந்தார்கள், மகாபாரதத்திற் கூறப்பட்டிருக்கிற மாயாசபையில் “பூதக்கண்ணாடிகளும் தூரதிஷ்டி கண்ணாடிகளும் கெடியாரங்களும் நாழிகைவட்டங்களும், பாடும் சூத்திர பக்ஷிகளும், பேசுஞ் சூத்திர மிருகங்களும்” இருந்தன. தவிரவும் நம்முன்னோர்கள் அஷ்டவித்யா என்ற வேறோர் வித்தையையுந் தெரிந்திருந்தார்கள். அவ்வித்தையிற் பாண்டித்ய முடையவர்கள் சத்துருக்களுடைய சேனைகளை, விஷமுள்ள வாயுக்களாலும், அச்சமுறத்தத்தக்க மாயாவடிவங்களாலும், திகிலுண்டாக்கக்கூடிய சப்தங்களாலும் நிறைந்த ஆகாயத்திற் சூழ்ந்துகொண்டு அழித்துப்போடுவார்கள். இன்னும் எத்தனையோ விதமான அற்புத வித்தைகளை யெல்லாம் கையாடி வந்னர், அப்பேர்ப்பட்ட ஞானிகளும், புத்திமான்களும், சூரர்களும் இப்போதெங்கே? அக்காலங்களிலிருந்த சந்தோஷமும் சுயாதீனப் பிரியமும் மகாஹெம்பீர

மும் இப்போதெங்கே? சமர்த்தியத்திலும் தந்திரத்திலும் உவமை சொல்ல வொண்ணாது அக்காலத்திலிருந்த சிற்பசாஸ்திரிகளும், கவிவாணரும், இப்போதெங்கே? வேதசாஸ்திரங்களைக் கற்றுப் பூரண தேர்ச்சி யடைந்திருந்த பிராமணர் இப்போதெங்கே? ஐயையோ! போய்விட்டார்கள். சென்றவிடம் தெரியவில்லை, வித்தைகள் எல்லாம் மறைந்து விட்டன. சர்வ ஐச்வரியத்திலும் மேன்மையிலும் சிறந்திருந்த இந்தியாவே உன் கதியும் இப்படியா போய்விட்டது! தலை யெடுக்கமாட்டாயா? பழையகாலத்து வித்தைகளும் தொழில் களும் மறுபடியும் உயிர் பெற்றெழமாட்டாவோ? சொற்பனம்போல் ஆய்விட்டதே உன்மக்கள் முந்தியவர்களைத் போலில்லாமல் கெட்டுக்கேவலம் அடைந்திருக்கிறார்கள். உன் கொழுமை மாறிவிட்டதே. உன் பிள்ளைகள் எவ்வளவு க்ஷாமமடைந்து நொறுங்கிப் போயிருக் கின்றனர். முற்காலத்தில் அபூர்வமாயிருந்த பஞ்சமானது இக்காலத்தில் கொஞ்சங்குறைய வழக்கமாய் வருகின்றதே. செழிப்பான வனங்கள் எல்லாம் தேய்ந்து விட்டனவே. விளைச்சலோ விசேஷமாயில்லாது போய்விட்டதே. உன்மக்களுக்குத் தைரியஞ் சொல்லித் தலையெடுக்கச் செய்யமாட்டுவையா?

ஆரியசகோதரர்களே! கண்விழித்துப் பாருங்கள், சோம்பலைவிட்டு எழுந்திருங்கள். நம்முன்னோருடைய ஸ்திதியை நினைத்து ஊக்கம் அடையுங்கள் நம் இந்தியா நாட்டில் இப்போதிருக்கிற 6 கோடி வேலையாட்களுக்குச் செழிப்பானகாலத்தும் பஞ்சகாலத்தும் வித்தியாசம் என்னவென்றால், செழிப்பானகாலத்தில் முக்காற்பட்டினியும், பஞ்சகாலத்தில் முழுப் பட்டினியுமாய்க் கிடப்பதுதான். நம் தேசத்து வறுமையை நீக்க ஊக்கங் கொள்ளுங்கள். கிருஷியை ஆங்காங்கு புது ஏற்பாட்டின்படி அமைத்து, கைத்தொழிலிற் சகலருக்கும் ஆசையை யூட்டி தரித்திரத்தை ஹதமாக்க வேண்டிய ஏற்பாட்டைச்செய்ய எல்லாரும் ஏகோபித்து முன் வாருங்கள். சுதேசிய ஒழுங்கை நிலைநிறுத்துங்கள். அயல்நாட்டார் கைபார்த்துப் பிழைக்கும் செத்தபிழைப்பை விட்டுவிடுங்கள். நம் நாட்டின் உட்பிரதேசம் எங்கும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தி யேழைகளை ஆதரியுங்கள். சாதிச் சண்டை, சமயச்சண்டைகளை ஒதுக்கி ஒற்றுமையோடு தேசாபிமானம் கொண்டுழையுங்கள். இதுதான் நல்லதருணம். இப்போதுதான் நம் இந்தியாவுக்கு அதிர்ஷ்டகாலம்போற் காண்கிறது.

நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து அவசியம் செய்யவேண்டிய வேலை ஒன்றுண்டு. அதாவது தேசாபிமானம், பாஷாபிமானம் முதலியவைகளை

நம் இர்துமக்களுக்கு இடையறாது ஊட்டிக்கொண்டே வரவேண்டியது. அதினால்மட்டுந்தான் நம் தேசம் க்ஷேமத்தையடையும். தொழில்களைக் கற்பிக்குமாறு ஆங்காங்கு வித்தியாசாலைகள் ஏற்படுத்தவேண்டும். இந்தக் கூலி ஆட்கள் வேற்றிடங்களுக்குச் செல்லாது இந்த தொழிற்சாலைகளிலேயே அமர்ந்து வேலைசெய்யவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டியது. விரிவஞ்சி விடுத்தாம்.

பு. நா. சொக்கலிங்கம்.

சிந்தாமணி சரித்திரம்.

(147-ம் பக்கத்தொடர்ச்சி)

அவ்விதம்புரிவதே யுக்தமென்று கிருஷ்ணையரும் அங்கீகரித்த பின் அவ்விருவர்களும் அன்று பகல்முழுதும் அவ்வூரிலேயே இருந்து சாயங்காலம் படவுகள் வருகின்ற சமயம் நோக்கிக் கடற்கரைக்குச் சென்றார்கள். அவர்கள் அங்கு போனபின் ஒருநாழிகை சென்று பல படகுகள் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தன. படகுகளிலிருந்து இறங்கின வெகு ஜனங்களுக்குள் அழகியை மிக்க ஆவலுடன் அவர்கள் தேடிப் பார்த்தும் அவள் அகப்படவில்லை. அளவிறந்த மனவருத்தத்துடன் அவ்விருவர்களும் தங்கள் விடுதிக்கு வந்து வெளித்திண்ணையில் உட்கார்ந்துகொண்டு சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் கிருஷ்ணையர்.

என்ன மகாதேவ, ஒருசங்கதியும் வெளியாகவில்லையே மகா குணவதியாகிய சிந்தாமணியை நினைத்து விசனப்படுகிறதா, பாலியமுதல் என் வீட்டிலேயே இருந்து தொண்டு செய்துகொண்டு விசுவாசத்துடன் ஒருவர்மனமும் கோணாது நடந்துவந்த ஏழையாகிய அழகியை நினைத்து விசனப்படுகிறதா, பின் செய்யத்தக்கது இன்னதென்று என் புத்திக்குப் புலப்படவில்லையே யென்று சொன்னார். அதற்கு மகாதேவய்யர்,

என்ன கிருஷ்ணா, நம்முடைய பொல்லாதவேளையினால் இவ் விசமாகச் சம்பவித்து விட்டது. திரும்பத்திரும்ப வியாகுலத்

துடன் பேசிக்கொண்டிருப்பதில் பிரயோசனமுண்டோ. இன்றைப்பொழுது முழுவதும் இப்படியாய்விட்டது இப்பொழுது அஸ்தமித்து 9-மணியாகிறது. இவ்விடுதியிலேயே ஆகாரம் செய்துகொண்டு கொஞ்சம் நித்திரைசெய்துவிட்டு விடிய நாலு நாழிகைக்கு முன் அந்த ஊருக்குப்போய் அந்த மகாநுபாவன் என்ன செய்திருக்கின்றார் என்று விசாரித்துத் தெரிந்துகொள்வோம். இது என்ன நவாபு ராஜ்பமா. தாற்கால துரைத்தனம் எப்படியிருந்தாலும் அவ்வளவுக்கு நியாயம் கெட்டுப்போகவில்லை. குற்றம் செய்பவன் வெள்ளைக்காரனாயிருந்தால் மட்டுந்தான் இந்நாளில் நியாயமும் சட்டமும் பின்னிடைந்துபோகின்றன. இப்பொழுது பிசகு நடந்திருந்தால் குற்றவாளி கறுப்புமனிதன்தானே. அவன் விஷயத்தில் பினல்கோடு வெகு வுத்தண்டமாய் முழங்கிக்கொண்டு வருமே. அதிகாரிகளும் வெகு சூரத்தனமாக நியாயம் செலுத்துவார்கள். போலீசு பந்தோபஸ்தும் தண்டனைகளும் சுதேசிகளாகிய குற்றவாளிகளுக்கு ஏற்பட்டனவே யல்லாது எந்த அக்கிரமச்செய்கையும ஒரு வெள்ளைத்தோலுடைய புண்ணியவான் செய்தால் அது நியாயமான காரியமாகவே முடிகின்றது. ரயில்வே மார்க்கத்தில் தருந்த உதவியில்லாத சுதேச ஸ்திரீகளுக்கு எத்தனை தட்வைகளில் வெள்ளைக்காரரென்று பெயரைமட்டும் வகித்துக்கொண்டு அவர்கள்போல ஆடம்பரம் செய்து ஒருஜாதியிலும் சேராத சிலர்களால் நடக்கும் மானபங்கத்துக்கும் அக்கிரமங்களுககும் என்ன பரிகாரம் நடக்கின்றது. சேலம் கலகத்திற்குப் பின் நடந்த நியாய விபரீதங்களை நாம் மறந்துவிட்டோமா, நேற்றையத்தினம் பாரிசாலில் நடந்திருக்கும் அலங்கோலத்தை எக்காலத்தில் யாவர்தான் மறக்கப்போகிறார்கள். இதுமட்டுமா? ஒரு ஜில்லாவை ஆள்கின்ற கலெக்டர் தன் டார்க்கமாகக் கைக்கொழுப்பின் பேரில் ஒரு அம்பட்டனுடைய வீசையைச்சிறைத்துவிட்டாராம். அதுவும் கதையாய்ப்போய்விட்டது. இக்காரியங்களை எல்லாம் ஒருகறுப்புமனுஷன் செய்திருந்தால் எவ்வளவுகூக்குரலாகும். சட்டமும் நியாயஸ்தலங்களும் ஓயாது இரைச்சலிட்டுக் கொண்டிருக்குமே, என்னவோகாலத்தின் சுபாவம் அப்படியிருக்கின்றது, என்று சொல்லிவிட்டு அவரும் கிருஷ்ணையரும் போஜனம் செய்து சயனித்துக்கொண்டும்,

நித்திரைவாராமையால் ஊருக்கு வெளியில் வந்துலாவி காற்று வாங்கலாமென்கிற கருத்துடன் புறப்பட்டார்கள். கொஞ்சதூரம் சென்று அவ்வூர்க்கருகே மரம்நெருங்கிய பாதைவழிசெல்லுகையில் பாதையின் பக்கமிருக்கும் ஒருகல்லின் பேரில் ஒருவர் படுத்திருப்பதைப் பார்த்தார்கள். கிருஷ்ணையர் நிர்ஜனமான இந்த இடத்தில் பாதிராத்திரியில் தன்னந்தனியாய் இந்தக்கல்லின் பேரில் யாரோ வெகு சுகமாய் நித்திரைசெய்கிறார் என்று சொல்லி அக்கல்லுக்குச்சமீபத்தில் போய்ப் பார்க்கையில் வயது முதிர்ந்த கிழவியொருத்தி படுத்திருப்பதாக அவ்விருவர்களுக்கும் தெரிந்தது. உடனே கிருஷ்ணையர் அவளை நோக்கி யாரம்மா இப்பொழுது இவ்விடத்தில் பேய்கூடத் தனியேவர அஞ்சுமே, என்னத்திற்காக நீரிங்கே தனிமையில் படுத்திருக்கின்றீர் என்றுவினவ அப்பெண்பிள்ளை மயக்கமிகுதியால் ஒன்றும் பேசமுடியாமல் வெகுபிரயாசத்துடன் ஐயா கொஞ்சம் தண்ணி, தொண்டைகாயிரது என்று உளறிப்புகன்றுவிட்டுத் திரும்பமூர்சையானாள். இதைப்பார்த்தவுடன் மகாதேவய்யர் "இதென்னடா கிரகசாரம் இன்று தினபலன் முழுதும் வீண்வம்பாக முடிந்திருக்கிறதே. கொஞ்சம் ஜலம் கொண்டுவந்து கொடுக்காவிடில் உடனே இவள் பைசலாகிவிடுவாள்போல் காண்கிறது, கிருஷ்ணா இவ்விடத்தில் நீ தனிமையாய் உட்கார்ந்து கொண்டிருப்பையா நான் பக்கத்தில் ஓடுகிற வாய்க்காலிலிருந்து ஜலம் கொண்டு வருகிறேன்" என்று சொல்லிக் கிருஷ்ணையரை அங்கே வைத்துவிட்டு வாய்க்காலுக்குப்போய்த் தான்மேலே போட்டிருந்த இரண்டு பெரியவஸ்திரங்களை ஜலத்தில் நனைத்துப்பிழியாமல் கொண்டுவந்து அந்தப்பெண்பிள்ளையுடைய வாயிலும் தலையிலும் கண்களிலும் வஸ்திரங்களைப்பிழிந்து ஜலத்தைப் பெருகவிட்டவுடன் அதைக்கொஞ்சம் பருகிக்களைப்பு நிவர்த்தியாய் அப்பெண்பிள்ளை எழுந்திருந்து உட்கார்ந்தாள். ஆனால் ஒன்றும் பேசமுடியவில்லை. கிருஷ்ணையரும் மகாதேவய்யரும் வஸ்திரத்தினால் விசிறியதால் அவளுக்கு நினைவுவந்தவுடன் மகாதேவய்யர் அவளைப்பார்த்து "அம்மா இப்பொழுது இராத்திரி ஒருமணியாகின்றது. அந்தகாரத்தினால் கண்ணுக்கு ஒன்றும் புலப்படவில்லை. கொஞ்சம் மேகந்திரண்டிருப்பதால் ஒருக்கால் மழை

யும் வருமென்று தோன்றுகிறது. நீர் மெள்ள மெள்ள நடந்து எங்களுடன் எங்கள் விடுதிக்கு வந்து முற்றிலும் சிரமபரிகாரம் பண்ணிக்கொள்ளலாம் என்று சொன்னார். உடனே அவள் அப்படிச் செய்யச் சம்மதித்தவள்போலக் கலலை விட்டு கீழேயிறங்கினவுடன் அவளை இவ்விருவர்களும் கைத்தாங்கலாய் அழைத்துக்கொண்டு மிக்க காலதாமிசத்தின் பேரில் விடுதி வந்து சேர்ந்தார்கள். அவ்வீட்டின் வாசலில் இருக்கும் லாந்தர் வெளிச்சம் அவள் முகத்தில் யட்டவுடன் கிருஷ்ணையர் பார்த்து மகாதேவா இதென்ன ஆச்சரியம் கருணா நிதியாகிய ஈசுவரனல்லவோ நமக்குத் தூக்கம் வராமல்செய்து நம்மையும் அவ்விடத்துக்குப் போகும்படி ஏவினார். அட இவள் அழகியல்லவோ ஐயோ பாவம் என்ன பாடுபட்டாளோ நாம் சற்றுநேரம் அங்கே போகாவிடில் அவள் தலை விதி எப்படி முடிந்திருக்குமோ. என்று சொன்னவுடன் மகாதேவய்யரும் வந்து பார்த்து ஒருவாறு இறக்கமும் ஒருவாறு சந்தோஷமும் கொண்டு

என்னவோ "அப்பா" இவளை உயிருடன் பார்த்தோமே., நம்முடைய கவலை அரைவாசி தீர்ந்துவிட்டது. அவளை இப்பொழுது ஒன்றும் கேட்க வேண்டாம். கொஞ்ச நேரம் வெளித் திண்ணையில் படுத்திருக்கும்படி பார்த்துக்கொள். நான் வீட்டுக்குள் சென்று ஏதாவது அவள் புசிப்பதற்கு அகப்பட்டால் அதைச் சம்பாதித்துக்கொண்டு வருகின்றேன் என்று சொல்லிவிட்டு வெளிக் கதவைத் தட்டி உள்ளே யிருப்பவர்களைக் கூவிக் கதவைத் திறக்கும்படி செய்து வீட்டுகுள் சென்று கொஞ்சம் அன்னமும் மோருமாகக் கலந்த ஆகாரத்தைக் கொண்டுவந்து அவளுக்கு ஊட்டுவித்தவுடன் அவளுக்கிருந்த மயக்கம் விலகித் தன்னறிவுடன் அவ்விருவர்களையும் பார்த்துத் திடுக்கிட்டு "எஜமான்க ளல்லவா? ஒன்றும் தெரியாமல் போச்சே" என்று சொல்லி எழுந்திருந்து ஓவென்றழுதுகொண்டு அவ்விருவருடைய காலடியில் விழுந்தாள். உடனே கிருஷ்ணையர் "அழகி என் அழுகிறாய் நீ இனிப்பயப்படவேண்டாம். உன்னுடைய களைப்பையாற்றிக்கொண்டு சாவகாசமாக நடந்த வரலாறுகளை நீஉரைக்கலாம் என்று சொன்னார். அது கேட்டு அழகி

"நான் என்ன சொல்லப்போறேன். அந்தம்மாளையல்லவா மோசஞ் செய்திட்டான். அந்த மண்ணாய்ப் போவான் என்னவோ பித்தலாட்டம் பண்ணி அந்தம்மாளைமட்டும் படகைவிட்டிறக்கிக் கூட்டிக்கொண்டு போக அந்தப்பாவி படகுக்காரன் என்னை இறங்கவொட்டாமற் செய்து படகைநிறுத்தாமல் எங்கெங்கேயோ கொண்டுபோய் கடைசியாய் இந்த ஊர்க் கடற் கரைக்குக் கொண்ணாந்து என்னைத்தள்ளிட்டுப் போய்விட்டான். அந்தம்மாவுடைய மூட்டையும் மற்ற சாமான்களும் நான் வச்சுக்கிட்டிருந்தேன். எல்லாத்தையும் அந்தப் பட்டுகாரன் பிடுங்கிக்கொண்டு போய்விட்டான். நேத்துமுதல் சோறுந்திங்காமல் தண்ணியுங் குடிக்காமல் மெத்த மயக்கமாயிருந்தது. மெள்ளமெள்ள நடந்து இந்த ஊர்ப்பக்கம் வரும்போது நடக்க முடியாமல அந்தக்கல்லுமேலே படுத்து மயங்கிக்கிடந்தேன். அந்தம்மா சங்கதி என்ன ஆச்சோ தெரியல்லையே. அந்த சமீந்தார் வெகு பொல்லாதவன் கொலைக்கஞ்சாத பாவியல்லவா'' என்று சொல்லி இருகண்களிலும் ஜலம் பெருகிவழிய அழுதுகொண்டு நின்றான். அதுகேட்டு மகாதேவய்யர்,

கிருஷ்ணா நாம் சந்தேகப்பட்டபடியே நடந்திருக்கின்றது. இன்னும் விடிய நாலுநாழிகை இருக்கின்றது. இன்றைக்கு நமக்குச் சிவராத்திரிதான். உடனே ஒரு வண்டி அமர்த்திக் கொண்டு புறப்படுவோம் என்று சொல்லிவிட்டுத் திண்ணையில் உட்கார்ந்தார். கொஞ்சநேரம் அவர்கள் வசனித்துக் கொண்டிருக்கையில் கிழக்குத்திசையில் செந்நிறம்பெருக அருணன் உதயமாயினன். அக்காலையில் பலர் அவ்விடுதியின் முன்னர் வந்து கூடினார்கள். அவர்களில் ஒருவர் தமிழை நிரம்பக் கற்றறிந்த பண்டிதர், பல ஜமீந்தார்களுடன் பழகி அப்பழக்கத்தால் விளைந்த பற்பல கஷ்ட நிஷ்டூரங்களை அனுபவித்தவர்.

அவருடைய உடலின் செழுமையைப் பார்க்கும் பொழுது அவர் அன்னம் வராகனெடைக் கணக்காகக் கூடக் கண்டறியாதவர் போலத் தெரிகிறது. அவர் தலையில் அவர் முன்னோர்களுக்குச் சோழராசர் ஒருவரால் வெகுமானமாகக் கொடுக்கப் பட்டதென்று சொல்லப்படும் பட்டைச் சுற்றிக்கொண்டிருந்

தார். இடுப்பில் தரித்திருப்பது அழுக்குவஸ்திரமாயிருந்தாலும் ஆயிரங்கண்களை யுடைய பழைய சால்வை யொன்றை மேலே போர்த்துக் கொண்டிருக்கிறார். கழுத்தில் அணிந்து கொண்டிருக்கும் உருத்திராட்சமாலை சுமார் அரைவண்டிப்பாரமிருக்கலாம். அவர் பக்கத்தில் நிற்கும் மாணாக்கனைப்பார்த்து,

"அடா! அறிவிலாய்! யாம் புனையும் விரலணிகள் எங்ஙன்? யாம் வைகறையில் புனல்மூழ்கிப் போதருமுன்னரே கடாவினேம். பரிதியின் கிரணம் மேதினியனைத்தும் தழீஇ நிற்பது நீ அறிந்திலாய்போலும்," என்றனர். அவர் புகன்றது மாணாக்கனுக்கு யாதும் புலப்படாமல் ஒரு கோஸாவின் நெடிய உபந்நியாசத்தைக் கேட்டுப் பிரமித்ததுபோல் நின்றான். பக்கத்தில் நின்ற கிருஷ்ணையர் மகாதேவய்யரைப்பார்த்து:—

"இவர் யாரப்பா! என்னபாஷை பேசுகிறார். நமக்குத்தான் அவர் சொல்வது புலப்படவில்லை யென்றாலும் அவருடைய மாணாக்கன்போல் காணப்படுகிற அந்தப் பையனும் ஒன்றுமறியாமல் நிற்கிறானே" என்று சொல்லிக்கொண்டிருக்கையில் அந்த நாவலர் மூட்டைக்குள் வைத்திருந்த பாதகுறடுகளை யெடுத்து அவைகளில் ஒன்றில் குமிழ் பெயர்ந்திருந்ததை இறுக்கிக் காலில் அணிந்துகொண்டு அங்கிருப்பவர்களைப்பார்த்து கடிய கோபத்துடன் "அகத்தியம், தொல்காப்பியம், கல்லாடம், இவைகளின் பண்பினைச்சாலவும் உய்த்துணர்ந்த மூதறிவாளர் ஈங்குளராயின் நம் முன்னர் வருக, அன்னவர் நாவையரிந்து அவர் ஓடி ஒளியும் பக்கல் புலப்படாது வாதுபுரியற்பாலனம்" என்று சொல்லி அகங்காரத்துடன் உரக்க மொழிந்துவிட்டு மாணாக்கன் எடுத்துக்கொடுத்த மோதிரங்களைப் பத்துவிரல்களிலும் புனைந்துகொண்டு அப்பையனை நோக்கி "ஆகற்றுச்சொல்லி! நீ நன்குணராயோ."

"... மன்னனுக்குத் தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாஞ் சிறப்பு"

என்னும் மூதாட்டியின் மொழிக்கு நாமே சான்றாவம் என்றார் இதுகேட்டமாணாக்கன் "ஐயா! தாங்கள்

ஊர் ஜெமீன்தாருடன் சண்டையிட்டுக்கொண்டு வந்துவிட்டீர்கள். உணவுண்டு இரண்டுநாள் ஆய்விட்டன. எனக்குப்பசி பொறுக்கமுடியவில்லை, வயிறு காய்ந்தெரியும்போது தொல்காப்பியம், கல்லாடம்யாருக்கு வேண்டியிருக்கிறது, கற்றோர்க்கு இந்நிலைமையே சிறப்பாயின் எனக்குக்கல்வியேவேண்டாம். அந்தமோதிரங்களில் ஒன்றையாவது ஊட்டுப்பரையில் வைத்து ஒருவேளைஉணவாவது புசித்தால் என்களைப்புத்தீரும் என்றான், உடனே மகாதேவய்யர் அம்மாணாக்கனை நோக்கி "இவரென்ன, உனது ஆசிரியரா? அவர் உரைப்பது உனக்காவது சற்றேனும் புலப்படுகிறதா? என்றான். அதற்கு அம்மாணாக்கன்.

"அவர் என்னுடைய ஆசான், அவர் செந்தமிழ் பேசுகிறார். கேட்போர்க்குத்தலைவலி யல்லாது மற்றொருபயனையும் அளிக்காது இவர்களுடன் கூடப்போவதைக் காட்டிலும் எங்கேயாவது கிணற்றில் விழுந்து இறக்கலாம். பேசுவதும் புலப்படவில்லை எங்கேயானாலும் சண்டை. அவ்வூர் ஜமிந்தார் நல்லகொடையாளி, தமிழ் நூல்களின் உத்தம ரசத்தை நன்கறிந்தவர் இவர் அந்த ஜமிந்தாரிடம் சென்று மரியாதையாய் இராமல் உமக்கு நான் மேலென்று சொல்லி அவர் பக்கத்திலிருந்த ஆசனத்தில் உட்காந்து கொண்டு தாறுமாறாகப் பேசினார். அந்தப் பிரபு நல்லவராயிருந்தாலும் அவரைச் சேர்ந்த நாலு அடைப்பைக்காரர்கள் இவர் தனித்திருக்கும சமயம் பார்த்து இவருக்கு தக்க மரியாதை செய்து நையப்புடைத்து அவ்வூருக்கு வெளியில் கொண்டுபோய்த் தள்ளிவிட்டார்கள். கொஞ்சம் அடக்கமாய் இருந்தால் பசியாரப் புசித்துக்கொண்டிருக்கலாம். திருமலைராயன் பட்டணததில் அந்தணர் ஒருவர் தமிழை நன்றாகக் கற்று எந்த வித்துவான்களுக்கும் தக்க சம்மானம் செய்துகொண்டு கர்னன் போல் விளங்குகின்றார். அவர் அளவில்லாத சம்பத்துடையவர். இவர் அவரிடம் சென்று தமிழைக் கொடுத்து பார்ப்பார் அந்தணர் என்று மதத்துக்குப் பிராமணன் என்பது பொருளன்று சைவர்களென்றே கருத்து என்று புகன்று நூலின் ஆராய்ச்சியை வெளியிடாமல் சைவச் சண்டை ஸ்மார்த்தச் சண்டையில் விழுந்து வம்பு செய்துகொ

ண்டு உபவாசத்துடன் அவ்வூரை விட்டுக் கிளம்பினர். எள்ளுத் தான் எண்ணெய்க்குக் காய்கிறது. எலிப்புழுக்கைக்கு ஏன் காய்ச்சல், என்பதுபோல் என் கிரகசாரம் நானும் அவருடன் திரிந்து தினம் தினம் ஏகாதசி அனுஷ்டானத்திலிருக்கிறேன் என்றார். அதுகேட்டு மகாதேவய்யர் "நீங்கள் ஊரைவிட்டு என்றைக்குப் புறப்பட்டீர்கள். அந்த ஊரில் என்ன விஷேசம் என்று வினவினர். அதற்கு அம்மாணுக்கன் சிந்தாமணியை ஜமீந்தார் அழைத்து வந்ததையும் அவளை அவன் கெடுக்க முயன்றதையும் அம்முயற்சி நிறைவேறுமல் அவன் கொடிய விபத்து அடைந்ததையும் அப்பதிவிரதை எக்குறைவையும் அடையாமல் தப்பி ஓடிவிட்டதையும் விவரமாக உரைத்து ஐயா! நாங்கள் அன்றிரவில் அந்த ஜமீந்தருடைய அரண்மனையிலேயே இருந்தோம். எல்லாம் நாங்கள் நேரில் அறிந்தோம்" என்று சொன்னன். அதுகேட்டு மகாதேவய்யர் அந்த நாவலரைப் பார்த்து "ஐயா! தாங்களும் கூட இருந்தீர்களோ? அவ்வளவு சம்பத்தை அடைந்திருக்கிற அந்த மனுஷனுக்கு இவ்விதம் அறிவு கெடப்போகவேண்டுமா? நன்ருகப் படித்தவர் என்றும் சொல்லுகிருர்களே என்று உரைத்தார். அது கேட்டு அவ்வித்துவான் "நீவிர் வினவிய அனைத்தும் உண்மையே. யாம் செய்யத்தக்கது யாதுளது. அன்னவர் புலமைக்கும் கைத்துக்கும் எப்பயனுமில்லை.

வெண்டா.

"படித்துப் படித்தறிந்த பாளையக்கா ரர்பொன்
குடிக்கும் வெடிக்கும் கொலைக்கும்—கடித்திடுநாய்
வேட்டைக்கும் சேட்டைக்கும் வேசைக்கும் மோசப்போல்
மூட்டைக்கும் வைத்த முதல்"

என்பது உலகப் பிரசித்தமாய்த்தெரிந்த விஷயமல்லவா. என்றுரைத்தார். அங்கிருந்த ஒரு மறையவர் நானுங்கூடத்தானிருந்தேன்! அந்தச்சீமான்மகன் பிறகு ஊரெல்லாம் சிரிக்க அவமானப்பட்டுக்கிடக்கின்றன். கெட்ட நாய்க்குப் பட்ட தழுதி என்னும் வசனப்படி அவன்செய்த கொடிய பிழைக்காக ஒரு டாக்டருக்கு ரூ 1000 அபராதம் கொடுத்தபின் அவர்

வந்து கழுத்தைக்கீறி குண்டையகற்றி வைத்தியம் செய்ததினால் கொஞ்சமகளைப்புத்தீர்ந்து அபாயமன்னியிலிருக்கின்றார், அவர் இதைப்போல் இன்னும் எத்தனைகாரியமோ செய்யவேண்டியிருக்கிறதல்லவா, அதுநிமித்தம் ஈசுவரன் உயிர்ப்பிச்சைகொடுத்தார் போலும். நான்விசாரித்ததில் அந்தப்பெண் அன்று இரவுமுழுதும் ஒரு அந்தணர் வீட்டில் ஒளிந்துகொண்டிருந்து தான் கொல்லமிருந்துவந்ததாகவும் மறுபடியும தான் கொல்லத்துக்கே திரும்பிப் போவதாயும தன்னையாராவது தேடிவந்தால் இவ்விதமே அவர்களுக்கு உரைக்கவேண்டுமென்றும் அந்தப்பிராமணருடைய மனைவியிடம் சொல்லிவிட்டுக் கொல்லத்துக்குப்புறப்பட்டுப் போய்விட்டதாக வெளியாயிற்று. தர்மம் தலைகாக்குமென்பது பொய்யுரையா! அப்பெண்மணிக்கு மலைபோல்வந்தது பருதிமுன் பனிபோலவிலகினது. மெத்த ஆச்சரியம். கருணைக்கடலாகிய பரமேசுவரன் எங்கும் நிறைந்து தன் கடாக்ஷத்தினால் நல்லோர்கட்கு இடுக்கணென்றும் அணுகாமல் பாதுகாப்பதையே தன்னுடைய சங்கல்பமாகக் கொண்டிருக்கிறார் என்பதற்கு இதையன்றி வேறுசான்றும் வேண்டுமோ. அந்தோ இக்காலத்தில் கொடுமையால் படியாதவர்கள் கடவுளின் கருணையை மறுதலிப்பது வியப்பன்று. படித்தவர்களுங் கூட ஆஸ்திக புத்தியின்றி ஈசுவரனே கிடையாதென்றும் பிரம்மமென்பது ஏதோ ஒரு காரண வஸ்துவென்றும் தர்மமும் பூஜையும் வாசனையும் ஆலயங்களும் அக்ஞானத்தினால் கற்பிக்கப்பட்டவைகளென்றும் புலம்பிக்கொண்டு பேச்சில் மட்டும் எல்லாம் பொய்யென்று சொல்லிக்கொண்டு தத்துவக்ஞானங்களென்னும் பெயருடன் இரைச்சலிட்டுத் திரிகிறார்களே. அவர்களுக்கு வேதமும் ஸ்மிருதி முதலிய கிரந்தங்களும் கட்டுப்பாடுகளாய் விட்டன. ஆனால் அவர்களுக் கெல்லாம் பொய்யாகவும் வீட்டில் நுழைந்தவுடன் பொருளும் மனைவியு மட்டும் சத்தியவஸ்துக்களாகவும் பெற்றோர்கள் முதலிய சகல சம்பந்தங்களும் அவர்களுக்கு மித்தையாகவும் படுகின்றன. இவர்கள் தப்பித் தவறிச் செய்யும் நல்ல வினையுங்கூட ஈசுவர புத்தியினால் செய்யப்பட்டால் அதற்குக் கொஞ்சம் பிரயோசனமிருக்கலாம். எல்லாம் பிரதிஷ்டைக்கும் பத்திரிக்கைகளின் வாயிலாகப் புகழ்ப்பெறுவ

தற்கும் மட்டும் அவர்கள் செய்வதே தவிர சர்வ சாட்சியாக இருந்து நல்வினைக்கும் தீவினைகளும் பலனளிக்கும் பரமேசுவரன் ஒருவனிருக்கிறானென்கிற அறிவு அவர்களுக்கில்லை. அப்படிச் சொல்லிக்கொண்டு அவர்கள் ஞாபகத்தில் விலகி நின்றால் ஆகாதா, அவ கலியின் கொடுமை, தேவ பூஜை வீட்டில் காடிலையை விட்டு ஓட்டினது போல நம்முடைய பூர்வீக மதசித்தாந்தங்களுக்கு அவ்விதம் கருத்தல்ல. இவ்விதம் கருத்தென்றுபுகன்று தாங்களே சர்வக்ஞர்களென்கிற பாவத்துடன் ஆசாரத்தையும் வர்ணாசிரமங்களையும் இகழ்ந்து கொண்டு தங்களால்தான் இவ்வுலகத்திற்கு க்ஷேமம் உண்டாகப் போகிறதென்றும் முன்னிருந்த ஆசாரியர்களால் ஆன்மகோடிகளுக்கு அளவற்ற சங்கடங்கள் நேரிட்டிருக்கின்றனவென்றும் அவைகளுடைய நிலைமையைத் தாங்களே சீர்திருத்த முயலுகிறோமென்றும் வெகு தினமாக வசனித்துக் கொண்டு நிற்கிறார்கள். அந்தச் சனியன் எப்படியும் போகட்டும் அப்பெண்மணிக்கு யாதொரு குறைவும் நேரிடவில்லை. நீங்கள் கொஞ்சங்கூட சந்தேகப்பட வேண்டாமென்று சொன்னார். அதுகேட்டு மகாதேவய்யரும் கிருஷ்ணய்யரும் அப்படியானால் நாங்கள் அவ்வூருக்குப் போகவேண்டியதில்லை அக்குலமங்கை கொல்லத்திற்குப்போய் எங்களைப்பாராமல் கவலையுற்றிருப்பாள் நாங்கள் கொல்லத்துக்கே புறப்பட்டுப்போகிறோமென்று சொல்லிவிட்டு அன்று பகலில் அவ்விடுதியில் போஜனம் செய்துகொண்டு துறைமுகம் வந்து படகேறிக் கொல்லத்துப்போகப் பிரயாணமாயினார்கள்.

உமாதாஸ்.

(இன்னும் வரும்)

சிவாலய தரிசனவிதி யுரை.

(முன் தொடர்ச்சி)

மருவுமோர் மடுவீழ் மகவையா யெடுப்பான் மகிழ்நனை யிரந்திடன்மானப்
பெருமல கூபத் தமிழ்ந்திய வுயிர்கள் பெயருபு வீடுறமன்றின்
அருளடி யெடுத்து மருளடி பதித்து மமரர்தம் பிரானினிதாடுந்
திருநடங் காண்டல் வேண்டலுற்றிடுநஞ் சிற்பரை பொற்பதஞ் சேர்வாம்

இதன் பொருள்.

(உலகின்கண்)

பொருந்திய ஒரு மடுவினிடத்து வீழ்ந்த குழந்தையை மாதா வானவள் எடுக்கும் பொருட்டு தனது நாயகனை யாசித்தல் போல, பெரிய ஆணவ மல மாகிய கிணற்றில் அழுந்திய ஆன்மாக்கள் அதினின்று நீங்கி முத்தியை யடையும் பொருட்டு சிற்சபையின் கண்ணே அருளாகிய திருவடியை மேலே தூக்கியும் மருளாகிய திருவடியைக் கீழே பதித்துந் தேவர்களுக்கெல்லாந் தலைவராகிய சிவபிரான் இனிதாக ஆடுந் திருநடனந் தரிசித்தலைப் பிரார்த்திக்கின்ற நமது சிற்சித்தியாகிய சிவகாமி வல்லியாரது பொன்போன்ற அரிய இரண்டு திருவடிகளையும் யாம் இடையறுது சிந்திப்பாம் என்க.

மருள் திரோதானம்

சிவபிரானது திருநடனம், ஞானநடனம், ஊனநடனம், என்று இரண்டு வகைப்படும். அருளாகிய திருவடியை எடுத்தல் ஞானநடனம், மருளாகிய திருவடியைப் பதித்தல் ஊனநடனம். இவையிரண்டுமே ஆன்மாக்களுக்கு முத்தியையும் போகத்தையும் அளிப்பனவாம். இவற்றின் உண்மையை "ஊனநடன் மொருபா லொருபாலா ஞானநடந்தா னடுவே நாடு" என்பதனா லுணர்க. (2)

தக்ஷிணாமூர்த்தி.

சதுமுகப்பிதாவைத் தணந்துபினட்டா தசவிதகலைகளு முணர்ந்து
சதுரராய்வதிந்துஞ் சாத்தியம்பெறாது சாதனப்பாலராய் மலைந்த
சதுரரானவர்க்குத் தாவருட்சத்தி னிபாதமுமுறுத்து மும்மலத்தின்
சதுரொருங்கிரியத் தண்ணருள்புரிந்த சற்குருசாமிதாள் போற்றி.

(இ-ள்) நான்கு முகங்களையுடைய தமது பிதாவாகிய பிரமதேவரை விட்டு நீங்கிப் பின்பு பதினெட்டு வித்தைகளை ஒதியுணர்ந்து அவற்றில் மிகுந்த பராக்கிரம முடையவர்களாய்த் தங்கியும் உண்மை ஞானத்தை கூடப்பெறாது சாதனப்பகுதி யுடையவர்களாய் மயங்கிய சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர் என்னும் நான்கு முனிவர்களுக்குத் தீவிரதர

அருட் சத்திநிபாதத்தை உண்டுபண்ணி மும்மலங்களின் வலிமை முழுவது நீங்கக் குளிர்ந்த கிருபையைச் செய்தருளிய பரம சற்குருவாகிய தக்ஷிணாமூர்த்தியினது இரண்டு திருவடிகளும் எம்மைக் காக்க.

அட்டாதசகலைகளாவன, இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் வேதநான்கும், சிக்ஷை கற்பசூத்திரம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி சோதிடம் என்னும் அங்கமாறும், புராணம் நியாயநூல், மீமாஞ்சை, மிருதியென்னும் உபாங்கம் நான்கும், ஆயுள்வேதம், வில்வேதம். காந்தருவவேதம், அருத்தநூல் என்னும் உபவேதம் நான்கும் என விவை. இவற்றுள் வேதநான்கும் பிரமகாண்டமும், பிரமஞானத்திற்கு நிமித்தமான கருமகாண்டமு முணர்த்துவனவாம். சிவாகமங்களும் பிரமகாண்டமாயடங்குமென்பர். வேதங்களை எடுத்தல் படுத்தல் முதலிய விசைவேறுபாட்டானுச்சரிக்குமா றுணர்த்துவது சிக்ஷை, வேதங்களிற் கூறுங்கருமங்களை யனுட்டிக்கு முறைமையை யுணர்த்துவது கற்பசூத்திரம், வேதங்களினெழுத்துச் சொற்பொருளியல் புணர்த்துவது வியாகரணம், வேதங்களின் சொற்பொ ருணர்விப்பது நிருத்தம், வேத மந்திரங்களிற் காயத்திரி முதலிய சந்தங்களின் பெயரும் அவற்றிற்கு எழுத்து இணைத்தென்றலு முணர்த்துவது, சந்தோவிசிதி வேதத்திற் செய்யப்படுங் கருமங்கள் செய்தற்குரிய காலவிசேடங்களை யுணர்த்துவது சோதிடம், இங்ஙனமாகலின் இவையாறும் வேதத்திற்கு அங்கமெனப்பட்டன. பரமசிவன் உலகத்தைப் படைக்குமாறு முதலாயின கூறும் வேதவாக்கியப் பொருள்களை வலியுறுத்து விரித்துணர்த்துவது புராணம். இதிகாசமு மீண்டடங்கும். வேதப்பொருளை நிச்சயித்தற்கு அநுகூலமான பிரமாண முதலியவற்றை உணர்த்துவது நியாயநூல். வேதப்பொருளின் தாற்பரியமுணர்தற்கு அநுகூலமான நியாயங்களை யாராய்ச்சி செய்துணர்த்துவது மீமாஞ்சை. அது பூர்வமீமாஞ்சை உத்தர மீமாஞ்சை எனவும் முன்னையது வேதமெனவும் பின்னையது வேதாந்தமெனவும் வழங்கப்படும். ஆவ்வவ்வருணங்கட்கு நிலைக்கு முரியதருமங்களை யுணர்த்துவது மிருதிநூல். புராணமுதலிய நான்கும் வேதத்திற்குபாங்க மென்னப்படும்.

நிலை, ஆச்சிரமம்- எல்லா மநுட்டித்தற்கு ச்சாதனமான யாக்கையை நோயின்றி நிலை பெறச்செய்வது ஆயுள்வேதம், பகைவரா னலிவின்றி யுலகங் காத்தற்கு வேண்டப்படும் படைக்கலம் பயிறலை யுணர்த்துவது வில்வேதம். எல்லாக் கடவுளர்க்கு முவகை வரச்செய்யு மிசை முதலிய வற்றையுணர்விப்பது காந்தருவ வேதம். இம்மைக்கு மறுமைக்கு மேது வாகிய பொருள்களை யீட்டு முபாயமுணர்விப்பது அருத்தநூல். இவை நான்கு முபவேத மெனப்படு மென்றுணர்ந்து கொள்க.

விநாயகக்கடவுள்.

பெருங் கருணைகரப் பெருமான் பகைஞர் திரிபுர வலியின் பெருமை மாய்க்க, இருந்தினிமை யெனுந் தரும வசுந்தரையா மிரதத்தி னேற ஊறு, பொருந்தவிளைத் தரியாதி யன்பர் குழாந் துன்பகன்று போற்றி யுய்வான், அருந்தலைமை பூண்ட விநாயகக் கடவுளடி மலர்க ளகத்துள் வைப்பாம்.

இதன் பொருள்

மிகுந்த கருணைகளுக் கெல்லாம் உறைவிடமாய் விளங்குகின்ற சிவபெருமான் பகைவர்களாகிய அசுரர்களது திரிபுர வலிமையின் மிகுதியை ஒழிக்கத்திருவுளங் கொண்டு மிகவலிமையுள்ள தருமரூபமான பூமியாகிய தேரில் எழுந்தருளின மாத்திரத்தில் அச்சு முறியும்படியான இடையூற்றை த்தகுதியாக விளைவித்த விட்டுணு முதலிய தேவர்கள் தம்மைப் பூசித்துத் துன்பத்தினின்று நீங்கிப் பிழைக்கும் பொருட்டு அரிய தலைமைத்தன்மையைப் பூண்டருளிய விநாயகக் கடவுளினது திருவடித் தாமரைகளை இருதயத்தில் இடையறுது சிந்திப்பாம். எ-று.

விசேட வுரை

சிவபெருமான் திரிபுர சம்மாரத்தின் பொருட்டு விட்டுணு முதலிய தேவர்களால் நிருமாணஞ் செய்யப்பெற்றுள்ள பூமியாகிய இரதத்தில் ஏறினமாத்திரத்தில் அச்சுமுறியும்படி செய்து உடனே தம்மை வணங்கின விட்டுணு முதலிய தேவர்களைத் திருக்கடைக்கண் செய்து அன்பர்களே நாம் விநாயகரை வணங்காமல் தேரில் ஏறினமையால் அச்சு ஒடிந்தது இன்று முதல் யாவரும் விநாயகரை முதலிற் பூசித்தே ஒரு காரியத்திற் பிரவேசிக்கவேண்டும் என்று திருவாய்மலர்ந்தருளி தாம் முதலில் விநாயகரைப் பூசித்துப் பின்புஇரதத்தில் ஆரோகணித்துச் சென்றார் என்பது சைவ புராணத்தின் முடிவாதலால் ஊறு பொருந்தவிளைத் தென்றார். (௪)

சுப்பிரமணியக்கடவுள்.

மறை முதற் பதத்தின் பொருளுணராது மறைப்புலவோனெனும் பெயர் பூண், டறைமுதற் றொழிலை யாற்றுத லடாதென் றயன்முதலுறப் பினிற்குட்டிச் சிறையுற வித்துச் சிருட்டிமுன் மும்மைச் செயல்களுஞ் செய்துமா மலயத், துறைகுறு முனிக்கு நெடுமறை யுரைத்த வொருகுரு பரனடியுணர்வாம்

(பொ-ள்). வேதத்தின் முதலிலே கூறப்படுகின்ற பிரணவத்தின் பொருளையறியாத வேதங்களை யுணர்ந்த பிரமதேவனெனு நாமத்தைத் தரித்துச் சொல்லுகின்ற முதற் றொழிலாகிய சிருட்டியை நீ செய்தல் தகாதெ

ன்று பிரமனது தலையிற் குட்டிச் சிறையை யடைவித்துச் சிருட்டிதிதி சங்காரமென்னு மூன்று கிருத்தியங்களைத் தாமே செய்தருளி, பெருமை வாய்ந்த பொதியமலையில் வசிக்கின்ற அகத்தியர்க்கு மிகுதியான வேதப்பொருள்களை உபதேசித்தருளிய ஒப்பற்ற ஆசாரியராகிய சுப்பிரமணியக் கடவுளது திருவடிகளை இடையறாது சிந்திப்பாம் எ-று.

இதன் விரிவைக் காந்தத்திற் காண்க.

திருநந்தி தேவர்.

தமதடியணுகு மாணவர்குழாத்தைத் தகுபருவங்களுக் கியைய
அமலவைந்தவத்தை யடைவினினிறுவி யரனையுட்காட்டுதல் புரைய
விமலவண்கயிலை யணைசுரர்குழுவை விலவுமைவல்யத்தி னிறுவா [வாம்
விமலனைப்புறத்துங் காணுறவிடைசெய் விடையவர்க்கடிமைசெய் திடு

(பொ-ள்.) தமது திருவடியடைந்த மாணக்கர்களை தகுதியான பக்குவங்களுக்கிசைய நிருமலசாக்கிர முதலாகிய பஞ்சாவத்தைகளில் முறையோடு நிறுத்திச் சிவபெருமானை உள்ளே தரிசிப்பித்தலுக்குச் சமானமாக பரிசுத்தமாகிய வளப்பம் பொருந்திய கயிலாய மலையை யணைந்த தேவர் கூட்டங்களை அவரவர்பக்குவங்களுக் கிசைய விளங்குகின்ற பஞ்சாவரணங்களில்நிறுத்தி நிருமலராகிய சிவபெருமானைப் புறம்பேயுந்தரிசிக்கும்படி உத்தரவு செய்கின்ற திருநந்தி தேவருக்கு யாம் தொண்டுசெய்வாம் எ-று. (6)

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

நிருமலனாகமத்தி னிருமித்த திக்கையின்றி நீண்டவீடு
மருவுதலோர்ஞான்றுமிலை யெனுசீலமை நிலவுவிப்பான் மாண்டநல்லூர்ப்
பெருமணநற் காட்சிபெறப் போந்தபெருங் குழுவினரைப்பிறங்குநோக்காற்
கருளிரிவித் தருளொளியிற் கலப்பித்தபெருவாழ்வைக் கருதிவாழ்வாம்.

(பொ-ள்) பரிசுத்தமாகிய சிவபெருமான் சிவாகமங்களில் விதிக்கப்பட்ட தீக்ஷையைப் பெறாது முத்தியை யடைதல் ஓர்காலத்திலுமில்லையென்னுந் தன்மையை யாவருக்குங் காட்டும் பொருட்டு பெருமை தங்கிய நல்லூரில் தமது திருக்கல்யாண மகோற்சவத்தைத் தரிசிக்க வந்த ஆன்மாக்களை விளங்குகின்ற நயன தீக்ஷையால் மலத்தைப்போக்கி சிவபெருமானது திருவடி வியாபகத்தில் கலப்பித்தருளிய பெருவாழ்வாகிய திருஞானசம்பந்த சுவாமிகளை எப்பொழுதுஞ் சிந்தித்து வாழ்வாம் எ-று. (7)

திருநாவுக்கரசு நாயனார்.

(10) வரதனெழுத் தைந்தெண்ணு பவர்வலியபாசச் சிமிழ்ப்புவிழ்ந்து
கரியபிறவிப் பெருங்கடலைக் கடப்பரென்னத் திடமுறுப்பான்
பரமநமச்சி வாயவெனும் பதிகம்பாடிப் பல்லவன்செய்
ஒருகல்யாப் புவிண்டுததி யொருவுமுரவோர் கழல்போற்றி.

(பொ-ள்) சிவபிரானது ஸ்ரீ பஞ்சாக்கரத்தைத் தியானிக்கின்றவர் வலிய பாசக்கட்டினின்று நீங்கி கரிய பிறவியாகிய பெரிய சமுத்திரத்தை நீந்துவர் என்பதை யாவருக்கும் காட்டும்பொருட்டு மேலாகிய நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடியருளிப் பல்லவராஜன் செய்த கல்லினுடைய கட்டினின்று நீங்கிச் சமுத்திரத்தை நீந்திக் கரை யேறிய திருநாவுக்கரசு சுவாமிகள் திருவடிகள் காக்க.

சுந்தர மூர்த்தி நாயனார்.

தம்பெருமைதாமறியாப் பித்தர்பிரான் றன்மைதனை யுலகிற்றக்கோர்
நம்பவொரு மணந்தனைத்தற் குடம்படுபுவன்றொண்டாய் நவில்பாமாலை
வம்புபெறப் புனைந்தேவல் புரிந்துமணம் அதுபலபலவாவாய்ப்பப்
பம்புமவர்க் கொடுநடத்தி யருணம்பியாரூரர் பாதம்போற்றி.

(பொ-ள்.) தம்முடைய பெருமை தாம் உணராத சிவபெருமானை யுலகத்தில் பெரியோர்கள் விரும்பும் பொருட்டு ஒரு விவாகத்தைத் தடுத்தற்கு உடம்பட்டு வலிய தொண்டாய்ப் பாடுகின்ற தேவாரமாகிய பாமாலையை புதுமை யுண்டாகத் தரித்து தனக்கு ஏவல் புரியச்செய்து விவாகம் அது பலபலவாகச் சிறக்க நிறைந்த அச்சிவபெருமானைக் கொண்டு நடத்திய சுந்தரமூர்த்தி சுவாமிகளது திருவடிகள் காக்க.

மாணிக்கவாசக சுவாமிகள்.

ஆணிக் கனகவில்லிக் கடியவருக் கருநிதியங்
காணிக்கையா வழங்கிக்கழலடைமி னுலகிரெனப்
பேணிக்கனே விடுவான் பெருவழுதி பொருளளித்த
மாணிக்கவாசகர் தான் பலரெனுளத்தடமலரும்.

(பொ-ள்.) உலகத்தவர்களே பொன்மயமாகிய மேருமலையை வில்லாகவுடைய சிவபெருமானுக்கும் அடியார்களுக்கும் அரிய திரவியங்களைக் காணிக்கையாகக் கொடுத்து அவனது திருவடியை யடையுங்கள் என்று யாவர்களையும் விரும்பி மேலான முத்தியிலே செலுத்தும் பொருட்டு மேன்மையுடைய அரிமருத்தனபாண்டியனது நாற்பத்தொன்பது கோடி திரவியங்களையுங் கொண்டு சென்று திருப்பெருந்துறையில் சிவபெருமானுக்கும்

அடியார்களுக்கும் கொடுத்தருளிய மாணிக்கவாசக சுவாமிகளது திருவடித் தாமரைமலர்கள் எனது மனமாகிய தடாகத்தில் எப்பொழுதும் மலர்ந்து விளங்கும் எ-று. (10)

சண்டேசுர நாயனர்.

அருட்பரனுருவி லருச்சனைபுரிவோரறை மறுமையி லரனுருவம் [பான்
மருட்கொளா தடைவரெனுமுரை யளவை மாண்பினைக் காட்சியிற் றெரிப்
தெருட்புனன் மண்ணி யாத்தியின் மணலாற் சிவக்குறி கண்டுபூசனைசெய்
திருட்டறவிம்மை யிறையெழில் வடிவமெய்திய வெந்தைதாள் போற்றி.

(பொ-ள்) இருபை பொருந்திய சிவபெருமானது வடிவில் பூசை செய்வோர் சொல்லுகின்ற மறுமையில் சிவசாரூபத்தை மயக்கம் பொருந்தாது அடைவார்கள் என்னும் ஆகமப்பிரமாணத்தின் மாட்சியைக் காட்சிப்பிரமாணத்தால் யாவருக்கும் தெரிவிக்கும் பொருட்டு தெளிந்த நீரையுடைய மண்ணியாற்றின் கரையிலுள்ள ஆத்தி விருட்சத்தினடியில் மணலால் சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்து அஞ்ஞான நீங்க இம்மையிலே அழகு பொருந்திய சிவசாரூபத்தைப் பெற்ற எந்தையாகிய சண்டேசுர நாயனரது திருவடிகள் காக்க. (11)

சேக்கிழார் நாயனர்.

உலகெலா முதற்கடவுளினருள் வழியொழுகுறு திறந்தேற்ற
உலகெலா மெனவெடுத் தருணடப் பிரானுரைத் தருளடி யேற்றே [லாம்
உலகெலாம்புகழ்தொகைவகைத் தொண்டர்தமுண்மை வன்றொண்டடெல்
உலகெலா முணர்ந்துய்ந்திட விரித்தருளுறுவர் சேவடி போற்றி.

(பொ-ள்.) ஆன்மாக்களெல்லாம் முதற்கடவுளாகிய சிவபெருமானது திருவருள் வழியே ஒழுகும்படியான கூறுபாட்டை யாவருக்குந் தெளிவாக்கும் பொருட்டு நடராஜாவானவர் "உலகெலாமுணர்ந்தோ தற்கரியவன்" என்று திருவாய் மலர்ந்தருளிய அடியை அவரது திருவருளால் முதலில் ஏற்றருளி உலகெலாம் புகழுகின்ற தொகையடியார் வகையடியார்களது உண்மையான வலிய தொண்டுகளை யெல்லாம் ஆன்மாக்கள் அறிந்து பிழைக்கும் பொருட்டு விரித்துக் கூறியருளிய பெரியராகிய சேக்கிழார் நாயனரது சிவந்த திருவடிகள் காக்க. (12)

தொகையடியார் ஒன்பதுபேர்

வகையடியார் அறுபத்துமூவர்.

பெரியபுராணம்.

உலகெலா முணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

(பொ-ள்) வாக்கு மனங்கட்கு எட்டாதவ னாகலின் ஆன்மாக்க ளெல்லாம் மனத்தால் இத்தன்மைய னென்று உணரவும், வாக்கால் இத்தன்மைய னென்று கூறவும் முடியாதவன், சந்திரகலை உலாவும்படி கங்கை நிறைந்த சடைமுடியை யுடையவன், அளவிடப்படாத சோதிரூபமா யுள்ளவன், சிற்சபையில் நடனஞ் செய்தருளுகின்றவன் ஆகிய சிவபெருமானது மலர்ந்த சிலம்பை யணிந்த திருவடியை யாம் இவ்வருட்காவிய விலக்கிய மினிது முடிதற்பொருட்டு வாழ்த்தி வணங்குவா மென்றவாறு.

விசேட வுரை:— இவ்வருட் காப்பிய மென்றது பெரிய புராணத்தை. உலகு என்பது ஆரியத் திரிசொல். அஃது ஈண்டுயிர்கண் மேனின்றது. உலகமென்பது இடத்தை யுணர்த்துஞ் சொல்லாகலின் மக்கட் டொகுதியை யுணர்த்தும் வழி ஆகு பெயராம் பிறவெனின் அற்றன்று வட நூலுள் லோக மென்னும் பதம் புவனத்துக்கும் ஜனத்திக்கும் பொதுவாகக் கூறப்படுதலின், மக்கட் டொகுதியை யுணர்த்தும் வழியு முரிய பெயரே யாகலின் ஆகு பெயரன் றென்க.

“இது காலமுலக” மென்னுஞ் சூத்திரத்துச் சேனாவரையர் கடாவிடைகளான் விளங்க வெடுத்தோதிய வாற்றானு முணர்க. அவ்வுயிர்கள் மலமொன்றே யுடைய விஞ்ஞானகலரும் மலங்கன்ம மென்னு மிரண்டு முடைய பிரளயாகலரும், மலங்கன்ம மாயையென்னு மூன்று முடைய சகலருமென மூவகைய ராதலின் எல்லா மென்றார். நிலவு-ஞான்சந்திரகலை. உலாவிய - செய்யிய வென்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம். நிலவு விளங்காநின்ற நீர்மலிந்த வேணியனென்றுரைத்தலு மொன்று. வேணி - அனைத்தையும் போரியல்பா னொருங்கழியுளு சருவஞ்ஞத்துவ மெனப்படு மொரு பெருஞ்சுடர் முடி. அளவெனினும் அலகெனினு மொக்கும். அம்பலம் சிதாகாசம். ஆடல் - ஐந்தொழிற் கூத்து. அது

“தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்கார—மூற்றமா
யூன்று மலர்ப்பதத்தே யுற்றதிரோத முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.”

என்பதனு னறிக.

இன்னும் சிவபெருமானது நடனம் பஞ்சாக்கர நடனமுமாகும். அது

"சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகர
மார்க்கும் யகர மபயகரம்—பார்க்கிலிறைக்
கங்கி நகரம டிக்கீழ் முயலக னூர்
தங்கு மகரமது தான்."

என்பதனு லறிக

இத்திருக்கூத்தானே ஆன்மாவுக்கு மும்மல நீக்க மெனப்படும். பாச விடுதியும் சிவத்துவ விளக்க மெனப்படும். பரமானந்த வநுபூதியுங் கைகூடும். அது,

"மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலஞ்
சாய வமுக்கியரு டானெடுத்து—நேயத்தா
லானந்த வாரிதியி லான்மாவைத் தானழுத்த
முனெந்தை யார்பரதந் தான்."

என்பதனு னறிக.

மலரடி - வினைத்தொகை. சடசித்துப் பிரபஞ்சமெங்கும் வியாபித்து விளங்குஞ் சிலம்படி யென்க. சிலம்பு - ஆரணநூபுரம். அது சிலம்புதலின் சிலம்பெனப்பட்டது. சிலம்பு - ஒலி. அன்பரது இருதய தடாகத்தில் மலர்கின்ற சிலம்படி யென்றலு மொன்று.

இறைவன் றன்னியல்பெனப்படுஞ் சொருப விலக்கணமும் பொதுவியல்பெனப்படுந் தடத்த விலக்கணமு முடையனென வேதாகமங்க ளோதுதலின், அதனுக்கு தன்னியல்பெனப்படுஞ் சொருப விலக்கண மிது வென்பார் உலகெலா முணர்ந் தோதற் கரியவ னென்றும், பொதுவியல் பெனப்படும் தடத்த வடிவம், அருவம், உருவம் அருவுருவமென மூன்று வகையாய் விளங்குதலின் அவற்றுள் நிலாவுலாவிய அருவுருவமாகிய போக வடிவம் இதுவென்பார் நீர்மலிவேணியனென்றும் அருவமாகிய இலய வடிவம் இதுவென்பார் அலகில் சோதியனென்றும் உருவமாகிய அதிகாரவடிவம் இதுவென்பார் அம்பலத்தாடுவா னென்றுங் கூறியருளினார்.

"ஒருருவே மூவுருவமான நாளோ" என்றது மிக் கருத்து நோக்கி யெழுந்தது. நிலவுலாவிய நீர்மலிவேணியுடைய சதா சிவத் திருமேனி மேலுள்ள அருவ தத்துவங்களையும் கீழுள்ள வுருவ தத்துவங்களையும் வியாபித்து நிற்குஞ் சிறப்பு நோக்கி அதனை முற் கூறியருளினார். அங்ஙனம் கூறினும் அலகில் சோதியனாய் நின்றே நிலவுலாவிய நீர்மலிவேணியனாய் அம்பலத் தாடுமென்பது கருத்து. [இனி இவ் விரண்டு திரு

மேனிகளோடும் அம்பலத் தாடுவானென வுடம்பொடு புணர்த்து வினை முதலாக வோதிய மகேசத் திருமேனியுங் கூட்டத் தடத்தத் திருமேனி மூன்று மாறு காண்க.

கருவிகளெல்லாங் கழன்று தானுங் கழன்று அருளுடன் சென்று சிவத்தைக் கூடிய ஞானிகள் அச் சிவமாயே நிற்ப ரன்றி இரு பொருளாய் நின்று உணரவு மோதவும் கூடாமை பற்றி உலகெலா முணர்ந் தோதற் கரியவ னென்றும், நவ வடிவாயும் அஷ்ட மூர்த்தமாயும் பஞ்ச வடிவமாயும் மூன்று வடிவாயும் இருவடிவாயும் ஒரு வடிவாயும் இருபத்தைந்து பேதங்களாயும் இன்னும் அனேக பேதங்களாயும் நிற்றல் பற்றி உலகெலா முணர்ந் தோதற் கரியவ னென்றுங் கூறுதலும் ஒன்று.

சிவபெருமான் தன்னை அடைக்கலம் புக்காரை வாழ்வித்தலும் அங்ஙனம் புகாது செருக்குற்றிருக்கும் ஆன்மாக்களை தாழ்வித்தலு முடையானென்பது தோன்ற "நிலவுலாவிய நீர்மலி வேணியன்" என அடைகொடுத்தோதினர். "சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க் கல்லால் நலமிலன்" எனவும், "சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனுதல் சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனுய்" எனவும், நலமில னண்ணுர்க்கு நண்ணினர்க்கு நல்லன், சலமிலன் பேர் சங்கரன்" எனவுங் கூறிய வாற்றுனு மிதனுண்மை உணர்ந்து கொள்க. சத்தியே வடிவாகக் கொண்டு அம்பலத்தாடுவான் என்பது தோன்ற அலகில்சோதிய னம்பலத் தாடுவான் என்றலும் ஒன்று.

இன்னும் பிரணவப் பொருள் சிவபெருமானே என்பதைக் காட்டும் பொருட்டு அகரத்தை மூன்றுவது அடியிலும் உகரத்தை முதலடியிலும் மகரத்தை நான்காவது அடியிலும், பஞ்சாக்கரப் பொருளுஞ் சிவ பெருமானே என்பதைக் காட்டும் பொருட்டு பஞ்சாக்கரத்தின் முதலெழுத்தாகிய நகரத்தை இரண்டாவது அடியிலும் வைத்துக் கூறியருளினர். இன்னும் உன் மனுந்தத்தில் நடிக்கின்றவன் அரிய மூர்த்தியாகிய சிவபெருமானே என்பதைக் காட்டும் பொருட்டு உகரத்தை முதலில் வைத்துக் கூறியருளினர். "ஈராறின் முடிவில் நடனஞ் செய்வாராம்" என்பதும் இக் கருத்துநோக்கி யெழுந்தது.

வாழ்த்தி வணங்குவா மென்றதனுல் வாழ்த்தும் வணக்கமு மாகிய இருவகை மங்கலமும் பெற்றும். யாம் என்னும் எழுவாய் மறைந்து நின்றது.

பாசஞான பசுஞானங்களா லறியப்படாது பதிஞான மொன்றுனே யறியப்படுவதாகிய இயற்கை வடிவும் அருவமும் உருவமும் அருவுருவமாகியசெயற்கை வடிவுமாகிய இந்நான்கையும் இதனகத்துட் கொண்டு நான்கடியால் ஆசிரியர்மங்கலங் கூறியருளியது, தாம்பாட வெடுத்துக்கொண்ட

செந்தமிழ்க் காவிய விலக்கியத் தலைவரான உண்மை நாயன்மார் இந்நான்கு திருமேனியும் பற்றி நாற்பாத நெறியினு மொழுகிப் பரமுத்தி பதமுத்திகளையடைந்த பெற்றிமை விளக்க நோக்கி யென்க. உலகெலா முணர்ந்தோதற் கரியவன் என்றதினால் ஞானதரிசனமும் அலகில் சோதியன் என்றதினால் யோகதரிசனமும், நிலவுலாவிய நீர்மலி வேணியன் என்றதனால் கிரியாதரிசனமும், அம்பலத்தாடுவான் மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாமென்றதனால் சரியைத் தொண்டும் விளங்கக்கிடந்தமை காண்க.

இங்ஙனமாகலின் இம்மங்கலத் திருப்பாட்டு வாழ்த்தும் வணக்கமுமடிப்பாடாக வருபொருளுரைத்தலுங் காண்க.

இத்திருப்பாட்டிற்கு இவ்வாறன்றி விஞ்ஞானகலர் முதலிய மூவருக்கும் அருள் வழங்குதற்குரிய சிவபிரானது வடிவங்களைப் பொருளாகக் கொண்டுரைப்பாரு முளர்.

இங்ஙனம் ஒருவாறு சுருக்கி யுரைக்கப்பட்டது.

இங்ஙனம்.

சுப்பிரமணியபிள்ளை.

திருஞானசம்பந்தசுவாமிகள் மடம், மதுரை.

சுதேசவயித்திய ரத்தினம்:— இப்பெயர் கொண்ட வயித்தியநூல் ஹோமியோ பாதிக்பிஸிஷன் எஸ். சந்திரசேகர் அவர்களால் அரிய பெரிய பற்பல வயித்திய சாஸ்திரங்களிலிருந்தெடுத்துத் தொகுத்துத் தமிழில் எழுதப்பெற்றுள்ளது. பதார்த்த குணங்களும் உபயோகங்களும் நன்கு விளக்கப்பெற்றுள்ள இச்சிறந்த தமிழ்நூல் தஞ்சை ஸ்ரீ வித்தியா விநோதினி முத்திராசாலையிற் பதிப்பிடப்பெற்றுளது. இதன் விலை ரூ. 1. இதனை நமது பார்வைக்கனுப்பிய நூலாசிரியரிடத்து நன்றி பாராட்டுகின்றனம். இந்நூல் தமிழுலகத்துக்குப் பெரும்பலன்றருவதேயாம்.

பகவத்கீதை வெண்பா.

ஸ்ரீரங்கம் ஸ்ரீவாணீ விலாசனீ பத்திராதிபர் இப்பெயர் புனைந்த அரிய நூலை நம் பார்வைக்கு அனுப்பியதற்காக நாம் அவர்களுக்கு மிக்க நன்றி பாராட்டுகின்றோம். மிகவும் அழகாகவும் சுத்தமாகவும் அச்சிடப்பட்டிருக்கிற இந்நூல் மிகப்பழமையான தென்பதும் சற்றேறக்குறைய 750 வருஷங்களுக்கு முன்னிருந்த வாதிகேசரி அழகிய மணவாள ஜீயர் என்ற ஓர் வைணவ ஆசாரியார் அவர்கள் இயற்றியதென்பதும் இதன் ஆங்கில முகவுரையால் விளங்குகின்றது. நூலின் கம்பீரத்துக்குத் தக்க வண்ணம் இம்முகவுரையும் கம்பீரமான அழகிய நடையில் எழுதப்பட்டு இந்நூலைக் குறித்த ஸகல விவரங்களையும் தெளிவாய்த் தெரிவிக்கின்றது.

இவ் வெண்பாக்கள் படிக்கப்படிக்க மிகவும் இனிமையாயிருக்கின்றன. கீதையின்மூலத்தை வைத்துக்கொண்டு ஆங்காங்கு சுலோகம் சுலோகமாய் ஒப்பிட்டுப் பார்த்ததில் இரண்டிற்கும் சிறிதும் வித்தியாசம் காணப்படவில்லை. சில்வகையெழுத்திற் பல்பொருள் விளங்கும் வண்ணம் இவ்வாசிரியர் மூலக்கருத்தனைத்தையும் நேரிசை வெண்பாவில் நேர்த்தியாக அமைத்திருப்பது பெருவியப்பே. சிற்சில இடங்களில் இரண்டு சுலோகங்களை ஒரே வெண்பாவில் அமைப்பர். உய்த்துணரின் இஃது ஓர் முதனூலாகத் தோற்றுகிறதேயொழிய வழிநூலாகத் தோற்றவில்லை.

நெடுநாளாக மறைந்து கிடந்த இந்நூலைத் தேடிக் கண்டு பிடித்து உதவிய அன்பில் ஸ்ரீ வெங்கிடாசாரியார் அவர்களுக்கும் தக்க பண்டிதர்களைக் கொண்டு நன்கு பரிசோதிப்பித்தும் குறிப்புரை எழுதுவித்தும் லோகோபகாரமாகும்படி சீரும் சிறப்புமாக எவரும் வியக்கும் வண்ணம் வெளியிட்ட ஸ்ரீ வாணிவிலாஸின் பத்திராதிபருக்கும் நம் தமிழ் நாட்டார் அனைவரும் மிகவும் கடமைப்பட்டவராவார்கள்.

மூன்று ஷட்கங்களடங்கிய இந் நூலின் முதல் ஷட்கம் (6 அத்தியாயங்கள்) மட்டுமே இச்சமயம் வெளிவந்துள்ளது. எஞ்சிய இரண்டு ஷட்கங்களும் காலக் கிரமத்தில் வெளிவருமென்று நம்புகிறோம். 112-பக்

கங்கள் கொண்டதும் பாராயணத்துக்கு யோக்கியமானதுமான இந் நூற் பதுாறுக்கு அணு ஆறே விலை ஏற்பட்டிருப்பது மிகவும் சுலபமே.

தமிழபிமானிகளாகிய அனைவரும் இந் நூலை வாங்கிப்படித்து அதன் ரசத்தை அநுபவித்து இன்புறுவார்களென்று நம்புகின்றோம்,

சுப்பிரமணிய பிரபாவம்:— இத்தலைப் பெயர்கொண்ட வசன நூலொன்று நமது பார்வைக்கு வந்தது. ராயல் 62 பக்கத்தில் நல்ல கடிதத்தில் பைக்கா எழுத்தில் பதிப்பிடப் பெற்றிருத்தல் அழகாயமைந் துள்ளது. நூலை விரித்துப் படிக்கத் தொடங்கிய அளவில் இடையே நிறுத்திவிடாத படி மனத்தைத் தன்வசப் படுத்தும் இனிய நடையும், பத்திச் சுவைப்பொலிவும் இடந்தோறும் விளங்குகின்றன. ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளின் பெருமை யறிவித்தற்கு ஏற்ற பெற்றித்தாக விளங்கும் இந் நூலை யெழுதி வெளியிட்டவர் கொழும்பு பதிவு காரிய கர்த்தராபீசு லிபிகரு ளொருவராகிய யாழ்ப்பாணம் ஸ்ரீமத் செல்லையாபிள்ளை யவர்களே. தமிழ்ப்பாஷைக்கு வசன நூல்கள் பல்கவேண்டுமென்று பலரும் கருதும் இவ்வமயம் பிள்ளையவர்கள் இன்னும் பற்பல வசன நூல்களெழுதி வெளியிடுவார்களாயின் மிக உபகாரமே. இவ்வாறு செய்யும்படி யாமும் பிள்ளையவர்களை வேண்டுகிறேம்.

பத்திராதிபர்.

உ

கடவுள் துணை.

நீதிவாக்கியமூலம் முதற்பாகம்.

காப்பு.

ஆதி பகவ னடியிணைதொழுது
நீதி வாக்கியம் நிகழ்த்து வோமே.

நூல்

1. அகரப்பொருளறி
2. ஆசையகற்று
3. இல்லறந்துறவேல்
4. ஈகைமறவேல்
5. உள்ளங்கலங்கேல்
6. ஊனைப்புசியேல்
7. எதிரியைச்சேரேல்
8. ஏழைக்கிரங்கு
9. ஐயமறக்கல்
10. ஒக்கலைக்கலந்துவாழ்
11. ஓமெனும்பதந்தெரி
12. ஔவியங்கெடுக்கும்
13. அஃகம்பயிர்செய்
14. கல்விகைவிடேல்
15. ஙனமறிந்திணங்கு
16. சலங்கொண்டுலவேல்
17. ஞமலிபோற்றிரியேல்
18. இடக்கரடக்கு
19. இணர்ப்பூஞ்செடிவை
20. தன்னைத்தானறி
21. நண்பரையிணங்கு
22. பரகதிதேடு
23. மமதையடக்கு
24. யதிகளடிபணி
25. அரந்தையகற்று
26. இலக்கணங்கைவிடேல்
27. வங்கணமறிந்துசெய்
28. அழனுதலழிக்கும்
29. இளவலைப்போற்று
30. அறவரைமுனியேல்
31. அனல்விளையாடேல்
32. கற்றவரைச்சேர்
33. காமத்தைமுனி
34. கிழவரைப்பழியேல்
35. கீதையைநோக்கு
36. குருவைமறவேல்
37. கூத்துப்பார்க்கேல்
38. கெடுவழிமற
39. கேதங்கொடுக்கேல்
40. கைத்தொழின்மறவேல்
41. கொலையைப்புரியேல்
42. கோபங்கொள்ளேல்
43. கௌவை யொழித்துவாழ்
44. சத்தியவழிநில்
45. சாதுவைவணங்கு
46. சிக்கறவாசி
47. சீலந்தழுவு
48. சுதரைப்படிப்பி
49. சூளைத்துறவேல்
50. செந்திருவைத்துதி
51. சேதுவைத்தரிசி
52. சைவரைப்பழிக்கேல்
53 சொன்னவகைசெய்
54. சோறிட்டருந்து

55. சௌரியடிபணி
56. தங்கந்திருடேல்
57. தாதைமொழிகேள்
58. திமிரமகற்று
59. தீம்பரைச்சேரேல்
60. துறையறிந்தொழுகு
61. தூண்டிலிற்பழகேல்
62. தெரிவையைமுனியேல்
63. தேசிகர்பதந்தொழு
64. தைரியங்கைவிடேல்
65. தொடுவழக்காடேல்
66. தோப்பமைத்துப்புர
67. தௌவைபோற்றாங்கேல்
68. நண்ணலர்ச்சேரேல்
69. நாழியைக்குறைக்கேல்
70. நிந்தைமொழியேல்
71. நீதிதவறேல்
72. நுளையனோடிணங்கேல்
73. நூங்குபெறவாழ்
74. நெறியலாநெறிவிடு
75. நேமம்பெற்றிரு
76. நைடதத்தைப்படி
77. நொதியிலிறங்கேல்
78. நோற்றாரைத்துணைக்கொள்
79. பசுவுக்கிரைதா
80. பாவஞ்செய்யேல்
81. பிறன்மனைநயவேல்
82. பீடைவிலக்கு
83. புண்ணியம்பலசெய்
84. பூசுரர்தாள்பணி
85. பெற்றோரைப்பேண்
86. பேறுபெறநில்
87. பையலோடாடேல்
88. பொய்ம்மொழிபுகலேல்
89. போதந்தெரிந்துய்
90. பௌவத்திழியேல்
91. மனைவிமக்களைக்கா
92. மதாசொற்கேள்
93. மிஞிறுபிடிக்கேல்
94. மீளிபெற்றுலவு
95. முதுமொழிகைவிடேல்
96. மூத்தவரைத்தாழ்
97. மெய்ம்மறையிகழேல்
98. மேதங்கருதேல்
99. மையல்கொண்டுழலேல்
100. மொட்டைச்சிதைக்கேல்
101. மோசங்கருதேல்
102. மௌனமேஞானம்
103. வசைமொழிகூறேல்
104. வாரணம்பகைக்கேல்
105. விதித்தவழிநில்
106. வீணுரையாடேல்
107. உம்பரைப்பழிக்கேல்
108. ஊடலகற்று
109. வெகுளியடக்கு
110. வேசிமனையகல்
111. வையந்தழுவு
112. ஒழுக்கந்தவறேல்
113. ஓம்புகவிருந்து
114. வௌவுதலைத்துற

நீதிவாக்கிய முதற்பாகம்முற்றிற்று.

உ

கடவுள் துணை.

நீதிவாக்கியம் மூலம் இரண்டாம்பாகம்.

காப்பு.

ஆதி பகவ னடியிணை தொழுது
நீதி வாக்கிய நிகழ்த்து வோமே.

நூல்.

1. அன்னமுநீருந்
துன்னினர்க்குதவு
2. ஆத்துமஞானங்
காத்துக்கொள்வாய்
3. இந்திரியங்க
ளைந்தையுமடக்கு
4. ஈசன்றிருவடிப்
பூசைகதிதரும்
5. உற்றதுசொன்னா
லற்றதுபொருந்தும்
6. ஊன்புசியாமை
வான்புகழாகும்
7. எவ்வகைமிடியினுங்
கௌவையொழித்திரு
8. எருழுதுண்டல்
பாரினிலினிது
9. ஐயமகற்றித்
தெய்வங்கருது
10. ஒக்கலைத்தழுவின்
மிக்கநற்புகழாம்
11. ஓங்கலுக்குலகைத்
தாங்குதல்கடமை
12. ஔவைசொற்பொருளைச்
செவ்விதினுணர்வாய்
13. அஃகலிலாக்கலை
வெஃகுதனலமே
14. கல்வியிற்பெரியதோர்
செல்வமில்லை
15. காரிகைபுன்மொழி
போரிகல்விளைக்கும்
16. கிளையைத்தழுவின்
விளையுநல்லிசை
17. கீர்த்திவிளைக்கும்
வார்த்தைபேசு
18. குவலயத்தெவர்க்குங்
கவலைகொடாதே
19. கூடிவிடுமுனந்
தேடுமெய்ஞ்ஞானம்
20. கெழுமியவுணர்வு
செழுமியபயக்கும்
21. கேட்டநற்பொருளைத்
தேட்டத்தொடுநினை
22. கைத்துளபோழ்தே
யொத்துப்புரியறம்
23. கொடையினுநலமன
நடையொழுக்காதல்
24. கோபம்பொல்லாப்
பாபமாகும்
25. சமயந்தோறு
மமையுமொருபொருள்
26. சாத்துவிகக்குணங்
காத்தலழகு
27. சித்தமொத்துத்துதி
யத்தன்றிருவடி
28. சீயெனத்திரிபவ
னாயினுங்கடையனாம்

29. சுகமுதவாத
மகவாற்பயனிலை

30. சூரியன்முன்னிழி
காரியம்புரியேல்

31. செவிக்கினிதான
நவிற்சிநலந்தரும்

32. சேர்ந்தவர்குணத்தைத
யோர்ந்துநேசி

33. சைதன்னியர்ச்சேர்ந்
துய்ப்பவன்மதிமான்

34. சொப்பனத்திற்பொரு
ளிப்புவிவாழ்க்கை

35. சோராதேபொரு
ணேராதெனினும்

36. தனியிடத்திருத்த
லினிதெனப்புகல்வர்

37. தாரமிரண்டு
கூரரமாகும்

38. திருந்தியகருமம்
பொருந்தியவொழுக்கம்

39. தீக்குணநன்னெறி
நீக்குமென்றறி

40. துன்னெனுங்காரிய
மெண்ணிப்புரியேல்

41. தூதரையொறுத்த
னிதிவிரோதம்

42. தெள்ளியோர்நேயம்
கொள்ளுதல்கடமை

43. தேவியைக்கைவிடிற்
பாவியாவாய்

44. தையலர்மேல்வீண்
மையல்கொள்ளாதே

45. தொண்டரைப்பணிந்தாற்
பண்டைவினையறும்

46. தோதகம்புரிந்தாற்
பாதகம்விளையும்

47. நண்ணுருதவி
பண்ணுரென்றறி

48. நாஞ்சிலினுழார்வான்
காஞ்சிடினுழவர்

49. நிட்டைபுரிந்தவர்க்
கெட்டுமுயர்பதம்

50. நீக்கமினட்புக்
காக்குமோர்சமயம்

51. நுழையாதிருநீ
யழையாரகத்தே

52. நூனெறிநடப்போன்
ஞானறிவாளன்

53. நெய்யோடுண்ணுத
றுய்யவுணவாம்

54. நேரியனுடே
பாரினிலுயர்வாம்

55. நையாதிருப்பர்
பொய்யாதவர்கள்

56. நொய்யிலாக்கூழையு
மெய்மொழிந்திட்டுண்

57. நோலாதவர்க்கு
மேலாந்திருவிலை

58. பணத்தினுநன்றுயர்
குணத்துடனிருத்தல்

59. பாத்திரமறிந்திடிற்
கோத்திரம்பெருகும்

60, பிதிர்கடன்மறந்தா
லதுநலங்கெடுக்கும்

61. பீழையைத்தராதீ
ரேழையராயினும்

62. புலையனேஞான
நிலையிலாதவனே

63. பூரியனெனினும்
பூரணன்றலைமகன்

64. பெற்றார்தமையுனை
விற்றாயினுங்கா

65. பேரின்பத்தினும்
பேறுவேறில்லை

66. பையுளகற்றுஞ்
செய்யுளைவாசி

67. பொறுமையேயிம்மை
மறுமையைப்பயக்கும்

68. போர்புரியிடத்திற்
சேர்வதுதகாது

69. மகப்பேறல்லது
மிகப்பேறில்லை
70 மாதாவுடனுண
வாசாரம்போம்
71. மீதமறப்புசித்தால்
தகைவண்மூதேவி
72. மீக்குணமுடையான்
வாக்கினை மதிநீ
73. முக்குறும்பறுத்தோன்
பக்குவியாவன்
74. மூடர்பழக்கம்
கேடுவிளைக்கும்.
75. மென்மொழிபேசிடி
னன்மைபெருகும்
76. மேகம்பொழிந்தா
லாகுங்காரியம்
77. மைந்தர்மேலன்பு
சிந்தையுள்வைத்திரு
78. மொக்குளிவ்வுடலம்
பக்குவமறிந்துய்
79. மோசச்செய்கை
நாசமாக்கும்
80. வடமீன்போன்ற
மடவார்சிறப்பர்
81. வாதம்புரிந்தால்
போதமநசிக்கும்
82. விடரினிற்கரத்தை
யிடுதலிடர்தரும்
83. உய்வழிக்குறுதுணை
மெய்நிலைநிறுத்தல்
84. ஊழ்வினையளவே
வாழ்வு பலிக்கும்
85. வெள்ளத்திற்றனி
துள்ளியிறங்கேல்
86. வேலிபோலறத்தைக்
கோலிக்காத்திரு
87. வைகறையெழுந்து
செய்யுந்தொழில்செய்
88. ஒன்றிவழியி
லென்றுஞ்செல்லேல்
89. ஓமத்தெழும்பும்
தூமம்படனலம்

நீதிவாக்கியம் இரண்டாம்பாகம் முற்றிற்று.

இங்ஙனம்,

பா. அ. முருகேசபிள்ளை.

காரம்பாக்கம் கிராமம்.

விநோத விஷயங்கள்.

விவாகதினத்தில் ஓர் விநோதச்சடங்கு.

மரத்தில் ஏறி மறைந்துகொள்ளும் மணப்பெண்களைப்பற்றியும் அவர்களைத் தேடித் திரிந்து அலைகையில் உதையும் கிள்ளும் மிதியும் வாங்கும் மாப்பிளை (மணமகன்) களைப்பற்றியும் அறிய அநேகர் ஆவல்கொண்டிருப்பார்கள் என்பதற்கு ஐயமில்லை:

சீன தேசத்தில் மேற்குப் பாகத்தில் "லோலர்" (Lolos) என்ற ஜாதியார் வசித்துவருகின்றனர். இவர்களுக்குள்ளே வியப்பிற்கும் நகைப்பிற்கும் இடமான விநோதச் சடங்கொன்று விவாகதினத்தில் நடந்துவருகிறது. அஃதென்னவெனில், கல்யாண தினத்தன்று, காலைவேளையில், மணப்பெண்ணானவள், ஓங்கி உயர்ந்த ஓர் மரத்தில் உன்னதமான ஓர் கொப்பில் ஏறி உட்கார்ந்து ஒளிந்துகொள்ளுவாள். அவளுக்குக் கீழே அம் மரத்தின் மற்றக் கொப்புகளில் மணமகளின் அத்தை, தாய், பாட்டி தமக்கை முதலாயினோர் கோலும் கையுமாகச் சூழ்ந்து உட்கார்ந்திருப்பர். சிறிது நேரத்திற்கெல்லாம் மணமகன் காதலியை எங்குந்தேடித்திரிந்து, கடைசியில் இம்மரத்தண்டை வந்து அதில் பெண்ணைக் கண்டு அம்மரத்தின்மேல் ஏறுவன். ஏறி வரும்பொழுதே கையும் கோலுமாகத் தயாராய் உட்கார்ந்திருக்கும் பெண்டுகள் எல்லாரும் அவனை அடித்தும் தள்ளியும் கிள்ளியும் மேற் செல்லவொட்டாமல் தடுப்பர். இவ்வளவு நிர்ப்பந்தங்களையும் பொறுமையுடன் சகித்துக்கொண்டு அம்மணமகன் முண்டித் தள்ளி அப்பாற் சென்று மணமகளைத் தொட்டு அவளைக் கீழே கொண்டுவந்தால்தான் அவனுக்கு அப்பெண் மணமுடிப்பளாம்.

புருஷர்களே இல்லாத ஊர்.

ருஷியாவிற்கும் சீனவிற்கும் சமீபத்தில் உள்ள "மைவாட்சின்", என்ற ஊரே, ஸ்திரீகளே இல்லாத ஊர், என்று அநேகர் அறிந்திருக்கக்கூடும். புருஷரே இல்லாத ஊர் உள்ளதென்ற விஷயம் சிலர்க்கே தெரியும். இவ்வூர் யாதெனில், இந்தியாவுக்குக் கிழக்கேயுள்ள ஸயாம் (Siam) நாட்டிலிருக்கும் "நாங்க் ஹாரம்" (Nang harm) என்ற நகரமே. இது ஸயாமின் இராஜதானியாகிய பாங்காக் (Bangkok)குக்கு மத்தியில் உள்ளது. "நாங் ஹாரம்" என்ற பதத்

திற்கே "கோஷா ஸ்திரீகள்" என்று அர்த்தம். இந்நகரின் ஜனத்தொகை 9000. இவ்வொன்பதினாயிரம் பேர்களில் புருஷர் ஒருவர் கூடக் கிடையாது. இருப்போர் யாவரும் ஸ்திரீகளும் சிறுகுழந்தைகளுமே. இந்நகரத்திலும் எல்லா நகரங்களிலும் உள்ளதுபோலவே பெரியகடைகள், மார்க்கட்டு (சந்தை)கள், கோவில்கள், நியாய ஸ்தலங்கள் நாடகசாலைகள், தெருக்கள் சாலைமரங்கள், உத்தியானவனங்கள், நீதிஸ்தலங்கள், நியாயாதிபதிகள் சிப்பாய்கள், கொலைஞர்கள், போலீஸ் ஸ்டேஷன்கள், முதலியன உண்டு. இவற்றில் அமர்ந்து வேலைபார்ப்பவர்கள் ஸ்திரீகளே. இந்நகரத்தில் துணிந்து பிரவேசிக்கக்கூடியவர் ஒருவரே. அவர்தான் ஸயாம் அரசர். அந்நகரத்திலுள்ள பிரஜைகளனைவரும் அரசனுடையவும் அவருடைய பாட்டன் பூட்டனுடையவும் பெண் சந்ததிகளே. ஸயாம் அரசர்கள் இஷ்டப்பட்டால் எத்தனைபேரையும் கல்யாணம் செய்துகொள்ளலாம். பல அரசர்களுக்கும் மனைவியர் அவரினும் பன்மடங்குண்டாதலின் அவர்களுக்கு ஊழியஞ் செய்ய ஸ்திரீ அடிமைகள் பலர் இருந்தே தீரவேண்டும் அல்லவா? அரசர் மனைவியர் அவர்களுடைய மக்கள், அடிமைகள், அடிமைகளின் மக்கள் இவர்களுடைய பெண் சந்ததிகள் முதலியோர் தொகை 9000 ஆக இருப்பது வியப்பிற்கிடன்றே.

பெண்கள் பெருகிய ஊர்.

தென் அமெரிக்காவில் தென் பாகத்திலுள்ள பராகுவே (Paraguay) என்ற தேசத்தில், தெருக்கூட்டுவதும் கப்பல்களில் சாமான்கள் ஏற்றி இறக்குவதும், ஆடு மாடுகள் மேய்த்துக்கட்டுவதும், அந்நிய தேசத்துடன் போர் புரிய ஆயத்தமாக நிற்பதும் இன்னும் மற்றப்படி புருஷர்கள் செய்யவேண்டிய வேலைகளைப் பெரும்பான்மையும் செய்துமுடிப்பதும் ஸ்திரீகளே. இதற்குக் காரணம் யாதெனில், அவ்வூரில் புருஷர்கள் தொகையைக் காட்டிலும் ஸ்திரீகள் தொகை 7-மடங்கிற் கதிகமாகவே இருக்கிறது. ஆதலின், அவ்வூர் ஸ்திரீகள் புருஷர்களைத் தம் ஆருயிரினும் அதிகமாக அருமை பெருமையாய்ப் போற்றி வளர்த்து அவர்களுக்கு யாதொரு தீங்கும் எவ்விதத்திலும் நேரிடாவண்ணம் தம்மாலியன்ற அளவு பாதுகாத்து வருகின்றனர்.

புருஷர்கள் தொகை மிகுந்த ஊர் :—

இவ்வுலகத்தில் உள்ள ஜனத்தொகையைக் கணக்கிட்டுப்பார்ப்போமேயானால் ஸ்திரீகள் தொகையே புருஷர்கள் தொகையினும் மிகுதிப்பட்டிருக்கக் காண்போம். ஆனால் ஆபிரிக்கா கண்டத்தில் உள்ள ஈஜிப்ட் (Egypt) தேசம் ஒன்றில் தான் ஸ்திரீகள் தொகையி

னும் புருஷர் தொகை அதிகப்பட்டிருக்கிறது. அவ்வூரில் ஸ்திரீகளின் தொகை புருஷரின் தொகையைக்காட்டிலும் 160,000 குறைவாகவே இருக்கின்றதெனத் தெரியவருகிறது.

பெண் அரசாக்ஷி :

பெண்கள் அரசாள்வது நம்மவர்கட்கு (அதிலும் முக்கியமாய்ப் பெண்பாலார்க்கு) அதிக ஆச்சரியத்தை விளைவிக்கிறதல்லவா ? உதாரணமாக :— காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியார் பட்டம் பெற்று அரசாளுகையில் எத்துணைபேர் ஆச்சரியப்பட்டார்கள் ! இதற்கு காரணம் யாது ? நம்மவர்களுக்குள் பெண்கள் அரசாளும் வழக்கம் இல்லாமையே யன்றோ ! நல்லது விக்டோரியா மகாராணிக்குச் சொந்த சகோதரனாவது சிற்றப்பன் பெரியப்பன் மகனாவது இருந்திருப்பானேல் அவர்க்கிப்பட்டம் கிடைத்திருக்குமா ? இராது. ஏனெனில் இங்கிலாந்தில்கூட இராஜ குடும்பங்களில் புருஷசந்ததி இல்லாமற்போனால்மட்டும் ஸ்திரீகளுக்குப் பட்டங்கட்டலாம் என்ற விதியிருக்கின்றதேயன்றி வேறன்று. இவ்வழக்கமும் ஐரோப்பா கண்டத்தில் எங்கும் இருப்பதென எண்ணவேண்டாம். அங்கு, இங்கிலாண்ட், ஹாலண்ட் முதலிய சிலதேசங்களைத் தவிர இதரதேசங்களில் எல்லாம் பெண்கள் பட்டாபிஷேகத்திற்கு அருகர்களே அல்லர் என்று திரஸ்கரிக்கப்படுகின்றனர். ஆதலால் பெண்களே பரம்பரையாகப் பட்டம்பெற்று ஆளும் பெரும்பேற்றை நாகரீக முதிர்ச்சி வாய்ந்ததாகச் சொல்லிக்கொள்ளும் மேற்றிசைகூட அடையாவிடினும் அதனை நாற்றிசையும் புகழ்மணக்கும் நமது பரதமாகண்டத்தி (இந்தியாவி)ன் ஓர் பகுதியானது பெற்றுள்ள விஷயம் பலர் அறிந்திருக்கமாட்டார்கள். அறிந்திருக்கும் சிலரும் "தூரத்துப்பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சி" என்ற பழமொழிக்கேற்ப அந்நியநாட்டுப்பெருமையை அனுதினமும் சிந்திக்கின்றார்களே அல்லாமல் நம் நாட்டிலேயே நாளைவரை நடந்துவரும் இப்பெண்ணரசாட்சியைப்பற்றிப் பேசுகிறார்களில்லை. இவ்விந்தியச் சிறு பகுதியைப் பற்றிய விசேஷம் இன்னும் ஒன்றுளது. இதனை ஆட்சிபுரிபவர்கள் "கோஷா" வாகப் புருஷர்கள் கண்ணுக்குத் தென்படாமல் கரந்துறையும் மகம்மதிய குலத்து மங்கையர்கள். இம்மகம்மதியச் சிற்றரசின் பெயர் "போபால்" ("Bhopal") இவ்விராஜ்யத்தில் புருஷர்கள் பட்டம்பெறச் சட்டம் இடம் கொடுப்பதில்லை. இச்சிற்றரசு தோன்றியதுமுதல் நாளைவரை ஸ்திரீகளே ஆண்டு வருகின்றனர் என்று தெரியவருகிறது. இப்பொழுது அதனையாண்டுவரும் மகம்மதிய இராணியார் மற்றையோரைப்போல் மறைந்து வசியாமல் நேரிலேயே நமது வேல்ஸ் இளவரசர் இளவரசியாரின் நல்வரவேற்று நன்குபசரித்தனர்.

M. கோபாலகிருஷ்ணையர்.

உ

திருச்சிற்றம்பலம்.

சித்தாந்த ஞானரத்நாவளி.

முகவுரை.

"நற்குஞ்சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்"

1. அநாதிமுத்த பதியாகிய சிவபெருமானால் அருளிச்செய்யப்பட்ட வேதசிவாகமங்கள் முதல் நூல்களாம். அவற்றுள் வேதம் பொதுவும் ஆகமம் சிறப்புமாம். உபநிடதங்கள் வேதாந்தமென்று அழைக்கப்பெறும். ஆகமங்களின் அந்தம் சித்தாந்தம் என்று அழைக்கப்பெறும். சித்தாந்தமென்பது முடிந்த முடிவு என்று பொருள்படும்.

2. வேதம் சூத்திரங்களாகவும், ஆகமம் அச்சூத்திரங்களின் விளக்கமாகவும் இருத்தல்பற்றி அரிய பெரிய உண்மைகளைச் சித்தாந்தத்தில் யாவரும் எளிதில் அறிந்து உய்தல் கூடும்.

3. சிவாகமங்களிற் கூறப்பெறும் சித்தாந்த உண்மைகள் வடமொழியிலிருப்பதால், தமிழுலகம் உய்யும்பொருட்டுச் சந்தான குரவர்கள் பலரும் தென்மொழியில் பல நூல்கள் இயற்றுவாராயினர். அந்நூல்கள் முதல் நூலாகிய சிவஞானபோதம் வழிநூலாகிய சிவஞானசித்தியார் சார்புநூல்களாகிய சிவப்பிரகாசம், தத்துவவிளக்கம், ஞானாமிர்தம், துகளறுபோதம் இவைபோன்ற பலவுமாம்.

4. இம்மூவகைப்பட்ட நூல்கள் பலவற்றிற்கும் சித்தாந்த சாத்திரம் என்று பெயர். இச்சாத்திரங்கள் மிகக்கற்றோர்க்கே புலப்படுவனவாயிருத்தலால் மற்றையரும் எளிதில் அறியுமாறு சில முக்கிய விஷயங்களைமாத்திரம் உரைநடையிலும் ஆன்றோர் பலர்கள் எழுதுவாராயினர். அவைகள் கட்டளைகள் எனப்பெயர்பெற்று நிலவுகின்

றன. இக்கட்டளைக்களிற்பயில்வோர் சித்தாந்த உண்மையைப் பிண்டமாக அறிதல் கூடுமேயன்றி வேறன்று.

5. மேற்கூறிய பிண்டமாயுள்ள சாத்திரக்கருத்தை வகைப்படுத்தி யாவருக்கும் தெற்றெறன விளக்குமாறு எழுதல் வேண்டுமென்று பலர் என்னிடங் கூறுவாராயினர்.

6. அவர்கள் அவ்வாறு கூறினும் முன்னமே பலரும் பல திறப்பட எழுதிவைத்ததினும் புதிதாய் யான் எழுதுவது என்னெனக் கருதிக் காலந் தாழ்க்கலாயினேன். ஆயினும், ஆன்றோர் அருளிச்செய்த நூல்களுள் சித்தாந்த தத்துவலக்ஷணம், திரிபதார்த்தசிந்தனை, சற்குருதேசிகன் தரிசனம், பூப்பிள்ளை அட்டவணை முதலிய வசனநூல்களையும் எனது பரமகுருவாகிய சிற்றம்பலநாடிகளால் அருளிச்செய்யப்பட்ட துகளறுபோத மூலத்தையும், பதி பசு பாசத் தொகை யென்னும் அரிய சிறிய நூலிற்கு எனது சிற்றறிவிற்கு எட்டியவாறு எழுதிய ஓர் விரிவுரையையும் வெளிப்படுத்தலாயினேன், ஆங்கில மொழியிலும் சிலதுண்டுப் பத்திரங்களும் சிறுபுத்தகங்களும் அப்போதைக்கப்போது என்னால் பிரசுரிக்கப்பெற்றன.

7. இவ்வாறெல்லாஞ் செய்தும் சித்தாந்த உண்மைஞானத்தில் எனக்குரிய வேட்கை மிகுதியும் உந்தி எழாநின்றமையாலும் எனது நண்பர்கள் பலர் தற்காலத்திற்கு ஏற்றவிதமாய் வசன நூலொன்று எழுதி வெளியிடல்வேண்டுமென்று மீண்டும் பன்முறை வற்புறுத்திக் கூறினமையாலுந் திருவருட்செயலும் அங்ஙனம் ஒத்து நிகழ்ந்தமையாலும் அவ்வாறு எழுதிமுடித்தல் மிகஅவசியந்தானென்று என் மனமே மீண்டு மீண்டுந் தூண்டாநின்றது.

8. இத்தகைய நிலைமையிலுள்ள தமியேன் பரமஞானியாகிய ராமகிருஷ்ண பரமஹம்ஸ சுவாமிகளின் திவ்விய மொழிகளடங்கிய ஒரு அரியநூலைக்கண்டு, அவ்வாறு ஒன்று தமியேனும் எழுதல் சாலுமோ? என்று எண்ணிக்கொண்டிருந்தேன்.

9. அவ்வாறு எண்ணிக்கொண்டிருக்குங்கால் மதுரைத்தமிழ்ச் சங்கத்தின் அக்கிராசனாதிபதியாயும் என்மாட்டுமிக்கு உரிமைபாராட்

டிக்கொண்டிருப்பவர்களுமான **ஸ்ரீமாந். பொ. பாண்டித்துரைத்தேவர் அவர்கள்** சங்கத்தின் சென்ற ஐந்தாவது மஹோற்சவத்துக்குத் தாங்கள் யாதானும் ஒரு வியாசம் எழுதி வாசித்தல் வேண்டுமென்று எழுதினார்கள். அவ்வெழுத்தைக்கண்டதும் முன்னமே சித்தாந்த வசனமொன்று எழுதுதற்காக இயைந்துநின்ற என் மனம் தனக்கோர் சமயம் வாய்த்ததென்று நினைத்து என்னைத்தன் வழியீர்த்தது.

10. அருட்பிரேரணையால் இழுக்கும் அம்மனத்தின்வழியே வழியாகக்கொண்டு **சிந்தாந்தஞான ரத்நாவளி** யென்னும் இச்சிறிய நூலை மேற்குறிப்பிட்ட உற்சவகாலத்தில் வாசிக்குமாறு மிக விரைவாக எழுதிமுடித்தேன். அங்ஙனம் விரைந்து எழுதினமையால் சிற்சில வழுக்கள் சொல்வகையானும் பொருள்வகையானும் இருக்கினும் இருக்கலாம். அவைகளை மிகக் கற்றோர் கவனியாது விடுப்பார்களென்னுந் துணிவால் எழுதாவெழுத்தில் இயைவிக்க முயன்றேன். மேலும் இந்நூலினைப் புதுக்கியும் கூட்டியும் பலபதிப்பிற் பதிப்பிக்க வேண்டுமென்பது எனது விருப்பம்.

11. சித்தாந்த உண்மை அறிவாகிய இரத்தினங்களை வரிசையாக வைத்துக்கூறப்பட்ட நூலாதலினால் இந்நூலுக்குச் **சித்தாந்த ஞான ரத்நாவளி** என்னும் பெயர்புனைந்துரைக்கப்பட்டது. இரத்தினங்கள் நவந்தருபேதமுடையனவாதலால் இந்நூல் **பிரமாணவியல்** முதல் **முத்தியியல்** வரை ஒன்பது இயல்களாக வரிசைப்படுத்தி இயற்றப்பட்டமை காண்க.

அவை வருமாறு:—

12. 1-வது பிரமாணவியல்.—உலகத்துப்பொருள்களை அளத்தற்கு அளவைகள் உள்ளனபோல் திரிபதார்த்த உண்மைகளை அளத்தற்கும் **காண்டல், கருதல், உரை** என்னும் மூன்று முக்கிய பிரமாணங்கள் உண்டென்று கூறுவதோடு அவைகளின் பிரிவுகளையும் விளக்கிக் கூறும்.

13. 2-வது தத்துவவியல்.—இது உண்மைப்பொருள்களாகிய 36 தத்துவங்களையும் அவைகளினின்றும் தோன்றிய தாத்வீகங்களை

யுங் கடினபதவிளக்கங்களையுந் தொகுத்துக்கூறித் தத்துவங்கள் தோன்றி ஒடுங்கும் முறைகளையும் பஞ்சகலைகளில் ஆந்த்துவாக்கள் அடங்கு முறைமையையும் காட்டாநிற்கும்.

14. 3-வது பொதுவியல்.—இது முன்னைய இருவியல்கள் கூறும் இயல்பினையறிதற்கும், பின்னைய பதியியல் முதலிய இயல்களிற் கூறப்பட்டவைகளை யறிதற்கும் இன்றியமையாத சில பொது நியாயங்களைக் கூறும்.

15. 4-வது பதியியல்.—உலகிற்கோர் கடவுள் வேணடுமென்றும், அவன் ஒருவனே யென்றும் அவன் தன்மைகள் இன்னவின்னவை யென்றும், முதல்துணையென்னுங் காரணங்களைத்தமக்கு உபகரணங்களாக வைத்துக்கொண்டு இவ்வுலகைச் சிருஷ்டிப்பானென்றும், பஞ்சகர்த்தாக்களைக்கொண்டு பஞ்சகிருத்தியமும் அவனே யியற்றுவானென்றும், அவ்வாறு இயற்றினும் அவன் நிர்விகாரி யென்றும், அவன் மேலான சங்காரத்தொழிலைத் தன்மாட்டுடையவனுதலினுல் அவனே முழுமுதற்கடவுளென்றும், அவனிடத்திற் பிரபஞ்சங்கள் யாவும் ஒடுங்குமென்றும், மீண்டும் அவனுலேயே அவைகள் புனருற்பவமெய்துமென்றும், அவன் அறிவு இச்சை செயல்கள் உடையவனென்றும், அவன் ஒருநியதிபற்றியே சிற்றறிவு சிறுதொழில்களுடைய ஆன்மாக்களை யியக்குவானென்றும், அவன் அன்பர் வேண்டியாங்கு உபகரிப்பானென்றும், அவன் ஐவகைச் சத்திகளைக்கொண்டு யாவும் நடத்துகின்றுனென்றும், அவ்வாறு நடத்தினுஞ் சூரியனைப்போல் அவைகளில் தாக்கற்று நிற்பானென்றும், அவன் சத்தியின் தன்மைகள் இன்னவையென்றும், அவன் ஆன்மாக்களுக்கு உணர்த்துமுறை இன்னதென்றும், அச்சத்திகள் செல்லும் வழி இன்னதென்றும், அச்சத்திபேதத்தால் இறைவனும் பல பேதப்பட்டவன்போலத் தோற்றப்படுவானென்றும், அவனது திருமேனி இன்னதென்றும் அறியக்கூடிய பல வாக்கியங்களைத் தொகுத்துக் கூறும்.

16. 5-வது பசுவியல்.—ஆன்மாக்கள் அநாதிநித்தியமாய் ஆணவ சம்பந்தமுடையனவென்றும், வியாபகமுடையனவென்றும், இருவினையினுல் மாயாதேகமெடுத்து இறத்தல் பிறத்தல்களை யடைவனவென்றும், சார்ந்ததன்வண்ணமா யிருப்பனவென்றும், பஞ்சாவஸ்

தையி னுட்படுவனவென்றும், அறிவு இச்சை செயல் உடையனவென்றும், சுதந்தரமினத்துவமுடையனவென்றும், சதசத்துக்களென்றும், எண்ணமுடியாதவைகளென்றும், சிற்றறிவு சிறுதொழில் உடையனவென்றும், மும்பாசபந்தமுடையனவென்றும்,கேவலம் சகலம், சுத்தம் என்னும் மூன்று நிலைகளை உடையவைகளென்றும், சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என முத்திறப்படுவனவென்றும், பிரமாதி தேவர்களும் ஆன்மவர்க்கத்துட்படுவார்களென்றும் இன்னும் சில குறிப்புக்களும் கூறுநிற்கும்.

71. 6-வது பாசவியல்—ஆணவம், கன்மம் (ஆகாமியம், சஞ்சிதம், பிரார்த்துவம்) ஆதிதெய்வீகம், ஆதிபௌதிகம், ஆதிஆன்மியம்) சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி ஆகிய இவைகளின் தன்மைகளையும், திரோதானமலத்து இறைவனது மறைத்தற் சத்தியையு மிக வியந்து கூறுநிற்கும்.

18. 7வ-து சாதனவியல்—கற்றல் கேட்டலுடையார் கைக்கொள்ளும் உண்மைச்சமயம் **சித்தாந்தசைவம்** ஒன்றேயென்றும், நான்கு ஆச்சிரமிகளும் அவ்வதீத சமயக்கொள்கைகளையே பின்பற்றிச் செல்லவேண்டுமென்றும், சற்குருவின் திருவருளால் முப்பாசம்நீங்கும் வகையையும், சமயவிசேட நிருவாண தீக்ஷைகளையும், சரியையோகத்தால் சத்திநிபாதம் உண்டாகுந்தன்மையையும், கலாசோதனையையும், ஆன்மாக்கள் அடையும் பதவிகளையும், விக்கிரகாரதனம் மிக அவசியம் வேண்டுமென்பதையும், பஞ்சாக்கரத்தின் மேன்மையையும், பூஜா சமஸ்காரங்களையும், அகப்பத்தி புறப்பத்தி என்பவைகளின் பாகுபாடுகளையும், தியானவழிகளையும், தியானிப்பாரடையுங் கதிகளையுஞ் சீவன்முத்தன் நிலைகளையும்,தசகாரியங்களையும், முப்பது அவதரங்களையும் தசகாரியத்துள் அடக்குமுறைமையையும்,சரியையிற் சரியை முதல் ஞானத்தில் ஞானம் வரை உள்ளபதினறுபடிகளையும் பிறவற்றையும், விதந்தெடுத்தோதும்.

19. 8-வது அநுபவவியல்—மேற்கூறிய சாதனங்களைப் பயிறலாற் பயில்வோர்மாட்டு நிகழும் அநுபவக்காட்சிகளைச் சுருக்கிக் கூறுநிற்கும்.

20. 9-வது முத்தியியல்—பழிசேர் முத்திகளை யெல்லாம் விடு த்துப் பரம முத்தியாகிய சுத்தாத்துவைத முத்திலட்சணத்தைக் கூறுநிற்கும்.

இங்ஙனங் கூறப்பெற்ற ஒன்பது இயல்களினுள்ள வாக்கியங்க ளின் பூரண உண்மைகள் பாலர்களுக்கும் ஸ்திரீகளுக்குங்கூடப்பயன் படுமாறு இலகுவசனங்களால் எழுதப்பட்டுள்ளன. இந்த நூலினுள் குறிப்பாகக் காட்டப்பட்டவைகளைச் சிவஞான சித்தியார் முதலிய விரிவு நூல்களிற் கண்டுணர்க. இந்நூல் நான்காந் தமிழ்ச்சங்கத்தின் 5-வது மகோற்சவகாலத்தில் அரங்கேற்றுங்கால் அக்கிராசனம்வகித் து அதன் நுண்பொருள்களைப் பலவாறு விதந்தெடுத்தோதி எனக்கு ஊக்கங்காட்டிய **மஹாமஹோபாத்தியாயர் ப்ருமஸ்ரீ உ.வே. சாமிநாத ஐயரவர்களுக்கும்,** சங்கத்தின் அரங்கேற்றும் அவை க்களத்திற் போந்து இந்நூலினைக்கேட்டு மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொ ண்ட வித்வசிகாமணிகளுக்கும், இந்நூலின் அருமையை அறிந்து வியந்து கூறிய **ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத் தேவரவர் களுக்கும்,** என்னைத்தூண்டி இந்நூலினை எழுதச்செய்த எனதுநண் பர் மதுரைத் தமிழ்ச்சங்கத்து நூற்பரிசோதகர் **ஸ்ரீமத் மு. ரா. அருணசலக்கவிராயர் அவர்களுக்கும்** இந்நூலினை அச்சிற் பதிப்பிக்கமுன்வந்தஎனதுநண்பர் மதுரை விவேகபாநுப்பத்திராதிபர் **ஸ்ரீமத் மு. ரா. கந்தசாமிக்கவிராயர் அவர்களுக்கும்** சதா நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். திருவருள்முன்னிற்க.

முற்றிற்று.

இங்ஙனம்

S. பால்வண்ண முதலியார்,
தெற்குப்புதுத்தெரு,
திருநெல்வேலி.

சிவமயம்

சித்தாந்தஞானரத்நாவளி.

—:*:—

நூல்

முதலாவது: பிரமாண வியல்.

1. அளவையென்பது, ஆன்ம *சிற்சத்தியாகிய அறிகருவியாலளத்தல்.
2. காண்டல்—இந்திரியங்களுக்கு விஷயமாதல். இதுதான் பிரத்தியட்சப் பிரமாணம்.
3. கருதல்—கண்டபுகையினலே காணாத நெருப்பை யறிதல். இது அநுமானப்பிரமாணம்.
4. உரை—மகாமேரு வடக்கே யுண்டென்றறிதல். இது ஆகமப்பிரமாணம்.
5. அபாவம்—இன்மை. முயலுக்குக் கொம்பில்லை யென்றறிதல்
6. பொருள்—வெண்டாமரை என்னவே செந்தாமரை யுண்டென்று அறிதல்.
7. ஒப்பு—படிகம்போலிருப்பர். சிவன் என்பது.
8. ஒழிவு—இருவருள் இவன் கள்ளன் என்ருல் அவன் கள்ளனல்லனென்றறிதல்.
9. உண்மை—நெருப்பு என்ருல் அதிலே சூடு உண்டென்றறிதல்.
10. ஐதிகம்—இவ்வாலமரத்திலே பேயுண்டென்று பரம்பரையாக் கேட்டறிதல்.
11. இயல்பு—ஒருசொல்லுக்குப் பலபொருளிருந்தால் வினை சார்பு இனம் இடங்களினலே ஒரு பொருளைத்திடமாக அறிதல். உ-ம். மாபூத்தது ஈண்டுமா என்பது பூத்தது என்றதால் மரத்தினைக்குறித்து நின்றது.
12. காட்சி—பலவிதமாம்.

   1. ஐயக்காட்சி—பாம்போ பழுதையோ என்றைய முறுதல்.

*சிற்சத்தி-அறிவு.

2. திரிவுக்காட்சி—பாம்பைப் பழுதை யெனக்காண்டல்.

3. விகற்பக்காட்சி—ஐந்துகுணத்துடனே காண்பது, ஐந்து குணங்களாவன—பெயர் சாதி குணம் தொழில் பொருள் என்பன.

4. நிர்விகற்பக்காட்சி—ஒரு குடத்தைக் குடமெனமாத்திரங் காண்டல்.

5. வாயிற்காட்சி—ஞானேந்திரியங்களாலே அறிதல். இங்கு ஐந்துறுப்புவேண்டும்; அவை ஆன்மா, அறிவு, இந்திரியம், பிரகாசம், தன்மாத்திரை என்பன.

6. மானதக்காட்சி—இந்திரியங்களினாலே தன் மாத்திரை அறிந்துவிட்டதை மனத்திலே நினைத்தல்.

7. தன்வேதனைக்காட்சி—கலாதிகள் எழினாலே ஆன்மாவினுடைய அறிவு இன்பதுன்பங்களிலழுந்தி யநுபவித்தல்.

8. யோகக்காட்சி—தியானசமாதியிலே யிருந்து மூன்று மலங்களுடைய பலத்தைக்கெடுத்து நாநாதேசங்களிலுள்ள காரியங்களையும் மூன்றுகாலங்களிலுள்ள காரியங்களையும்இருந்த இடத்திலேயே அறிதல்.

13. அநுமானம்—இரண்டு வகைப்படும்; தானறிகிறது ஒன்று: பிறருக் கறிவிக்கிறதொன்று; தன் கருத்துணரும்படியாய் நின்ற காரணம் எதுவோ அதனை விளக்கிடு மறிவே தன் பொருட்டனுமானமாம்.

14. காணாத நெருப்பைப் பிறர்க்கு அறிவித்தற்கு ஐந்து உறுப்புக்கள் வேண்டும்—அவையாவன.

1. மலையிலே நெருப்புண்டு இது பிரதிஞை.

2. புகைகண்டபடியால். இது ஏது (கருவி)

3. அடுக்களையிற்புகையும் நெருப்பும் நாள்தோறும், நாள்தோறும்கண்டு கண்டுபழகினதுபோல் இது திருட்டாந்தம்(உவமை)

4. அடுக்களையைப்போல் மலையில் நெருப்புண்டு. என்றல்(உபநயம்)உதாரணத்தோடு சார்த்திக்கூறல்.

5. மேற்கூறிய நான்கும் மெய்யேயல்லாமல் ஒன்றும் பொய்யில்லை. இது நிகமனம். (நிட்சயமானமுடிவு)

49. சத்து என்றால் நிலை மாறுதலின்றி என்றுமுள்ளது அசத்து என்றால் நிலைமாறுதலுடன் என்றுமுள்ளது.
50. பேரானந்தமே சொரூபமாயுள்ளவனுக்கு அவ்வானந்தாநுபவமில்லை.
51. ஒரு அசேதனம் அநேகமாகில் அது தன்னிலே மாறியழியும்.
52. சர்வ வல்லமை என்பது ஒரு நியதி பற்றியே நிகழும்.
53. சூக்குமத்திலிருந்து ஸ்தூலந்தோன்றும்.
54. ஒருகாரியம் நிகழ்வதற்குமுதல் துணைநிமித்தம்என்னு மூன்று காரணங்கள்வேண்டும்.
55. இறக்குங்காலத்திலுறும் அவாவே மறுபிறவி காட்டிநிற்கும்.
56. தோற்றமுண்டேல் அழிவுமுண்டு, சுட்டுப்பொருள்கள்யாவும் அழியும்.
57. இரண்டு அருவப்பொருள்கள் (ஒன்றினுளொன்று)கலந்து நிற்குந் தன்மையன.
58. கண்டகாரியத்தைக்கொண்டு காணாதகாரியத்தை அநுமிக்கவேண்டும்.
59. ஆன்மஅறிவை மேற்கொண்டு அறிவதெல்லாம் அசத்தே.
60. சித்திலிருந்து அசித்துத் தோன்றாது.
61. குணம் குணியைவிட்டு நீங்காமல் அடங்கிநிற்கும்.
62. வாதிகள் அழிவரே, யன்றி, வாதம், அழியாது.
63. பொதுவிதிகொண்டு சிறப்புவிதியை ஆராய்தல்கூடாது.

பொதுவியல் முற்றிற்று.

நான்காவது பதியியல்.

64. உலகமாகிய காரியத்தைக் கண்டு பேரறிவுடைய காரணகர்த்தா ஒருவன் வேண்டுமென்று அநுமித்தல் வேண்டும்.
65. உலகிற்குச் சூரியன் ஒருவனாயிருத்தல் போலக் கடவுளும் ஒருவனே யாவன்.
66. ஆகாயம் எங்கும் வியாபித்திருப்பது போலக் கடவுளும் எங்கும் வியாபித்திருக்கின்றார்.

67. கடவுள் தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை, என்னும் என்றும் மாறுதலில்லாத எட்டுக்குணங்களையுடையவர்.

68. அக்கினியானது விறகினுள் மறைந்து நிற்பதுபோல இறைவன் பிரபஞ்சத்துள் மறைந்திருக்கின்றான்.

69. கடல் நீரில் அடங்கிய உப்பு பரிணமித்தல்போல வியாபகமாய் நிற்குங்கடவுளும் உருவமெய்துவர். அரூபமாயுள்ள பிராணவாயுவும், ஜலவாயுவும் சேர்ந்து உருவமெடுப்பதுபோல் இறைவனும் சத்தியுஞ் சேர்ந்து உருவெடுப்பார்.

70. சூரியனுடைய ஒளியானது அசுத்தத்தைச்சார்ந்து நின்றாலும் தான் அசுத்தப்படாதவாறுபோல் இறைவன் நரகிலும் வியாபித்திருந்தாலும் அவன் அதில் தாக்குற்றுத் துன்பமெய்தான்.

71. சூரியனுடைய சந்நிதானத்தில் தாமரை அலர்தலும், தண்ணீர் சுவறுதலும், ஆம்பல் குவிதலும் போல ஈசுவர சந்நிதானத்தில் ஐந்தொழில் நடைபெறும்.

72. காந்தம் தன் எதிர்ப்பட்ட இரும்பை இழுத்தல்போல ஈசன் தன்னை நோக்கிய ஆன்மாவைத் தன் வசம் இழுப்பான்.

73. சூரிய சந்நிதானத்தில் பலதொழில்கள் நடந்தாலும் அவன் விகாரப்படாமல் இருத்தல்போல ஈசுவர சந்நிதானத்தில் ஐந்தொழில் நடந்தாலும் அவன் விகாரப்படான். ஆதலால் அவன் நிர்விகாரி என்றழைக்கப்பெறுவான்.

74. குயவன் குடம் பானை கலச முதலியவைகளைச் சமைத்தல் போல், ஈசுவரனும் பலவகைத் தேகங்களைச் சமைப்பான்.

75. குயவன் மனிதர்கள் விரும்பிய பாத்திரங்களைச் செய்துகொடுத்தல்போல ஈசன் ஆன்மாக்களின் கருமத்துக்குத் தக்கபடி விரும்பிய தேகத்தைக் கொடுப்பான்.

76. குயவன் மண்ணை முதற்காரணமாக வைத்துப் பாத்திரங்கள் அமைப்பது போல் ஈசன் மாயையை முதற்காரணமாகவைத்து உலகத்தை உண்டாக்குவான்.

77. அகரம் தனித்தும் மற்றைய எழுத்துக்களுடன் கலந்தும் நிற்றல் போல ஈசன் உலகத்தின் உள்ளும் புறமும் வியாபித்திருப்பான்.

78. அகரம் எழுத்துக்களுக் கெல்லாம் முதலாய் நிற்பது போல் ஈசுவரன் எவற்றிற்கும் முதல்வனாய் நிற்பான்.

79. குயவன் தண்டசக்கரங்களைத் துணையாகக் கொண்டு பாத்திரங்கள் செய்வது போல் ஈசுவரன் தனது சத்தியைத் துணையாகக் கொண்டு பிரபஞ்சத்தை உண்டாக்குகிறான்.

80. குயவன் பாத்திரங்களுக்கு நிமித்த காரணனாயிருத்தல் போல ஈசன் இவ்வுலகிற்கு நிமித்த காரணனாயிருக்கிறான்.

81. கடவுள் அநாதிநித்தியர். அவருக்கு ஒப்பாரு மிக்காருமில்லை.

82. கடற்பரப்பைப் போல சிவம். கடல் ஜலத்தைப்போல ஆன்மா. ஜலத்தின் உப்பைப்போல ஆணவம்.

83. கடவுள் ஆனந்த சொரூபி. யாதலால் அவருக்கு வேறு ஆனந்தம் வேண்டுவதில்லை. அவரை அடைந்த ஆன்மா சிவானந்தத்தை அநுபவிக்கும்.

84. ஒரு அரசன் மந்திரி பிரதானிகளைவைத்து ராஜ்ஜியபரிபாலனம் பண்ணுவது போல் ஈசன் பிர்மா விஷ்ணு உருத்திரன் முதலியோர்களை வைத்து இவ்வுலகத்தை நடத்துகிறான்.

85. ஆன்மா ஒருதேராகில் ஈசன் அவ்வான்மை நடத்துந் தேர்ப்பாகனாவன்.

86. ஈசுவரன் சமுசாரசாகரத்தில் வரம்பின்றி ஓடுங்கப்பலாகிய ஆன்மாவைச் சரியானமார்க்கமாய் நடத்தும் *மாலுமியாகிறான்.

87. ஒருமரம் தன்னையடைந்தோர்க்கு நிழல்கொடுத்து உதவுதல் போல் ஈசுவரன் தன்னைச்சார்ந்தவர்களுக்கு திருவடி நிழலைக் கொடுத்துக்காப்பாற்றுவான்.

88. மேகம் கைம்மாறுகருதாது மழைபொழிவதுபோல் ஈசனும் பிரதியுபகார விருப்பமின்றிக் கருணைமழை பொழிகிறான்.

89. ஈசுவரன் தனது அட்டமூர்த்தங்களினின்று வெளிப்படுவான் அட்டமூர்த்தங்களாவன-பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சந்திரன், சூரியன், ஆன்மா, என்பனவாம்.

---

* மாலுமி-கப்பலோட்டுகிறவன்.

90. ஒருஅரசன் தனது ஆணைவழிநில்லாரைத் தண்டித்தல்போல், ஈசுவரன் தனதுஆணைவழி நில்லாரைத் தண்டிக்கிறுன்.

91. ஒருதாய் தன்பிள்ளையை அடித்துப்பாலூட்டுவதுபோல் ஈசுவரன் ஆன்மாக்களின் வினைக்குத்தக்கவாறு கன்மத்தை அநுபவிக்கச்செய்து தன்பேரின்பத்தை ஊட்டுகிறுன்.

92. ஒருவைத்தியன் கருவிகொண்டு நோயாளியின்தேகத்திலுள்ள கட்டியை அறுத்து அவனுக்கு இதம்உண்டாக்குவதுபோல் ஈசன் தனது பெருங்கருணையால் ஆன்மாக்களைத்தண்டித்து இதம் உண்டாக்குகிறுன்.

93. அரசன் ஆணைவழிநிற்பாரை அவன்நேசித்து அவர்களுக்கு இதஞ்செய்வதுபோல் இறைவன் தன்வழி நிற்பார்க்கு இதஞ்செய்வான்.

94. ஒருவண்ணான் புடவையின் அழுக்கை உவர்கொடுத்து எடுப்பதுபோல், ஈசன் ஆன்மாவின் அஞ்ஞானத்தை மாயாதேகத்தைக்கொடுத்து நீக்குகிறுன்.

95. ஒருவண்ணான் பலபல வீட்டாரின் புடைவைகளை வெளுத்தபின் பகுத்தறிந்து எடுத்துக்கொடுப்பதுபோல், ஈசனும் அவரவர் கன்மத்தைஅறிந்து எடுத்துக்கொடுப்பான்.

96. உடலை நடத்தற்கு உயிர் நாயகனுயிருத்தல்போல் ஆன்மாவை நடத்தற்கு ஈசன் நாயகனுயிருக்கிறுன்.

97. மேகபடலத்தைக்கிழித்து மின்னல் வெளிப்படுமாறுபோல அஞ்ஞானபடலத்தைக் கிழித்து ஒளி ரூபியாய் ஈசன் வெளிப்படுவான்.

98. சூத்திரதாரிகள் சூத்திரப்பாவையை ஆட்டுவது போல ஈசன் நம் வினைக்குத் தக்கவாறு நம்மை ஆட்டுவிக்கிறுன்.

99. ஈசன் அஞ்ஞானிகளுக்கு பாலில் நெய் போல் மறைந்து நின்றும் மெய்ஞ்ஞானிகளுக்குத் தயிரில் வெண்ணெய் போல வெளிவந்து நிற்பான்.

100. அழுதபிள்ளைக்குத் தாய் பாலூட்டுவதுபோல ஈசனைப்போற்றித் துதித்து நின்றவர்களுக்கு அவன் இன்பம் ஊட்டுவான்.

101. சூரியன் புறவிருளை நீக்குவதுபோல ஈசுரன் அஞ்ஞானமாகிய அகவிருளை நீக்குவான்.

102. ஒருவன் வயிற்றினுள் வசிக்கும் புழுக்கள் அவன் அடையும் இன்ப துன்பங்களை அநுபவியா. அதுபோல ஆன்மாவின்உள் நிற்கும் இறைவனும் ஆன்மா அடையும் இன்ப துன்பத்தை அநுபவியான்,

103. கோள்களுள் காணப்படாத இராகு கேதுக்கள் கிரகணகாலத்தில் சூரிய சந்திரர்களிற் றோற்றுமாறுபோல் மறைந்துநின்ற இறைவனும் ஆன்மா பக்குவப்பட்டகாலத்தில் தோன்றி நிற்பான்.

104. எத்தொழிலையும் நடத்துதற்குரியகாலம் விகாரப்படாது இருத்தல் போல ஈசுரன் பலதொழில்கள் நடத்தினாலும் விகாரப்படாநுபிருக்கிறான்.

105. முத்தொழில்களில் சங்காரத்தொழில் மேலானதொழில் ஆதலினால் அதனைச்செய்யுமுருத்திரன் மேலான கடவுளாவான்.

106. சூரியனின்றிக் கண்ணுக்குக் காட்சி நிகழாதது போல் இறைவனையின்றி ஆன்மாவிற்கு அறிவு தோன்றுமாறு இல்லை.

107. திதிகர்த்தா *மூலப்பகுதி வடிவாயிருக்கிறார் ஆதலால் அவருக்கு அதன்மேலுள்ள தத்துவங்களின் வியாபகமில்லை. சங்காரகர்த்தாவுக்குமூலப்பகுதிக்கு மேலும் வியாபகமுண்டு. அவரிடத்திலேயே திதி கர்த்தாலயமாகிறார். ஆதலால் அச்சங்காரகர்த்தா உலகிற்கு முதற்கடவுள்.

103. கடவுள் கண்ணடியைப்போல் என்றும் நின்மலராயிருக்கிறார்

10). கற்றநூற்பொருள் உள்ளத்தில் தோன்றும்போது உள்ளம் அதிற்றொடக்குறா வாறுபோல், ஈசன் உலகைச்சங்கற்பத்தாற் படைத்தாலும் அவன் தொடக்குற்று நில்லான்.

110. கனவிற்கண்டவற்றை நனவிலுணர்ந்தவன், அவைகளிற்றொடக்குறாது இருத்தல்போல், சங்கற்பத்தால் உலகைப்படைக்குங்கடவுளும் தொடக்குற்றுநில்லார்.

111. ஆன்மாக்களுக்கு யாதொரு சுதந்திரமுமில்லை, ஈசுவரனேஎல்லாச்சுதந்திரமு முடையவன்.

112. தேர் முதலாயின பலராற் செய்யப்படினும் அப்பலரும் ஒருவன் ஏவல்வழி நின்றேசெய்வர். அதுபோல உலகம் பிரமாவால்

---

* மூலப்பகுதி—பிரகிருதி.

சிருஷ்டிக்கப்பட்டும், விஷ்ணுவால் திதிக்கப்பட்டும் இருந்தாலும் அவர்கள் ஒரு முழுமுதற்கடவுள் ஏவல்வழி நிற்பாராவர். ஆதலால் உலகிற்கு அநேக ஈசுரர் இல்லை.

113. பிரபஞ்சம் விசித்திரகாரியமாய்க் காணப்படுதலின் அதனை நடத்தும், முதற்கடவுள் முற்றறிவு முதலிய குணங்களை இயற்கையிலேயே உடையவராவர்.

114. உடலில் உயிர்கலந்திருத்தல்போல் உயிரில் இறைவன் கலந்திருக்கிறான்.

115. கண்ணொளிவேறுங் கதிர்ஒளிவேறுமாயிருந்து கலத்தல்போல் ஆன்மாவோடு இறைவன் கலந்துநிற்பன்.

116. கண்ணொளியில் ஆன்மபோதம்போல், இறைவன் ஆன்மாவோடு கூடிநிற்பன்.

117. தேகம் ஜடம், ஆன்மா அற்ப அறிவுடையவன், ஆதலால் ஈசனே இவ்விரண்டையும் கூட்டிவைப்பான்.

118. சூரியன் பிரகாசித்து நின்றாலும் குருடனுக்குப்பயனில்லை. அதுபோல் ஈசன் எங்குந்நிறைந்து நின்றாலும் அஞ்ஞானிகளுக்குப்பயனில்லை.

19. பால் பசுவின் உடம்பெல்லாம் வியாபித்திருத்தல்போல் ஈசன் எங்கும் வியாபித்திருக்கிறான்.

120. பூதக்கண்ணாடியில் நமது முகம் விளங்குவதுபோல் ஞானக்கண்ணாடியில் ஈசன் விளங்குவான்.

121. ஆன்மாக்களை முத்தியிற்சேர்க்கவேண்டுமென்பதே, ஈசனது இச்சையாம். அவர்களோடிணங்கிநின்று ஆன்மநிலையையும், தன் நிலையையும் உணர்த்துதலே ஞானமாம். பஞ்சகிருத்தியம் நடத்துதலே கிரியையாம். இப்பஞ்சகிருத்தியம் அநாதி நித்தியமாயுள்ளது.

122. எங்கும் ஈசனது கண் இருத்தலால் அவனை அறியாமல் யாம் செய்யத்தக்கது ஒன்றுமில்லை.

123. தாயினும் இனியனாகிய சங்கரனைப் போற்றித்துதித்தால் நமக்கு அவன் அருட்பாலூட்டுவான்.

124. அவனுக்குஅன்பர்உள்ளமே கோயில். அவர்ஆன்மாவே இலிங்கம்.

125. ஒருவீட்டினுள் கள்ளர் பதுங்கியிருப்பதுபோல ஆன்மாவினுள் ஈசன் மறைந்திருக்கிறுன்.

126. இறைவனுடைய ஞானத்தினுலேயே இறைவனை யறியவேண்டுமேதவிர மற்ற பசு பாச ஞானத்தால் அறிய முடியாது.

127. நீர் நிழலானது நீரோடு விரவிநின்று புலப்படாததுபோல ஆன்ம அறிவோடு விரவிநிற்கும் சிவசைதன்னியம் அஞ்ஞானிகளுக்குப் புலப்படாமலிருக்கிறது.

128. நாம் சிவபிரானை வணங்கினுல் அவன் வானவர் நம்மைவந்து வணங்கவைப்பான்.

129. மரத்தை அசைவித்தால் அதின் நிழலெல்லாம் அசையும் அதுபோல ஈசன் ஆட்டுவித்தால் இவ்வுலகெல்லாம் அவன் வழியாடாநிற்கும்.

130. மரத்தின் பொந்துகளில் தேன்கூடு இருப்பதுபோல நமது இருதயக்குகையில் ஈசனென்னும் ஆநந்தத்தேன் இருக்கிறது.

131. சிறுநெருப்புப்பொறியும் பெரியஊரை அழிக்கும் அதுபோலக் கடவுளுடைய கடைக்கண் பார்வை மலைபோலநின்ற கன்மத்தை அழிக்கும்.

132. ஒருவட்டத்திற்கு அந்த மாதி காணமுடியாது. அதுபோல ஈசனுக்கு ஆதியந்தமில்லை.

133. ஈசனருள் இருந்தால் விரும்பியவெல்லாங் கைகூடும்.

134. சிவபெருமான் திருமேனி செங்கனலையும் செவ்வானத்தையும் ஒத்துத்திகழும்.

135. ஈசனறிவு சூரியப்பிரகாசம்போலவும், ஆன்மாவின் அறிவு, மின்மினியைப்போலவும், இருக்கின்றன.

136. பஞ்சேந்திரியங்களுக்குள் கண்சிறந்திருப்பதுபோலப்பஞ்சகர்த்தாக்களுக்குள் சதாசிவம் முதல்வராயிருக்கிறுர்.

137. எருது நினைத்தபடி எருதாளன் பொதியேற்றமாட்டான். அதுபோல ஆன்மாநினைத்தபடி, ஈசன் வினைகூட்டமாட்டான்.

138. நீரோட்டமானது இடையீடு இல்லாமற் செல்வதுபோல ஈசனுடைய கருணைவெள்ளமும் இடைவிடாமற் பாய்ந்தோடுகின்றது.

139. கல்லினுட்டேரை மறைந்திருப்பதுபோல, ஈசன் ஆன்மாவினுள் மறைந்திருக்கிறன்.

140. அக்கினிமயமாகிய ஈசன் எங்கும் வியாபித்திருத்தலால் இவ்வுலகம் அக்கினிமயமென்று புராணங்கள் கூறுகின்றன.

141. சிறியாசங்கை வேரைக்கண்டாற் பெரிய சர்ப்பமும் தலைமடங்கும். அதுபோல ஈசனது திருவருள் கிட்டினுற் பெரிய வினைமலையும் அழியும்.

142. அசேதனப்பொருள்களாகிய சிந்தாமணி, கற்பகம் வேண்டினோர் வேண்டியாங்கு அளிக்குமாகில் சர்வஞானமுள்ள ஈசன் அன்பர்கள் வேண்டியாங்கு உபகரிப்பானென்பதற்கு யாதொரு தடையுமில்லையாம்.

143. இறைவன் பெண்ணுமல்லன், ஆணுமல்லன், அலியுமல்லன் ஆனுல் இவைகளினுள் வியாபித்து அப்பாலு நிற்பன்.

144. இறைவனுக்குச் சொரூப இலக்கணம் தடத்த இலக்கணம் என்று இரண்டு லக்ஷணங்கள் உள்ளன. சொரூபலக்ஷணம் உண்மைநிலை. தடத்தலக்ஷணம் உருவெடுத்து ஆன்மாவிற்கு உபகரிக்கும் நிலை.

145, அவன் காலம்போல அரூபியாய் நின்று சடசித்துக்களை இயக்குவான்.

146. சூரியனைப்போலும் சிவம்; அவன் கிரணத்தைப்போலும் சத்தி; அதில் கலக்கும் கண்ணெளிபோலும் ஆன்மா.

147. ஆகாயத்தைப்பிரியாது நின்ற காற்றுக்குரிய, கந்தம், வெம்மை, தட்பம், முதலியன அவ்வாகாயத்திற்கு இன்முதலின், இறைவனது வியாபகத்திற் சஞ்சரிக்கும், ஆன்மாவுக்குரிய ஆணவம் அவ்விறைவனுக்கு இல்லையாகும்.

148. இறைவன் உயிர்களுக்குத் தன்மை, முன்னிலை, படர்க்கையாய்நின்று உணர்த்துவன். தன்மை, ஆணவத்தைநீக்கித் தன்னை உள்ளபடி தோற்றுவித்தல். முன்னிலை, நன்மை தீமைகளைக் குருவாய்த்தோன்றித் துரத்துதல். படர்க்கை, நூலினுல் காணவைத்திடுதல்.

149. சிவன்அநாதிமுத்தன். முத்தியடைந்தஆன்மா, ஆதி, முத்தன்

150. ஈசுவரனுடையசத்தி, பராசத்தி, திரோதானசத்தி, கிரியாசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி எனஐந்து வகைப்படும். பராசத்தியின் சொரூபம் ஞானம். அது சூரியனும் கிரணமும் போலச் சிவத்தோடு பின்னமின்றி யொன்றாயிருக்கும்.

151. ஒரு அரசனுடைய வல்லமையானது அரூபமாய்நின்று காரியங்களை நடத்தல்போல் ஈசுவரனுடைய சத்தியும் அரூபமாய் நின்று பிரபஞ்சத்தைநடத்தும்.

152. ஒலிக்கு உருவமுண்டாம், ஒலிக்குள் ஒளிஉண்டாம்; அவ்வொளியே சத்தியாம்; அவ்வொளிக்குள் உள்ளொளி ஈசனும்.

153. ஈசனருட்சத்தியால் ஒரு சிறு துரும்பும் அகிலாண்டத்தொகுதியைப் படைத்துக் காத்தழிக்கும். ஆதலால் அவன்சத்திக்கு எதிர்நிற்பது ஒன்றுமில்லை.

154. பூவின்மணம்போலும் தண்ணீரில் குளிர்ச்சிபோலும் ஈசனுடன் சத்தி அபின்னமாய் நிற்பள்.

155. பாம்பின் கண் பார்க்குங்கால் கண்ணென்றும் கேட்குங்காற் செவியென்றும் சொல்லப்படுவதுபோல, இறைவனுடையசத்தி பெத்தகாலத்தில் திரோதானசத்தியென்றும், முத்திகாலத்தில் அருட்சத்தியென்றும் அழைக்கப்பெறும்.

156. உயிர்களுக்குப் பேறளித்தற்க க நிற்பது பராசத்தி. மலத்தைச் செலுத்திப் பக்குவப்படுத்துவது ஆதிசத்தி. உயிர்க்கிரங்கிநிற்பது இச்சாசத்தி. எவற்றையும் நோக்கி அறிவது ஞானசத்தி. நினைத்தபடிசெய்வது கிரியாசத்தி.

157. ஈசனது ஞானசத்தியின்வழி இச்சாசத்தி கிரியாசத்திகள்செல்லுவனவாம்.

158. ஞானசத்தி தனியே வியாபரிக்குங்கால் சிவமென்றும், கிரியாசத்தி தனியே வியாபரிக்குங்கால் சத்தியென்றும், இவை இரண்டும் ஒத்து வியாபரிக்குங்கால் சதாசிவமென்றும், ஞானசத்தி குறைந்தும் கிரியாசத்தி மிகுந்தும் வியாபரிக்குங்கால் மகேச்சுரமென்றும், கிரியாசத்தி குறைந்தும் ஞானசத்தி மிகுந்தும் வியாபரிக்குங்கால் சுத்தவித்தை என்றும் ஐந்துவகைப்படும். இவ்வைந்திற்கும் சிவதத்துவமென்று பெயர்.

159. சத்தியின்பேதத்தால் சிவனும் சத்தர், உத்தியுத்தர், பிரவிருத்தர் என்று மூன்று பேதப்படுவர். இவர்களுள் சத்தர்-நிட்களர். இவருக்கு இலயர் என்றும் சாந்தரென்றும் பெயர். உத்தியுத்தர்—சகளாகளர். இவருக்குச் சதாசிவரென்றும் போகரென்றும் பெயர். பிரவிருத்தர்-சகளர். இவருக்கு ஈசரென்றும் அதிகாரரென்றும்பெயர்.

160. காரியபேதத்தினாலே சத்திபேதமும், சத்திபேதத்தினாலே சிவபேதமுமுண்டாம்.

குறிப்பு சத்திக்கும் பதிக்கும் சமவாய சம்பந்தம், ஆன்மாவிற்கும் பதிக்கும் தாதான்மியசம்பந்தம், பசுவிற்கும் ஆணவத்திற்கும் அநாதிசையோகம், உலகிற்கும் உயிருக்கும் சையுத்தசம்பந்தம்.

161. சிற்சத்தியே பதிக்குத் தேகம், கரணம், இடம், என அறிக.

162. இச்சாசத்தியாண்டும் ஒரு தன்மையாய் வியாபரித்து நிற்கும்.

163. சத்தர்சூக்கும ஐந்தொழில் செய்வர். அநுக்கிரகம்-என்றுமுள்ள கிருத்தியமாதலால் பஞ்சகிருத்தியம் அநாதி நித்தியம்.

பதியியல் முற்றிற்று.

ஐந்தாவது பசுவியல்.

---

164. பசுக்கள் அநாதி நித்தியமாய் உள்ளவர்கள், இவர்கள் சிற்றறிவுடையவர்களாதலினால் சுதந்திர ஈனர்களாயிருக்கிறார்கள். இச்சுதந்திரவீனம் ஆணவமலத்தால் உண்டாயிற்று.

165. ஆன்மாக்கள் எண்ணில்லவாய் விபுவாய் உள்ளவர்கள். விபு—வியாபகம்.

166. கண்ணாடி சார்ந்ததின் வண்ணமாய் நிற்பதுபோல் ஆன்மாவும் சார்ந்ததின் வண்ணமாய் நிற்கும்.

167. விளக்கொளியுள் கண்ணொளிவியாப்பியமாய் நிற்பது போல முதல்வனின் ஆன்மா வியாப்பியமாய் நிற்கும்.

168. ஆன்மா செம்பிற் களிம்புபோல அநாதியே ஆணவபந்தத்தையுடையது.

169. ஆன்மா பெத்தத்தில் அவிச்சையாற் கட்டுண்டு சுட்டுணர்வுடையதாய் நிற்கும். வீடுபெற்றவழி இறைவனுடைய வியாபகத்துள் சுட்டுணர்வின்றி நிற்கும்.

170. ஆன்மா சமவியாபகமுடையனானாலும் முதல்வனை நோக்க வியாப்பியமாவான்.

171. ஆன்மா இருவினையினால் இறத்தல் பிறத்தல்களைப் பொருந்தும்.

172. ஆன்மாவும் ஈசனும் பொருளினாற் பேதமும் கலப்பினால் அபேதமுமுள்ளவர்கள்.

173. ஆன்மா ஈசனிடத்திலிருந்து வந்திருந்தால் அதுவும் ஈசுரத்தன்மையுடையதாயிருக்கும். அவ்வாறு இல்லாததினால் அது அவனிடத்திலிருந்து வந்ததாயில்லை.

174. ஆன்மாவுக்குத் தேகம் கொடுப்பது தண்டனையாகாது. அப்படிக்கொடுப்பதானது இருட்டிலிருந்தவனுக்கு ஒரு விளக்குக் கொடுத்தற்குச் சமானமாயிருக்கும்.

175. கண் இருளில் விழித்தால் இருண்மயமாய் நிற்கும். ஒளியில் விழித்தால் ஒளிமயமாய் நிற்கும்; அதுபோல ஆன்மா பிரபஞ்சத்தோடு சேர்ந்தால் அஞ்ஞானமயமாய் நிற்கும். இறைவனோடு சேர்ந்தால் மெய்ஞ்ஞானமயமாய் நிற்கும்.

176. ஒரு மாந்திரிகன் கருடபாவனைசெய்து விஷம் நீக்குவான். அதுபோல ஆன்மாவின் ஆணவம் சிவபாவனையால் நீங்கும்.

177. ஒருவன் ஒருபடித்துறையில் இறங்கி ஏறுதல்போல் ஆன்மாவும், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம், என்ற படித்துறையில் இறங்கி மீண்டும் ஏறுவான்.

178. நல்லதைப்போகவிட்டுத் தள்ளுண்டதை வைத்துக்கொள்ளும் பன்னாடைபோல் ஆன்மா நன்மையைக் கடைப்பிடியாது தீமையை க்கைக்கொள்வான்.

179. இறைவனுக்கு இச்சை, ஞானம், கிரியை என்னும் முச்சத்திகள் உள்ளனபோல் ஆன்மாவிற்கும் முச்சத்திகள் உள்ளன; இறைவனது சத்திகள் நடத்தினால் ஆன்மாவின் சத்திகள் தொழிற்படும்.

180. தீயிரும்பு தன்குணம் குன்றி அக்கினி மயமாவதுபோல் ஆன்மா சுதந்திரமிழந்து இறைவழி நிற்பான்.

181. பாற்கடலில் உள்ள மச்சங்கள் அப்பாலே விரும்பிப் புசியாது பிறகடலிற் சென்று அங்குள்ள அழுக்குகளை யருந்துதல் போல அருட்கடலில் மிதக்கும் ஆன்மா அவ்வருளை விரும்பாது பிரபஞ்சக்கடலினுள்ள துன்பத்தை யருந்துவான்.

182. வேம்புதின்ற புழுவைக் கரும்புதின்னவைத்தால் அதுமீண்டும் வேம்பையே விரும்பிச்செல்லும். அதுபோல பிரபஞ்சத்தில் புத்தியைச் செலுத்திய ஆன்மாவை ஈசனிடத்திற்செலுத்தும்படி வைத்தால் அவன் பழக்கவாசனையினால் பிரபஞ்சத்தையே மீண்டும் மீண்டும் விரும்பிச்செல்வான்.

183. இறைவன் ஒரு இராசனாகவும் ஆன்மா இறைவனின் பேரானந்தமாகிய சொத்தை அனுபவிக்கும் இராசகுமாரனாகவுமிருக்கிறான்.

184. சத்துப்பொருளும் அசத்துப்பொருளும் இருப்பதால் சதசத்து என்று ஒருபொருளிருத்தல்வேண்டும். அதுவே யான்மா.

185. ஆகாயம் இருளைச்சேர்ந்தால் இருளாயும் ஒளியைச்சேர்ந்தால் ஒளியாயும் இருக்கும். ஆன்மாவும் அங்ஙனமாம்.

186. நிறைந்த ஜலப்பரப்பினுள் மீன் சஞ்சரிப்பதுபோல ஆன்மா ஈசனது நிறைவிற் சஞ்சரிக்கிறான்.

187. கடற்கரை மணலை எண்ணமுடியாததுபோல் ஆன்மாக்களையும் எண்ணமுடியாது.

188. நேரேநிற்கும் இருதலைக்கொள்ளிக்கம்பில் உளரிச்செல்லும் எறும்புபோல் நல்வினை தீவினைகளினுட்பட்ட ஆன்மா அங்கு மிங்கும் உழன்று திரியும்.

189. உலவாக்கிழிபோல் ஆன்மாக்கள் தொகையில் குறைவுபட்டுத் தோன்றுவாம்.

190. துரோபதையின் வஸ்திரத்தைப்போல ஆன்மாக்களின் தொகை முடிவுகாண்பதரிதாம்.

191. அட்டையானது ஒன்றுபற்றி முன்பற்றியதைவிடுமாறுபோல் ஆன்மாவும் ஒரு தேகத்தைப் பற்றியபின் தான் முன் பற்றி நின்ற தேகத்தை விடும்.

192. காகத்திற்கு இரு கண்களிருந்தும் ஒரு கண்ணால் பார்த்தல் போல ஆன்மாவிற்கு தற்போதம் சிவபோதம் என்னும் இரு வகைப்போதங்களிருந்தும் தற்போதத்தின் வழியே செல்லுகின்றது.

193. தவளைபோன்றவைகள் நீரிலும் தரையிலும் வசிப்பனவாம். அதுபோல் ஆன்மா பிரபஞ்சத்தினிடத்தும் ஈசனிடத்தும் வசிக்கும் ஆற்றலுள்ளது.

194. ஒரு அரசன் அத்தாணிமண்டபத்தில் வீற்றிருந்து தன் கீழ்ப்பட்ட மந்திரி பிரதானிகளைக் காரியங்களிற் செலுத்தி ஆளுமாறுபோல் ஆன்மாவும் புருவமத்தியமண்டபத்தில் வீற்றிருந்துகொண்டு ஐம்பொறி முதலியவற்றை விஷயங்களிற் செலுத்துகிறான். இது சாக்கிராவத்தை.

195. படையுடன் பவனிபோந்த அரசன் மீண்டும் அந்தப்புரத்திற்குச்செல்லும்போது அவரவர்கள் நிற்கவேண்டிய ஸ்தானத்தில் அவரவர்களை விட்டுவிட்டுப்போமாறுபோல் ஆன்மா ஏகனாய் நிற்றற்குரிய துரியாதீதமாகிய அந்தப்புரத்திற்குச் செல்லும்போது சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம் என்னும் வாயில்களிற் கருவிகளை விட்டுவிட்டுச்செல்லுவான்.

196. கண் விளக்கின் வேறாயினாற்போல் உயிர் உடம்பின் வேறாம்

197. எனதுடலினென்றலின் ஆன்மாதேகத்தினும் வேறாய் நிற்பதென்று தெற்றென விளங்கும்.

198. ஆன்ம அறிவு நிலையுடையதன்று. ஏனென்றால் முக்குணத்தினால் மாறுதலுடைத்தாதலினாலெனக.

199. ஆன்ம அறிவை நம்பி இப்பிறவிசாகரத்தைக்கடக்க முயல்வது மண்குதிரையைநம்பி ஒரு ஆற்றைக்கடக்க முயல்வது போலாம்.

200. ஞானக்கிரியா ரூபமான அறிவு ஆன்மாவில் எப்பொழுதும் இருக்கிறது. அதனை இறைவன் தொழிற்படுத்துவான்.

201. பசுக்களைக்கயிற்றினால் கட்டுவதுபோல இறைவனும் ஆன்மாக்களை ஆணவம், கன்மம், மாயை, என்னும் முப்புரிக்கயிற்றினால் கட்டுவான்.

202. ஆன்மா வியாபகன் சன்மாந்தர சம்பந்தத்தால் அவனே இன்ப துன்பங்களை யனுபவிப்பான். மனம், புத்தி, சடமாதலால் அவை அனுபவியா.

203. இறைவனது ஞானத்தை நோக்க ஆன்மாவின் ஞானம் சடம். ஆன்மா அறிவித்தால் அறியுஞ் சக்தியுடையவன்.

204. ஒரு உலண்டுப்பூச்சி தன்னூலால் தனக்கு வலைக்கூடுகட்டித் தன்னை அந்தக்கூட்டினுள் தானே அகப்படுத்திக்கொள்வது போல ஆன்மா தன் வினையால் தனக்கு ஒரு சிறைச்சாலையாகிய தேகத்தை யுண்டாக்கி அதனுள் தன்னை அகப்படுத்திக்கொள்கிறான்.

205. நீ நான் என்று சொல்லுதலாலும் சுக துக்க பேதத்தாலும் அறிவு பேதத்தாலும் ஆன்மாக்கள் வெவ்வேறாம்.

206. மண்ணுதியுண்டாக்கியது ஈசனுடைய இச்சையை நிறைவேற்றுதற்காகவன்று. என்னென்றால் அவன் சச்சிதானந்த சொரூபியாயிருத்தலினால் என்க. மண்ணிற்காமெனில் அது சடமாதலால் அதற்காகவுமன்று. ஆதலால் பாரிசேட அளவை கொண்டு சிற்றுயிர்க்கென்றே கொள்ளல்வேண்டும். பாரிசேடம்—கூட்டிக்கழித்தல்.

207. முக்குணங்களை இரதமாக்கி நாற்கரணங்களை இரதத்தின் வண்டிகளாக்கி இந்திரியங்களைக் குதிரைகளாக்கிப் புருடதத்துவத்தைச் சாரதியாக்கி மோகாதி குணங்களைத் தேர்முகமாக்கி ஆன்மா உணர்வாகிய அரசன் தனது ராச்சியமாகிய பஞ்சபூதங்களிற் சென்று பவனி வருவான்.

208. ஆன்மா சூக்கும ரூபமாய் தந்தையின்பாற் புகுந்து இருதிங்கள் தங்கியபின் தன் தாயுதரஞ் சேரும்.

209. ஆன்மாவிற்குக் கேவலம் சகலம் சுத்தமென்று மூன்று நிலையுண்டு. அறிவு இச்சை செயல்களின்றி இருட்டில் கண்விழித்திருப்பது போல் ஆணவத்தினேடு நிற்பது கேவலம். அது கருவிகரணுதிகளோடு கூடிப்பிறந்திறந்து உழலுங்காலம் சகலம். இருவினை யொப்பு மலபரிபாகம்சத்தினிபாதம் குருவருளுற்றுப் பேரின்பமடைதல் சுத்தம்.

210. சகலர் விஞ்ஞானகலராகலாம். விஞ்ஞானகலர், சகலராகலாம்.

211. விஞ்ஞானகலர் நான்கு வகைப்படும். அவையாவன பக்குவர், அபக்குவர், பரமுத்தர், அபரமுத்தர் என்பனவாம்.

212. அகம் பிரம்மஞானத்தினுலும்யோகத்துறைவதினுலும்கலாதி பந்தம் அறுதலினுலும் வேதாந்த விசிஷ்டஞானத்தாலும் விஞ்ஞானகலத்துவம் வரும். இவர்களுக்குத்தனுகரண புவன போகங்கள் சுத்தமாயையிலுண்டாம்.

213. பிரளயாகலர் மூவகைப்படுவர். அபக்குவர், அபரமுத்தர், பரமுத்தர் என்பனவாம். இவர்கள் சாங்கிய ஞானத்தாலும் பிரளயகாலத்துக் கலையகன்றிருப்பதாலும் பிரளயா கலத்துவம் வரும்.

214. சகலர் மூன்றுவகைப்படுவர். பக்குவர், மந்தபக்குவர், அபக்குவர் என்பனவாம். சகலர் கலையோடு கூடியவர்கள்.

215. விஷ்ணு பிரமா முதலியோருஞ் சகலராவர். இவர்கள் அணுபட்சத்தார். அணு—ஆன்மா.

216. சம்பு பக்ஷ விஷ்ணு பிரமா முதலியோரும் வேறுளர். சம்பு-சிவம்.

பசுவியல் முற்றிற்று.

ஆறுவது பாசவியல்.

---

217. ஆன்ம வியாபகத்தை அணுத்தன்மை செய்து நிற்பது எதுவோ அது ஆணவம், இது ஜடம்.

218. ஆணவமலம் இருளைப்போல ஏகந்தான், ஆன்மாக்கடோறும் வெவ்வேறு சத்திகளையுடையதாய் நிற்கும்.

219. ஆணவம் அநாதி நித்தியமாயுள்ளது, செம்பிற் களிம்புபோலும் அரிசியில் தவிடுபோலுமாம்.

220. ஆணவத்தின் குணங்கள் எட்டு, அவையாவன. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், அராகம், அறியாமை என்பனவாம். இவைகளினின்று யான் எனது என்ற செருக்குண்டாகிக் கன்மம் தோன்றும். ஆகையால் ஆணவம் கன்மத்திற்கு மூலமாம்.

221. ஆணவத்தால் அஞ்ஞானம் உண்டானது. அவ்வஞ்ஞானத்தை நீக்கத்தான் பிறவி உண்டானது.

222. பசி சோற்றிலே விருப்பத்தை உண்டாக்குவதுபோல் ஆணவம் பிறவியிலே ஆசையை உண்டாக்கும். உடனே உடல் முதலியவற்றை ஈசன் கொடுப்பான்.

223. விஷம் ஜடமானாலும் உடல் உயிரைப்பிரித்தலாகிய செய்கை அதற்கு இருத்தல்போல, ஆணவம் ஜடமானாலும் அதற்குச் செயலுண்டு.

224. வண்ணான் அழுக்கைக்கொண்டு அழுக்கை எடுக்குமாறுபோல் இறைவன் மாயாதேகத்தைக்கொண்டு ஆணவசத்தியை நீக்குவான்.

225. ஒரு வியாதியைப் பண்டிதன் தீர்ப்பதுபோல ஆணவத்தினால் வரும் ஆசையை ஈசன் தீர்ப்பான்.

26. ஆன்மா அழிந்தால் ஆணவமும் அழியும். ஆன்மா நித்தியமாதலால் ஆணவமலமு நித்தியம்.

227. ஒரு மருந்தினால் விஷசத்தி யடங்குவதுபோல மெய்ஞ்ஞானத்தால் ஆணவசத்தி யடங்கும்.

228. ஒளி உள்ள இடத்தில் இருள் நீங்கினால் அது எங்கும் நீங்கினதாகமாட்டாது, அதுபோல மெய்ஞ்ஞானிகளிடத்தில் ஆணவம் நீங்கினதால் அது மற்றவர்களிடத்தும் நீங்கினதாகமாட்டாது.

229. ஒளியற்றம்பார்க்கும் இருளைப்போல் அறிவற்றம்பார்க்கும் மலம்.

230. மலமாகிய அழுக்கை ஞானநீரால் கழுவல் வேண்டும்.

231. மேகபடலம் உலகிற்குச் சூரியனை மறைப்பதுபோல் ஆணவ படலம் சிவனை ஆன்மாவிற்கு மறைக்கின்றது.

232. ஆணவமலம் ஒருவஸ்து, அது கண்ணிற்குப் படலாதிரோகம் போல் நின்று மறைக்கும், அது திரவியமாதலால் பக்குவப் படுந்தன்மை அதற்குண்டு, அக்காலத்தில் தன் சத்தி குன்றி நிற்கும் ஆனல் முதல் என்றுங் கெடாது.

233. இருள் எங்கும் ஒன்றாய் வியாபித்திருப்பதுபோல ஆன்மா வை ஆணவம் ஏகமாய் இருந்து வியாபிக்கும். அதற்கு அநேக வித சத்திகள் உண்டு.

234. மந்திரசத்தி தீயின் வெப்பைத்தடுத்தல்போல் ஆணவம் ஆன் மாவின் இச்சாஞானக்கிரியா சத்திகளைத் தடுக்கும்.

235. ஆணவம் அசுசியாய்த் துக்கமாயிருக்கிற விடயபோகங்களில் ஆசையை மூட்டுவிக்கும்.

236. ஆணவமலம் மூலமலமென்றும் சகசமலமென்றும் சொல்லப் படும். அநாதி கேவல நிலையில் (ஆன்மாக்களுக்கு) ஆணவமே தேகமாய் இருக்கும். அந்நிலையிற் கன்மம் அதிசூக்குமமாய் அடங்கிநிற்கும்.

237. செம்பிற்களிம்பு ரசகுளிகையினல் அடங்கிக் காணுதல்போல் சிவஞானத்தால் ஆணவமலசத்தி குன்றிவிடும். மீண்டும் அவ் வான்மாவை அது பந்திக்காது.

கன்மம்

238. கன்மமெனினும் வினையெனினு மொக்கும் அது யான் என்கி ன்ற செருக்காலுண்டாகும். அச்செருக்கிற்கு ஆணவம் கார ணமாம்.

239. வினை நல்வினையென்றும் தீவினையென்றும் இருவகைப்படும். மனவாக்குக்காயங்களால்தான் நல்வினை தீவினைவரும். மனவா

க்குக்காயங்களால் நல்வினை தீவினைபோகும். இது வௌவால் இறைதின்ற வாய்வழியே புழுக்கைபோடுமாறுபோ லென்க.

240. பொன்விலங்குபோல் நல்வினையாம், இருப்பு விலங்குபோலத் தீவினையாம், நல்வினைக்கும் பிறப்புண்டு தீவினைக்கும் பிறப்புண்டு.

241. நல்வினைக்குத் தீவினையாவது தீவினைக்கு நல்வினையாவது ஈடாய் நில்லாது, அதை-அதை அனுபவித்தேதீரவேண்டும், ஈண்டு நல்வினை பசுபுண்ணியம். நல்வினைக்குச் சொர்க்கமும் தீவினைக்கு நரகமும் பலனாக வரும்.

242. நல்வினையை அனுபவிக்கமாத்திரமே சொர்க்கமும், தீவினையை அனுபவிக்கமாத்திரமே நரகமும் ஏற்பட்டிருத்தல்போல் நல்வினை தீவினைகளைக் கலந்து அனுபவித்தற்கு இவ்வுலகம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால்தான் இதைக்கன்மபூமி யென்பார்.

243, இத்தேகம் இருவினைகளுக்கும் ஈடாகவந்தது. ஏற்பட்டவினைகளை அனுபவித்தவுடனே இத்தேகம் நீங்கும், பலபிறவிகளினின்றும் மானிடதேகத்துக்கு வருதல் ஏழுகடலையும் கையால் நீந்திக் கரையேறுதலை ஒக்கும்.

244. வினைபக்குவப்படுதலுண்டு, அப்படிப்பக்குவப்பட்டவினையை அனுபவித்ததற்காக ஆன்மாக்களை இறைவன் தேகத்தோடு கூட்டுவான்.

245. கீரைவிதையையும் பனங்கொட்டையையும் ஒரேநாளிற் பூமியிற்போட்டால் கீரை முந்தியும் பனை பிந்தியும் பலன் கொடுக்கும். அதாவது வினையின் மென்மை வன்மைக்குத்தக்கபடி முன்பின் பலன் கொடுக்கும்.

246. ஒரு அரசனால் சொல்லிய சட்டப்படிநடப்பது நன்மையைத் தரும், மீறி நடப்பது தீமையைத்தரும். அதுபோல வேதாகமங்கள் சொல்லியபடி நடத்தல் நன்மையாம், அதைக்கடந்து நடத்தல் தீமையாம்.

247. நாம் இப்போது செய்யும் இருவினைகளுக்கு ஆகாமியம் என்று பெயர், நம்மால் அனுபவிக்கப்படாமல் எஞ்சிக்கிடக்கிற புண்ணிய பாவக் கூட்டத்திற்குச் சஞ்சிதமென்று பெயர்.

248. நாம் இப்போது அனுபவிக்கிற நல்வினை தீவினைகளுக்குப் பிராரத்துவம் என்று பெயர்.

249. சஞ்சிதம் நெற்களஞ்சியத்துக்கும், பிராரத்துவம் அக்களஞ்சியத்திலிருந்து கொஞ்சம் எடுத்துச்சாப்பிடுவதற்கும், ஆகாமியம் மீண்டும் பயிர்செய்து நெல்விளைத்தற்கும் ஒக்கும்.

250. கன்மம் ஜடம்.ஆணவமுள்ளவன்றே கன்மமுமுண்டு. ஆணவம் அநாதிநித்தியம். கன்மமும் அப்படித்தான்.

251. நல்வினை தீவினையில் விருப்பம் ஆணவத்தாலுண்டாம். அவ்வாசையை நிறைவேற்றுகிறவன் கடவுள்.

252. வினைகள் புத்திபூர்வமாயும், அபுத்திபூர்வமாயும் வரும்.

253. வினைகளுக்கு ஸ்தூலகன்மம் என்று பெயர், அவைகளாலுண்டாகும் புண்ணிய பாவங்களுக்குச் சூக்கும கன்மம் என்று பெயர். இவைகளுக்குப் பலனாய் வருகிற இன்பதுன்பங்களுக்கு அதிசூக்கும கன்மம் என்று பெயர்.

254. உமியைப்போலும் மாயை. தவிட்டைப்போலும் ஆணவம். நென்முளையைப்போலுங் கன்மம்.

255. பிராரத்துவம் ஒரு ஆன்மாமூலமாயும்வரும், பஞ்சபூதங்களின் மூலமாயும்வரும், தெய்வத்தினலேயும் வரும். இவை முறையே ஆதி ஆத்மிகம் ஆதி பௌதிகம் ஆதி தெய்வீகம் என்று சொல்லப்படும்.

256. சஞ்சிதம் குரு கிருபையால் போம், ஆகாமியம் நிட்டையால் போம், பிராரத்துவம் தேகத்தோடு போம். ஒருவனுக்குரிய ஆகாமியம் மற்றொருவனுக்கும் பிராரத்துவமாய் நடைபெறும்.

257. நீலம் பக்குவப்படுதற்காகப் பயிர்செய்யாமல் நிலத்தைப் போட்டிருப்பதுபோல வினை பக்குவப்படுதற்காகச் சர்வசங்காரம் ஏற்பட்டு ஒருகால எல்லைவரை பிரபஞ்சம் தோற்றுதிருக்கும்.

258. நாம் அலைவாய்த் துரும்புபோல வினையால் மொத்துண்டு அங்குமிங்கும் அலைப்புறுகிறோம்.

259. எறும்புள் அகப்பட்ட நாங்கூழ்ப்பூச்சிபோல நாம் இருவினைத் தொடக்கில் அகப்பட்டுத் துன்புறுகிறோம்.

260. ஒருநெல் பலநெல்லாய் விளைவதுபோல ஒருவினையும்பல வினைகளுக்குக்காரணமாயிருக்கும்.

261. யானையின் மணிஓசை யானை வருதலை முன்னமே தெரிவித்தல்போல நமக்கு வரக்கூடிய நன்மை தீமையின் அறிகுறி முன்னமே தோற்றும்.

262. கன்மம் வியாபகமாய் ஆன்மாக்கள்தோறும் வெவ்வேறாய் நிற்கும், அது சங்கிலிபோலத்தொடர்ச்சியாயும் பிரவாகத்தில் அலைபோல ஒன்றின்பின் ஒன்றாயும் வரும்.

263. சஞ்சிதவினை ஆறு அத்துவாக்களிலும் கட்டுப்பட்டிருக்கும். அது அழிந்தும் ஆகியும்வரும். தீக்ஷையில் இவ்வாறு கட்டுப்பட்ட வினை குருவால் சோதிக்கப்படும்.

264. கன்மம் சிருஷ்டிகாலத்தில் காரியப்பட்டு நிற்கும்.

265. ஆணவத்தின் எட்டுக்குணங்களோடு சேர்ந்த ஆன்மாக்களின் அறிவிச்சைதொழில்களாலே கன்மம்உண்டாம். அது வந்தணுகுவதற்குமுன் காணக்கூடாதாதலால் அதிருஷ்டமென்று அழைக்கப்படும்.

266. கன்மம் பரிகாரத்தாலும் அனுபவத்தாலும் தொலைக்கப்படவேண்டும்.

267. சிலவினைகளுக்கு இங்கேயேபலன் எய்தும், வேறுசில வினைகளுக்குப் பரத்திலே பலன்கிடைக்கும்.

268. இறைவன் வினைகளை அறிந்து ஊட்டுவிப்பான்.

269. வினையின்வாதனைகள் புந்தியில் பொருந்திநிற்கும்.

270. கன்மம் ஆகந்துகமென்று அழைக்கப்பெறும். ஆகந்துகம்—வந்தேறி.

271. வறுத்தவிதை முளையாதவாறுபோலத் தியானக்கினியால் தகிக்கப்பட்ட சஞ்சிதம் மீண்டும் அநுபவத்திற்கு வராது.

272. மந்திரம், பதம், வன்னம், இவைகளை மதித்து அவைகளுக்குரிய சுரத்தோடு உரைத்தல் உரையாதிருத்தல் இவைகளால் முறையே புண்ணியபாவமுண்டாம். மனம், தத்துவங்களாகியகருவிகளாற்சென்று உயிர்களுக்கு இதம், அகிதம், செய்தலாலும், புவனேசர்களுக்குரிய பூசைசெய்தல் அல்லது அதற்கு அன்னியமாய்ச்செய்தலாலும், சாத்திரங்களை உண்மையாய் ஓதலாலும், அதனை மறுத்தலாலும் தத்துவம், புவனம், கலை, என்னும் மற்றையமூன்று அத்துவாக்களினும் வினைகள் உண்டாம்; இவையாவும் மனம், வாக்குக், காயம், என்னும் மூன்றினாலேதான்வரும்; நிர்வாணதீக்ஷையில் இவைகள் குருவால் சோதிக்கப்படும்.

273. புத்தி இருவினையின்கண் விசாரித்தறியாது நடுநிலையாகி ஒத்து நிற்றலே இருவினையொப்பு என்று சொல்லப்படும்.

274. இறைவன் இருவினைப்பாசத்திற் கட்டுண்ட ஆன்மாக்களைப், பயிரிடுவோன் கமலைக்காளைகளைத் திரும்பத்திரும்ப அங்குமிங்கும் அடிப்பதுபோலச், சொர்க்கம் அல்லது நரகம் பின்பூமி என்னுமிடங்களுக்குத் திரும்பத்திரும்பவடித்துவிடுகிறான்.

275. கயிற்றாற் குறுந்தறியிற் கட்டுண்ட ஓர் பசு அக்கயிற்றளவுதான் சுற்றிப் புல் மேய்தல்போல் வினைக்கயிற்றால் தேகத்திற் கட்டுண்டவான்மா, தனக்கு நியதிபண்ணப்பட்ட வினையளவு தான் அநுபவிக்கக்கூடும்.

276. தேகத்தினாற் செய்த கன்மத்துக்குப்பெயர் காயிகம், வாக்கினாற்செய்த கன்மத்துக்குப்பெயர் வாசிகம், மனத்தாற்செய்த கன்மத்துக்குப்பெயர் மானதம். ஆகவே கன்மம் வரும் வழி மூன்றையுமறிந்துகொள்க.

277. ஒரு ஆன்மாவிற்கு இன்பதுன்பம் மாறி மாறி வருமே தவிர ஒரே படித்தான அநுபவமிராது.

278. ஜாதி, ஆயுள், போகம் கன்மத்திற்குத் தக்கவாறு ஏற்படும்.

279. தொன்று தொட்டுக்கன்மம் வருவதால் அது பிரவாகவநாதி

யாம். பிரவாகம் - வெள்ளம். கன்மமநுபவித்துத்தொலைத லால் நாசமுடையது.

280. கன்மம் நித்தியமாய் வியாபகமாய்ச் சகசமாயிருக்கும்.

281. அத்துவாக்கள் மூவகைப்படும். அவையாவன. சுத்தாத்துவா மிசிராத்துவா அசுத்தாத்துவா என்பனவாம். பின்னிருஅத் துவாக்களின் வினைகள் அங்கங்கு கட்டுப்படும். சுத்தாத்து வாவிற்குச் சதாசிவமும் மிசிராத்துவாவிற்கு அனந்தேசுவர ரும் அசுத்தாத்துவாவிற்கு உருத்திரரும் கர்த்தாக்களாவர்.

282. கன்மம் தன்மாதன்ம ரூபமாயிருக்கும். பிரளயகாலத்திற் பக் குவப்படும். சங்காரகாலத்தில் மாயையிலே யிருக்கும். சிரு ஷ்டிகாலத்தில் தேகாதிகளுக்கு ஏதுவாயிருக்கும்.

283 கன்மம் போக்கியம் என்றழைக்கப்பெறும். ஆன்மா போக்தா. அவன் அநுபவம் போகம்.

284. சுத்தாத்துவாவிற் கன்மாநுபவமில்லை. பிரளயா கலருக்குச் சுத் தாத்துவாவிற் றேகமும் மிச்சிராத்துவாவிற் கன்மாநுபவமு முண்டு. பிரளயாகலர் மிசிரமாயையிற்றானிருப்பர்.

285. சகலருக்கு அசுத்தாத்துவாவிற் றேகமும் கன்மப்புசிப்புமுண் டு. ஆணவம் சிறிது நீங்குதற்பொருட்டு மிசிராத்துவாவிற் கலாதிகளும் பொருந்தும்.

286. ஆன்ம அறிவு எந்தத் தத்துவத்தைப் பொருந்தி நின்று கன் மஞ் செய்ததோ அந்தத் தத்துவத்திற்றான் அக்கன்மம் நிலை பெறும்.

287. சங்காரகாலத்திற் கன்மம் அசுத்தமாயையிலிருக்கும்.

288. கன்மம் ஆத்மதன்மமும் மாயாகாரியமுங் கூடின விடத்தில் தோற்றும்.

289. கன்மத்திற்கு மாயையும் ஒருவகை காரணமாம்.

290. கன்மம் சிவபுண்ணிய முதிர்ச்சியினாற் பரிபாக மடையும்.

291. சிவன் முத்தர்க்குத் தேகமுள்ளளவும் பிராரத்துவமுமுண்டு. ஆனல் அவர்கள் சிவத்தோடு ஒன்றிநிற்றலால் அதிற்றெடக்குண்ணர்கள். அவர்களுக்கு ஆகாமியமும் எருது.

292. ஒருவன் செய்த கன்மம் மற்றொருவனைப்போய்ப் பொருந்தாமற் பசுவின் கன்றுகள் அவிழ்த்துவிட்டவுடன் தன் தன் தாயைப் பற்றிக்கொள்வதுபோல அவனவனைப்போய்ப் பற்றி நிற்கும்.

293. மருந்தெண்ணெய் வாசனைபோல் கன்மம் சித்தத்தில் வந்து தோன்றும். சித்தம்—ஆன்மஅறிவு.

மாயை

294. வித்துக்கு ஆதாரம் நிலமாயிருத்தல்போல் மாயைக்கு ஆதாரம் இறைவனது சத்தியாம்.

295. நிலங்குளிர்ந்துழி வித்தினின்று அங்குரந்தோன்றுவதுபோல் உலகம் இறைவனது சத்தி சங்கற்பித்தவழி தோன்றும்.

296. வித்துக்கள் காரிற்றேன்றி வேனிலில் அடங்குமாறுபோல் உலகமும் ஒருகால் மாயையிற்றேன்றி மற்றொருகாலத்தில் அடங்கும்.

297. முயற்கோடுபோல இல்பொருள் எக்காலமுந்தோன்ருது. ஆதலால் உள்ளதே தோன்றும், உலகந்தோன்றலால் அது ஒரு உள்பொருள், 'மித்தையன்றென்றுணர்க.

298. கன்மமலம் பக்குவமாதற்பொருட்டு உலகம் ஒடுங்கும்; ஆணவமலம் பரிபாகமாதற் பொருட்டு அது மீளவுமுண்டாம்.

299. பிரபஞ்சம் சங்காரகாரணனுகிய உருத்திரன் மாட்டொடுங்குதலால் மீண்டும் அவனிடத்தில் நின்றுதான் அது தோன்றும்.

300. வினை பலவிதமாதலினுல் உயிரையும் பலவேறு வகைப்பட இறைவனது சத்தி சங்கற்பித்துநின்றது.

301. கிழங்கினின்று தோன்றிய தாமரையைப் பங்கயமென்று கூறுதல்போல் மாயையில் நின்று தோன்றிய உலகை ஈசுவரனிடத்தினின்று தோன்றிய தென்பார்.

302. மாயையும் உலகமும் முறையே வித்தும் அங்குரமும் போலாம். உலகிற்கு முதற்காரணம் மாயை அது ஜடம்.

303. பிரபஞ்சப்பொருள்கள் அருவப்பொருள்களென்றும் உருவப் பொருள்கள் என்றும் இருவகைப்படும்.

304. மாயாதத்துவங்கள் ஒரு சமுத்திரம் போலாம்.

305. பலதேசங்கள் கூடினது ஒரு கண்டம், பலகண்டங் கூடினது ஒரு உலகம், பல உலகங் கூடினது ஒரு அண்டம். அண்டங்களுக்கு அளவில்லை. அவை அத்திக்காய்க் கொத்துப்போலச் செறிந்திருக்கும்.

306. ஒரு சிறு ஆலம்விதையினின்றும் ஒரு பெரிய விருக்ஷம் உண்டாவதுபோல் மாயையிற் சூக்குமமாய் அடங்கிநின்ற உலகம் அதற்குரிய சாதகங்கள் ஏற்பட்டபோது விரிந்து தோன்றுநிற்கும்.

307. யாதொரு காரணமுமின்றி உலகம் காரியமாய்த் தோன்றாது.

308. மஹா சங்கார காலத்திலும் மாயையழியாது. ஆகையால் அது அநாதி நித்தியம்.

309. தங்கம் ஒன்றே செய்வோன் வினைகளால் பல பணியாயினாற் போல் மாயை யொன்றே இறைவன் கூட்டும் வினையினால் பல பேதப்படும். இம்மாயை இறைவனுக்குப் பரிக்கிரகசத்தியாம்.

310. மாயையானது சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என மூன்றுவகைப்படும். இவை முறையே விந்து மோகினி மான் என்று அழைக்கப்பெறும்.

311. சுத்தமாயைக்கு மஹாமாயை, குடிலை, ஓங்காரம், முதலியபல நாமங்களுள.

312. அது நித்தியமாய் ஒன்றாய் ஜடமாய் சுத்தமாயுள்ளது.

313. அது ஒளிரூபமுள்ளது.

314. நாதம், பரம் அபரம் என்று இருவகைப்படும். பரநாதம் சிவத்திற்கிருப்பிடம்; அபரநாதம், இறைவனது சத்தியால் மஹாமாயையில் த்துவனிரூபமாய் உண்டாக்கப்படுவது. த்துவனி-நாதம்.

315. விந்துவும் பரவிந்து அபரவிந்து என்றிருவகைப்படும். பரவிந்து சத்திக்கிருப்பிடம், அபரவிந்து ஸ்வரம், வர்ணம், கலைமுதலாயின தோற்றி யொடுங்குமிடம்.

316. சுத்தமாயையிலும் சுத்தகால்முதல் சுத்த நிலம் வரையில் 31 தத்துவங்களுள்ளன. சிவதத்துவம் 5 ம் சேர்ந்து தத்துவம் 36ஆம்.

317. மீண்டும் சுத்தாத்துவா ஆறு உண்டு (1) கலை ஐந்து (2) மந்திரம் பதினொன்று (3) பதம் எண்பத்தொன்று (4) புவனம் 224 (5) தத்துவம் 36 (6) வன்னம் 51 இவை சூக்குமநாத ரூபமாயுள்ளன.

318. சுத்தமாயையினின்று தோன்றுமவைகளைத் தத்துவவியலிற் கண்டுகொள்க.

319. சுத்தமாயையிலுள்ள புவனநாதாக்களுக்கும் விஞ்ஞான கலர்க்கும் அம்மாயை தநுகரணபுவனபோகங்களாயிருக்கும். சுத்தபுவனம் 33 அசுத்தபுவனம் 191.

320. சுத்தமாயையில் ஆனந்தகோசம் விஞ்ஞானகோசம் தோன்றும். சுத்தா சுத்தமாயையில் மனோமயகோசம் தோன்றும் அசுத்தமாயையில் பிராணமயகோசம் அன்னமயகோசந்தோன்றும்.

321. வேதம் அநாதி நித்தியம். அநாதி நித்தியரிடத்திலிருந்து வந்ததாலென்க. இதுவும் சுத்தமாயையிற் றோன்றிற்று.

322. மந்திரங்கள் பதங்களிலும், பதங்கள் வன்னங்களிலும், வன்னங்கள் புவனங்களிலும், புவனங்கள் தத்துவங்களிலும், தத்துவங்கள் கலைகளிலும், கலைகள் சத்திகளிலும், சத்திகள் சிவத்திலும் ஒடுங்கும்.

323. சிவதத்துவங்கள் முதலான சுத்த தத்துவங்கள் ஐந்தும் சுத்தமாயையினின்று தோன்றிற்று.

324. சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என்னும் நாலுவாக்குகளும் சுத்தமாயையினின்று உண்டாயின. இவைகளுள் வைகரி வாக்கு மிக ஸ்தூலமாய் நின்று காதிற் கேட்கப்படும்.

325. சூக்குமை வாக்கு சுத்தாத்துவ வாசிகளுக்குப் பந்தமாகும்.

326. சத்தி தத்துவத்தில் சூக்கும நாதமும் விந்துவு மிருக்கின்றன.

327. சதாசிவ தத்துவத்தில் ஸ்தூலநாதமும் விந்துவுமிருக்கின்றன.

328. ஈசுவரதத்துவத்தில் சூக்கும வர்ணங்களோடு கூடிய அநந்தேசுவராதிகளிருக்கிறார்கள்.

329. வித்தியாதத்துவத்தில் ஸ்தூலவர்ணங்களோடு கூடிய சப்த கோடி மஹாமந்திரங்கள் (28) சிவாகமங்கள் இருக்கின்றன.

330. மாயாமயமான சகல உலகத்தையும் குண்டலினி சத்தி தாங்குகின்றது. இது ஜடம் ஆனால் கிரியாசத்தியாலதிட்டிக்கப்பட்டிருக்கும்.

331. ஐந்துகலைகளும் சுத்தமாயையினின்றும் உண்டாயின. இவைகள் ஆன்மாவின்கண் மலமறைப்பை நீக்கும். அவை எங்கும் வியாபித்திருக்கும்.

332. கலைக்குக் கருவிவித்தை. அது ஆன்மாவில் ஞானசத்தியைப் பிரகாசிப்பிக்கும். ஞானசத்திக்கு விஷயங்களில் ஆசையுண்டாக்குவது அராகம்.

333. வித்தை ஆன்மாவின் அந்தரங்ககருவி. புத்தி இந்திரியங்களால் வெளிவிஷயங்களைக் கிரகிக்கும் கருவி.

334. மாயை அராகத்தின்வழியாய் ஆன்மாவை மயக்கும். அராகம்-ஆசை.

335. காலம் மாயையிற் பிறக்கும். அது மூன்று வகைப்படும்.

336. நியதி அவரவர் சுகதுக்கங்களை நியமனஞ்செய்து நிற்கும்.

337. கலை வித்தை அராகம் காலம் நியதி இவை அஞ்சும் ஆன்மாவிற்கு ஐந்து சட்டைகளாம். ஈண்டு ஆன்மாவைப் புருஷதத்துவமென்பார்கள்.

338. இது சகலருக்கன்றி மற்றையருக்கின்று.

339. புருஷதத்துவத்தை யடைந்தபோது கன்மங்களைப் புசிக்கும் வல்லவனாகிறான். அதற்கு முன்னில்லையாமென்க.

340. குணம் புருஷனுக்குப் போகசாதனமாம். அது மூன்றுவகைப் படும். கலையிலே மூலப்பிரகிருதி தோன்றும்.

341. குணங்கள் பிரகிருதியல்ல, ஆனால் முக்குணங்களும் பிரகிருதி யிலடங்கி நிற்கும்; அப்பொழுது அவ்வியக்தமாம். இதில் சித்தந்தோன்றும்.

342. முக்குணங்களும் சூக்குமதேக வழியாய் ஆன்மாவை வியாபிக்கும்.

343. புத்தி முக்குணமயமாயிருக்கும் (அ) வகை பாவங்களும் புத்தியில் வாசனரூபமாயிருக்கும்,

344. அகங்காரத்தால் தத்துவங்கள் விஷயங்களில் பிரவர்த்திக்கின்றன.

345. மனம் இந்திரியங்களுக்கு விஷயப்பிரவர்த்திசெய்யும்.

346. அகங்காரம் தைஜஜம் வைகாரிகம் பூதாதி என்று மூன்று வகைப்படும்.

347. சாத்துவிககுணத் தைசசாவகங்காரத்தில் மனம் ஞானேந்திரிய மிரண்டுமுண்டாம்.

348. இராசதகுண வைகரிகா அகங்காரத்தில் கன்மேந்திரியமும் பௌதாதிக அகங்காரத்தில் தன் மாத்திரைகள் ஐந்தும்தோன்றும்.

349. தாமதகுண சம்பந்தமான தன் மாத்திரைகள்ஐந்திலும் ஐந்து பூதங்கள் தோன்றும்.

350. சுத்தமாயை வேறு அசுத்தமாயை வேறு.

351. சுத்தவித்தை முதல் சிவதத்துவம்வரை சுத்த தத்துவம். ராக முதல் காலம்வரை சுத்தா சுத்தம். மோஹம் சிறிது நீங்கிஇருத்தலால் சுத்தமென்றும் சூக்குமதேகத்தின் வழி பெத்தான்மாவிற்குச் சுகதுக்கங்களை உண்டாக்குவதால் அசுத்தமென்றும் சொல்லப்படும்.

352. பிருகிருதி முதல் பிருதுவி வரை அசுத்தமாம்.

353. பிரளயாகலருக்குரிய அவ்வியக்த புவனங்கள் சரீரங்கள் அசு

த்தமாயையிலிருக்கின்றன. விஞ்ஞானகலருக்கு அவை மஹா மாயையிலிருக்கின்றன.

354. பிரளயத்தில் தேகாதி யில்லாத ஆன்மாக்களுக்கு கலாதி தத்துவங்கள் தூலசூக்கும தேகங்கள் உண்டாக்குதற்கு ஆதாரம் அசுத்தமாயை.

355. அசுத்தமாயை கன்மத்திற்கிருப்பிடமாயுள்ளது. அது நித்தியமாய் ஒன்றாய் வியாபகமாய் அசத்தாயுள்ளது.

356. ஒரு இராச்சியத்தை ஆளுவதற்குச் சட்டங்கள் ஏற்பட்டிருப்பதுபோல ஆன்மாக்கள் நல்வழி நடப்பதற்குக் கடவுள் வேதாகமங்களை அருளிச்செய்திருக்கிறார்.

357. வேதாகமங்கள் சதாசிவமூர்த்தியின் ஈசானமுகத்தின் கண்ணுள்ள ஐந்து திருமுகங்களினின்றும் உண்டாயின.

358. பசு நூல்களைக்கல்லாமல் இவ்விரு சிவநூல்களையே கற்று அவ்வாறே கருமங்கள் செய்து முடித்தல்வேண்டும்.

359. வேதம் சொன்ன இறைவன் தன்னையே புகழ்ந்து அவ்வேதத்தில் துதித்தில் ஆன்மாக்களுக்குத் துதிக்கு முறைகாட்டுவித்தற்கென்க.

360. புருஷதத்துவம் தத்துவமல்ல ஆதலால் புவனங்கிடையாது.

361. அசுத்தமாயா பதார்த்தங்களைச் சுத்தமாயா மந்திரங்களே சுத்திபண்ணத் தகுதியுடை யனவாம்.

362. தேகங்கள் மூன்று வகைப்படும் ஸ்தூலம், சூக்ஷுமம், காரணம் என்பனவாம்.

363. மாயாதனு ஒரு விளக்குக்குச் சமானமாயிருக்கின்றது. பூதங்களைந்தும் பஞ்சீகரணமாய்க்கலந்து நின்றால் காயம் உண்டாம். சத்த பரிச ரூப ரச கந்தங்கள், மனம் புத்தி ஆங்காரம் இவை எட்டும் கூடினது சூக்ஷுமதேகமாகிய புரியட்டக சரீரமாம்.

364. சூக்கும சரீரத்திலிருந்து ஆன்மாவிற்கு உலகில் பூதசரீரமும் சொர்க்கத்தில் ஆன்மாவிற்குந் தேவர்கட்கும் பூதசார சரீரமும் உண்டாம்.

365. ஆகாயத்தினின்று வாயுவாதி தோன்றவில்லை. ஆனால் ஆகாயம் மண்ணாதிகளுக்கு அவகாசமாய் நிற்கும். அவகாசம்—தங்குமிடம்.

366. மனிதர்களுக்குள் ஒன்பதுலக்ஷ யோனிபேதம் அவரவர்கள் குணங்களை வைத்து ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

367. சரீரமாகிய விருக்ஷத்திற்கு மாயை நிலைவேர், புண்ணியபாவங்களைவேர்.

368. காலனாகிய தச்சன் தேகங்களாகிய மரங்களை வெட்டுவான்.
குறிப்பு:— மற்றைய பிறவிகளைத்தாண்டி மானுடதேகத்துட்பொருந்தல் எழுகடலையும் நீந்திக் கரையேறுதலை யொக்கும்.

369. தேகம் வெயிலில் வைத்த வெண்ணெய்போலும் நீரின்குமிழிபோலும் நிலை நில்லாது. ஆதலால் தேகம் உள்ளபோதே உய்யுமாறறிந்துகொள்க.

370. தேகமாகிய மரத்தில் இறைவன் ஆன்மா என்கிற இரண்டு பக்ஷிகள் வசிக்கின்றன. ஒருபக்ஷி இன்பதுன்பங்களை அனுபவிக்கின்றது. மற்றொன்று சாக்ஷியாகப்பார்த்துக்கொண்டிருக்கிறது.

371. பாவிடை ஆடு குழல்போல மீண்டும் மீண்டும் தேகமெடுத்துப் பிறந்து கஷ்டமடைகிறோம்.

372. இத்தேகம் வாத பித்த சிலேட்டுமங்களாகிய திராவகங்களையும், நரம்பு மச்சை முதலிய தந்திகளையும், இரத்தாசய முதலிய பாத்திரங்களையும், மூலாதாரமுதலிய அக்கினிக்குண்டங்களையும் உடைத்தாயிருக்கிற ஒரு யந்திரத்திற்குச் சமமானதென்று சொல்லலாம்.

373. ஒரு பாம்பு தனது தோலைக்கழற்றிவிட்டுப் போவதுபோல் ஆன்மா தூலதேகத்தை விட்டுப்போம். குடாகாய உவமை சூக்கும உடம்பைவிட்டு ஆன்மா போவதற்குச்சொல்லலாம்.

374. ஒன்பது கோட்டைவாயிலுள்ள இவ்வுடலத்துள் இருக்கும் ஆன்மா குறித்தகால எல்லைவரை வெளிப்பிரவேசியாதிருந்தல் யாவருக்கும் ஆச்சரியத்தைக்கொடுக்கும்.

375. கன்மம் பலவிதமானதால் சரீரங்களும்பலவிதமாம். கண்ணுடியில் கண்டவிம்பத்திற்கு யாதொரு செயலுமில்லாதவாறு போல் ஆன்மாவால் ஆட்டப்பட்ட உடலுக்கு யாதொருசெயலுமில்லை.

376. அந்தக்கரணங்கள் அரசருக்கு அமைச்சர் அணுகி நிற்றல் போல ஆன்மாவிற்கு அணுகி நிற்கின்றன.

377. கறங்கோலை கடற்றிரைபோல் நமது நினைப்பும் மறப்பும் மாறிமாறி வருகின்றன.

378. ஒருநதி ஐந்து பிரிவுகளை யுடைத்தாயிருந்தாலென்ன ஆன்ம அறிவு பஞ்சேந்திரியங்களின் வழியாய் ஐந்து பிரிவுபட்டுச் செல்லுகின்றது.

379. ஐம்பொறிகளுள் ஒன்றறிந்ததை ஒன்றறியாது, ஒன்று அறியும்போது ஒன்றறியாது.

380. மாயையின் சம்பந்தம் சகலாவஸ்தை. ஆணவசம்பந்தம் கேவலாவஸ்தை.

381. பகற்காலத்தில் காகம் கூகையைவெல்லும். இராக்காலத்தில் கூகை காகத்தைவெல்லும்; அதுபோல கேவலத்தைச் சகலம் வெல்லும் சகலத்தைக் கேவலம் வெல்லும்.

382. வெண்மையாகிய வைரம் மற்ற இரத்தினங்களை அறுப்பது போல் சாத்துவிககுணமே மற்றைய குணங்களைக்கெடுக்கும்.

383. திரோதானமலம் ஈசனுடைய அருட்சத்தி. அது பெத்தகாலத்தில் ஆன்மாக்களோடு மறைந்துநின்று ஆணவமலம் நசிக்கும்படி காரியப்படுத்தும், பின் முத்திகாலத்தில் அருட்சத்தியாய் நின்று ஆன்மாவிற்குப் பேரின்பமளிக்கும், இது மறைந்து காரிய நடத்தலால் இதையும் மலமெனக் கூறப்பட்டது.

ஆறவது பாசவியல் முற்றிற்று.

ஏழாவது சாதனவியல்.

388. கல்வியே சிற்றுயிர்க்குற்றதுணை. அன்னப்பக்ஷி நீரைப் பிரித்துப் பாலைக்குடிப்பதுபோல ஆராய்ந்து அமைவுடைய நூல்களைக்கற்றறிந்து அவ்வாறு ஒழுகல் வேண்டும். அவ்வொழுக்கமே விழுப்பந்தரும்.

385. தேன் ஈக்கள் பலநாளும் தேனைப் பல இடங்களினின்றுஞ் சேர்த்துத் தங்கள் கூட்டில் வைப்பது போல நீ பலநாளும் சாத்திரஞானத்தின் சத்தைச் சேர்த்து உன்மனக் கூட்டில் வைத்துக்கொள்.

386. சாத்திரத்தையே விடாது படித்தல் தாகத்துக்குக் கடற்சலத்தைச் சாப்பிடுகிறது போலும்.

387. ஒரு பள்ளிக்கூடத்துள் மாணுக்கர் அறிவிற்குத் தகுந்தவாறு பல வகுப்புகள் ஏற்பட்டிருப்பது போல அறிவிற்குத் தகுந்தவாறு மத வகுப்புகளும் ஏற்பட்டிருக்கின்றன.

388. எல்லாமத வாதிகள் நிலையும் 36 தத்துவங்களுள் அடங்கித் தானிற்கும். அந்நிலையின் ஏற்றத்தாழ்வு கண்டு மேல் கீழென வகுப்பார்கள்.

389. பஞ்சபூத வாதிகளினும் அந்தக்கரணவாதிகள் பெரியோர்; அவர்களினும் ஆன்மவாதிகள் பெரியோர்; அவர்களினும் ஈசுர வாதிகள் பெரியோர்.

390. நாஸ்திகம்பேசி னர்த்தமும்பேறு மவர்பாற் செல்லலாகாது. ஈசுவரனில்லை யென்று சொல்லுஞ் சொல்லே அவர் ஒருவர் உண்டு என்னும் தாற்பரியத்தைக் கொடுக்கா நிற்கும்.

391 மற்றைய ஆஸ்திக சமயங்களுள் விரோதம் விளைத்தல் சகோதரர்களுள் கலகம் விளைத்தல் போலாம்.

302. விரிவில்லா அறிவினர்கள் வேறொரு சமயந்தன்னை யாதாமொரு மனப்பு ழுக்கத்தால் நூதனமாய் ஏற்படுத்தினராயி

னும் அதுவும் உண்மைச் சமயத்தின் வகுப்புகளில் அடங்கி நிற்குமே தவிர வேறன்று.

393. யானை கண்ட குருடர்போல ஒவ்வொருவரும் தங்கள் தங்களுணர்ச்சியிற் கண்டவற்றை யுண்மையென்று கொண்டு நடக்கிறார்கள். ஆனால் அவர்கள் கண்டது அற்பபாகமே தவிர வேறன்று.

394. சமயமென்றால் நிலை தருணம் என்று பொருள்படும். 36 தத்துவங்களுள் யாதானும் ஒரு நிலையில் ஒரு வாதி நின்றால் அவன் அச்சமயி என்று அழைக்கப் பெறுவான்.

395. சமயங்கள், அகச்சமயங்கள், அகப்புறச் சமயங்கள், புறச்சமயங்கள், புறப்புறச்சமயங்கள், என்று பலவகைப்படும். இவை கடந்த அதீதசமயம் சித்தாந்த சைவமொன்றே.

396. உட்சமயத்தாருக்குக் கிரமத்தில் முத்திவருமேயன்றி எடுத்த தேகத்தில் கிட்டாது.

397. வேதங்களிற் கூறிய பொருளை நினைத்துச் செய்யாது ஸ்மிருதி விதிபின்படி யாகம் முதலியன செய்தால், முத்திகிட்டாது. ஆனால் தேசக்ஷேமமுஞ் சொர்க்கமுங் கைகூடும்.

398. நால்வகைச் சாதிக்கு விதிக்கப்பட்ட ஒழுங்கில் நடக்கவேண்டும்.

399. பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் நால்வகை ஆச்சிரம முறைப்படி நடத்தல் வேண்டும்.

400 மிருகங்கள், பக்ஷிகள் முதலியவற்றுள் பிறவுயிரைக் கொன்று தின்னுதவைகளுள்ளன. பிறவுயிரைக் கொன்றுதின்னுகிற மனிதர்கள் அம்மிருகங்கங்கள் பறவைகளுக்குக் கீழ்ப்பட்டவர்கள் தான். அவர்கள் வயிறே அம்மிருக முதலியவற்றிற்குச் சுடுகாடாம்.

401. இல்லற நின்றுஒழுகுவோருள்ளும் உள்ளத்துறவுடையாருளர். துறவறத்தாருள்ளுங் கள்ளத் துறவுடையாருளர்.

402. கல்லை உரக்க விசினாலும் பைய விசினாலும் அது தரையிற்றான் விழும். அதுபோல் துறவறத்தில் நின்று வெயில் காற்று முதலியன கருதாது அரிய தபசு செய்தாலும், இல்லறத்தில் விதி வழாது ஒழுகிப் பஞ்சாக்ஷரங்களை விதிமுறை செபித்தாலும் அடையும நிலை ஒன்றுதான்.

403. இருடிகள் நாயன்மார்கள் முதலியோரிற் பலர் இல்லறத்தினின்று தான் முத்தியடைந்திருக்கிறார்கள்.

404. இல்லறம் வழுவாது நடந்தால் இல்லறம் மேன்மைதான். துறவறம் வழுவாது நடந்தால் அது மேன்மை தான். ஆதலால் இவைகளுள் எது பெரியதென்று விசாரித்தல் கூடாது.

405. இல்லறந் துறவறங்களுள் யாதானும் ஒரு அறத்தைக் கைக்கொண்டு சகலவித கலைக்ஞானங்கள், வேதாங்கங்கள், வேதங்கள், புராணங்கள் வேதாந்தங்கள் முதலியவைகளைத் தெளிந்தால் வேதாந்த மென்னு மரத்திற் பழுத்த கனிரசமாகிய சித்தாந்த ஞானங்கைவரும்.

406. வேதாந்த உண்மைப் பொருளும் ஆகமாந்த மென்னும் சித்தாந்தப் பொருளும் ஒன்றேயாம்.

407. சித்தாந்த ஞானம் நித்திய நின்மலஞானமாம். மற்றவை பசுஞானிகளால் ஏற்படுத்தப் பட்டமையால் நின்மலமாகா.

408. யார் யார் எவ்வகை நூல் செய்தாலும் யாவும் வேதாகமங்களின் கருத்துக்களைத்தழுவி நிற்குமேயன்றி வேறன்று. ஏனென்றால் இவையிரண்டும் ஈசனால் அருளிச் செய்யப்பட்ட முதல் நூல்கள். வேதம் பொதுவும் சித்தாந்தம் சிறப்புமாம்.

409. சித்தாந்தஞானங் கைவரில் எடுத்த ஜன்மத்திலேயே, ஈசனது திருவடி முத்தி கிட்டும். அந்தோ சித்தாந்த நெறி ஒழுகாது பிதற்றித் திரிவார் தம் பேதைமையை என்னென்று சொல்லலாம்.

410. ஆன்மாக்களுக்கு முத்தி குருவருளின்றிக் கிட்டாது. குருவென்றால் அஞ்ஞானத்தை நீக்குவோன், என்றுபொருள்.

411. ஒருமனிதனுக்கு, மற்றொரு மனிதனே உபகாரஞ் செய்யக் கூடுமாறுபோல் ஈசுரனும் ஒருமனிதரூபமெடுத்து வந்துதான் நமக்கு உபகாரஞ்செய்வான்.

412. பக்குவப்பட்ட தாமரை சூரியனைக்கண்டு விரியுமாறுபோல் பக்குவப்பட்ட ஆன்மாக்கள் குருமூர்த்தியின் சன்னிதியிற் பேரறிவு பெறும். பக்குவம் ஈண்டு மலபரிபாகம், அதாவது ஆன்மாவைப் பந்தித்த ஆணவமல சத்தியானது குன்றித் தொழிற்படாது நின்று மீண்டும் அவ்வான்மாவைப் பிறவிக்குக் கொண்டுய்க்காத ஒரு நிலை. இங்கு ஆணவம், விஷம் மருந்தினால் அடங்கி நிற்றல் போலவும் கூட்டிற் சாத்திய வாள் போலவும் செயலின்றி நிற்கும்.

413. சூரியகாந்தக் கண்ணாடி சூரியனைக்கண்டு அக்கினியைக் கக்குதல் போலக் குருசன்னிதானத்தில் பக்குவ ஆன்மா ஞானச்சுடர் வீசி நிற்கும்.

414. வேடர் மானைக் காட்டி மானைப்பிடிப்பது போல ஈசுரன் நம்மைப்போல ஒருதேகமெடுத்து நம்மைவசப்படுத்துவான்

415. ஈசன்மானிட தேகத்தோடு வந்து அருள் புரியவில்லையானால் நாம் கண்ணாடி விட்டில் அடைபட்ட நாய்போலாவோம்.

416. ஆமை நினைத்தலால் சலக்கரையிலிட்ட முட்டைகளைத் தன்னுருவாக்கல் போலக் குருவாகிய சிவனும் நினைத்தலினால் பக்குவ ஆன்மாக்களைத் தன்னுருவாக்குவான்.

417 கோழி தன் பரிசத்தால் முட்டையினின்றும்தன்னைப்போன்ற குஞ்சுகளைப் பொறிப்பதுபோல ஈசனும் பக்குவ ஆன்மாக்களைப் பரிசித்துத் தன்னைப் போலாக்குவான்.

418. மீன் பார்வையால் தான் பீச்சிய முட்டைகளினின்று குஞ்சுகளைத் தோற்றுவித்தல் போலக் குருவும் அருட்பார்வையாற் பக்குவ ஆன்மாக்களைத் தன்னுருவாக்குவான்.

419. தொட்டால் வாடியென்னும் செடி பரிசத்தால் வாடுதல் போல, குரு பக்குவ ஆன்மாவைப் பரிசித்தால் அவன் வினைத்தொகுதி வாடும்.

420. மாந்திரிகன் கண்பார்வையினால் பிளவையை உடைப்பது போலச் சிவகுரு தன் திருநோக்கத்தால் வினைக்கட்டறுப்பான்.

421. மனத்தில் கருடபாவனை செய்து ஒரு மாந்திரிகன் பார்த்தலினால் விஷம் நீங்குதல் போலச் சிவஞான தேசிகன் பார்வையால் ஆணவம் நீங்கும். பரிசத்தால் மாயை அறும். கலா

சோதனையால் சஞ்சித வினை நீங்கும். ஆகாமியம் மூலமல மொழிதலால் நீங்கும். பிராரத்துவம் தேகத்தோடு நீங்கும்.

422. குரு அலேயும் மனத்தைச் சித்திரப்பதுமை போலாக்குவான். குரு தான்-ஆன்மாவின் பிறவியை யொழித்து எண்டத்து நாலுலக்ஷத்து யோனி பேதத்திலுள்ள தாய்மார்கள் ஏக்க முறும்படி செய்வான்.

423. குருவைச்சிவ மென்று கொள். சிவனைக்குருவென்று கொள்ளாதே,

424. குரு சிடன்பக்குவங் கண்டுதான் வருவார். இவ்வூன் தேகத்தை எப்பொழுது மனம் வெறுத்து நின்றதோ அப்பொழுது தான் பக்குவம் வந்ததென்று அறியலாம். தேகத்தைச் சிறைச்சாலை என்று எண்ணுதவன் பிறவிப்பெருங்கட னீந்தான்.

425. பள்ளத்தில் போகும் ஆற்றுநீர் அதன் அருகிலிருக்கிற நன் செய்களுக்கு நேரே பிரயோசனப்படாமல் வேறு கால் வழியாய் வந்து பிரயோசனப்படுவது போல் ஈசன் நமக்குளிருந்தாலும் அவன் குருமூர்த்தியாய் வந்து தான் நமக்குப் பிரயோசனப்படுகிறான்.

426. குரங்குக்குட்டி தன்தாயைப் பற்றிக்கொள்வது போலப் பக்குவ சிடர்கள் ஞானகுருவைத் தாங்களே பற்றிக்கொள்ளுவார்கள்.

427. குரு லட்சணமில்லாப் பொய்க்குருவை நீ சார்ந்து நில்லாதே நின்றால் குருடனும் குருடனும் கோல் பிடித்துக் குழியில் விழுந்த கதையாய் முடியும்.

428. தன் தன்மையை உணராதவன் பசு. அவனைக் குருவென்று கொள்ளாதே.

429. பொய்க் குருவை நம்புதல் வெயிலால் தகிக்கப்பட்ட ஒருவன் பனை நிழலை நம்பித் தாபந்தீர இருப்பதை ஒக்கும்.

430. ஒரு ஊருக்குப் போகும் வழியைக்காட்டி மரம் காட்டுவது போலக்குருவும் முத்திக்குப் போகும் வழியைக்காட்டுவார்.

431. குரு பஞ்சமலக்கொத்தை நறுக்கி ஆன்மாவைப் பரமானந்த சாகரத்தில் அமிழ்த்துவார்.

432. குரவர் விரத்தரென்றும் குடும்பியரென்றும் இருவகைப்படுவர். விரத்தரில் பிரமசாரி, மிகச்சிறந்தவன்.

433. மறையோர்-மறையோர், அரசர், வணிகர், சூத்திரர் இவர்களுக்குக்குருவாவர். அரசர்—அரசர், வணிகர், சூத்திரருக்குக் குருவாவர். வணிகர்—வணிகர் சூத்திரருக்குக் குருவாவர். சூத்திரர்—சூத்திரர்க்கும், சங்கரசாதியார்க்கும் குருவாவர். இவ்விதி ஞானகுரவர்கட்கன்று.

434. ஞானகுரு சாம்பவதிதீக்கை செய்வான். போதகன் அவுத்திரிதீக்கை செய்வான். சாதகன் கருமதீக்கையினைச் செய்வான்.

435. தீக்ஷை ஞானத்தைக்காட்டி நிற்குமே தவிர மோட்சத்தைக் கொடாது. ஆகையால் ஞானமே மோட்சந்தரும். தீக்ஷையில்லாவீடில் சிவபதமில்லை.

436. பாசத்தைக்குறைத்து ஞானத்தைக்கொடுப்பது தீக்ஷை. அது பலவகைப்படும்.

437. சமயதீக்கைபெற்றுச் சரியையியற்றல் வேண்டும். இதற்குச் சிவலோகம் பயனாய் வரும்.

438. விசேடதீக்கைபெற்றுக் கிரியையாகிய சிவபூசைசெய்யவேண்டும். அதற்குத் தடத்த சிவனதுசமீப இருக்கை பயனாய்க்கிட்டும்.

439. சிவயோகமியற்றித் திதிக்கு ஒழிபாங்காலமுறுமளவுஞ் சிவசாரூப்பியம் பெறுதல் கூடும். ஆதையிலராய்ப் போகத்தில் பற்றொழிவரேல் முத்தி கூடுவர். பற்றுடையராகில் பின்பிறந்து சத்தினிபாத ஞானத்தால் முத்தியெய்துவர்.

440. சரியை கிரியை யோகத்தால் பாவ புண்ணியங்கள் சமமாகும். வினை அனைத்தும் பருவமெய்தும், ஆணவமலம் பரிபாகமாகும், நால்வகைச் சத்தினிபாதம் உண்டாகும்.

441. மந்ததரம் மந்தம் தீவிரம் தீவிரதரம் என்பவைகளே நால்வகைச்சத்தினி பாதங்களாம். மந்ததரத்திற்குச் சமையமும், மந்தத்திற்கு விசேஷமும், தீவிரத்திற்கு அசத்தியோ நிர்வாணமும், தீவிரதரத்திற்கு, சத்தியோ நிர்வாணமும் செய்தல் வேண்டும்.

442. பொய்வாழ்வில் விரத்தி வரல் மந்தம். அதனை நிலேப்படச்செய்தல் மந்தரம். விஞ்ஞானம் விளக்கிநிற்பது தீவிரம். உபசாந்தி கூடிச் சிவஞான மிகவாக்கல் தீவிரதரம்.

443. சத்திநிபாதமெய்தியவர் சிவன்பாலும் அன்பர்பாலும் தளராத பத்திசெய்வர். விடயத்தின்வழிச் செல்லார். உலகவாழ்வைச்சிறிதாக வெண்ணுவர். சித்திகளைக் கருதார். அருளையே சிந்திப்பார். பாசத்தை மோசிப்பாராரென்று முயல்வார். அப்பொழுது உயிர்க்குயிராய் நின்ற இறைவன் கருணையினல் நம்மைப்போல ஒருதேகமெடுத்துத் தீக்ஷைகள்செய்து விடு அளிப்பான்.

444. மந்ததரசத்தினிபாதர்க்கு நிவிர்த்திகலை பிரதிட்டாகலைபிலடங்கிய வினைகளைச் சோதித்துப் பிரகிருதிக்கு மேலுள்ள புவனங்களில் வைப்பான். மந்தசத்தினிபாதர்க்கு வித்தியாகலை சாந்திகலை சாந்தியாதீதகலை மூன்றையுஞ் சோதித்துச் சுத்த வித்தையினில் வைப்பன். தீவிரசத்தினிபாதர்க்கு சிவசமமாமுத்தியளிப்பன். இவை யாவும் பதமுத்தியே பிரளயகாலத்தில் இவர்களுக்குப் பரமுத்தி கிட்டும்.

445. ஒருபற்று மற்ற தீவிரசத்தினிபாதர்க்குச் சத்தியோ நிருவாணதீக்ஷை செய்து நித்தனுடன் வேறறநிற்கும் முத்தியளிப்பன். குண்டமண்டலாதிகள் மந்திரக்கிரியா பாவனைகள் முதலியவற்றை மனததால் நினைத்துச் செய்தல் சத்தியோ நிருவாணம். சத்தியம்—உடன்.

446. சமயத்திற்கு ருத்திரபதமும் விசேஷத்திற்கு ஈசுரபதமும் கிட்டும். அருகரல்லாதவர்க்கு மேலான தீக்ஷைசெய்தவர் நரகமடைவர்.

447. அதிகமந்தபக்குவமுடையார்க்குக் குருகடாக்ஷித்தால் வாழைத்தண்டில் தீமூட்டுதல் போலாம். மந்தபக்குவமுடையார்க்கு அருளுதல் பச்சைவிரகில் தீ மூட்டுதல் போலாம். தீவிர பக்குவமுடையவர்களுக்கு அருளுதல் கரியில் தீ மூட்டுதல் போலாம். அதிதீவிர பக்குவமுடையவர்களுக்கு அருளுதல் சூடனில் தீ மூட்டுதல் போலாம்.

448. தலையில் அக்கினிபற்றினவன் தண்ணீரைநோக்கி ஓடுவதுபோலும் வெயிலில் வழிநடப்போன் வெப்பம் ஆற்ருது தண்ணிழல் தேடி ஓடுதல் போலவும் பிறவித்துன்பத்தில் வருந்துவர் குருவினது திருவடிகீழ்ல் தேடி ஓடுவர்.

449. ஈசன் அட்டமூர்த்தங்களிலும் வியாபிபாதலால் அவைகளினுள் யாதானுமொன்றில்நின் றும் வெளிப்படுவான். பசுவினுடலெங்கும் வியாபித்திருக்கும் பாலே மடுவின் வழியாய்க் கறத்தல்போல ஈசனை ஒரு குறிவழியாகத்தான் கொள்ளல் வேண்டும்,

450. நாம் ஒலிவடிவாகிய எழுத்துக்களை வரிவடிவாகிய எழுத்துக்களால் கண்டறிவதுபோல் அருபமாகிய கடவுளை அவரால் தோற்றுவிக்கப்பட்ட உருவங்களில் வைத்து அறிகிறோம்.

451. ஒருபடத்தைப்பார்த்தவுடன் அப்படத்தாற் காட்டியமனிதன் செய்கையும் சிறப்பும் தோற்றுமாப்போல் ஈசன்பால் அவசரங்களில் தோற்றிய மூர்த்தங்களைக்காணும்போது அவர் வல்லமையுஞ் சிறப்பும் எளிதிற் றோற்றும்.

452. குருலிங்க சங்கமங்கங்கள்தான் ஈசனது உண்மைத்திருமேனிகளாம். அவைகளே பிறவிநோய்க்கு நன்மருந்தாம்.

453. பால் உணவாயும் மருந்தாயும் நிற்றல்போல் இவ்வழிபாடு மலவாதனை நீக்கற்கும் சிவப்பேறு அளித்தற்கும் கருவியாய் நிற்கின்றது.

454. பிருதுவி தத்துவத்திற்கு ஐங்குணங்கள் நிறைந்திருப்பதால் சிலைமுதலியவற்றில் அவனை வணங்கும் வணக்கம் பஞ்சபூதங்களில் வைத்து அவனை வணங்கிய வணக்கமாகும்.

455. கண்ணுடிக்கு ரசம்பூசித் தகடுபோட்டால் அது முகத்தை நன்ருய்க்காட்டுமாப்போல் சிலை செம்பு முதலியவற்றில் மந்திரக்கிரியாபாவனை செய்தால் ஈசனுடைய அருள் வெளிப்படும்.

456. வியாபகமாயுள்ள சூரியனுடைய வொளிக்கெதிரே பஞ்சைப் பிடித்தால், அப்பஞ்சில் அக்கினிபற்றக்காணவில்லை, ஆனல் அவன் கிரணங்கள் பலவற்றை ஒரு கண்ணுடியில் ஒருமுகப் படுத்தலால் வந்த ஒளியில் பஞ்சைப்பிடிக்கில் பஞ்சில் அக்கி

னிபற்றுகின்றது. அதுபோல ஈசனுடைய அருட்கிரணங்களை ஒருமுகப்படுத்தி வழிபடல் நமக்குப்பிரயோசனகரமாம். அப்படி வழிபடுதல் விக்கிரகவணக்கம். வி—விசேஷம், கிரகம்—கிரகித்தல்.விக்கிரகமென்றால் விசேஷமாகக் கிரகிந்தற்குரியஸ்தானம் என்றுபொருள்படும்.

457. மந்திரத்தை மனத்தினுள்ளே எண்ணிச் செபித்தால் சூடுண்டாகி அமிர்தப்பிரபாகம் உடலெங்கும் வியாபித்து நோய்களைத்தீர்த்து உறுதிநிலைகொடுக்கும். மந்திரம் அட்சரச்சேர்க்கையாம். அட்சரம்- ஒலியின் கூட்டமாம். அவ்வொலி பஞ்சகர்த்தாக்களின்தேகமாம்.

458. மந்திரங்களுக்குள் பஞ்சாக்ஷரம் மிகமேன்மையாம். அது ஸ்தூலம், சூக்குமம், அதிசூக்குமம், எனப்பலவகைப்படும். இவைகளை விதிப்படிஉச்சரித்தால் சிவான்மாக்களுக்குஞானம் பிரகாசித்து முத்தி கைகூடும். விதிப்படி உச்சரித்தலை சற்குருமுன்னின்று கேட்டுணர்க. பிராசாத மந்திரபேதங்களைக் குருமுகமாய்க்கற்றுணர்க பிராசாதம்—சிவஞானகதியாகிய முத்தியைக்கொடுப்பது.

459. அகர, உகர, மகர, விந்து, நாதம், என்பவைகள் மூலமனுவென்று அழைக்கப்படுவனவாம். இவைஐந்தும் பஞ்ச சத்திகளுக்குவடிவாம். இவைபிரணவத்தின்பாகுபாடாம். மனம் அகங்காரம், புத்தி, சித்தம், உள்ளம், என்பவற்றில் இவ்வைந்தக்கரங்கள் தாமேயாய்நின்று நிலவுவனவாம்.

460. சிகரத்தைமுதலாகவுடைய முத்திபஞ்சாக்ஷரசெபம் ஞானசொரூபம் இனிது விளங்குதற்கு சிறந்தசாதகமாம். அதுவே பிறவிப்பெருங்கடல் கடத்தும்தோணியாகும். இவ்வைந்தெழுத்துக்களின் சேர்க்கையை விசாரித்தறிக.

461. அக்கினியில்மெழுகு உருகுவதுபோல நீ ஈசன்பால் மனம் உருகிநில்.

462. புறப்பூசைசெய்வதிலும் உட்பூசைசெய்வதே சிறந்தது உட்பூசைசெய்யாமல் புறப்பூசைசெய்தல் கையிலுள்ள பாயசத்தைவடியவிட்டு முழங்கைமுட்டிலநக்க முயலுதல்போலாம்.

463. இதையகமலத்துள் பளிங்குபோல்ஒளிரும் சிவலிங்கத்தை அமிர்தத்தால் அபிடேகித்து உபசாரமெல்லாம் ஒருமைப்பட்ட மனத்தோடுசெய்து சதி பதிபோல் பிரியாதிருப்பது அகப்பத்தி. லிங்கத்துஇடத்தும் குரவரிடத்தும் சிவபத்தரிடத்தும்குறைவறப்பூசைசெய்துசிவஞானமெய்துதல்புறப்பத்தி.

464. அன்பரிடத்தும் இன்றவனைப்பூசிக்கலாம். சிவபூசையில்இலிங்கத்தில் இறைவனை ஆவாகனம்செய்யாமல் பூசித்தால்யாதொருபயனும் தரமாட்டாது. ஆதலால் அவ்விதிஉணர்ந்து செய்க.

465. பூசையில் பஞ்சசுத்தி மனிதர்க்கன்றி பிராணிகளுக்கில்லை. பூசையிற் செய்யும்உபசாரம் பஞ்சபூதஉபசாரமே. அதாவது நைவேத்தியம், பிருதுவி, அர்க்கியம், அப்பு, தூபதீபம், தேயு, சாமரை, விசிறி, வாயு, மணி, கரணம், ஆகாயம்.

466. பூசையிலுள்ள அசுத்தமாயாபதார்த்தங்களைச் சுத்தமாயாமந்திரங்கள் சுத்திபண்ணத்தகுதியுடையனவாம்.

467. பூசைக்குப் பத்துவித சமஸ்காரங்கள் உள்ளன அவையாவன.

(1) ஆவாகனம்—எங்குநிறைந்த வஸ்துவை ஓரிடத்தில் பிரகாசிக்கச்செய்வது, அதாவது மூலமந்திரத்தைச்சொல்லி சிவனை அழைக்குமாற்றால் அழைத்தல்,

(2) ஸ்தாபனம்—லிங்கத்தில் எழுந்தருளியிருக்கப்பததியாய்ப்பாவித்தல்.

(3) சன்னிதானம்—ஈசனுக்கும் தனக்குமுள்ளசம்பந்தத்தைப்பாவனைசெய்தல்.

(4) நிரோதானம்—எப்பொழுதும் அனுக்கிரகம் தன்மாட்டு வைக்கவேண்டுமென்றுவேண்டல்.

(5) முத்திரை—தேவர்களைக்கைக்கொண்டு அசுரரை விரட்டல். தேவர்கள்—நன்மைகள், அசுரர்கள்—தீமைகள்.

(6) அவகுண்டனம்—சிகை இருதயாதி ஸ்தானங்களில் நியாசம்செய்வது. நியாசித்தல்—குறித்தல்.

(7) பாத்தியம்—பாதசுத்தத்திற்காகப் பாதத்திற்கொடுக்கும் சலம்.

(8) ஆசமனம்—ஐந்து திருமுகங்களிலுங் கொடுக்கும் சலம்.

(9) அர்க்கியம்—ஐந்து சிரங்களிலுங் கொடுக்குஞ்சலம்.

(10) புஷ்பதானம்—அறுகுபுஷ்பமுதலியன் கொடுத்தல்.

468. பலநிறமுள்ள புஷ்பங்களைக்கொண்டு மந்திரக்கிரியாபாவனை யோடுசெய்யும்அர்ச்சனை அமிர்தப்பிரவாகத்தைஉண்டாக்கும்.

469. ஒருசெம்படவன்வலையில் மீன் சிக்குவதுபோல ஈசனும் ஆன் மாவின் பத்திவலையிலகப்படுவான்.

470. சண்டாளன் என்னும்காகம் தன்னை கா, கா, என்றுஈசனை நோக்கிக்கதறிநிற்க மனிதனுய்ப்பிறந்தும் அவ்வாறுசொல்லத் துணியாதவன் அதமசண்டாளனும்.

471. அன்றில் பக்ஷி தனதுபேடையைவிட்டு நீங்காததுபோல நீ ஈசனுறவை விட்டு ஒருபொழுதும் நில்லாதே.

472. அசுணப்புள் இனியகீதங்கேட்டவுடன் மயங்குவதுபோல நீ ஈசனுடையதிருநாமங்கேட்டவுடனேஉள்ளங்குழைந்துநில்.

473. மயிலானது மேகத்தைக்கண்டு ஆடுதல்போல் நீ கருணைமேக மாகிய கடவுளைக்கண்டு ஆடல் பாடல் செய்.

474. ஜலக்கரைக் கொக்கானது எப்போது மீன்கிடைக்குமோவென்று வேசற்றிருக்குமாறுபோல் நீ ஈசனருள் எப்போது கிடைக்குமோவென்று எண்ணியிரு.

475. கள்ளர்கள் கன்னக்கோலால் பொருளை அபகரிக்கப் பிரயாசைப்படுவதுபோல் நீ சிவஞானபொக்கிஷத்தை பத்திஎன்கின்றகோலால் அபகரிக்கமுயல்.

476. தீக்கடைக்கோலினுல் கடைந்தால் அக்கினி வெளிப்படுமாறுபோல் உறவுஎன்கிறகோலை நட்டு உணர்வுஎன்கின்ற கயிற்றினுல் இழுத்தால் இறைவன்வெளிப்படுவான்.

477. பிரணவத்தை மேலரணியாகவும் ஆன்மாவைக்கீழரணியாகவும் வைத்துக்கடைந்தால் ஆன்மநாயகனுகிய பரஞ்சுடர்வெளிப்படும்.

478. ஈசனிடத்து அன்பில்லார் கருணையற்றவராகித்தமக்கும் அன்பில்லாதவராகிறார்.

479. பசு பாசப்பற்றுவிடலே பற்றுவிடலாகும் மற்றொருபற்றாகிய பதிப்பற்றை விடலாகாது, விட்டால் சிவபோகங்கிட்டாது.

480. எண்ணெய் நிரம்பிய ஒருவட்டிலைக் கையிற்றாங்கிச் செல்பவன் அவ்வெண்ணெய் சிந்தாதபடி சதாகருதிநிற்பான். அதுபோல நீ ஈசனைச்சதாநினையுங் கருத்தாகவேநில.

481. கைவிசிநட க்குந்தாதியின் எண்ணம் நீர்க்குடத்திற்றான் வைக்கப்பட்டிருக்குமாறுபோல் நீ பலதொழில்கள் செய்துகொண்டிருந்தாலும் உன்மனத்தை ஈசன்பால் நிறுத்து.

482. பள்ளத்தைநோக்கி வெள்ளம்செல்லுமாறுபோல் தாழ்வெனும் தன்மையுடையாரிடத்து ஈசனதுகருணைவெள்ளம் மிகுந்து பாயும்.

483. ஒரு உடும்பானது பற்றினதை விடாததுபோல் பதிப்பற்றைப்பற்றியபின் விட்டுவிடாதே.

484. புழு வேட்டுவனை மறவாததாகி வேட்டுவன் உருப்பெற்றாற்போல நாம் சிவனைமறவாமல் தியானித்தால் அவன் உருப்பெறலாம்.

485. எறும்பு ஊற ஊறக்கல்தேயுமாறுபோல் நாம் ஈசனை தியானிக்கத் தியானிக்கஆணவவலிதேயும்.

486. பாசிபடு குட்டத்துட் கல்லினைஎறிந்தால் அவ்வேளையில் பாசி நீங்குமாறுபோல் ஈசனைத்தியானிக்கும்போதுமாத்திரம் ஆணவபாசம் நீங்கிநிற்கும். ஆகையால் முற்றுநீங்குதற்குபாயமாக நீக்கமறத் தியானிக்கவேண்டும்.

487. ஈசனை இரவுபகல்என்னும் இரண்டுகாலங்களிலும் தியானிக்கக்கூடாது. ஆகையால் இரவுபகல் அற்றஇடத்தில் தியானிக்க வேண்டும்.

488. ஆலாஎன்கிறபக்ஷி மீன்கொத்தற்காக நீர்மேல்படபடப்பாய்ப் பறந்துதிரிதல்போல ஈசனருளுக்காக நாம்பரபரத்தல்கூடாது பையப்பையச்செல்லவேண்டும்.

489. ஒரு வீணைத்தந்திப்பிரடையைமுறுக்கினால் அது உடனே அறுந்துபோம், அதுபோல அவசரமாய்த்தியானியாமல் வேண்டியஅளவு நியதமாய்த்தியானித்தால்தான் அத் தியானம் நமக்குப்பிரயோசனப்படும்.

490. நாம் துன்பத்தைப்பாவித்தால் துன்பமயமாகிறோம், இன்பத்

தைப்பாவித்தால் இன்பமயமாகிறோம். அதுபோல சிவனைப் பாவித்தால் சிவமயமாகிறோம்.

491. சூட்டின் அளவுகாட்டுங் கருவியின் ரசம் சூடுஅதிகரித்தால் மேல்நோக்கியும் அதுகுறைந்தால் கீழ்நோக்கியுஞ் செல்லுமாறுபோல் தியானுக்கினிஅதிகரித்தால் ஈசனுடைய தோற்றம் அதிகமாயும் அதுகுறைந்தால் அவன்தோற்றம் குறைந்தும் நிகழும்.

492. தங்கத்தைச் சுடச்சுட அது மிகுந்து ஒளிரும். அதுபோல தியானிக்க தியானிக்க ஆன்மாப் பிரகாசம் அதிகரிக்கும்.

493. ஈசனைத் தியானிக்காமல் வீணே காலம் போக்குகிறவர்கள் ஆட்டுக்கழுத்தின் அதர்போல் பிரயோசனப்படாராகி வீணே இறந்து கழிவர்.

494. யானை என்னும் வியாதி விளங்கனியிலுள்ள சத்தை வெளிக்குத்தெரியாமல் தின்பதுபோல் சிவத்தியானமானது சித்தத்துள்ளிருக்கும் சஞ்சித மலக்கட்டைத்தின்று விடும்.

495. எரிந்தகாட்டத்தின் மேலுள்ள வெண்சாம்பலை நீக்கிவிட்டால் உள்ளே அக்கினி ஒளிரும். அதுபோல் வெளிமயக்கத்தைத் தள்ளிவிட்டு உண்முகமாகப்பார்த்தால் அக்கினிமயமான ஈசன் தோன்றுவான்.

496. காமக்கிழத்தியர் ஆடைமுதலியன காமுகரை வசீகரித்தல் போலச் சிவவேடம் அன்பர்களை வசீகரிக்கும்.

497. சித்திகள் அகங்காரத்தைக் கொடுக்குமாதலால் அவைகளின் வழி நில்லாதே.

498. அபக்குவரிடத்து ஞானமார்க்கம் போதித்தல் ஒரு நாய் முன் முழுத்தேங்காய் எறிதல்போலாம்.

499. சிப்பியினுள் விழுந்த மழைத்துளியானது பையப் பைய முத்தாய் விளையுமாறுபோல் பக்குவ ஆன்மாவினுள் வைத்த ஞானவித்தும் பையப் பைய முளைத்துத் துளிர்த்துக் காய்த்துப் பழுக்கும்.

500. தாமரை இலைத்தண்ணீர்போல் மெய்ஞ்ஞானிகள் பிரபஞ்சத்திலிருப்பார்கள். பிள்ளைப்பூச்சி சேற்றிலிருந்தாலும் அச்சே

று அதன்மேல் ஒட்டாததுபோல் மெய்ஞ்ஞானிகள் பிரபஞ்சத்தில் வசித்தாலும் அதில் தாக்குறூர்கள்.

501. மெய்ஞ்ஞானிகள் சோகம் பாவனை பண்ணுதலால் சிவமாய்க் கருதப்படுவார்கள். அக்கினியினுல் வறுத்தவித்து மீளமுளையாததுபோல் இகாகிதங்கள் ஞானிகள்பால் அணுகாவாம்.

502. காயம்வைத்திருந்த பாண்டத்தில் அவ்வாசனையிருப்பதுபோல மெய்ஞ்ஞானிகளுக்கும் மும்மலம் கழிந்தாலும் வாசனை வந்து தாக்கும்.

503. வெட்டின மரத்துண்டு துளிர்த்தபின் உலரும். அதுபோல வினை நீங்கிபபின்னும் தேகவாசனைகூடிப் பின்மாயும்.

504. மோரில் வெண்ணெய்மிதப்பதுபோல சீவன் முத்தரும்தேகத்தோடு கூடியிருப்பர்.

505. மனநிலை மாறுதிருக்குமாறு சிவனேசர்திருக்கூட்டத்தில் நீங்காதிருத்தல்வேண்டும்.

506. சீவன்முத்தர்களுக்கு உடம்பிருந்தாலும் அவர் பாசமுடையரல்லர். ஏனென்றல் முதல்வன் திருவருட் பார்வையையே உடையராதலாலென்க.

507. பேய்த்தேர் அதிவேகமாய்ச்செல்லுதல்போல பாசக்கூட்டம் திருவடி ஞானம் வந்தபோது நில்லாது கழியும்.

508. மணியின் நாக்கானது மணியினுடன் கொஞ்சம் ஒட்டி நின்றும் நாக்கின் பெரும்பாகம் அம்மணியிற்றழுவுதலில்லாது நிற்றல்போல சிவஞானிகள் தேகத்தோடிருந்தாலும் அதனிடத்தில் பற்றற்று நிற்பார்கள்.

509. தராசுமுளைபோல் நேரிக நிமிர்ந்து ஆசனத்திலிருந்து யோகஞ் செய்யவேண்டும்.

510. யோகிகளுக்குப் பிறவியுண்டு ஆதலால் மேலான ஞானத்தை நாடுக. பாம்புகள் சட்டை உரிப்பதுபோல் யோகிகளும் சட்டை உரிப்பார்கள்.

511. ஆமை மாரிகாலத்தில் தன் வளையுள்ளிருந்து காற்றைப் புசிப்பது போல் யோகிகள் தியானகாலத்தில் குகைக்குள்ளிருந்து காற்றைப்புசிப்பார்கள்.

512. ஒருநீரோட்டத்தை அணையால்தடைப்படுத்தினுல் அவ்வணை உடைத்துப்போகுமாறி நீர்நிற்றல்போலமனவோட்டத்தைக் கும்பகத்தால் தடைப்படுத்தினுல் மனம் அதனைமீறிச் செல்லா நிற்கும்.

513. மனம் ஒரு குரங்கிற்குச்சமானமாம். ஆதலால் அதனை அதன் வழியே விட்டு பின் குணவழிக்குத் திருப்புதல் நலம்.

514. ஆமை தனது ஐந்துகரங்களையும் அடக்குவதுபோல் பெரியோர்கள் ஐம்பொறிகளையுமடக்கி நிற்பார்கள். அலைபோலெழுங் கோபாக்கினியைச் சாந்தமாகிய நீராலணைப்பார்கள். விளக்கொளி அலைவதுபோல் அலையும் மனத்தையடக்குவார்கள்.

515. சிவஞானிகளுக்கு அளித்த எள்ளளவு தானமும் ஒரு பெரிய மலைபோல் நின்று பயன்தரும். ஆதலால் அவர்களுக்கு ஊண் உடை உதவுக.

516. ஒரு சிறு கட்டெறும்பு பெரியயானையைப் பேதிக்கும். அதுபோல் சிறு சிவபுண்ணியமும் மலைபோல்நின்ற கன்மத்தைப்பேதிக்கும்.

517. ஓடும்தமனியமும் பிருதிவியாதலால் ஞானிகள் அவற்றைச் சமமாக எண்ணுவார்கள்.

518. இறைவனை சுட்டினுல் சுட்டமுடியாதென்பதை ஞானிகள் சின்முத்திரையாற் காட்டுகிறுர்கள்.

519. வாயால் இவ்வண்ணமென்றுகூறினுல்வாக்குக்குக் கோசரமாவனுதலால் அவர்கள் மவுனமானுர்கள். மனத்தால் நினைத்தால் நினைக்கப்படும் பொருளாகுவனுதலால் மனமிறந்து நின்றுர்கள்.

520. எல்லாம் சிவன்செயலெனக்காண்டல் நிட்டை.

521. உலகம் உடல் யோனி கை கால்; முச்சத்தி அந்தக்கரணம் ஆன்மா பஞ்சேந்திரியம்; எனக்கருதி ஈசனது நிலையை பார்த்தலு நிஷ்டையாம்.

522. ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரித்தலும் நிஷ்டையாம்.

523. அந்தரியாக பூசையும் நிஷ்டையாம்.

524. சிவன்செயல் இப்படியோவென்று பார்த்திருப்பதும் நிஷ்டையாம்.

525. குருவைப் பரமானந்தசொரூபமாய்த் தியானித்தலும்நிஷ்டை யாம்.

526. சேஷ்டரை வழிபடுதலும் நிஷ்டையாம்.

527. தருப்பையாசனத்தின்மேல் பத்மாசனமிட்டு இருந்து அந்தரி யாக பூஜைசெய்தல் மிகமேலான முத்திசாதனமெனப்பெரி யோர் கூறுகின்றார்கள்.

528. இருதயம் பூசா ஸ்தானம். நாபி ஹோமத்தானம். புருவநடுத்தி யானத்தானம் இவ்வாறு செய்தற்குரிய விதிகளை சற்குரு மு ன்னிலையில் கேட்டுணர்க.

529. சரியை கிரியை யோகம் ஞானம் முறையே அரும்பு மலர் காய் கனி போலாம். சன்மார்க்கமென்பது ஞானமார்க்கம். சகமார் க்கமென்பது யோகமார்க்கம் புத்திரமார்க்கமென்பது கிரியா மார்க்கம் தாசமார்க்கமென்பது சரியாமார்க்கம்.

530. சரியை முற்றியபின் கிரியையும், கிரியை முற்றியபின் யோக மும், யோகமுற்றியபின் ஞானமுங் கைவரும். இவை நான் கும் பதினாறு உட்படிகளை உடையனவாம், சரியையில் சரி யை முதற்படி ஞானத்தில் ஞானம் கடைப்படி.

531. பதி பசு பாசம் உணர்ந்து இருவினையொப்பு மலபரிபாகம் சத் திநி பாதம் எய்தி முத்திபெறுதல் ஞானமார்க்கமாம்.

532. இடகலைபிங்கலைகளை ஒடுக்கித் தடுத்துச் சுழுமுனைமார்க்கமாக ஆ தாரங்களைச்சந்தித்து அங்குள்ளமூர்த்திகளைத் தரிசித்துப்பின் பிரமரந்திர அமுதத்தை உடல் முழுவதும் பரவச்செய்து உடலை ஒளி உருவாக்கி அதுவழியாக நிலைக்கச்செய்து ஈச னது திருவுருவைப்போல சாரூப்பியம் பெற்று வாழ்தல் யோகமார்க்கமாம்.

533. திருமஞ்சனம் பூ அமுது புகை ஒளி தாம்பூலமுதலியவைக ளைத் தேடிவைத்து ஐந்துவகைச்சுத்திசெய்து வித்தியா தே கம் விதிப்படி ஸ்தாபித்து சிவலிங்கத்தில் தற்பரனைக்கொ ண்டு வந்து சிவாகமஞ்சொல்லி யாங்கு புசித்தலால் சிவபிரா னது சமீபத்திலிருத்தலாகிய சாமீப்பியபதவி பெறுதல் கிரி யா மார்க்கத்தாலாம்.

534, விபூதி திருவேடம்போற்றிப்பூங்காவனஞ் சமைத்துப் பூமாலை சிவபெருமானுக்கு அமைத்துத்திருக்கோயிலைப்பெருக்கி மெழுக்கிட்டுவிளக்கேற்றிப்பலகாலும் ஈசனை அன்போடு வணங்குதலும் கோயில் பல கட்டுதலும் புதுக்குதலும் சாலோக பதவி பெய்தற்குரிய சரியாமார்க்கமாம்.

535. (1) சரியையிற் சரியை—இஷ்ட தேவதைகள் முதலியோரை நினைத்து மந்திரத்தால் செபித்தல்.

(2) சரியையிற் கிரியை—ஆலயவழிபாட்டின் முறைமையில் நடந்து திருவலகிடல் மெழுகுதல் திருமஞ்சனம் கொணர்தல் இண்டைமாலைகள் செய்து சிவபெருமானுக்குச் சாத்தக்கொடுத்தல் திருவேடத்தார்க்கு அடிமைத்தொழில்செய்தல் அவர் ஏவல் வழிநிற்றல் முதலியனவாம்.

(3) சரியையில் யோகம்—திருக்கோவிலினுள் நியதிசெய்யுமிடத்து சதாசிவநாயனுரைப் பதுமராகவொளிபோல் இருதயத்தில் தியானித்து அவ்வொளியுடனே மனப்பற்றுகிற்றல்.

(4) சரியையில் ஞானம்—இந்திரியங்களை அடக்கி ஞானபுஷ்பங்களாகிய கொல்லாமை முதலிய எட்டினாலும் சிவனை அர்ச்சித்து சதாசிவ மூர்த்தியையும் அவன் அடியாரையும் அவன் உறையுமாலயத்தையும் பரம்பொருளாய்க்கைக்கொண்டு தியானம் செய்திருப்பது.

(5) கிரியையிற் சரியை—ஜலசுத்தி முதலிய செய்து சுவர்க்காவஷ்ட சுரா என்னும் முக்கோடிமந்திரங்களால் தபித்து ஜெபித்து தோத்திரமுஞ்செய்தலாம்.

(6) கிரியையிற் கிரியை—சூரியபூசைமுதல் சண்டேசுரர் பூசைவரை செய்துமுடித்து ஒடுக்கிச் செபித்தல்.

(7) கிரியையில் யோகம்—உடம்பின் பகுப்புகளையும் ஆதாரங்களையும் நாடி வாயுக்கள் இவை நிற்கும் நிலைகளையுமறிந்து பிராசாத மந்திரோச்சாரணத்தால் உன்மனுகலைவரை சிவனைத்தியானித்து அவனது திருநடந் தரிசித்திருத்தல்.

(8) கிரியையில் ஞானம்—திருமஞ்சனம் மலர் முதலியவற்றை மனக்கோயிலுள்ளமைத்து இதய கமலத்தில் வித்தியாதேகமத்தியிலுள்ள சிவனைப் பூசித்தல். புருவமத்தியில்

தியானித்தல் நாபியில் பிரணவத்தால் ஓமித்தல் முதலியன வாம்.

(9) யோகத்திற் சரியை—இயம நியமங்களியற்றி பிரணவத்தால் பிராணயாமஞ்செய்து சங்கிதாமூலமந்திரத்தால் சிவனைத் தியானித்துத் தண்டன் செய்வது.

(10) யோகத்திற்கிரியை—பத்மாசனமுதலிய ஆசனவகையறிந்து பிராணயாமவகைபலவும் புரிந்து தியானித்து அறிவுடனே வாயுவை ஷீனப்படுத்தல்.

(11) யோகத்தில் யோகம்—நிராதாரயோகத்தால் இறைவனுள் வேறற்றுறைந்து தூங்குதல் பிரத்தியாகாரதாரணைகள் இதனுளடங்கும்.

(12) யோகத்தில் ஞானம்—சித்திகள்பெற்று நாதவழியே சென்றுஇறையுடன் பேதியாமல் நிற்கும் உண்மைநிலை சார்தல் இது சமாதி.

(13) ஞானத்தில் சரியை—நீடித் துநிட்டை கலையாதிருத்தல்.

(14) ஞானத்திற்கிரியை—ஞானபூசை விதிப்படி செய்தல் இதனுள் ஞானநூலை ஓதல் ஓதுவித்தல் முதலியனவும் சத்தியோ நிர்வாண தீக்ஷையுஞானந்தியேஷ்டியும் அடங்கும்.

(15) ஞானத்தில் யோகம்—ஐம்பத்தொரு அக்ஷரத்தினுள் மேலானதாகிய முத்தி பஞ்சாக்ஷர முறையுணர்ந்து ஆன்மா சிவத்திலேசார நாடுங்கருத்தாய் எப்போதும் உச்சரிப்பது.

16. ஞானத்தில் ஞானம்—பதி பசு பாச ஞானங்களின் உண்மை முழுதுந்தெரிந்து தன் செயலற்று ஈசன் தன்செயல் நடக்குந்தன்மைகண்டு சுயம்பிரகாசராகிய இறைவனது பேரானந்தப் பெருக்கினுள் அமிழ்ந்தி யொன்றாயுறங்குதலாம் இது முத்தி முடிவு.

536. முத்திநன் னெறியினை தசகாரியத்தில்அமைத்துக்கூறுவர் எங்ஙனமெனில்.

1. பிருதுவி தத்துவமுதல் நாதத்துவமீறாக உள்ள முப்பத்தாறு தத்துவங்களை தனக்கு வேறாகக்காண்பது தத்துவரூபம்.

2. அவைகள்சடப்பொருளென்றும் தன்னாலறியப்பட்டவைகளென்றும்தன்னறிவில்விளங்கக்காண்பதுதத்துவதரிசனம்.
3. அவ்வாறு கண்டு நீங்கித்தான் அன்னியனாய் நிறைவாய் நித்தியமாய் அறிவாய் உள்ள தன்மையை அறிந்து நிற்பது தத்துவசித்தி.
4. ஆணவமலம் நீங்கித் தானறியுமுறைமையையும் தன்னறிவிற்கு அறிவாய் நிற்கும் இறைவனது ஞானம் உபகரிக்கிற முறைமையையுந் தன்னறிவிலே விளங்கக்காண்பது ஆன்மரூபம்.
5. ஆன்மாவின் சிற்றறிவாகிய சுட்டும் போதங்கழன்று நிற்றல் ஆன்மதரிசனம்.
6. அனுக்கிரக ஞானத்தால் சிவமே தானாய் நிற்றல் ஆன்மசுத்தி.
7. சத்திநிபாதம் விளைந்து குருமூர்த்தமாய் எழுந்தருளி வந்தபோது தான் வேறற நிற்கிற முறைமையைத் தருகின்றவன் அறிவிற் கறிவாய் நிற்கிற சிவனென்று தன்னறிவிலே விளங்கக் கண்டு நிற்பது சிவரூபம்.
8. யான் எனது என்பனவின்றித் தேசிகமூர்த்தியின் அனுக்கிரகஞானத்தை எவ்விடத்துங் கண்டனுபவிப்பது சிவதரிசனம்.
9. சிவனுடனே இரண்டறக் கூடினமுறைமை சிவயோகம்.
10. சிவனது இன்பநிலையில் அமிழ்ந்தி நிற்பது சிவபோகம்.

537. முத்திநெறியின்கண்ணுள்ள முப்பதவதரமும் தசகாரியத்துள் அடங்குமுறைமை காட்டுவாய்.

1. பஞ்சபூதப்பழிப்பு 2. பொறியறவுணர்தல் 3. அந்தக்கரணசுத்தி 4. கலாதிஞானநிராகரணம் 5. சுத்ததத்துவதூடணம் 6. தத்துவாதீதம் 7. சகலதரிசனம் இவை ஏழும் தத்துவரூபம் தத்துவ தெரிசனம் தத்துவசுத்தி என்னுமூன்றனுள்ளடங்கும்.
8. கேவலம் 9. கேவலதரிசனம் 10. கேவலாதீதம் இவை மூன்றும் ஆத்மரூபமாம்.

11. சைதன்னியதரிசனம், இது ஆன்மதரிசனம், 12. ஞானதரிசனம், 13. பரைதரிசனம், 14. பரைவியாத்தி, 15. பரையோகம், 16. பரைபோகம், 17. சுத்தபரையோகம், 18. சுத்தபரைபோகம், 19. சாக்கிராதீதம், இவை8 ம் ஆன்மசுத்தியாம்.

20. பரையிலதீதம், 21. சுத்தாவத்தை, 22. சுகரூபம், இவை 3ம் சிவரூபமாம்.

23. சுகாதீதம், 24. சுகப்பேறு, 25. பரமானந்ததரிசனம், இவை 3ம் சிவதரிசனமாம்.

26. பரமானந்தயோகம், இது சிவயோகமாம்

27. பரமானந்தபோகம், 28. பரமானந்தமேலீடு, 29. பரமானந்த அவசம், 30. மறித்துக்காட்சி இவை 4ம் சிவபோகமாம்.

538. சமாதியைவிடுத்து நிற்கையிலும் அருள்மயமாய் எங்கும் காண்பது உலகழிப்பு அல்லது மறித்துக்காட்சி என்று சொல்வர்.

ஏழாவது சாதனவியல் முற்றிற்று.

எட்டாவது அநுபவவியல்.

539. அநுபவமில்லாத ஞானம் சொற்பனம் போலாகும். அநுபவ ஞானம் சாக்கிரம் போலாம்.

540. தற்போதமழிந்தவிடத்துச் சிவபோதமே மேலிடும். அங்கு ஓர் ஒளியுண்டாம்.

541. அவ்வொளி விளக்கின்கண் சூழ்ந்துநின்று ஒளிருமொளிபோற் றுலங்கும்.

542. அவ்வொளிக்குள் பஞ்சவர்ணப்படங்களை விரித்தாற்போன்று மாறென்னப் பலநிறச்சோதி தோன்றும்.

543. சித்திரவடிவங்கள் அநேகம் அவ்வொளிக்குள் தோன்றும்.

544. பஞ்சமூர்த்திகள் பஞ்சசத்திகள் அவ்வொளிக்குள்தோன்றும்.

545. சிவம் பனி புகை தீக்காற்று காற்று அக்கினி மின்மினி மின்னம் பளிங்கு சந்திரன் முதலியவைகளைப்போன்ற பலதோற்றத்தோடு வந்துறும்.

546. பலபுவனப் பரப்புகளுந்தோன்றும்.

547. எழுவகைத்தோற்றத்தின்கண் வந்த பல உயிர்வர்க்கங்களும் ஆண்டுத்தோன்றும்.

548. பளிங்கொளிபோன்ற விந்துக்கள் பல சந்திரனைப்போல வெளிப்படும்.

549. சூரியன் ஒளிபோல அகண்டசோதியானது தோன்றியபின் தசநாதமும் பிறக்கும்.

550. எங்கும் வியாபித்துப் பரந்துநிற்குஞ் செஞ்சுடராகிய பரை தோன்றும்.

551. அப்பரை யொளிக்குள் ஆன்ம சைதன்னிய மழுந்தும்போது உருக்கம் கண்ணீர் திகைப்பு கம்பம் நகை பெருவலி புகை முதலியன உண்டாம்.

552. பின் பாலன் உன்மத்தன் பக்குவம் நிகழும்.

553. பரை யொளிக்குள் உள்ளொளியாகிய பேரானந்தச் செஞ்சுடர் காணும். இதற்கு உவமையில்லையாம். வாக்குக்கெட்டாததாம். உள்ளொளியாய் நின்று மீமிசை விளங்கித்தோன்றும் அப்பரஞ்சோதியே சிவமாம் என்பதை ஞானக்கண்ணினுற் காணக்கூடும்.

554. சிவமே கண்டிருக்கும் ஆன்மா பசையற விழுங்கப்பட்டு ஆனந்தாதீதத்தில் வைக்கப்பெறுவன்.

555. இவ்வநுபவங்கள் மூலாதாரமுதல் பிரமரந்திரபரியந்தம் சகளரூபியாய் வியாபித்திருக்கும் சூரியப்பிரகாசம் போன்ற சுழுமுனை நாடியின் மத்தியில் பேரொளியாய் சூக்குமமாய் விளங்கும் சிவனைக்குருவடிவாய் தியானித்துச் சமாதி கூடலாலும் பதி பசு பாச வுண்மை யுணர்தலாலும் உறும்.

556. ஒரு வயிரப்பெட்டி கிடைத்தால் அது உனக்குக் கிடைத்தது என்றுஒருவரிடமும் சொல்லாய். அதுபோல ஈசனருள் கிட்டினல் அதை வீணே சொல்லித்திரியேல். எனெனன்றல் பிறர் தங்கள் அநுபவங்களைக்கொண்டு பேதலிக்கச்செய்வார்கள்.

557. அநுபவம் ஒருவர்க்கு நிகழ்ந்தவாறு மற்றொருவர்க்கு நிகழா து. ஏனென்றால் ஈசன் தனக்காட்பட்டவர்களுக்கு அருளும் வண்ணமும் அவனது ஆதிமாண்பும் ஒருவன் கேட்கப்புகுவா னாகில் அது அளவில்லாததாய் முடியும், ஆதலால்நீ அநுப வக்காட்சிகண்டால் ஊமன் கண்டகனாப்போல வெளியிடா திருப்பாயாக.

அநுபவவியல் முற்றிற்று.

ஒன்பதாவது முத்தியியல்.

558. முத்தி என்பது விடுதல் என்னும் பொருதள்ளும். அது சீவன் முத்தி என்றும் விதேகமுத்தி யென்று மிருவகைப்படும். சீ வன் முத்தி உடல் நிற்கும்போதே யடையுமுத்தி. விதேகமு த்திதேகங்கழிந்தபின்னடையுமுத்தி.

559. இரும்புண்டநீர் திரும்பி வராததுபோல் ஈசுவரனையடைந்த ஆன்மாவுந் திரும்பிவராது.

560. சந்திரனுடைய ஒளிக்குள் உடுக்குலமடங்குமாறுபோல் ஈச னுடைய பேரொளிக்குள் ஆன்மாக்களடங்கி நிற்பனவாம்.

561. சமுத்திரத்திற் சேர்ந்த நதியானது திரும்பிவராததுபோல் இ றைவனைச் சார்ந்த ஆன்மாவுந் திரும்பிவராது.

562. கண்ணொளியுங் கதிரொளியுங் கலந்து நிற்பதுபோல் ஈசனு டன் ஆன்மா கலந்துநிற்கும்.

563. உப்பளத்திற் சார்ந்த துரும்பு உப்பாவதுபோல் இறைவனைச் சார்ந்த ஆன்மாவும் இறைவனும்.

564. அக்கினிதன்னைச்சார்ந்தஇரும்பினைத்தன்மயமாக்குவதுபோல ஈசனும் தன்னைச்சார்ந்த ஆன்மாவைத் தன்மயமாக்குவான்.

565. கடலில் முழுகப்போனவர்கள் அதன் ஆழத்தையும் பெரு மையையுங் கண்டறிதல் கூடாவாம். அதுபோல இறைவனது பேரானந்தத்தில் முழுகினவர்கள் அவனது முழு நிலையையுங் காணார்கள்.

566. கால் தலை என்ற வார்த்தைகள் புணருங்கால் காறலை என்று ஆகும். அப்பொழுது றகரம் ஓரெழுத்தென்றுவது ஈரெழுத்தென்றுவது சொல்லமுடியாது. அதுபோல் ஆன்மா இரண்டறக்கலந்தபோது ஒன்றென்றுவது இரண்டென்றுவது சொல்ல முடியாமல் அத்துவிதமாம்.

567. ஆன்மா வீடுபெற்றபோதும் பரமனுக்குப் பலவழியு மடிமையாகும்; அவன் ஆண்டு ஐந்தொழில் செய்தற்குரியனுகமாட்டான் சிவாநந்தத்தை யநுபவித்தற்கு மாத்திரம் உரியனுவன்.

568. வண்டுகள் தேனை மாந்தி அம்மயமாயிருப்பதுபோல ஆன்மாவும் பேரானந்தத்திலமுந்தி அம்மயமாய் நிற்கும்.

569. ரசகுளிகை பொன்னினையடக்குதல்போல் ஈசனும் ஆன்மாவைத் தன்னுள்ளடக்கி நிற்பான்.

570. அப்பணைந்தவுப்பேபோல் ஆன்மா அரன்கழலை ஒன்றிநிற்கும்.

571. புணருந்தோறும் போகம் விளைதல்போல் இணையடி யுணருந்தோறும் சிவபோகம் வளரும்.

572. முத்திநெறி ஒன்றே. அந்நெறியில் முப்பது சத்திரங்களுள்ளன. முப்பதாவது சத்திரம் மேற்காட்டிய பரமாநந்த அவசம். மதவாதிகள் ஒவ்வொருவரும் இடை இடையே யுள்ள சத்திரங்களில் தங்கி நிற்பவர்களாவார்கள். எந்தத்தத்துவம் வரை அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்களோ அந்தத் தத்துவமே அவர்களுக்கு முத்தியாம். ஆனல் இவை யெல்லாம் பதமுத்திகளாம், பரமானந்த அவசமே மேலான சாயுச்சியமாம்.

573. ஒரு ஊசலானது கயிறற்று விழுந்தால் அதற்குத் தாரகம் தரையாதல் போல் ஆன்மா மும்மலப்பந்த மற்று விழுந்தால் அதற்குத் தாரகம் சிவ பூமியாம்.

574. வேள்வியாலுறும் பதவியின்பம் சிற்றின்பமேயாம். ஆதலால் நிலையுள்ள பேரின்பத்தை நாடுக. இவ்வின்பம் இன்னதென அநுபவத்தாற்றான் காணல் கூடும்.

575. சிவபிரான் திருவருளின்றி மோக்ஷமடைய முயலல் ஆகாயத்தைப் பதமிட்ட ஒரு தோலைப்போற் சுருட்டமுயலுதற்கொக்கும்.

576. ஞாதுரு, ஞான, ஞேயம் என்பன சங்கற்ப ஞானத்துள்ளடங்கும். சிவஞானம் இவைகடந்த ஞானம். இதனையடைந்தோர் சிவமே கண்டிருப்பர்.

577. தன்னைத் தருவானுகி முத்திக்குரிய ஆன்மாவைத் தனது சுயம்பிரகாசப் பரப்பினுள் கவர்ந்து கொள்வான். அங்கு ஆன்மா பெறும் ஆனந்தத்திற்கோர் அளவில்லை. அதுவே மாருத சிவாநுபவமாம். ஆண்டு இறைவன் உயிரோடு கலந்த வழி, கரும்பு, தேன், பால், கனி, அமுது கண்டை யொத்திருப்பன்.

578. ஆத்துமா தன் ஆனந்தத்தையே, முத்தியிலுமநுபவிக்கு மென்பது கிரியா விரோதமாகி நியாயத்திற் கொவ்வாததாகின்றது.

579. சிவனும் ஆன்மாவும் பொருளில் வேறுபட்டும் பிரிந்தும் நின்றமையா லிவ்விருவருங் கூடுங்கூட்டிற்குச் சாயுச்சியமென்று பெயராயிற்று.

580. சமாதிகாலத்தில் ஆன்மாவிற்ருேன்றும் இன்பம் சிவரூபமான பேரின்பமேயன்றி, ஆத்மானந்தமன்று. ஆனால் ஆன்மா படிகம்போல்வதொன்ருகலின் இப்பேரின்பம் ஆன்ம இன்பம்போல் தோன்றிற்று. அதுபற்றி அவ்வாறு கொள்ளற்க.

58 . வேதாகமங்களில் முத்தியிலக்கணங்கூறுமிடத்துப் பெறுவான் ஆன்மாவென்றும், அவனடையும் ஆனந்தநிலை பேறு என்றுங் கூறியிருத்தலால் ஆன்மாவிற்கோர் ஆனந்தமுண்டென்பதைமறந்து விடுவாயாக.

582. ஆன்மா தன்னையே கண்டிருப்பது முத்தியன்று. ஏனெனில் இன்பம் ஆன்மாவின் குணமாகில் (குணகுணிகள் வேறின்மையின்) ஆன்மாவிற் கோரநுபவ மின்ருும். அன்றியும் "முத்தர் சிவமே கண்டிருப்பர்" என்னும் ஆன்ருேர் வாக்கியத்திற்கும் விரோதிக்கின்றமை யுணர்க.

583. ஈசனைக்காணவேண்டு மென்று செய்யும் தவங்களெல்லாம் பொய்யாகித் தன்னையே தான்காண்டல் மெய்முத்தியாகில் அத்தவங்களெல்லாம் மோசமாய் முடிந்தமை காண்க.

584. யான் என்பதறல் முத்தியாக ஆன்மா மீண்டுந்தன்னையே கண்டு கொளல் முத்தியாவதெங்ஙனம்? அஞ்ஞான பந்தநிவிர்த்தியாயது எவ்வாறு? ஞானம் பெற்ற தெவ்வாறு? என்பவைகளை ஆய்ந்து ஆத்மானந்த மில்லை எனக்காண்க.

585. ஆத்மாவிற்கு ஆனந்தமுண்டாகில் எண்ணில்லாத பிறவியையும் இறப்பையும் அவ்வான்மா எய்த வேண்டியதன்று.

586. இரும்பைச் சேர்ந்த தீயின்குணம் இரும்பின் குணமாகத் தோற்றுதல்போல் ஆன்மாவிற்றேன்றும்பேரின்பம் ஆன்மாவோடு இரண்டற நிற்றலின் அவ்வான்மாவின் குணம் போறிறேன்றும்.

587. ஆன்மாவிற்கு ஆனந்தமில்லையென்று அறுதியிட்டதால் ஆன்மா சத்தாகியும் சித்தாகியும் நின்றதைத்தவிரச்சச்சிதானந்த பேதமில்லாத வனுயினமைகண்டு சச்சிதானந்தன் ஈசனொருவனே யென்றுணர்க. இதனாற் சிவ சமரச முத்தி மறுத்தமையுணர்க.

588. முத்தியில்ஆன்மா மும்மலங்கள் நீங்கப்பெற்றுச்சிவானந்தவெள்ளத்திற்றிளைத்து அவ்வானந்த மயமாய்நிற்கும்.

589. உள்ளம் என்றகாட்டில் பஞ்சேந்திரியங்களின் செயல்களாகிய செடிகளைவெட்டிப்பத்தி யென்கின்ற ஏரால் உழுது அன்பு என்கின்ற நீரைப்பாய்ச்சிச் சிவமென்கிற விதையையூன்றிச்சிவஞானமென்கின்ற பயிரை வளர்த்து அஞ்ஞானமென்கின்ற களையைப்பிடுங்கிச் சாயுச்சியமென்கின்ற பலனைக்கைக்கொண்டு பேரின்பமென்கின்ற உணவையுண்டு சுசித்திருப்பீராக.

590. சித்தாந்தத் தேசிவன்றன் றிருக்கடைக்கண் சேர்த்திச்
செனனமொன்றி லேசீவன் முத்தராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும் பிறப்பை யறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்ப னென்று
மொழிந்திடவு முலகரெல்லா மூர்க்க ராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரிதுவென்ன பிராந்தி. (சித்தியார்)

591. நூலினையறிந்தார்போன்று நுண்ணறி வுடையார் போன்று
மாலினைத் தவிர்ந்தார்போன்றும் வழியறிந் தடைந்தார் போ [ன்று
மேலெனத் தத்தங்கோளே விதந்தலை கின்றோர் நந்தி
சாலவன் றருளுநூலின் றலைப்படாவுள்ளத்தாரே.
(தணிகைப்புராணம்)

592. தீதிலாத் தியானத்தாற் சேகறுநன் முத்தியினைச் சேரலாமாலாதலாற் றியானமே செயவேண்டும் ஞானத்தாலடையும்வெவ்வே, றோதியமெய்த்தியானந்தான் ஞானமும் போகிக்கேவந்துறுமாற்செய்ய, கோதிலாத்தியானமொடு ஞானம் வல்லோர் முத்தியினைக் குலவுவாரே. (வாயுசங்கிதை)

593. ஒங்குணர்வி னுள்ளொடுங்கி யுள்ளத்து ளின்பொடுங்கத்
தூங்குவர்மற் றேதுண்டு சொல். (திருவருட்பயன்)

594. நூறுகோடியேயிருந்து நூல்கள்பல கற்றாலு
மாறுகோடி சித்தி யடைந்தாலும்-பேறல்ல
நித்தன் மலரடிக்கே நீக்கமற வேவைத்த
வத்துவிதங் காணா தவர். (ஞானசுகாதீதவெண்பா)

595. உள்ளமலநீங்கி யோங்கு சிவானந்த
வெள்ளந் திளைத் ததுவாய் மேவுதலே-கள்ளவிழ்பூங்
கொத்தார் விரிசடையார் கூறுஞ்சிவாகமத்திற்
சித்தாந்த முத்தியெனத்தேர். (முத்திநிச்சயம்)

596. தந்ததுன்றன்னைக் கொண்டதென்றன்னைச் சங்கராவார் கோ
லோசதுர, ரந்தமொன்றில் லாவானந்தம் பெற்றேனியாது
நீ பெற்றதொன்றென்பாற், சிந்தையே கோயில்கொண்டவெ
ம்பெருமான்றிருப் பெருந்துறையுறை சிவனே, எந்தையே
யீசா வுடலிடங் கொண்டா யானிதற் கிலனோர் கைம்மாறே.

597. முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
வத்தனெனக் கருளியவா றார்பெறுவாரச்சோவே.

598. சிலமின்றி நோன்பின்றிச் செறிவேயின்றி யறிவின்றித்
தோலின்பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்றுவிழுந்து கிடப்
மாலுங்காட்டி வழிகாட்டி வாராவுலக நெறியேறக் [பேனை
கோலங்காட்டி யாண்டானைக் கொடியேனென்றோ கூடுவதே.
(திருவாசகம்)

599. அன்றலர்ந்த பூவின்மது நிறையவாரி
யாவலுடனுண்டவண்டு பூவையல்லால்
நின்றதிலே யுறைகின்றோ மென்பதற்கு மயங்கு
நிலைபோலப் போதவிகாரங்கணீங்கிச்
சென்றுதெளி வுற்றவச முற்றந்தப் பொருளிற்
சேர்ந்தபோ துனைவிழுங்குந்திரும்பவிடாதிதுவே
நின்றபரமானந்த மேலீடாமந்த
நிலைநின்றோர் சாயுச்சிய நிலையினாரோ. (முத்திநெறி)

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெ லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீரவே. (தேவாரம்)

சித்தாந்தஞானரத்நாவளி முற்றிற்று.

மெய்கண்ட தேவன் றிருவடிவாழ்க.

உ

சைவசித்தாந்தம்.

*பதிபசுபாசத்தொகை.

—:0:—

குறள் வெண்பா.

விநாயகர் வணக்கம்.

பவளநிறத் தானைமுகன் பாத நினைப்பா
மவளமறுப் பானெம் மகம்.

இது ஆகமங்களில் ஞானபாதத்தின்கண் கூறப்பெற்ற பொருள்களின் உண்மையை, முத்தி யவாவினர்க்கு எளிதிலறிவுறுத்தற்பொருட்டுக் கருணை மேலீட்டினாற் கூறப்புகுந்த இந்நூலாசிரியர், எடுத்துக்கொண்ட விஷயம் இனிது முடிதற்பொருட்டு, விக்கினங்களை நீக்கவல்ல விநாயகக்கடவுளை வணங்கும் வணக்கம் உணர்த்துகின்றது.

(பதவுரை) பவள நிறத்தானைமுகன் - செம்பவள நிறம் என்ன ஒளிர்கின்ற திருமேனியையுடைய ஆனைமுகப்பிள்ளையாரது, பாதம் - சீபாதங்களை எம் அகம் - அநாதியே எம்மைப் பந்தித்த ஆணவ மலத்தினா லுண்டாம், அவளமறுப்பான் - துன்பமாகிய பிறவியினின்று நீங்குதற்பொருட்டு, நினைப்பாம் - சிந்தித்து வணங்குவாம்.

பிறவித்துன்பத்தை நீக்கவல்ல தாளுக்கு இந்நூல் இடையூறின்றி இனிது முடிவுபெறச் செய்தல் ஓர் அருமையன்று என்பது கருத்து. “எம்மகம் அவளமறுப்பான்” என்பதற்கு எம்மனத்தின் கண்ணுள்ள மலக்கோணை யறுத்தற்பொருட்டு என்று பொருள் கூறினும் பொருந்தும்.

ஈண்டு விநாயகனை ஆனைமுகனென்றெடுத்தோதியது அவன் அத்திருவதனத்தால், தேவர்களது இடுக்கண் தீர்த்த பெற்றி நோக்கி யென்க.

கிரியாசத்தி, ஞானசத்தி ஆகிய இவ்விரண்டும் மூத்தபிள்ளையாரது இரண்டு திருவடிகளென்று மேலோர் கூறுவர்.

அகம் - ஆணவம், நெஞ்சம். அவலம் அவளமென எதுகை நோக்கி நின்றது. அவலம் - துன்பம்.

---

* இஃது பழமையாகிய சித்தாந்த நூல்களில் ஒன்று. இந்நூல் எட்டுப் பிரதியிலுள்ளது. சைவசித்தாந்தம் இனைபதென யாவர்க்குந் தெரிவிக்கவேண்டி இதனை இங்கு பிரசுரிக்கலாயினோம்.

பாயிரம்.

சிவவணக்கம்.

சிவனை நிரஞ்சனனைச் சின்மயனைச் சீவ
பவமுமறுப் பானைநினைப் பாம்.

இது மங்கல வாழ்த்துரைத்தலை உணர்த்துகின்றது.

(பதவுரை) சிவனை - நித்தியமங்கள சொரூபனாகியும், நிரஞ்சனனை - நின்மலனாகியும், சின்மயனை - ஞானமூர்த்தியாயும், சீவன் - ஆன்மாக்களுடைய, பவமுமறுப்பானை - பிறவித் தொடர்ச்சிக் கேதுவாகிய கன்மங்களையு நீக்கவல்லானாகியு முள்ள சிவபெருமானை; நினைப்பாம் - சிந்தித்துப் போற்றுவாம்.

இது மூவகை வாழ்த்துள், பொருளியல்பு உரைத்ததெனக் கொள்க. என்னை ? இந்நூலுள் முதற்கண் பதியியல் கூறியிருத்தலால் "சிவனை நிரஞ்சனனைச் சின்மயனை" என்றும், பின்னர் பசுவியல் கூறியிருத்தலால் "சீவன்" என்றும், அதன்பின் பாசவியல் கூறியிருத்தலால் "பவம்" என்றும், இறுதியில் அநுக்கிரகவியல் கூறியிருத்தலால் "அறுப்பானை" என்றும் முறையே இம்மங்கல வாழ்த்துள் உய்த்துணரவைத்தமை கண்டு தெளிக.

நிட்களமுஞ் சகளமுமல்லாததாய் தத்துவாதீதமாய் மலரகிதமாய் அநாதி நித்தியமாய் அகண்டிதமாய் அணுவுக்கணுவாய் மகத்துக்கு மகத்தாய் ஆநந்தவுருவாய் ஆன்மாக்களெல்லாஞ் சென்றடையப்படும் பேறாய் விளங்கி நிற்பதெதுவோ அது சிவம் என்றறிக. பவமும் என்ற உம்மை, எஞ்சிநின்ற ஆணவத்தையும் மாயையையுஞ் சுட்டிநின்றது.

சத்திவணக்கம்.

இரவிக் கொளிபோ லிறையொடுறை வாளைப்
பரவிப் பணிவாம் பதம்.

இது அச்சிவனோடு தாதான்மியப்பட்ட சத்திவணக்க முணர்த்துகின்றது

(பதவுரை) இரவிக்கொளிபோல் - சூரியனினின்றும் அவனது கிரணம் எப்படி வேறாகாதோ அப்படிப்போல, இறையொடுறைவாளை - சிவபிரானோடு அபின்னையாய்ப் பிரகாசிக்கும் பேரொளியாகிய பராசத்தியை, பரவி - துதித்து, பதம் பணிவாம் - அவளது திருவடிகளை வணங்குவாம்.

இப்பராசத்தியின் சொரூபம் ஞானமாய் நிஷ்களமாயிருக்கும்; அவள் தொழில் வேறுபாட்டால் திரோதானசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி எனப் பலபெயர் பெற்று நிற்பள்.

கிருத்தியத்தைத்திருவுள்ளத்தடைப்பது பராசத்தி. ஆன்மாக்களுக்குப் பேத்தத்திற்பாகம் வருவித்து முத்தியினும் வியாபிப்பது திரோதானசத்தி. மலத்தை நீக்கிச் சிவத்துவத்தை அளிக்கவேண்டுமென்ற கருணையே இச்சாசத்தி. சிவத்துவத்தை யளித்தற்கு வேண்டிய உபாயமெல்லாம் உணர்த்துவது ஞானசத்தி. அவ்வுபாயத்தின்வழி நடத்துவது கிரியாசத்தி.

இச்சத்திகள் இறைவனது ஆணைவழியினின்று பஞ்சகிருத்தியங்களைச் செய்வனவாம். அதனால் இறைவன் விகாரியலன். அது சூரியனது கிரணங்கள் தாமரை அலரவும் சலம்வற்றவும் காந்தக்கல் கனல்கக்கவுஞ் செய்தபோதினும், சூரியன் தாக்கற்று நிர்விகாரியாய் இருத்தல்போல் என்க.

நந்தி முதலியோர் வணக்கம்.

நந்திபத நந்திமா காளரெழு வாயாவர்
தந்திருத்தா ளும்பணிவாஞ் சார்ந்து.

இது குருவணக்க முணர்த்துகின்றது.

(பதவுரை) நந்திபதம் - சிவகணங்களுக்குத் தலைவராகிய திருநந்திதேவரது திருவடிகளையும், நந்திமாகாளர் எழுவாயாவர் தந்திருத்தாளும் - நந்திமாகாளர் முதலாகவுள்ள எழுவர் யாவரோ அவர்கள் திருவடிகளையும், சார்ந்து பணிவாம் - மனத்தின்கண் தியானித்து வணங்குவாம்.

சிலாதரர் புத்திரராகிய திருநந்திதேவர் உருத்திரசமக தியானத்தினாலே அருள்பெற்று யாவருக்கும் ஞானகுருவாய் எம்பிரான் திருமுன் நிற்கும் பெரும்பேறெய்தினர். இவரினின்றும் மற்றைய குருசந்தானம் வந்தமையை உண்மை நூல்களா லுணர்க.

நந்திமாகாளர் முதலியோரும் சிவகணத்தலைவராவார்கள். அவர்கள் நந்திமஹாகாளர், பிருங்கி, இடபம், கந்தர், சண்டன், விநாயகர், பார்வதி என்னும் எழுவர்களாம்.

உம்மை எண்ணின்கண் நின்றது.

பதிபசு பாசந் தொகுத்துப் பகர்வா
மெதுகதியென் பார்க்கெளிதி லே.

இது பாயிரத்தின் பொதுவிலக்கண முணர்த்துகின்றது.

(பதவுரை) எது கதியென்பார்க்கு - பரமுத்தி எய்துதற்கு (எது உண்மைமார்க்கமென்று அறிய) அவாவுறும் உத்தமர்க்கு, பதி பசு பாசம் - சிவாகமத்தில் விரிந்தெடுத்தோதிய ஞானபாதத்திற் கூறப்பெற்ற திரிபதார்த்த இயல்பை, தொகுத்து எளிதில் பகர்வாம் - தொகுத்துச் சுட்டலென்னும் உத்திகொண்டு (தமிழில்) இலேசான முறையிலமைத்துக் கூறுவாம்.

"பதிபசுபாசந் தொகுத்து" எனவே, நூலினது பெயரும், நூல்யாப்பும், நுதலியபொருளும், நூல்வந்தவழியும். "எது கதியென்பார்க்கு" எனவே காரணமும் கேட்டற்குரிய அதிகாரியும் பயனும் விளங்க உணர்த்துதலை யறிக.

தமிழ்வழங்கு மெல்லையே எல்லையாம்.

"எளிதிற் பகர்வாம்" என்றமையால் வகைவிரியா லெடுத்தோதிய வல்லார்போற் கூறுதற்கு வலியிலேனாயினும், அவரது கருத்தைப்பற்றியே சுருங்கிய இக்குறளடியாற் றொகுத்துக் கூறுகின்றேன் என்னுங் கருத்தால் அவையடக்கமும் உய்த்துணர வைத்ததறிக.

பதி - தலைவன், நாயகன். பசு - பாசத்தளையிற் கட்டுண்ட ஆன்மா. பாசம் ஆன்மாவைப் பந்தித்த பிணிப்பு. கதி - மோக்ஷம், புகலிடம்.

பாயிர முற்றிற்று. ஆகச்செய்யுள் 5.

நூல்.

முதலாவது பதியியல்

"பல்லுயிர்க்கு மேக னமலன் சிவன்பதியப்
பல்லுயிரு மீசன் பதி.

இது பரமனது குணங்களுள், அவன் தன்வயத்தனா யிருத்தலை புணர்த்துகின்றது.

(பதவுரை) ஏகன் - முழுமுதலாயும், அமலன் - அநாதியே மலமுத்தனாயுமுள்ள, சிவன் - சிவபெருமான், பல்லுயிர்க்கும் எண்ணிறந்த ஆன்மாக்களுக்கும், பதி - நாயகனும், அப்பல்லுயிரும் - அவ்வெண்ணிறந்த ஆன்மாக்களும், ஈசன் - இறைவனுக்கு, பதி - தங்குமிடமாம். (எ-று)

சிவபெருமான் ஒப்பாரு மிக்காருமின்றித் தன்னந்தனியனாய் இருத்தல் பற்றி "ஏகன்" என்றும், ஆன்மாக்களைப்போல மலபெத்தனின்றி மலமுத்தனாயிருத்தலால் "அமலன்" என்றும் ஈண்டுக் கூறப்பட்டது.

ஈண்டு பல்லுயிரென்றது விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூன்றுவகை உயிர்த்தொகைகளை என்க. அவைகள் ஈசன்வதியும் பதியாவதெங்ஙனம்? என்னில் இறைவன் சர்வவியாபியாயிருத்தலால், ஆன்மாக்களின் உள்ளும் புறம்புந் தங்கிக்கற்போனாயினும், அவன் இயக்கி அறிவித்தவழி நின்று நடப்பது ஆன்மசத்தியாதல்பற்றி உயிர்களின்மேல்மாத்திரம் ஏற்றிக் கூறினர்.

மலமுத்தன் - இயற்கையிலேயே மலசம்பந்தமில்லாதவன்; மலபெத்தன் - மலத்தோடு பந்திக்கப்பட்டவன்; விஞ்ஞானகலர் - ஆணவமல மாத்

திரமுடையார்; பிரளயாகலர் - ஆணவம், கன்மம், என்னுமிருமலமுடையார். சகலர் ஆணவம், கன்மம், மாயை என்னும்மும்மலமுடையார்; ஈசன்-எப்பொருட்கு மிறைவன்.

நிராதாரதீக்ஷையால் விசிட்டமான சிவஞானமுதயமாய்ச் சிவாநுபவம் பெற்று சர்வ சங்கார காலத்தில் மந்திரதேகத்தைவிட்டுச் சிவத்துடனிரண்டறக்கூடுதலால் விஞ்ஞானகலரென அழைக்கப்பெறுவர். பிரளயமாகிய சர்வ சங்காரகாலத்தில் புரியட்டக தேகத்தைவிட்டுச் சிவாநுபூதியடைபவர்கள் பிரளயாகலர். சகலர் - கலாசகிதர், ஸ்தூலதேகமுடையவர். இவர்கள் இருவினையொப்பு வர்தபின் சத்திநிபாதமுற்று குருவினல் மோக்ஷமுறுவர்.

"உடலொலியின் மூல வொலியுறைதல் போலக்
கடவுளுயிர் தோறு முறுங் காண்"

இது சிவன் எங்கும் வியாபகனு யிருத்தலை உணர்த்துகின்றது.

(பதவுரை) மூலவொலி - அகரவொலிவடிவெழுத்து, உடலொலியில்-மெய்யொலிவடிவெழுத்தில், உறைதல்போல் - தங்கிநிற்குந்தன்மைபோல, கடவுள் - இறைவனும், உயிர்தோறும் - ஆன்மாக்கள் தோறும், உறும் - பொருந்தி நிலைபெறுவன்.

எவ்வெழுத்தும் உச்சரிக்கப்படுங்கால், அகர வொலியே முதற்கண்ணின்று அவ்வெழுத்துக்களை இயக்கி ஒலிப்பிக்குந் தன்மைபற்றி "மூலவொலி" என்று கூறினர்.

மெய்யொலிகள் உயிர்த்துணையாய்ப் பிறக்குமேயன்றித் தாமேதனித்துப் பிறக்கும் வன்மையுடையனவல்ல ஆதலால் "உடலொலி" என்ருர்.

ஒற்றொலியைக் கண்ணொளிக்கும், உயிரொலியைக் கதிரவன் ஒளிக்கும் சமப்படுத்திக் கூறுவர்.

எழுத்துக்கள் தோறும் அகரஞ்சென்றிருத்தல்போல் ஆன்மாக்கள்தோறுஞ் சிவன் வியாபித்திருப்பன். அகரமின்றி எழுத்துக்கள் இயங்காத்தன்மைபோல், இறைவனையின்றி ஆன்மாக்களும் இயங்கா. அகரம் எழுத்துக்களுக்கெல்லா முதலாயினற்போல் இறைவனும் ஆன்மாக்களுக்கெல்லா முதல்வனவன். அகரந்தனித்தும், மெய்யோடுகூடியும் இயங்குதல்போல், இறைவன் ஆன்மாக்களுக்குடனும் வேருயும்நிற்பன். மற்றவை ஈண்டுவிரிப்பிற் பெருகும்.

இஃது ஒருபுடையுவமை. காண் - அசை. உறும் - படர்க்கை ஒருமை வினைமுற்று.

"ஆதாரம் வேர்மரத்துக் கீச னனைத்துயிர்க்கு
மாதாரம் வேர்க்குமா மன்று"

இது இறைவனது சருவ காரணத்துவம் உணர்த்துகின்றது.

(பதவுரை) மரத்திற்கு ஆதாரம்வேர் - மரத்தை நிலைநிறுத்தி வளர்ப்பதற்குக் காரணமாயிருப்பதுவேராம், ஈசன் அனைத்துயிர்க்கும் ஆதாரம் - (அதுபோல) சகல புவனங்களிலும் வினைக்கீடாய்த் தோன்றிச் சஞ்சரிக்கும் ஆன்மாக்களுக்கெல்லாம் பரமசிவமே ஓர்களை கண்ணவன், வேர்க்கு (ஆதாரம்) மரமன்று - வேரை நிலைநிறுத்தி அதனை ஜீவிக்கச்செய்தற்குக் காரணம் அவ்வேரையே ஆதாரமாகக்கொண்ட மரமன்று; (அதுபோல பஞ்சகிருத்தியங்களையும் சங்கற்பமாத்திரத்தாற் செய்யும் பரமனுக்குப் பிறந்திறந்து உழன்று திரியும் ஆன்மாக்கள் ஆதாரமாகாவாம்) (இது சொல்லெச்சம்)

அநாதி கேவலத்தில் ஆணவமலத்தோடுகூடி அறிவு, இச்சை, செயலற்றுக்கிடந்த ஆன்மாக்களைக் கருணைமேலீட்டினால் எடுத்துக்கன்மத்திற்கேற்ப தநு, கரண, புவன, போகங்களை அளித்து, பாகம் வருவித்தற்பொருட்டுச் சகலாவஸ்தையில் பலதரம்விட்டு, இருவினை யொப்புவந்தவாறே ஆசாரிய மூர்த்தமாய் எழுந்தருளி, தீட்சையால் சஞ்சிதத்தை யொழித்து, ஆகாமியம் ஏறுதபடியுங்காட்டி, ஆன்மாவினுடன் அபேதமாய் நின்று தேகத்தோடு பிராரத்துவத்தையும் போக்கி, அழியாப்பேருகிய முத்தி வீட்டின்கண் இருத்தி வாழ்விக்கும் முழுமுதல் அவனே யாதலால், அவன் அனைத்துயிர்க்கும் ஆதாரமானுன் என்று கூறப்பட்டது.

பிந்திய ஆதாரத்தை நடுநிலைத் தீபமாக்கி ஈரிடத்துங் கூட்டுக.

" ஆகஞ் சடங்கா ணணுவறியா திவ்விரண்டின்
யோகஞ் சிவனுலென் றோர் "

இது இறைவன் இயற்கையுணர்வினனுதலை யுணர்த்துகின்றது.

(பதவுரை) ஆகஞ்சடம் - ஆன்மாக்கள் பொருந்துவதற்கான பல்வகைப்பட்ட உடல்களும் அசித்துப்பொருள்களேயாம், அணு அறியாது - மலத்தால் மறைப்புண்ட அற்ப அறிவினனுகிய அவ்வான்மாவும் தானே யாதாமோர் உடலினுட்பொருந்துதற்கு அறியமாட்டாது, இவ்விரண்டின்யோகம்- மாயாகாரியமாகிய உடலையும் சிற்றறிவினனுகிய ஆன்மாவையும் ஒன்றுபடுத்தலாகிய செயல், சிவனுலென்று ஓர் - இயற்கை உணர்வினனுகிய இறைவனுல் என்று அறிவாயாக. (எ-று)

மாயை சடமாதலால் அதன் காரியமாகிய உடலும் சடமேயாம். ஆன்மா சித்தார்த்தத்தன்மையில் கடவுளோடு ஒத்த ஜாதியாயிருப்பினும் இறைவனது பேரறிவையும் இவனது சிற்றறிவையும் உற்றுநோக்குங்கால் அவனுக்கு இவன் அசித்தாம். கேவலாவஸ்தையிற்கிடக்கும் ஆன்மாக்கள் கருவிகரணங்களோடு கூட்டப்பட்டாலன்றி, அவைகள் மலநீங்கி தம் நிலைமையையும் தலை

வனது நிலைமையையும் அறிந்து உய்யமாட்டாவாதலால், கருணைவள்ளலாகிய கடவுளும் ஆன்மாக்களைத்தேகங்களோடு சம்பந்தப்படுத்துவாராயினன். இவ்வாறு சம்பந்தப்படுத்துவது, படைவையின் அழுக்கை உவர் சாணி முதலியன கொண்டு சுத்தப்படுத்துதல்போ லென்க.

ஆணவமலத்தால், ஆன்மா தனது வியாபக அறிவிற் சுருங்கி அணுத்தன்மை எய்தியதால் ஆன்மாவை ஈண்டு அணுவென்றுகூறப்பட்டது. ஆகம்-தேகம், யோகம் - சேர்க்கை.

இக்குறள் தேகத்துக்கு அந்நியமான ஆன்மாவினது உண்மையையும், அவ்வான்மாவைப் பிரேரித்தற்குரிய ஓர் கடவுளது உண்மையையும், அறிவுறுத்துகின்றது, காண் - அசை.

" கருமஞ் சடம்பலத்தைக் காட்டாது காட்டு
நிருமலனென் றேநீ நினை "

இது இறைவன் பாசங்களினின்று நீங்கி யிருத்தலை யுணர்த்துகின்றது.

(பதவுரை) கருமம் - கன்மமலம், சடம் - அசித்தேயாம், பலத்தை - அதனால் ஆன்மாக்கள் அடையவேண்டிய இன்பதுன்பங்களை, காட்டாது - அக்கன்மம் தானே இயைந்து அநுபவிக்குமாறு செய்யாது, நின்மலன் - மலரகிதனாகிய பரமனும், காட்டுமென்றே நீநினை - ஆன்மாக்களுடன் பொருத்துவிப்பானென்று நீநினைப்பாயாக.

ஆன்மாக்களாற் செய்யப்படும் நல்வினை, தீவினைகளை ஸ்தூலகன்மமென்றும், இவ்விருவினைகளுக்கும் பலனாய்வரும் புண்ணியபாவங்களை சூக்குமகன்மமென்றும், இப்புண்ணியபாவங்களுக்குப் பலனாய் வரும் இன்பதுன்பங்களை அதிசூக்குமகன்மமென்றும் உண்மை நூல்கள் கூறுகின்றன.

இவைகள் முறையே ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவமென்று அழைக்கப்பெறுவனவாம். இவைகள் நெல்விளைவித்து களஞ்சியத்திற் சேர்த்து, பின் கொஞ்சம், கொஞ்சம் எடுத்துப் புசித்தற்கு ஒப்பன. இவைகள் வன்மை, மென்மை என இருதிறப்பட்டு நிற்பனவாம். இவைகள் முன்பு ஆர்ச்சித்த ஒழுங்கிலேயாயினும், முறைமாறியேயாயினும் ஆன்மாக்களைவந்து பொருந்துவனவாம்- ஜாதி, ஆயுள் போகம், ஜனன மரண முதலியவைகளுக்குக் காரணமும் இவைகளே. நல்வினை தீவினைகளுள் ஒன்றற்கொன்று ஈடாக மாட்டாது. யாவும் அநுபவித்தேதீரவேண்டும். முன்னற்கூறிய பிராரத்துவ கன்மம். தெய்வத்தால் வரும் ஆதிதெய்வீகம், பஞ்சபூதங்களினால்வரும் ஆதிபௌதிகம், பிறவுயிர்களால்வரும் ஆதிஆன்மீகம் என முத்திறப்பட்டுநிற்கும்.

மலபெத்தர்களாகிய ஆன்மாக்களைப் பக்குவமடைவித்தற்கு மலமுத்தனாகிய ஒருவனாற் கூடுமாதலால் ஈண்டு இறைவனை நிர்மலனென்று கூறினர்.

இச்செய்யுளினுல் கன்மவாதியை மறுத்தவாருயிற்று. ஆகப்பாயிரமுள்படச் செய்யுள் (10)

"சடமாயை தானே சமையா தனுவுங்
கடவுடரு வான்வினையைக் கண்டு"

இது இறைவனது சருவஞ்ஞத்துவத்தை உணர்த்துகின்றது.

(பதவுரை) மாயை - மாயாமலமானது; சடம் - அசித்துப்பொருள்; தனுவும் - அம்மாயையை முதற்காரணமாய்க்கொண்ட உருவமும்; தானே - இயல்பாக; சமையா - உண்டாகமாட்டாது; வினையைக்கண்டு - ஆன்மாக்களின் கன்மத்திற்கேற்ப அறிந்து; கடவுள் - சருவஞ்ஞனுகிய பரமனும்; தருவன் - ஆன்மாக்களுக்குத் தேகங்களைக் கொடுப்பன். (எ-று)

ஜனனமரண சாகரங்களில் விழுந்து தத்தளித்துவரும் இவ்வான்மாவைப் பக்குவமுறுவித்து முத்திவீட்டின்கண் இருத்தும் கருணைமேலீட்டினுலே, ஆன்மாவிற்கு இன்னவினையை முன்னும், இன்னவினையை அதன்பின்னும் சோபானமுறையாய்க் கூட்டிவைத்தால் அவ்வான்மா பக்குவமுறும் என்று அறியுஞ்சக்தி முற்றறிவன் ஒருவனுக்கே சாலும் என்பதை இது தெரிக்கின்றது. வினையை அநுபவிக்கச்செய்தல் அவ்வான்மாவைத் தேகத்தோடு கூட்டினுலன்றி முடியாதாதலால் முதற்காரணமாகிய மாயையினின்றும், இறைவனும் குலாலனைப்போல் உருவமைப்பானுயினுன். மேலும் அம்மாயை நித்தமாய், அருவாய் உள்ளது. சருவசங்காரகாலத்தில் இவ்வுலகெல்லாம் அதனிடத்தொடுங்கி, மீண்டும் அதினின்றும் புனருற்பவமுறும். இது ஆன்மாவிற்குச் சிறிது அறிவை விளக்கும். இது சுத்தமாயை, சுத்தாசுத்தமாயை, அசுத்தமாயை என முத்திறப்பட்டிருக்கும். இவைகளினின்றும் ஆன்மதத்துவம் 24-ம் வித்தியாதத்துவம் எழும், சிவதத்துவம் ஐந்தும் ஆகிய முப்பத்தாறு தத்துவங்களும் உண்டாம். மீண்டுந் தோற்றியவாறே ஒடுங்கும். இதன் பரப்பையெல்லாம் சித்தியார் முதலிய உண்மைநூல்களுள் உணர்ந்துகொள்க.

"வருத்திய னல்லன் மருத்துவனே யர்க்கு
நிருத்தனையிவ் வாறுநினை நீ"

இது இறைவனது பேரருளை உணர்த்துகின்றது.

(பதவுரை) நோயர்க்கு - பிணியாளர்க்கு, மருத்துவன் - சிகிச்சைசெய்யும் வைத்தியன், வருத்தியனல்லன் - துன்பப்படுத்தினவனுகமாட்டான், நிருத்தனை - பஞ்சகிருத்தியங்களைச் செய்யுஞ் சிவபிரானை, இவ்வாறு - மேற்கூறிய வைத்தியனைப்போலவே, நினை - எண்ணுவாயாக. (எ-று)

இவ்வுலகத்தின் கண்ணுள்ள மருத்துவர் சூரியாடுதல் ஔடதப்பிரயோகஞ்செய்தல் முதலியவைகளால் சிலவியாதிகளையும், மருந்துடன் சருக்கரை

சேர்த்துக்கொடுத்துச் சகலவியாதிகளையுந்தீர்ப்பர். அதுபோல இறைவனும் ஆணவமலநோயால் வருந்தும் ஆன்மாக்களைத் தமது திரோதான சத்தியால் பக்குவம் வருவித்தற்பொருட்டு, அவைகளுக்கு இன்பதுன்பங்களை நுகர்விப் பன். கிரயத்துமிடுவன். இது வைத்தியநாதனுகிய சிவபெருமான் உயிர் கள் மாட்டுவைத்த கருணையின் நிகழ்ச்சியே யன்றி வேறன்று.

வருத்தியன் - தொழிலால் வரு பெயர்.

"உதவி யிரவி யுலகுக் கிரவிக்
குதவி செயுமோ வுலகு"

இது இறைவனது முடிவிலாற்றலை உணர்த்துகின்றது.

(பதவுரை) உலகுக்கு - இப்பிரபஞ்சத்திற்கு; இரவி - சூரியன், உதவி-பிரயோஜனகரமாய்ப் பொருந்துவன், இரவிக்கு அப்படிப் பயனுறவிக்குஞ் சூரியனுக்கு, உலகு - இவ்வுலகமானது, உதவிசெயுமோ - கைமாருகிய பிர யோஜனத்தைச் செய்யத்தக்கதோ? செய்யும் ஆற்றலுடையதன்று. (எ-று)

இவ்வுலகத்தின் கண்ணே துன்னிய புறவிருள் கெடும்படி தோன்றி, ஆன்மாக்களையெல்லாம் தத்தம் செயல்களில் நிறுத்தி நுகர்வித்தற்கு ஓர் கா ரணமாயுள்ள சூரியனுக்கு இவ்வுலகம் எவ்வாற்றானுங் கைமாறளித்தற் கிய லாத்தன்மைபோல, அஞ்ஞானத்தை விளைவிக்கும் ஆணவமலசத்தியைத் திருவருளாற் கெடுத்துப் பேரின்பமாகிய சிவாநுபவத்தை விளைவிக்கும் ஞா னசூரியனுகிய முதல்வனுக்கு, தோன்றிநின்று அழியுந்தன்மையதான மாயா தேகத்திற் கட்டுண்ட அற்ப அறிவுடைய இவ்வான்மாக்கள் செய்தற்குரிய கைமாறென்னை? ஒன்றுமின்று. இறைவனும் "வேண்டல், வேண்டாமை" என்னும் தன்மைகளை உடையனல்லாத விழுச்செல்வனுதலால் அவன் ஆன் மாக்களின் உதவியை எதிர்பார்த்து நிற்றற்கோர் இயைபின்மையு மறிக.

ஓகாரம் ஈண்டு எதிர்மறைக்கண் வந்தது.

பதியியல் முற்றிற்று ஆகச்செய்யுள் (13).

இரண்டாவது பசுவியல்.

முறையானே முதற்கண் பதியியல்கூறிப் பின்னர் பசுவியல் கூறுகின்றார்.

"ஆகஞ் சடந்தா னியங்கா ததனையா
பாசன் பசுப்பலந்துய்ப் பான்.

இது பசுவினது உண்மை யுணர்த்துகின்றது.

(பதவுரை) ஆகம் - தேகமானது, சடம் - அசித்துப்பொருள், தான் இயங்காது - (ஆதலால் அவ்வுடல்) தானே தொழிற்படாது, அதனை - அவ்

வுடலைப் பொருந்தினின்று, ஆபாசன்பசு - திறக்கேடனாகிய ஆன்மா, பலந் துய்ப்பான் - இன்பதுன்பங்களை அநுபவிப்பான். (எ-று)

பஞ்சபூதங்களுஞ் சடமாகையால் அவைகளின் சேர்க்கையாலாகிய தேகமுஞ் சடமேயாயிற்று. சடப்பொருள்கள் தாமே இயங்கும் வன்மையின்றி இயக்குவித்தால் இயங்கும் வன்மையுடையன. ஆகவே, இவ்வுடல் இயங்குகின்றமையானும், இச்சாஞானக்கிரியை அதன்கண் நிகழ்தலானும், அதனுள் நின்று இயக்குவான் ஒருவன் உளன். அவனே ஆன்மா. அவனை இவ்வுடலின்கண் பொருத்தியது, இன்பதுன்பமென்னும் இருவினைகளையும் நுகர்வித்துப் பக்குவம் உறுவித்தற்கேயாம். ஆதலால் அங்ஙனம் நுகர்வானுயினன்.

ஆபாசன் - போலித்தன்மையுடையோன், திறக்கேடன்.

"பொறியு மூயிரல்ல பொறையுடலு மல்ல
வறிவே யுயிரென் றறி"

இது பசுவின் தன்மையை உணர்த்துகின்றது.

(பதவுரை) பொறியுமுயிரல்ல - ஐம்பொறிகளும் ஆன்மா வாகா, பொறையுடலு மல்ல - உயிர்தாங்கிச் செல்லுதற்குரிய தேகமும் உயிராகாது, (ஆதலால்) அறிவே தேகத்தின்கண்ணின்று பொறிவழியால் ஐம்புலன்களையும் அறியும்அறிவே, உயிரென்று-ஆன்மாவென்று, அறி-அறிவாயாக. (எ-று)

ஐம்பொறிகளுள், ஒன்றறிந்தபின் ஒன்றறியும். ஒன்றறிந்ததை யொன்றறியாது. ஆகையால் இவ்வைந்தையுங் கருவியாகக்கொண்டு, ஞானம் கிரியை இச்சை இவைகளோடு பொருந்தி அறிவது எதுவோ அதுவே ஆன்மாவன்றி, ஏனையபொறிகளல்ல வென்று உணர்த்தும்பொருட்டு "பொறியுமுயிரல்ல" என்றூர்.

இவ்வுடல் சவமானபோது அவயவங்களிற் குறைபாடின்றிக் கிடந்தும் அதில் அறிவு நிகழாமையால் அதுவும் உயிரன்று, எனக்கூறினூர். பொறி ஐந்து:-மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவைகளே' புலன் ஐந்து:-சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம் என்பவைகளே. இனம்பற்றி அந்தக்கரணம், பிராணவாயு முதலியவைகளும் உயிரல்லவெனக் கொள்ளப்படும்.

"உறக்கத் துணரா வுடலும் பொறியு
முறக்கமு மோரு முயிர்"

இது ஆன்மா அவத்தைக்கண்ணும் அறியுமென உணர்த்துகின்றது.

(பதவுரை] உடலும் - தேகமும், பொறியும் - ஐம்பொறிகளும், உறக்கத்து - நித்திரையில், உணரா - அறியும் வலியுடையனவல்ல, (ஆனூல்) உயிர் - ஆன்மா, உறக்கமும் - நித்திரையையும், ஒரும் - அறியும். (எ-று)

"உறக்கமும் ஒருமுயிர்" என்றது விழித்தபின் சுகமாய்த்தூங்கினதான உணர்வு நிகழ்தலைப்பற்றி யென்க. உடலின்கண் யாதொரு குறைபாடுமின்றிக் கிடக்கும் உறக்கத்தின் மூர்க்கப்பாம்பு அவ்வுடலின் மேலேறிய மதனை யறியாத்தன்மையால், அவ்வுடல் உணருந் தன்மையதன்று. நித்திரையின்கண் உடலினிடத்தே ஐம்பொறிகள் பொருந்தி நின்றும் அவைகள் அறியாத் தன்மையால் "உறக்கத்துணரா பொறியும்" என்றார்.

அவத்தை - நிலைமை, அது ஐந்துவகைப்படும். சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன. இவ் வவத்தையின் விரிவைச் சித்தியாருட் கண்டுணர்க,

" புண்ணியத்தாற் பாவத்தாற் புண்ணியபா வத்தாலு
நண்ணுமுயிர் மேல்கீழ் நடு"

இஃது ஆன்மா செய்யும் வினை நுகர்தற்கு அடையும் உலகம் உணர்த்துகின்றது.

(பதவுரை) உயிர் - ஆன்மாவானது, புண்ணியத்தால் - சற்கருமப்பயனால், மேல் நண்ணும் - சுவர்க்கலோகத்தை யடையும், பாவத்தால் - அசற்கருமப்பயனால், கீழ்நண்ணும் - நரகத்திற்சேரும், புண்ணியபாவத்தாலும் - நல்வினை தீவினையின்பயனாகிய புண்ணியபாவமென்னும் இருதொடர்பாலும் நடுநண்ணும் - நடுநின்றதாகிய இவ்வுலகத்தைப் பொருந்தும். (எ-று)

வேதாகமம் விதித்தன செய்தலும், விலக்கியன செய்யாதொழிதலுமே புண்ணியம். இவற்றின் மறுதலையே பாவம். குறித்தகாலம் வரை இன்ப துன்பம் அநுபவித்தற்குரிய இவ்வுலகத்தை யாம் காண்கையால் அவ்வாறு இன்பமே அநுபவித்தற்குரிய சுவர்க்கமும், துன்பமே அநுபவித்தற் குரிய நிரயமும் உண்டெடன அநுமிக்கப்படும். நல்வினை தீவினைகள் முறையே பொன்விலங்கு, இருப்புவிலங்குகளுக்குச் சமம் என்றும், சுவர்க்க நரகம் காராக்கிருகத்துக்குச் சமமென்றும் உண்மைநூல்கள் கூறுகின்றன. இவைகளின் நுகர்ச்சி நுகர்ந்தவாறே மீண்டும் பிறத்தல்வேண்டும். உண்மை ஞானமுடையோர் சுவர்க்கபதவியையும் மற்றைய மேலான பதவிகளையும் விரும்பாது என்றும் மீளா முத்தியையே எய்தத்தலைப்படுவர்.

பசுவியல் முற்றிற்று ஆகச்செய்யுள் [17]

மூன்றாவது பாசவியல்.

முறையானே பாசவியல் கூறுகின்றார்.

" யானென் செருக்கா லிருவினையா மச்செருக்கு
மூனமலத் தாலு முயிர்க்கு"

இது ஆணவமலத்தின் உண்மை கூறுகின்றது.

இ-ள். உயிர்க்கு - ஆன்மாவிற்கு, யானென் செருக்கால் - நான் என்று சொல்லுந் தருக்கினல், இருவினையாம் - நல்வினை தீவினைகளுண்டாம், அச் செருக்கும் - அத்தருக்கும், ஊனமலத்தால் ஆம் - கேட்டை விளைத்தற்குரிய ஆணவமலத்தினல் உண்டாம் (எ-று)

அநாதியே ஆன்மாவைப் பந்தித்துள்ள இவ்வாணவமலம் ஓர்சடவஸ்து. விஷம், கள் முதலியன ஆன்மாவைமயக்குவதுபோல், இதுவும் அதனை மயக்கும். கடவுள் இவ்வாணவமலத்தைத் தமது திரோதான சத்தியால் சேட்டிக்கின்றூர். இது ஆன்மாவினுடைய இச்சாஞானக்கிரியைகளை மிக மறைத்து நின்று அநேக விகாரங்களைச் செய்யும். இது ஆன்மாவினுடன் அபேதமாய் நின்று அதனைக் கேவல நிலையில் நிறுத்தும். இது அநுபவமாகிய போகத்தில் இச்சையை விரிவித்து நிற்கும். இது ஆன்மாவிற்குப்பக்குவம் வந்தபோது தன் சத்தியிற் குன்றி நிற்குமேதவிர விட்டு நீங்காது. இது எட்டு முக்கியகுணங்களை யுடையதென உண்மை நூல்கள் கூறுகின்றன.

அவையாவன:—விகற்பம், கற்பம், குரோதம், மோகம், கொலை, அஞர் மதம், நகை என்பவைகளே. இக்குணங்களால் யான் என்கின்ற அகங்காரமும், அதனல் வினைகளும், அவ்வினைகளால் இன்பதுன்பங்களும் உண்டாம். இம்மூலமலம் தன்னுருவத்தைக்காட்டாது நின்று ஆன்மஞானத்தின் மேற் படர்ந்து அதனை ஈனமாகிய இடர்க்கடலின்கண் வீழ்த்தி நிற்குந்தன்மையது. ஆதலால் அதை ஊனமலமென்று கூறினர்.

ஊனம் - ஈனம், கேடு, குறைவு.

“ செம்பிற் களிம்பென்னச் சிவனோடுற்றதிமிர்
நம்பனைக்காட் டாதுயிரி னன்கு. ”

இது ஆணவமலத்தின் முக்கிய தன்மை கூறுகின்றது.

இ-ள். செம்பிற்களிம் பென்ன - செம்பினிடத்தே அநாதி சையோகமாய் நிற்கும் காளிதத்தைப்போல, சிவனோடுற்ற திமிர் - ஆன்மாவினோடு அநாதி சையோகமாய்நிற்கும் இருளாகிய ஆணவமலம், உயிரில் ஆன்ம அறிவில் நம்பனை - தோன்றாத்துணையாய்வியாபித்திருக்கும் இறைவனை, நன்கு காட்டாது - மிகுதியும் அறியுமாறு பிரகாசிப்பிக்கமாட்டாது. (எ-று)

ஒன்றாய் (முற்கூறியாங்கு) எண்ணிறந்த சத்திகளுடன் உயிர்களிடத்து அநாதியே விரவி நின்று பல விகாரங்களைச் செய்வதாயுள்ள ஆணவமலத்திற்கு மறைப்பு ஒன்றே முக்கிய குணம். அது ஆன்மாவுடன் பெத்தமுத்திகளில் நீங்காதே இயைந்து நிற்கும் தலைவனது தன்மையை அப்பிரகாசப் படுத்து மாதலால் “ நம்பனை உயிரில் நன்கு காட்டாது ” என்றூர்.

இனம்பற்றி கன்மம், மாயைகளின் றன்மைகளையும் ஒருசிறிது கூறு வாம்:— கன்மம், மாயை, ஆணவம் இவைகள் மும்மலமென்று அழைக்கப் பெறும். இவைகள்முறையே நெல்லுக்கு முளை தவிடு உமிப்போல் உயிரைப் பொருந்தி நின்று, போகமும் பந்தமும், போத்திருத்துவமும் பண்ணுவன வாம். எப்படியெனில்:—நெல்லின்கண்ணுள்ள முளைத்தற் சத்தி முளையைத் தோற்றுவிக்குமாறு போல உயிரின்கண் சுகதுக்கங்களைத் தோற்றுவித்தல் கன்மமலம் போகம் பண்ணுதலாம். முளைத்தற்கு அநுகூலமாய்க் கூடிநிற் குந் தவிடுபோல அச்சுகதுக்கங்கள் பொருந்திநிற்றற்கு நிலைக்களமாய்த்தன் காரியமாகிய தனு கரணமுதலியவற்றையும், உயிரையும் இயைவித்துநிற்றல் மாயாமலம் பந்தம் பண்ணுதலாம்.

அம்முளை தோன்றுதற்கு நிமித்த காரணமாய் நின்ற உமிப்போல, சுக துக்கங்களுக்கு நிமித்த காரணமாய், அவற்றை முறுகுவித்து உயிர் நுகருமா று நிலைபெறச்செய்தல் ஆணவமலம் போத்திருத்துவம் பண்ணலாம்.

இம்மும்மலங்களைத் தவிர, ஆன்மாவின் அறிவு, இச்சை, செயல்களை ஏகதேசப்படுத்தும் மாயாகாரிய மாகிய மாயேய மலமும், இம்மும்மலங்களை யுந்தத்தம் தொழிற்படுத்திப் பாகம் வருவிக்கும் சிவசத்தியாகிய திரோதான சுரியும் என வேறு இரண்டு மலங்களுமுள. பிறப்பு இறப்பு முதலிய யாவற்றி ற்குங் காரணம் இவ்வைவகை மலங்களாம்.

இவற்றின் பரப்பை யெல்லாம் விரிந்த நூலுட் கண்டுணர்க. இப்பாச வியலுள் ஆணவமலத்தை மாத்திரங்கூறி மற்றைய மலங்களைக் கூறுதுவிடு த்தது, முன் பதியியல் கூறு முகத்தால் "உரைத்தாம்" என்னும் உத்திகொ ண்டு போலும்.

(பாசவியல் முற்றிற்று) ஆகச்செய்யுள் 19.

நான்காவது அநுக்கிரகவியல்.

முறையானே அநுக்கிரகவியல் கூறுகின்றார் :

பரிபாக மாகவிருட் பாசமுடை யூனை
யருவருக்கு மாவிவிருப் பற்று.

இது பக்குவம் வருவதற்கு நிகழுங்குறி யுணர்த்துகின்றது.

(இ-ள்) ஆவி—ஆன்மாவானது; பரிபாகமாக—ஈசனது திரோதான சத்தியால் பக்குவம் எய்துதற்கு முற்குறியாய்; இருட்பாசமுடை ஊனை—அ ஞ்ஞானத்தை விளைக்கும் ஆணவமலத்தா லியைந்த அவ்வசுத்த தேகத்தினை விருப்பற்று — அபிமானத்தின் கண்ணின்றுநீங்கி, அருவருக்கும்—அதனை வெறுக்கும் (எ-று)

ஈண்டு மலபரிபாகமெய்துதலே பக்குவம், மலம்—ஆணவமலம்; பரி—உபசர்க்கம்; பாகம்—பக்குவம், அதாவது ஆணவமலம், பக்குவம் எய்துதல். பக்குவம் எய்துதலாவது, அது தன் மறைத்தற்சத்தியிற் குன்றிநின்று மற்றோர் பிறவிக்கு ஏதுவாதலின்றி இருத்தலாம். செம்பை ரச குளிகை பரிசித்தவாறே அதனோடு சம்பந்தமுற்ற களிம்பின் றன்மை மாறிப் பொன்னுருப் பெற்றாற்போல, உயிர் மெய்ஞ்ஞானம் பெற்றுழி அதனோடு சகசமாய்நின்ற ஆணவமலசத்தி குன்றிச் சிவமாந்தன்மை எய்தும். காணுஞ்சத்தியுள்ள கண்ணுக்கே சூரியப்பிரகாசம் பயனுறுமாறுபோல், அருட்கண் பெற்றவர்க்கே ஈசன் அறிவிற்கறிவாய் நின்று உபகரிக்கும் உண்மை நிலை விளங்கும். உமி நீங்கிய நெல் முளையாத வாறுபோல, ஆணவமலம் நீங்கிய இவ்வான்மா மீண்டும் பிறத்தற் றொழிலைப் பொருந்ாது. ஆனல் பேரானந்த நிலையாகிய சிவாநுபவமொன்றற்கே சுதந்தரமுடையதாய் அமையும்.

அப்பொழுது தேசிகனை யாவேசித் தேயமல
னப்பழுதை நீக்குமரு ளால்

(இ-ள்) அப்பொழுது—மலபரிபாகம் வந்தவாறே, அமலன்—நின்மலனாகிய இறைவன், தேசிகனை ஆவேசித்து—குருவை அதிட்டித்து நின்று, அருளால்—தனது அருட்சத்தியால், அப்பழுதை நீக்கும்—பிறவித்துன்பத்தை ஒழிக்கும். (எ-று)

பதிபுண்ணிய விசேடத்தால் இருவினையொப்பு வந்து சத்திநிபாதம் பிறந்தவாறே, இறைவனும் மானைக்காட்டி, மானைப்பிடித்தாற்போல, மானிட உருவங்கொண்டு, ஆசாரிய மூர்த்தமாய் எழுந்தருளிவந்து பக்குவம் நோக்கித் தீட்சாவிகற்பங்களிலொன்றால் தீக்ஷித்து, சஞ்சிதத்தைக் கெடுத்து, ஆகாமியம் ஏறாதபடி காட்டித்தேகத்தோடே பிராரத்துவவினையையும் போக்கி அத்துவித நிலையிற்பொருத்துவன். இத்தேசிகன் திருவருளின்றி அடிசேர்ஞானமாகியமெய்ஞ்ஞானம் எவ்வாற்றானும் வந்துறாமையைக் கண்டுணர்க.

தீக்ஷை யென்பது மும்மலத்தை வீட்டி முத்தியை விளைவித்தற்குரிய சிவஞானத்தைப் பயப்பிப்பதாம். மலபரிபாகம் பலவகைப்படுதலின் தீக்ஷையும் பலவகைப்படும், அவையாவன சட்சு தீட்சை, பரிச தீட்சை, வாசக தீட்சை, மானத தீட்சை, சாஸ்திர தீட்சை, யோக தீட்சை, ஔத்திரி தீட்சை, என்பவைகளே.

இதன் பரப்பையெல்லாங் குருமுகமாய்க் கேட்டுணர்க. (2)

நீங்கவிரு ணீங்காதே நின்றசிவங் கண்டாவி
யோங்கியபே ரின்பத் துறும்.

இது ஆணவமலம் நீங்கியவாறே ஆன்மா எய்துநிலையுணர்த்துகின்றது.

(இ-ள்) இருள் நீங்க—ஆணவமலமறைப்பினு லுண்டான அஞ்ஞானம் நீங்க, நீங்காதே நின்றசிவம்—தனக்குத்தோன்ருத் துணையாய்ப்பெத்த முத்திகளினும் வியாபித்து நிற்கும் இறைவனை, ஆவிகண்டு—ஆன்மாவானவன் தன்னுள்ளே அகண்டாகாரப் பேரொளியாய்க் கண்டு, ஓங்கிய பேரின்பத்துறும்—பரமானந்த சாகரத்தின்கண் பொருந்தி யின்பமனுபவிக்கும்.

அநாதி சையோகமாகிய ஆணவமலத்தின் வாதனையுங் கெட்டு நிற்றலே ஈண்டு இருள் நீங்கலாம். ஈசன் பெத்த முத்திகளினும் தோன்ருத்துணையாய் நிற்போனுதலால் "நீங்காதே நின்ற சிவம்" என்று கூறினர், சிவபோகத்துக்குமேலொரு ஆனந்த மின்மையால் "ஓங்கிய பேரின்பமென" விசேடித்தார். மற்றைய பதமுத்திகளெல்லாம் கீழ்நோக்கிப் பார்க்குங்கால் ஒன்றற்கொன்று குறைந்தவைகளேயாம்.

பேரின்பத்தின்கண் ணுறுதலாவது—தாடலை (தாள்-தலை) போலாக அத்துவித நிலையின் கண்ணடங்கி நின்று இன்பமே சொரூபமாகிய சிவபோகத்தில் சுவாநுபவம் எய்தி நிற்றலாம்.

அநுக்கிரகவியல்முற்றிற்று. ஆகச்செய்யுள்—22.

ஆக்கைசிறை என்றமலத் தாதரவுற் றூர்க்கிந்த
வாக்கை யறைக மதித்து.

இந்நூலை எற்றற்குரிய அதிகாரி இவரெனத் தெரிக்கின்றூர்

இ—ள். ஆக்கைசிறையென்று—சப்ததாதுக்களால் இணைக்கப்பெற்ற இத்தேகம் ஓர்காராக்கிருகமென்றெண்ணி வெறுத்து, அமலத்து—நின்மலத்துவத்தின் கண்; ஆதரவுற்றூர்க்கு—விருப்பமுடையவர்களுக்கு, இந்த வாக்கை—பதிபசுபாசத் தொகையென்னும் இந்தஞானசாத்திரத்தை, அறைக—சொல்லக்கடவர்கள்.

பக்குவியல்லார்க்கு இதனை உரைத்தல் விழலுக்கிறைத்த நீர்போல, யாதொருபயனும் பயப்பியாது இடர்ப்பாட்டின்கண் வீழ்த்து மாதலால் ஈண்டு இவ்வாறு கூறுவாராயினர். (23)

" விடம்பர்க் குரைத்தார் விழுவர்கீழ் மேலே
யடைந்தார்நல் லார்க்கறிவித் தார்"

இது பக்குவர், பக்குவரல்லாதாராகிய இவர்களுக்கும் அறிவித்தார் எய்தும் பயன் கூறுகின்றது.

இ—ள். வீடப்பார்க்கு—தற்சனர்களாகிய அபக்குவிகளுக்கு, உரைத்தார்—சொல்லிய ஆசிரியர், கீழ்வீழ்வார்—நிரகத்தின்கண்வீழ்ந்து அழுந்துவர்கள், நல்லார்க்கு—பக்குவமுடையவர்களுக்கு, அறிவித்தார்—சொல்லியருளிய ஆசிரியர், மேலடைந்தார்—சிவலோகத்தை யடைந்தவராவர்.

ஆதலால் ஆசிரியராவார், அபக்குவர்களை, தம்மிடத்து அன்பும், அவர்களிடத்து அருளுங்கொண்டு தள்ளல் வேண்டும். இன்றேல் இவ்விருவரும் நரகில் வீழ்ந்து அழுந்துவர்கள், அதினின்றும் ஏறல் முடியாதென்று உண்மை நூல்கள் கூறுகின்றன.

> " இந்தவிய லைத்திரிவு மின்றியுணர்ந் தார்க்கிருண்ட
> பந்தமறும் வாய்த்துறுமின் பம்"

இது இந்நூலுணர்ந்தார் அடையும் பலன் கூறுகின்றது.

இ—ள். இந்தவியலை—ஞானத்தைக்கூறும் இந்தப்பகுதியை, திரிவுமின்றி—பொருள் வேறுபாடுமின்றி, உணர்ந்தார்க்கு—நன்றாய் அறிந்த சாதுக்களுக்கு, இருண்ட பந்தமறும்—அநாதியே தம்மைப் பொருந்திய அஞ்ஞானமாகிய பாசப்பிணிப்பு நீங்கும், இன்பம் வாய்த்துறும்—பேரானந்த அநுபவங்கிட்டும். எ—று

திரிவுமென்ற உம்மையால் சந்தேகமும், அறியாமையுங் கொள்ளப்டும். இவை மூன்றும் முத்திவிக்கினங்களென்று கூறப்பெறும்.

இயல், ஒத்து. பகுதி, என்பன ஒருபொருட் சொற்கள். சுபம். 25

ஆகச்செய்யுள். 25.

பதிபசு பாசத்தொகை முற்றிற்று.

மெய்கண்டதேவன் றிருவடிவாழ்க.